ஶ்ரீ

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆழ்வார்களருளிச்செய்த நாலாயிரதிவ்யப்பிரபந்தங்களுள்
மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில் சேர்ந்த

திருவாசிரியமும் : :
: பெரியதிருவந்தாதியும்

நம்மாழ்வாரருளிச் செய்தவை

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

எளிய நடையில் தெளிய எழுதிய திவ்யார்த்த தீபிகையுரையுடன் கூடியவை

மூன்றாம் பதிப்பு

ரத்தினம் (பிராஞ்ச்) அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

கிடைக்குமிடம் :

கிரந்தமாலா ஆபீஸ், விஷ்ணு காஞ்சீபுரம்

விலை ரூ. 3—8—0

1959

ஸ்ரீ

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆழ்வார்களருளிச்செய்த நாலாயிரதிவ்யப்பிரபந்தங்களுள்
மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில் சேர்ந்த

திருவாசிரியமும் : : பெரியதிருவந்தாதியும்

நம்மாழ்வாரருளிச் செய்தவை

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்
எளிய நடையில் தெளிய எழுதிய திவ்யார்த்த தீபிகையுரையுடன் கூடியவை

மூன்றாம் பதிப்பு

ரத்தினம் (பிராஞ்ச்) அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

கிடைக்குமிடம் :
க்ரந்தமாலா ஆபீஸ், விஷ்ணு காஞ்சீபுரம்
விலை ரூ. 3—8—0

1959

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகையில்

திருவாசிரியம்—முன்னுரை.

இது—மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுள் தலைவரும், ப்ரபந்நஜநகூடஸ்தருமான நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு திவ்யப்ரபந்தங்களுள் இரண்டாவதான பிரபந்தம். திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களும் நம்மாழ்வாருடைய திவ்யஸூக்திகளாம். இந்நான்கும், முறையே நான்கு வேதங்களின் ஸாரமாம். நாலாயிரப் பிரபந்தத்தில் மூன்ருவது ஆயிரமாகிய இயற்பாவில் இது ஆருவதாகும். யஜுர்வேத ஸாரமுமாம்.

ஆழ்வார் தமது ஞானக்கண்ணுக்கு இலக்கான எம்பெருமானை நோக்கி, 'தேவரீரை அநுபவிப்பதற்கு இடையூருன தேஹ ஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருளவேணும்' என்று ஸம்ஸார ஸம்பந்த நிவ்ருத்தியை அபேக்ஷித்தார்—முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில். ஆழ்வார் அப்படி பிரார்த்தித்தபோதிலும், எம்பெருமான் இவ்வாழ்வாரைக்கொண்டு நாட்டுக்கு நன்மையாகச் சில திவ்யப்ரபந்தங்களை வெளியிடுவித்து ஸம்ஸாரிகளைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம் பற்றினவனுகையாலே "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்புமிந்நின்ற நீர்மை இனியாமுருமை" என்று இவர் அபேக்ஷித்த போதே இவருடைய பிரார்த்தனையைத் தலைக்கட்டித் தந்தருளவில்லை. "இவ்வாழ்வார் இந்த ஸம்ஸாரத்தை விட்டு விலகி ஒரு *நலமந்தமில்லதோர் நாட்டிலே போய்ச்சேரவேணுமென்று பாரிப்பது நம்முடைய குணங்களை அநுபவிப்பதற்காகவேயன்றி வேருென்றுக்காகவன்றே; அந்த குணுநுபவத்தை இவர்க்கு நாம் இவ்விடத்திலேயே வாய்க்கச் செய்வோம்; இங்கே தானே இவர் குணுநுபவம் பண்ணிக் களித்தாராய், அவ்வநுபவம் உள்ளடங்காமல் புறவெள்ளமிட்டுப் பிரபந்தங்களாகப் பெருகி லோகோபகாரமும் செய்தாராகட்டும்" என்று எம்பெருமான் திருவுள்ளம்பற்றித் தனது ஸ்வரூப ரூபகுண விபூதிகளைக் காட்டிக்கொடுக்க ஆழ்வார் அவற்றைக்கண்டு பரமானந்தம் பொலிய அநுபவிக்கிருர் இத்திருவாசிரியத்தில். ஸம்ஸார ஸம்பந்தங் கழிந்து பரமபதத்திலே போனபின்பு அநுபவிக்கக்கூடிய எம்பெருமானது மேன்மையையும் நீர்மையையும் வடிவழகையும் இங்கிருந்துகொண்டே சுருக்கமாக ஏழு பாட்டாலே அநுபவிக்கிருராயிற்று.

ஆசிரியப்பாக்களினுலமைந்த இத்திவ்யப்ரபந்தத்திற்குத் திரு ஆசிரியம் எனத் திருநாமம் வழங்கலாயிற்று. அடியொன்றுக்கு நான்கு சீராய் இயற்சீர் பயின்றும் வெண்சீர் விரவியும் மூன்றடிக்குக் குறையாமல் பலவடிகளால் அகவலோசையுற்று இறுதியில் ஏ யென்னும் அசையுடன் முடிவது ஆசிரியப்பாவாம். இது—நேரிசையாசிரியப்பா, நிலைமண்டில வாசிரியப்பா முதலிய நான்கு வகைகளையுடையது: எல்லாவடிகளும் நாற்சீராய் ஈற்றயலடி முச்சீராய் முடிவது நேரிசையாசிரியப்பா. எல்லாவடிகளும் நான்கு சீராலேயே முடிவது நிலைமண்டிலவாசிரியப்பா. இப்பிரபந்தத்தில் 1, 2, 3, 6-ஆம் பாசுரங்கள் நேரிசையாசிரியப்பாக்கள்; 4, 5, 7-ஆம் பாசுரங்கள் நிலைமண்டில வாசிரியப்பாக்கள். அந்தாதித்தொடையால் அமைந்ததாம் இப்பிரபந்தம். ... ... *

தனியன் உரை

காசினியோர் தாம்வாழக் கலியுகத்தே வந்துதித்து
ஆசிரியப் பாவதனு லருமறைநூல் விரித்தானைத்
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத் தாரானை
மாசடையா மனத்துவைத்து மறவாமல் வாழ்த்துதுமே.

காசினியோர் தாம்	பூலோகத்திலுள்ளவர்கள்
வாழ	உஜ்ஜீவிப்பதற்காக
கலியுகத்தே	இக்கலியுகத்தில்
வந்து உதித்து	இந்நிலத்தில் வந்து அவதரித்து
ஆசிரியப்பா அதனுல்	திருவாசிரியப் பிரபந்தத்தினுல்
அரு மறை நூல் விரித்தானை	தெரியவரிதானவேத சாஸ்த்ரங்களை விவரித்தவரும்
தேசிகனை	ஆசார்யரும்
திகழ் வகுளம் தாரானை	விளங்குகின்றமகிழ்மாலையை அணிந்துள்ளவருமான
பராங்குசனை	நம்மாழ்வாரை
மாசு அடையா மனத்து வைத்து	அஹங்கார மமகாரங்களாகிற குற்றங்களற்ற மனத்திலே வைத்து
மறவாமல்	ஒருகாலும் மறவாமல்
வாழ்த்துதும்	மங்களாசாஸநஞ்செய்வோம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

ப்ரபந்நஜநகூடஸ்தரான நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாசிரியம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய தீபிகையுரையுடன் கூடியது.

2578 செக்கர்மா முகிலுடுத்து மிக்க செஞ்சுடர்ப் பரிதிசூடி * அஞ்சுடர் மதியம்பூண்டு *
பலசுடர் புனைந்து பவளச்செவ்வாய் * திகழ்பசுஞ்சோதி மரதகக் குன்றம் *
கடலோன் கைமிசைக் கண்வளர்வதுபோல் * பீதகவாடை முடிபூண் முதலா *
மேதகு பல்கலனணிந்து * சோதி வாயவும் கண்ணவும் சிவப்ப * மீதிட்டுப்
பச்சைமேனி மிகப்பகைப்ப * நச்சுவினைக் கவர்தலை யரவி னமளியேறி *
எறிகடல் நடுவு ளறிதுயி லமர்ந்து * சிவனய னிந்திர னிவர்முத லனைத்தோர் *
தெய்வக்குழாங்கள் கைதொழக் கிடந்த * தாமரையுந்தித் தனிப்பெரு நாயக! *
மூவுலகளந்த சேவடியோயே! * 1

பவளம் செம் வாய்	பவழங்களாலே சிவந்த இடங்களையுடையதும்
திகழ் பசும் சோதி	விளங்குகின்ற பசுமையான நிறத்தை யுடையதுமான
மரதகம் குன்றம்	ஒரு பச்சை மாமலையானது,
செக்கர் மா முகில் உடுத்து	சிவந்த பெரிய மேகத்தை அரையில் உடுத்துக் கொண்டும்
மிக்கசெம் சுடர் பரிதி சூடி	மிகவும் சிவந்த தேஜஸ்ஸை யுடைய ஸூர்யனை சிரஸ்ஸில் அணிந்து கொண்டும்
அம் சுடர் மதியம் பூண்டு	குளிர்ந்த ஒளியையுடைய சந்திரனைக்கண்ட பூஷணமாக அணிந்துகொண்டும்
பல சுடர் புனைந்து	(நக்ஷத்திரங்களாகிற) பல தேஜஸ் பதார்த்தங்களையும் (பலவகைஆபரணங்களாக) அணிந்து கொண்டும்
கடலோன் கை மிசை	கடலரசனுடைய கைமேலே
கண் வளர்வது போல்	படுத்துக்கொண் டிருப்பது போல,
பீதக ஆடை முடி பூண் முதலா மேதகு பல் கலன் அணிந்து	பீதாம்பரம், திருவபிஷேகம் கண்டிகை முதலான சிறந்த பலதிருவாபரணங்களைச் சாத்திக்கொண்டு
சோதி வாயவும் கண்ணவும் சிவப்ப	அழகிய வாயும் கண்களும் சிவந்திருக்கப் பெற்று
பச்சை	பசுமையான
மேனி	திவ்யமங்கள விக்ரஹத்தின் நிறமானது
மீதிட்டு மிக பகைப்ப	மற்ற ஒளிகளெல்லாவற்றிற் காட்டிலும் மேலோங்கி மற்ற ஒளிகளோடு போர் செய்துகொண்டுவிளங்கப் பெற்று
எறி கடல் நடுவுள்	அலை யெறிகின்ற கடலினிடையே
நஞ்சு வினை	விஷத்தொழிலையும்
கவர் தலை	கப்புவிட்டுக்கிளர்கின்ற (பல) தலைகளையுமுடைய
அரவு	திருவனந்தாழ்வானாகிற
இன் அமளி ஏறி	போக்யமான சயனத்தின் மீது ஏறி
அறி துயில் அமர்ந்து	யோக நித்திரையில் அமர்ந்து
சிவன் அயன் இந்திரன் இவர் முதல் அனைத்தோர் தெய்வம் குழாங்கள்	சிவன் பிரமன் இந்திரன்முதலிய எல்லாத் தேவ ஸமூஹங்களும்
கை தொழ கிடந்த	ஸேவிக்கும்படியாகப் பள்ளி கொண்டிருக்கிற,
தாமரை உந்தி தனி பெரு நாயக	தாமரைப்பூவைத் திருநாபியிலே உடைய அத்விதீய ஸர்வேச்வரனே!
மூ உலகு அளந்த	மூன்று லோகங்களையும் அளந்த
சே அடியோய்	அழகிய திருவடிகளை யுடையவனே! (வாழ்ந்திடுக!)

* * *—[செக்கர்மாமுகில்] ஆழ்வார், கீழ்ப்பிரபந்தமாகிய திருவிருத்தத்தின் முதற்பாட்டில் "அழுக்குடம்பும்" என்று தம்முடைய சரீரத்தின் தண்மையைப் பேசினர்; இந்த முதற்பாட்டில் எம்பெருமானுடைய திருமேனியின் வைலக்ஷண்யத்தி லீடுபட்டுப் பேசுகிருர். அப்ராக்ருதமாய் ஒப்புயர்வற்றதான பகவத் திவ்யமங்கள விக்ரஹத்திற்கு ப்ராக்ருத வஸ்துக்களிலே ஒன்றை உபமானமாக எடுத்துக்கூறுவதானது "ஒட்டுரைத் திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ" என்றபடி அவத்யமேயாயினும், ஓர் உபமானத்தையிட்டே அநுபவித்துத் தீர வேண்டியிருப்பதாலும், வேதாந்தங்களிலும் அப்படியே உபமானங்களையிட்டே நிரூபித்திருப்பதாலும், இவ்வாழ்வார்தாமும் இங்கு ஓருபமானத்தையிட்டுப்பேசி அநுபவிக்கிருர்.

'ப்ரஸித்தோபமை' என்றும் 'அபூதோபமை' என்றும் உவமை இரண்டு வகைப்படும்; முகம் சந்திரனைப் போன்றது-திருவடி தாமரையைப் போன்றது—என்றிங்ஙனே பேசுதல் ப்ரஸித்தோபமையாம்; இனி அபூதோபமையாவது—தமிழில் இல்பொருளுவமை எனப்படும். ப்ரஸித்தமல்லாத ஒரு விஷயத்தைக் கவிகள் தம் புத்திசமத்காரத்தாலே ஏற்படுத்திக்கொண்டு அதனை த்ருஷ்டாந்தமாக்கிக் கூறுதல் அபூதோபமையாம். இப்படிப்பட்ட அபூதோபமையைக் கூறுவதன் கருத்து—உபமேயப் பொருளானது ஒப்பற்றது என்பதைத் தெரிவிப்பதேயாம்.

இப்பாசுரத்தில் அபூதோபமை வருணிக்கப்படுகிறது. எம்பெருமான் திருவரையில் திருப்பீதாம்பரம் சாத்திக்கொண்டும் திருமுடியில் திருவபிஷேகமணிந்து கொண்டும் இப்படியே மற்றும் பலபல திருவாபரணங்களைப் பூண்டு கொண்டும், செந்தாமரை போன்ற திருவாயும் திருக்கண்களும் விளங்கவும், ச்யாமமான திருமேனி நிறமானது மற்ற சோபைகளெல்லா வற்றையுங்காட்டில் விசேஷித்து விளங்கவும் கடலினிடையே திருவனந்தாழ்வானெனும் திருவணையின் மீதேறித் திருக்கண்வளர்ந்தருளுகிறபடிக்கு த்ருஷ்டாந்தமாக வருணிக்கப் பொருத்தமான ப்ரஸித்தோபமை ஒன்றில்லாமையால் அபூதோபமை அருளிச்செய்கிருர். மரகதப்பச்சைமயமான ஒரு மலையானது செந்நிறமான மேகத்தைப் பீதகவாடையாக உடுத்துக்கொண்டும், கிரீடத்தின் ஸ்தானத்திலே ஸூர்யனை அணிந்துகொண்டும், கண்டிகை ஸ்தானத்திலே சந்திரனை அணிந்துகொண்டும், முத்துஸரம் முதலான மற்றும் பல திருவாபரணங்களின் ஸ்தானத்திலே நக்ஷத்திரங்களைப் புனைந்துகொண்டும் திரு அதரம் திருக்கண்களின் ஸ்தானத்திலே பவழமயமான பிரதேசங்களையுடைத்தாகியும் ஒரு கடலிலே பள்ளிகொண்டிருந்தால் எப்படியிருக்குமோ அப்படியிரா நின்றது தேவரீர் திருக்கோலமுந்தாமுமாகத் திருப்பள்ளி கொண்டருளுகின்றமை-என்ருராயிற்று.

செக்கர் என்று சிவப்பு நிறத்துக்கும் செவ்வானத்துக்கும் பெயர்; இங்கே, சிவந்த மேகமென்றும், செவ்வானத்தில் தோன்றிய மேகமென்றும் பொருள் கொள்ளலாம். மேகங்கள் மலைச்சாரலிற் படியுமாதலாலும், செக்கர்மாமுகில் படிந்திருந்தால் பீதகவாடை யுடுத்தாற்போ லிருக்குமாதலாலும் "செக்கர்மா முகிலுடுத்து" எனப்பட்டது. எம்பெருமான் உபமேயம்; மலை உபமானம்; பீதாம்பரம் உபமேயம், செக்கர்மாமுகில் உபமானம்.

"கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியன்" என்று திருவபிஷேகத்திற்கு ஸூர்யனை ஒப்புச்சொல்லுவதுண்டாதலால் "மிக்கசெஞ்சுடர்ப் பரிதிசூடி" எனப்பட்டது. எம்பெருமானுடைய கிரீடத்திற்கு ஸாதாரண ஸூர்யன் உபமானமாகப் போராமையால் மிக்க செஞ்சுடர் என விசேஷிக்கப்பட்டது. பரிதி என்கிற வடசொல் ஸாக்ஷாத்தாக ஸூர்யனைச்சொல்லாதாகிலும் தமிழில் இலக்கணை

யால் ஸூர்யனுக்குப் பேராயிருக்கும். இங்கு உபமானமாகிய மலை ஸூர்யமண்டலம் வரை ஓங்கியிருப்பதாகக் கொண்டால் ஸூர்யன் கிரீடத்தின் ஸ்தானத்திலே ஆவன்.

மார்பில் அணிந்துகொள்ளும் ஆபரணங்களில் 'சந்த்ரஹாரம்' என்பது ஒன்று; அது சந்திரன் வடிவமாக அமைக்கப்படுமாதலால் அப்பெயர்கொண்டதாகிறது. சந்திரனுக்கு மலையினோடு ஸம்பந்தம் கீழ்ச்சொன்னபடியிலேயாம்: ஸூர்ய சந்த்ர மண்டலம் வரையில் ஓங்கின மலை என்று கொள்க. **மதி**—சந்திரன்; **அம்**—சாரியை.

பல்சுடர் என்றது ஆகாசத்திலுள்ள மற்றும் பல நக்ஷத்ராதி தேஜஸ் ஸமூஹங்களைச் சொன்னபடி. திருவாபரணங்களில் நக்ஷத்ரஹாரமென்பதுமொன்று. **புனைந்த** என்று பாடமானபோது பெயரெச்சமாகி மரதகக்குன்றத்திற்கு விசேஷணமாகக்கடவது.

பவளச்செவ்வாய்—'ப்ரவாளம்' என்ற வடசொல் பவளமெனத் திரியும். **வாய்** என்று இடங்களைச் சொன்னபடி. மலையிற் பல இடங்களில் பவளமுண்டாதலால் பவளங்களாற் சிவந்த இடங்கள் "கைவண்ணந்தாமரை வாய்கமலம் போலும் கண்ணிணையுமரவிந்தம் அடியு மஃதே" என்றும் "பவளவாய் கமலச் செங்கண்" என்றும் சொல்லப்படுகிற திவ்ய அவயவங்களுக்கு உபமானமாகக் கூறப்பட்டன.

திகழ்பசுஞ்சோதி மரதகக்குன்றம்—பசுமை நீலம் கருமை என்ற நிறங்களை அபேதமாகக் கூறுவது கவிமரபாதலால் எம்பெருமானுடைய காளமேகத்திருவுருவத்திற்கு மரதகக்குன்றத்தை [—பச்சைமாமலையை] உவமை கூறினர். ஸாதாரண மலையானது எம்பெருமானுடைய துளக்கலாகாநிலைக்கும் வளர்த்திக்கும் ஒப்பாகுமேயன்றி, காணப்புக்கவர்களின் கண்ணையும் நெஞ்சையும் குளிர்வித்து அவர்களுடைய ஸம்ஸாரதாபங்களை யெல்லாம் போக்குந்தன்மையும் எப்போதும் தியானஞ்செய்வதற்கு உரியதாயிருத்தலும் பெருங்கருணைக்கு இருப்பிடமாயிருத்தலும் முதலிய குணவிசேஷங்களில் ஒப்பாகமாட்டாமையால், **திகழ்பசுஞ்சோதி மரதகம்** என்று குன்றம் விசேஷிக்கப்பட்டது. ஆக இப்படிப்பட்டதொரு குன்றம் உலகில் எங்குமில்லை; இருந்தாலும் அது கடலோன்கைமிசைக் கண்வளர்வது அஸம்பாவிதம்; ஆக இத்தனையும் ஸம்பாவிதமாகில் எம்பெருமான்படிக்குப் போலி சொல்லலாமாய்த்து.

செக்கர்மா என்று தொடங்கி, **கண்வளர்வதுபோல்** என்னுமளவும் உபமானத்தை சிக்ஷித்து முடித்து, இனி **பீதகவாடை** என்று தொடங்கி உபமேயமான எம்பெருமானுடைய அநுபவத்தில் இழிகிறார். கெக்கர்மாமுகிலுக்கு உபமேயம் பீதகவாடை; மிக்க செஞ்சுடர்ப் பரிதிக்கு உபமேயம் முடி (அதாவது-கிரீடம்); அஞ்சுடர் மதிக்கும் பலசுடர்கட்கும் உபமேயம் பூண்முதல் மேதகு பல்கலன். **பூண்** என்பது ஆபரணஸாமாந்யத்துக்குப் பேராயினும் இங்கே சந்த்ரஹாரமென்கிற ஆபரண விசேஷத்தைக் குறிக்குமென்க. **மேதகு**—மேவத்தகு என்றபடியாய், (திருமேனிக்குப்) பொருந்தத்தக்கின என்றதாம். மெய்தகு என்றும் பாடமுண்டாம்; மெய்—திருமேனி. **கலன்**—ஆபரணம். **மீதிட்டுப் பச்சைமேனி மிகப்பகைப்ப**—எம்பெருமானுடைய திருமேனியில் பீதகவாடையின் சோதி ஒரு நிறமாகவும், திருவபிஷேகத்தின் சோதி மற்றொரு நிறமாகவும், திவ்ய பூஷணங்களின் சோதி வேறொரு நிறமாகவும் திருவாய் திருக்கண் முதலிய அவயவங்களின் சோதி மற்றுமோர் நிறமாகவும் இப்படி பலவகை நிறச்சோதிகள் இருந்தாலும் திருமேனியின் நிறமாகிய * பாசியின் பசும் புறம்போன்ற திருநிறமே மற்ற எல்லாச் சோபைகளோடும் போரிட்டு வெற்றிபெற்று விளங்குகின்றதாம். **மேனி** என்று உடலுக்கும்

நிறத்துக்கும் பேர்; இங்கு நிறத்தைச் சொல்லுகிறது. பசுமை நிறமானது; (**மீதிட்டு மிகப்பகைப்ப**—மிகப்பகைத்து மீதிட என்று விகுதி மாற்றிக் கூட்டியுரைக்கலாம்.) என்னுடைய சோலையின் முன்னே உங்களுடைய சோலை எப்படி விளங்கலாம் என்று போராடித் தானே மேற்பட்டதாயிற்றாம். மீதிடுதல்—வெற்றி பெறுதல் என்னலாம். ஆக இவ்வளவும் எம்பெருமானுடைய திவ்யசோலைகளை வருணித்தாராயிற்று. இனி பள்ளிகொள்ளுமழகைப் பேசுகிறார்.

க்ஷீரஸாகரமத்தியில் திருவனந்தாழ்வான்மேல் துயில்கொண்டருளி, சிவன் பிரமன் இந்திரன் முதலான தேவர்களால் தொழப்படுமவனே! தாமரைபூத்த திருநாபியையுடைய ஸர்வேச்வரனே! பண்டொருகால் மாவலிபக்கல் நீரேற்று மூவுலகுமளந்தவனே! ஜய விஜயீ பவ—என்றாராயிற்று.

திருமேனியழகிலும் துயில்கொண்ட அழகிலும் இவ்வாழ்வார் நெஞ்சைப் பறிகொடுத்தாராகையாலே ஒரு வினைமுற்றாதே பாசுரத்தை முடிக்கமாட்டாமல் "**மூவுலகளந்த சேவடியோயே!**" என்று கண்ணுஞ் சுழலையிட்டுக்கிடக்கிறார்.

நஞ்சு + வினை—நச்சுவினை; சத்துருக்கள்மேல் விஷத்தை உமிழும்தொழிலையுடையவனிறே திருவனந்தாழ்வான். **கவர்தலை**—கப்புவிட்டுக் கிளர்கின்ற தலைகளையுடைய என்று சப்தார்த்தம்; பலபல தலைகளையுடைய என்பது தாத்பரியம். **அமளி**—படுக்கை. **அறிதுயில்**—யோகநித்திரை. **சேவடியோய்**—சேவடியோன் என்பதன் விளி. 1

2579 உலகுபடைத் துண்டவெந்தை * அறைகழல் சுடர்ப்பூந் தாமரை சூடுதற்கு—*
அவாவா ருயிருருகியுக்க * நேரியகாத லன்பிலின்பீன் தேறல் *
அமுத வெள்ளத்தானும் சிறப்பு விட்டு—* ஒருபொருட்
கசைவோரசைக * திருவொடு மருவிய இயற்கை * மாயாப் பெருவிறலுலகம்
மூன்றினொடு நல்வீடு பெறினும் * கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே? 2

உலகு	உலகங்களை
படைத்து	ஸ்ருஷ்டித்து
உண்ட	(பிரளய காலத்தில்) விழுங்கிய
எந்தை	ஸர்வேச்வரனுடைய
அறை கழல் சுடர் பூ தாமரை	ஆபரணவொலி பொருந்திய திருவடிகளாகிற அழகிய தாமரை மலர்களை
சூடுதற்கு	சிரோபூஷணமாக அணிவதற்கு
அவாவு	ஆசைப்படுகின்ற
ஆர் உயிர்	அருமையான ஆத்மாவானது
உருகி உக்க	நைந்து சிதிலமாக,
நேரிய	(அந்த த்யானத்தால்) ஸம்பவித்த
காதல்	பக்தியாகிய
அன்பில்	ஆசைப் பெருக்கத்தில் உற்பவித்து
இன்பு ஈன்	இன்பத்தைக் கொடுக்கிற
தேறல்	தேன்போலிருக்கிற (அல்லது, தேனாகிய)
அமுதம் வெள்ளத்தான் ஆம் சிறப்பு விட்டு	அமிருத ப்ரவாஹத்தில் மூழ்கியிருக்கையாகிற பெருமையை விட்டிட்டு

ஒரு பொருட்கு	க்ஷுத்ரமானவொரு பலனுக்காக
அசைவோர்	அலைகின்றவர்கள்
அசைக	அப்படியே அலையட்டும்; (அவர்களைப்பற்றி நமக்கென்ன கவலை?)
திருவொடுமருவிய இயற்கை	செல்வத்தோடு எப்பொழுதும்சேர்ந்திருக்கையாகிற நித்ய ஐச்வரிய நிலைமையென்ன,
மாயா பெரு விறல்	அழியாதபெருமிடுக்கென்ன
உலகம் மூன்றினொடு	மூவுலகுக்கும் நாயகனாயிருக்கை யென்ன
நல் வீடு	உத்தமமான மோக்ஷ பதவியென்ன (ஆகிய இவற்றை)
பெறினும்	பெறுவதாயிருந்தாலும்
தெள்ளியோர்	விவேகிகளுடைய
குறிப்பு	அந்தரங்கமானது
கொள்வது எண்ணுமோ	பெற்றுக்கொள்ள நினைக்குமோ?

***—[உலகுபடைத்து.] கீழ்ப்பாட்டில் எம்பெருமானுடைய விலக்ஷணமான திருமேனியழகை அநுஸந்தித்த ஆழ்வார், இப்படி பரமவிலக்ஷணனை எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளைச் சென்னியிற் சூடவேணும் என்று ஆவல் கொண்டிருப்பதேயன்ரோ புருஷார்த்தம்; இவ்வுலகிலுள்ள பாவிகள் இதனை யறியாதே 'பிள்ளைவேணும் குட்டிவேணும் சேலைவேணும் செல்வம்வேணும்' என்று க்ஷுத்ர பலன்களையெல்லாம் விரும்பி இவை கொடுப்பாராரென்று கண்ட விடமெங்கும் அலைந்து திரிகிருர்களே! அந்தோ! இஃது என்ன கொடுமை! என்று முதலிலே திருவுள்ளம் நொந்து, அப்படிப்பட்ட க்ஷுத்ரர்களைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேணும்? அவர்கள் இஷ்டப்படி அலைந்துழலட்டும்; * உண்டியே உடையே உகந்தோடுமிம்மண்டலத்தாரைப்பற்றி நாம் சிந்திக்கவே வேண்டா; பகவத்பக்தி தலையெடுத்த மஹான்களும் இப்பூமியின்கண் இருக்கிருர்களன்ரோ; அவர்களுடைய அத்யவஸாயத்தைக் கண்டு நாம் உகப்போம்—என்று பரமபக்தர்களுடைய அந்தரங்க வுறுதியைப் பேசி மகிழ்கிருர் இப்பாட்டில்.

திருச்சந்த விருத்தத்தில்—"கேடில் சீர் வரத்தனுங் கெடும் வரத்தயனரன், நாடினேடு நாட்ட மாயிரத்தனுடு நண்ணினும், வீடதான போகமெய்தி வீற்றிருந்த போதிலும், கூடுமாசையல்ல தொன்று கொள்வனே குறிப்பிலே" என்று திருமழிசைப்பிரான் அருளிச்செய்த பாசுரத்தைப் பெரும்பாலுந் திருவுள்ளத்திற் கொண்டு இப்பாசுரமருளிச் செய்கிருரென்பது உய்த்துணரத்தக்கது. எம்பெருமானைக்கிட்டி அநுபவிப்பதிலுங்காட்டில் அவ்வநுபவத்தைப்பற்றின மனேரதமே நித்யமாய்ச் செல்லுமாகில் அதுவே சிறக்குமென்பது ஆழ்ந்த பக்தியுடையவர்களுடைய ஸித்தாந்தம்; அதைத்தானருளிச் செய்தார் திருமழிசைப்பிரான். ப்ரஹ்மலோக ஸாம்ராஜ்யம் கிடைத்தாலும் ருத்ரலோக ஆதிபத்யம் கிடைத்தாலும் இந்திரலோகமாளும் பாக்கியம் வாய்த்தாலும், பரம புருஷார்த்தமாகிய ஒன்ருன பரமபதாநுபவமே கிடைப்பதானாலும் இவற்றையெல்லாம் ஒரு புருஷார்த்தமாகவே மதிக்கமாட்டேன்: பின்னை எனக்கு எதிலே ஊற்றமென்ருல் 'எம்பெருமானேடு கூடவேணும், எம்பெருமானேடு சேரவேணும்' என்று மனேரதங்கொண்டிருப்பதுண்டே, அதுதான் எனக்குப் பரமபோக்யம் என்கிருர்.

இஷ்டமான விஷயத்தை அநுபவிப்பதிற்காட்டிலும் அநுபவிப்போமென்னும் மனேரதமே சிறந்ததாமென்பதை அனுபவரஸிகர்கள் எளிதில் உணர்வர். தேனூறி எப்பொழுதுந் தித்திக்கும்படியானது மனேரதமேயாம். திருவரங்குஞ் சென்று நம்பெருமாளை ஸேவிக்க வேணுமென்று ஒருவனுக்கு ஆவல் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள்; ஒருநாள் போய் ஸேவித்து வந்து விட்டால் அவ்வளவிலே ஆசை தீர்ந்துவிட்டதாகும்; அங்ஙனல்லாமல் மனேரதமேயாய்ச் செல்லுமாகில் அது நெடுநாளைக்கு ரஸவத்தரமாயிருக்கும். சந்தனம் பூசிக்கொள்ளுதல் புஷ்பஞ் சூட்டிக்கொள்ளுதல், பஞ்சகச்சவேஷ்டி உடுத்துக்கொள்ளுதல் முதலிய, அலங்காரகாரியங்களில் பிரமசாரிகளுக்கு உள்ள ஆவல் க்ருஹஸ்தர்களுக்கு இல்லாமையும் இங்கு ஒரு உதாஹரணமாகக் காட்டத்தகும். ஆகவே அனுபவ நிலைமையிற் காட்டிலும் அநுபவப் பாரிப்பு நிலைமையே சிறந்ததென்பது விளங்கும்.

ஆதியில் உலகங்களைப் படைத்தும் பிரளயம் வந்தவாறே அவற்றைத் திருவயிற்றிலே வைத்தருளி ரக்ஷித்தும் வருகிற எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளை நாம் சிரமேல் அணிந்து கொள்ளவேணுமென்று ஆவல்கொண்டு, அந்த ஆவலினுல் நெஞ்சு நீர்ப்பண்டமாக உருகி, மேன்மேலும் பரபக்தி பரமபக்திகள் தலையெடுத்து, அப்படிப்பட்ட பரமபக்தி நிலைமையிலே அமர்ந்திருக்கைதானே பரமபோக்யமானது; எம்பெருமானது திருவடிகள் தலைமேல் வந்து சேர

வேண்டா; திருநாடும் எய்தவேண்டா; வழுவிலாவடிமைசெய்யப் பெறவேண்டா; "இவை நமக்கு வாய்க்கவேணும்" என்கிற ஆவல் ஒன்றுமாத்திரம் அநவரதம் நெஞ்சில் நடையாடுமேல் போதுமானது; இந்த ஆவல்தான் அமுதவெள்ளம். இப்படிப்பட்ட ஆவல் பூண்டு "என் கண்ணிணைக ளென்றுகொலோ களிக்கும் நாளே" "மாயோனை மணத்தூணே பற்றிநின்று என் வாயார என்றுகொலோ வாழ்த்துநாளே" "அங்கடியவரோடு என்றுகொலோ அணுகுநாளே" "என் மலர்ச்சென்னி என்றுகொலோ வணங்குநாளே" "அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள் இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானுமிசைந்துடனே என்றுகொலோ இருக்குநாளே" என்றிவை போல்வன பல பாசுரங்களை வாய் வெருவிக்கொண்டு இதுவே ஒரு ஆனந்தமாகப் போது போக்க ப்ராப்தமாயிருக்க, இந்தப் போதுபோக்கை விட்டிட்டுக் கூறைசோறு முதலிய அற்பபலன்களை அபேக்ஷித்து அங்குமிங்கும் அலைந்துழல்கின்ற பாமரர்கள் அப்படியே அலையட்டும்; அவர்கள் எக்கேடு கெட்டால் நமக்கென்ன? என்கிறார் **ஒருபொருட்கசைவோர் அசைக** என்னுமளவால். தெளிந்த ஞானமுடைய மஹான்கள் இப்படிப்பட்ட க்ஷுத்ர பலன்கள் கையிலே ஸித்தமாக வந்து சேர்ந்தாலும் உதறித்தள்ளி விடுவர்கள்; கீழ்ச்சொன்ன அமுதவெள்ளத்திலேயே அவர்கள் ஊன்றியிருப்பர் **கள்** என்கிறார்மேல்.

திருவொடுமருவிய இயற்கை பெறினும், மாயாப் பெருவிறல் பெறினும், உலகம் மூன்று பெறினும், நல்வீடு பெறினும் தெள்ளியோர் குறிப்பு (இவற்றைக்) கொள்வதெண்ணுது. "கூடுமாசையல்ல தொன்று **கொள்வனோ குறிப்பிலே**" என்றபடி எம்பெருமானோடு கூடவேணுமென்கிற ஆசையொன்றையே தெள்ளியோர் குறிக்கொண்டிருப்பர் என்றவாறு. இங்குத் **தெள்ளியோர்** என்றது திருமழிசைப்பிரானையும் அவர்போல்வாரையும்.

"**அவாவாருயிருருகியுக்க**" என்று தொடங்கிச் "**சிறப்பு விட்டு**" என்ற வரையில் **அவா காதல் அன்பு இன்பு தேறல் அமுதம்** என்று ஒருபொருட் பன்மொழிகளை இணைத்துத் தொடுத்திருப்பதனால் பகவானுடைய திருவடிகளை முடிமேலணிந்துகொள்வதை ஆசைப்படும் விஷயத்தில் ஆழ்வார்க்குண்டான ஆதரம் அளவற்றதென்பது நன்கு வெளிப்படும். அவாவாருயிர் என்றவிடத்து 'அவா ஆர்' என்றும் பிரிக்கலாம்; ஆசை நிரம்பிய என்று பொருளாம்.

ஒருபொருட்கு அசைவோர் அசைக—ஸம்ஸாரிகள் விரும்பும் பொருள்களை ஆழ்வார் தமது திருவாக்காலே சொல்லவும் கூசி ஒருபொருட்கு என்கிறார். **திருவொடுமருவிய இயற்கை**—நாலுநாளில் அழிந்துபோகக்கூடிய ஐச்வரியமல்லாமல் எப்போதும் ஸ்திரமாயிருக்கக்கூடிய ஐச்வரியத்தைப் பெற்றாலும் என்றபடி. **மருவுதல்**—எப்போதும் கூடியிருத்தல். **இயற்கை**—தன்மை; ஐச்வரியத்தோடு எப்போதுங் கூடியிருக்குந் தன்மையாவது நித்ய ஸ்ரீமானாக இருக்கை. அப்படிப்பட்ட நிலைமையையும் தெள்ளியோர் குறிப்பு வேண்டமாட்டாதாம்.

மாயாப்பெருவிறல்—ஐச்வரியம் அளவற்றிருந்தாலும் அவற்றை அநுபவிப்பதற்கு உறுப்பான சக்தி பூர்ணமாக இல்லாவிடில் பயனில்லையே; அந்த சக்தியும் கூடவே கிடைக்கப் பெற்றாலும் அப்போதும் வேண்டார்கள் என்றபடி. **மாயா**—மாய்தலாவது அழிதல்; அழியாத என்கை. **உலகம்மூன்றினோடு**—கீழே சொன்ன நித்யமான ஐச்வரியம் என்றமாத்திரமேயல்ல; மூவுலகத்தையும் ஆளும்படியான பெருஞ்செல்வம் கைபுகுந்தாலும் வேண்டார்களென்கை. பலசொல்லி யென்? ஸகல ஐச்வர்யங்களுக்கும் மேற்பட்டதான மோக்ஷ ஸாம்ராஜ்யந்தானும் பெறு

வதாயிருந்தாலும் "எம்மாவீட்டுத் திறமும் செப்பம்" என்றும், "இச்சுவை தவிரயான்போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும் [பாவோ நாந்யத்ர கச்சதி] [வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:]என்றும் சொல்லுகிறபடியே அந்த மோக்ஷந்தன்னையும் ஒரு பொருளாக மதியார்களென்கை.

ஆக இப்பாட்டால்—ஸம்ஸாரிகளைப்போலே க்ஷுத்ரபலன்களை விரும்பி அலையாமல் விவேகிகளைப்போலே பகவத்விஷயத்தில் அநுராகம் மிக்கிருப்பதே நமக்கு ப்ராப்தம் என்ருராயிற்று. 2

2580 குறிப்பில்கொண்டு நெறிப்பட * உலகம் மூன்றுடன் வணங்குதோன்று புகழ், ஆணை *
மெய்பெற நடாய தெய்வம் மூவரில் முதல்வனுகி * சுடர்விளங்ககலத்து *
வரைபுரை திரைபொரு பெருவரை வெருவர* உருமுரலொலி மலி நளிர்கடற்படவர
வரசு உடல்தடவரை சுழற்றிய * தனிமாத் தெய்வத்தடியவர்க்கினி நாமாளாகவே
யிசையுங்கொல் ?* ஊழிதோறூழியோவாதே. 3

மூன்று உலகம்	மூவுலகங்களும்
நெறிபட	நல்வழிபடிந்து உஜ்ஜீவிக்கும்படியாக
குறிப்பில் கொண்டு	திருவுள்ளம்பற்றி,
உடன் வணங்கு தோன்று புகழ்	அவ்வுலகங்களெல்லாம் ஒன்று சேர்ந்து வணங்கப்பெற்றமையால் ப்ரஸித்தமான கீர்த்தியையுடையனாய்
ஆணை மெய் பெற நடாய	தனது ஆஜ்ஞையைத் தடையின்றிச்செலுத்துமவனாய்
தெய்வம் மூவரில் முதல்வன் ஆகி	மூன்று மூர்த்திகளுக்குள்ளே ப்ரதானனாய்
சுடர் விளங்கு அகலத்து	திருவாபரணச் சோதி விளங்குகின்ற திருமார்பையுடையனாய்,
வரை புரை	மலைபோன்ற
திரை	அலைகள்
பொரு	எறியப்பெற்றதும்
பெரு வரை வெருவர	குலபர்வதங்களும் அஞ்சும்படியாக
உரும் முரல் ஒலி மலி	இடிபோல் ஒலிக்கின்ற கோஷம் நிறைந்ததும்
நளிர்	குளிர்ச்சியையுடையதுமான
கடல்	கடலில்,
படம் அரவு அரசு உடல்	படங்களையுடைய ஸர்ப்பராஜனாகிய வாஸுகியின் உடலை
தட வரை	(மந்தரமென்கிற) பெரிய மலையிலே
சுழற்றிய	கட்டிச் சுழற்றினவனாய்,
தனி	அத்விதீயனான
மா தெய்வம்	தேவாதி தேவனுடைய
அடியவர்க்கு	பக்தர்களுக்கு
நாம் இனி ஊழிதோறு ஊழி ஓவாது ஆள் ஆக இசையும் கொல்	நாம் இனி ஸர்வகாலமும் இடையறுது ஆட்பட்டிருக்கப் பொருந்துமா ?

* * *—[குறிப்பில்கொண்டு.] பகவத்பக்தியைப் பற்றிப் பேசினுர் கீழ்ப்பாட்டில்; பகவானோடு நின்றுவிடாமல் பாகவதரளவுஞ்சென்று பக்திபண்ணுகை ஸ்வரூபமாதலால் அப்படிப்பட்ட பாகவதபக்தி நமக்கு இனி ஒருநாளும் வழுவாமல் சாச்வதமாக உண்டாகக் கூடுமோவென்று அந்த நிஷ்டையில் தமக்குண்டான அவாவை வெளியிடுகிருர் இதில்.

குறிப்பில்கொண்டு என்று தொடங்கித் **தனிமாத் தெய்வம்** என்னுமளவும் எம்பெருமானுடைய ஸ்வரூபஸ்வபாவங்களைச் சொல்லுகிருர். **உலகம் மூன்று நெறிப்படக் குறிப்பில் கொண்டு உடன்வணங்கு தோன்றுபுகழ்**—தன்னாலே படைக்கப்பட்ட மூவுலகங்களும் தீவழியில் செல்லாமல் நல்வழியில் படிந்து உஜ்ஜீவிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி அப்படியே அவை நல்வழிபடிந்து தன்னை வணங்க அதனால் எங்கும் பரந்த புகழையுடையவன் என்கிறது.

ஆணை மெய்பெற நடாய—ஆணையாவது ஆஜ்ஞை; எம்பெருமானுடைய ஆஜ்ஞையாவது—சாஸ்த்ரம்; *ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே—ஆஜ்ஞாச்சேதீ மமத்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:* என்று எம்பெருமான்தானே அருளிச் செய்திருக்கிறபடி. ச்ருதிஸ்ம்ருதிகள் முதலிய சாஸ்த்ரங்களாகிற திவ்யாஜ்ஞையைத் தடையின்றி எங்கும் நடத்துபவன் என்கை. * "கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள்தானும், மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள்செய்து" என்றபடி தன்னாலே அளிக்கப்பட்ட சாஸ்த்ரங்கள் பழுதுபடாதபடி அவற்றை உலகில் நன்கு பிரசாரம் செய்விப்பவன் என்றவாறு.

தெய்வம் மூவரில் முதல்வனாகி—அரி அயன் அரன் என்று சொல்லப்படுகிற மூன்று தெய்வங்களுள் முதல் தெய்வம் தானாயிருக்கை. "ஆணை மெய்பெற நடாய தெய்வம் மூவரில்" என்று சேர்த்து **நடாய** என்பதை தெய்வம் மூவர்க்கும் விசேஷணமாக அந்வயிப்பதும் பொருந்தும். அப்போது, எம்பெருமானாகிய தன்னுடைய ஆஜ்ஞையை உள்ளபடி பரிபாலிக்கின்ற பிரமன் சிவன் இந்திரன் என்னும் மூவர்க்கும் நியாமகன் என்று பொருளாம். இப்போது, **மூவரில்** என்றது மூவர்க்கும் என்றபடி.

சுடர்விளங்கு அகலத்து—சுடராவது தேஜஸ்ஸு; திருவாபரணங்களாலுண்டாகும் தேஜஸ்ஸைச் சொல்லுகிறது. திருவாபரணச் சோதியாலே பளபளவென்று விளங்குகின்ற திருமார்பையுடையவனாய் என்றபடி.

வரைபுரைதிரைபொர என்று தொடங்கித் **தடவரைசுழற்றிய** என்னுமளவும் ஒரு வாக்கியம். துர்வாஸமுனியின் சாபத்தால் தேவர்களின் செல்வம் யாவும் கடலில் ஒளிந்து ஒழிந்துவிடவே அசுரர்வந்து பொருது அமரரை வென்றனர்; பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி அசுரர்களையும் துணைகொண்டு மந்தரமலையை மத்தாக நாட்டி வாஸுகியென்னும் மஹாநாகத்தைக் கடைகயிறுகப்பூட்டிப் பாற்கடலைக் கடையலாயினர். அப்போது மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமை வடிவமெடுத்து அம்மலையின் கீழேசென்று அதனைத் தனது முதுகின்மீது கொண்டுதாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமற் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தனன். அப்போது, வாஸுகி நாகத்தின் வாலைப்பிடித்துக்கொண்ட தேவர்களும் தலையைப்பிடித்துக்கொண்ட அசுரர்களும் ஆகிய இருதிறத்தாரும் அதனை வலியப்பிடித்து இழுத்துக் கடையவல்ல வலிமையில்லாதவராய் நிற்க அதுநோக்கி அத்திருமால்தான் ஒரு திருமேனியைத்தரித்துத் தேவர்கள் பக்கத்திலேயும், வேறொரு திருமேனியைத் தரித்து அசுரர்கள் பக்கத்திலேயும் நின்று வாஸுகியின் வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தனன் என்ற வரலாறு அறியத்தக்கது.

கடைகிற அக்காலத்தில் கடலானது மிகவும் பயங்கரமாக இருந்ததென்பதைக் கூறுகின்றார் **வரைபுரை திரைபொர** என்று தொடங்கி, அப்போது கடலில் ஸாதாரணமான அலைகள் கிளம்பவில்லை; ஒவ்வொரு அலையும் ஒவ்வொரு மலை பெயர்ந்தாற்போலே பெயர்ந்து எறிந்ததாம். **புரை**—உவமவுருபு; மலைபோன்ற [பெருப் பெருத்த] அலைகள், **பொர**—மோதப்பெற்ற; இது கடலுக்கு விசேஷணம். **உருமுரலொலிமலி** என்பதும் கடலுக்கு விசேஷணம். கடைகிறகாலத்தில் கடலில் உண்டான த்வனியானது இடியிடித்தாற்போலிருந்ததாம். அந்த த்வனி குலபர்வதங்களையும் நடுக்கி அசைக்கவற்றாயிருந்தமை தோற்றப் **பெருவரைவெருவர** எனப்பட்டது. **உரும்** என்றும் **உருமு** என்றும் இடிக்குப் பெயர் .. **உரும்முரல்** என்று பிரிக்க.

இடிபோலே முரல்கின்ற [கோஷிக்கின்ற] யாதொரு ஒலியுண்டு, அது **மலி**—நிறைந்திருக்கிற என்றபடி. "வரைபுரைதிரை பொரப் பெருவரை வெருவுற என்ற பாடமும் ஒக்கும்.

நளிர்கடல்—குளிர்ந்த கடலிலே. கடலுக்கு இயற்கையாகவுள்ள குளிர்த்தியைச் சொல்லுகிறதன்று இங்கு; கீழ்ச் சொன்னபடி பயங்கரமாயிருக்கச் செய்தேயும் எம்பெருமானுடைய கடாக்ஷம் பட்டமாத்திரத்தில் குளிர்ந்தபடியைச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட கடலிலே மத்தாக நாட்டின மந்தரமலையிலே வாஸுகி நாகத்தைக் கடைகயிருகக் கட்டிச் சுழற்றிய யாதொரு தனிமாத்தெய்வமுண்டு—ஒப்புயர்வற்ற பரதேவதை, அதற்கு நாம் ஆளாவதிலுங்காட்டில், அதற்கு ஆட்பட்டிருக்கும் அடியவர்களுண்டே, அவர்கட்கு [ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு] இனிமேலுள்ள காலமெல்லாம் நாம் ஆட்பட்டிருக்க வாய்க்குமா? இப்படிப்பட்ட மஹா பாக்யமும் நமக்குக்கிடைக்குமோ? என்ருராயிற்று.

ஆளாகவே என்ற விடத்திலுள்ள ஏகாரத்தைப் பிரித்து "**அடியவர்க்கே**" என்று கூட்டிக்கொள்ளலாம். பிரயோஜனந்தரபரரான தேவதைகளுக்காகத் தன் உடம்புநோவக் கடலைக்கடைந்து அம்ருதத்தைக் கொடுத்தானென்கிற மஹோபகாரத்தில் ஈடுபட்டிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே ஆட்பட்டிருக்க விரும்பினுராயிற்று.

ஊழிதோறூழி—ஊழியூழிதோறு என்கை. ஊழியாவது காலம்; ஸகல காலமும் என்றபடி. **ஓவாது** என்றது—நடுவில் ஒரு க்ஷணமும் பாழாகாமல் என்றவாறு. 3

2581 ஊழிதோறூழி யோவாது * வாழியவென்று யாம்தொழ விசையுங்கொல்? *
யாவகை யுலகமும் யாவரு மில்லா * மேல்வரும் பெரும்பாழ் காலத்து-* இரும்பொருட்
கெல்லா மரும்பெறல் தனிவித்து-* ஒருநானுகித் தெய்வநான்முகக் கொழுமுளை
யீன்று * முக்கணீசனுெடு தேவுபலநுதலி * மூவுலகம் விளைந்த வுந்தி *
மாயக்கடவுள் மாமுதலடியே. **4**

யாவகை உலகமும்	எவ்வகைப்பட்ட லோகங்களும்
யாவரும்	எவ்வகைப்பட்ட பிராணிகளும்
இல்லா	இல்லாமலிருந்த
மேல் வரும் பெரு பாழ் காலத்து	கிழ்க்கழிந்த மஹா ப்ரளய காலத்தில்
இரு பொருட்கு எல்லாம்	எண்ணிறந்த ஆத்ம வஸ்துக்களுக்கெல்லாம்
பெறல் அரு தனி ஒரு வித்து தான் ஆகி	பெறுதற்கரிய மூவகைக் காரணமும் தானேயாய்க் கொண்டு
தெய்வம் நான் முகன் கொழு முளை ஈன்று	நான்முகக் கடவுளாகிற சிறந்த ஒரு முளையைப் படைத்து
	(அவன் மூலமாக)
முக்கண் ஈசனெடு பல தேவு நுதலி	முக்கண்ணனுன சிவன் முதலிய பல தேவதைகளை உண்டாக்கி
	(ஆக இவ்வகையாலே)
மூ உலகம் விளைந்த உந்தி	மூன்று லோகங்களையும் உண்டாக்கின திருநாபியையுடையவனுய்
மாயன்	ஆச்சர்யபூதனுய்
கடவுள்	ஸர்வோத்தமனுன ஸ்ரீமந் நாராயணனுடைய
மா முதல் அடியே	(உஜ்ஜீவனத்திற்கு) மூல காரணமான திருவடிகளையே
ஊழி ஊழி தோறு	ஸர்வகாலமும்
ஓவாது	இடைவிடாமல்
வாழிய என்று யாம் தொழ	'வாழ்ந்திடுக' என்று நாம் சொல்லி வணங்கும்படியாக
இசையும் கொல்	(பாக்கியம்) வாய்க்குமோ,

* * *—[ஊழிதோறூழி.] கீழ்ப்பாட்டில் "தனிமாத் தெய்வத் தடியவர்க்கினி நாமாளாகவே இசையுங்கொல்" என்று பாகவதசேஷத்வம் நமக்குக் கிடைக்குமா? என்று மனோரதித்தார்; பாகவதர்களை அநுவர்த்தித்துப் பார்த்தார்; அவர்கள் எப்போதும் "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு........உன் சேவடி செவ்வி திருக்காப்பு" என்று எம்பெருமான் திருவடிகளுக்கு மங்களாசாஸநம் செய்வதையே தொழிலாகக் கொண்டிருந்தார்கள்; அதைப்பார்த்து இவர்களுடைய காலக்ஷேபமேயன்றோ நமக்கு உத்தேசியம்; இவர்களோ இடைவிடாது எம்பெருமான் திருவடிகளுக்கு மங்களாசாஸநமே பண்ணிக்கொண்டிரா நின்றார்கள்; இது மிக அழகாயிராநின்றது; இப்படிப்பட்ட போதுபோக்கு நமக்கும் கிடைக்குமாகில் நலமாயிருக்குமே!' என்று கொண்டு, அப்படிப்பட்ட பாக்கியம் வாய்க்குமா என்கிறார் இதில்.

யாவகையுலகமும் என்று தொடங்கி **மாயக்கடவுள்** என்னுமளவும் எம்பெருமானுடைய பெருமையைப் பேசுகிறார். "பன்மைப் படர் பொருளாதுமில்பாழ் நெடுங்காலத்து நன்மைப்புனல்பண்ணி நான்முகனைப்பண்ணித் தன்னுள்ளே, தொன்மைமயக்கிய தோற்றிய சூழல்கள் சிந்தித்தே" என்ற பாசுரம் இங்கு அநுஸந்திக்கத்தகும். சேதநவர்க்கங்களிலும் அசேதநவர்க்கங்களிலும் ஒன்றுமில்லாதபடி மஹாப்ரளயங் கோத்தகாலத்தில், தேவமநுஷ்யாதி ரூபத்தாலே எண்ணிறந்தவைகளாய் அசித்தோடே கலசிக்கிடப்பவையான ஜீவவஸ்துக்களுக்கெல்லாம் தானே காரணமாயிருப்பவன் எம்பெருமான்.

தனிவித்து ஒரு தானாகி—தான் ஒரு தனிவித்தாகி என்று அந்வயிப்பது. **வித்தாகி** என்னுமல் ஒரு **வித்தாகி** என்னுமல் ஒரு **தனி வித்தாகி** என்றதனால்—நிமித்தகாரணம் ஸஹகாரி காரணம் உபாதான காரணம் என்கிற மூவகைக் காரணங்களும் எம்பெருமான் தானேயாகிறான் என்று தெரிவிக்கப்பட்டதாயிற்று. உலகில் குடம் துணி முதலிய வஸ்துக்கள் ஜனிக்கவேணுமானால் மேற்சொன்ன முக்காரணங்களும் அமையவேண்டும்; பானைக்கு மண் உபாதான காரணமென்றும், சக்கரம் தடி தண்ணீர் முதலியவை ஸஹகாரிகாரண மென்றும், குயவன், காலம், அத்ருஷ்டம் முதலியன நிமித்தகாரணமென்றும் சொல்லப்படும். கார்யவஸ்துக்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட காரணங்கள் இருந்தாகவேண்டுமாகில் பிரபஞ்சமாகிற காரியத்திற்கு எது உபாதானகாரணம்? எது ஸஹகாரி காரணம்? எது நிமித்த காரணம்? என்று கேள்வி பிறக்குமே; எம்பெருமான்றானே மூவகைக் காரணமுமாகிறானென்பது வேதாந்திகளின் கொள்கை. இஃது இங்கு விரிப்பிற் பெருகும்.

மேல்வரும் என்பதற்கு, கீழே கழிந்த என்று பொருள் கொள்ளுதல் விபரீத லக்ஷணையினாலென்க. இங்கு வியாக்யான ஸ்ரீஸூக்தி—"மேலென்றது பண்டென்றபடி; வருமென்றது போனவென்றபடி."

அரும்பெறல் என்றது நிர்ஹேதுகத்வத்தைக் காட்டும். இப்படிப்பட்ட விலக்ஷணமானதொரு காரண வஸ்துவானது ஸம்ஸாரிகளிடத்திலுள்ள கிருபையினால் தானாகவே வந்து முகங்காட்டிக் காரியம் செய்ததென்கை. அன்றி, ஒருவருடைய முயற்சியால் பெறமுடியாதது.

அத்வாரக ஸ்ருஷ்டியென்றும் ஸத்வாரக ஸ்ருஷ்டியென்றும் ஸ்ருஷ்டி இருவகைப்படும். எம்பெருமான் தானே நேராக ஸ்ருஷ்டிப்பது அத்வாரகஸ்ருஷ்டியாம்; ஒருவன் மூலமாக ஸ்ருஷ்டிப்பது ஸத்வாரக ஸ்ருஷ்டியாம். அண்டஸ்ருஷ்டி வரையில் தானே ஸ்ருஷ்டிப்பதாதலால் அது அத்வாரகஸ்ருஷ்டி. இவ்வருகுள்ளவற்றை நான்முகன் மூலமாக ஸ்ருஷ்டிக்கிறானகையாலே இவற்றின் ஸ்ருஷ்டி ஸத்வாரகஸ்ருஷ்டி. இதைச் சொல்லுகிறார்மேல் **தெய்வநான்முகக்கொழுமுளை**

யின்று என்று. கப்பும் கிளையும் காயும் கனியும் முளையினின்று உண்டாகிறபடியால் நான்முகன் இங்கு ஒரு முளையாகக் கூறப்பட்டான். கொழுமுளை என்றது சிறந்த அங்குரம் என்றபடி. இப்பாலுள்ள கார்யவர்க்கங்களையெல்லாம் உண்டாக்குகைக்குப் பாங்கான யோக்யதையை யுடையவன் பிரமன் என்றவாறு.

“நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனுந் தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்” என்றபடி பிரமன் முதன்முதலாகச் சிவனைப் படைத்தனனுதலால் முக்கணீசனெடு என்றும், பிறகு அடைவே பல தேவதைகளையும் ஸ்ருஷ்டித்தனனுதலால் தேவுபலநுதலி என்றும் அருளிச்செய்தார். ஆக, ஸத்வாரக ஸ்ருஷ்டியாலே உண்டாக்கின ஸகல வஸ்துக்களுக்கும் மூலகந்தம் திருநாபியாகையாலே மூவுலகம்விளைத்தவுந்தி என்ருர். இப்படிப்பட்ட திருவுந்தியையுடைய மாயக்கடவுளுண்டு—ஆச்சரியமான ஞானசக்திகளுடையனை ஸர்வேச்வரன், அவனுடைய திருவடிகளை, ஊழிதோறூழி யோவாது வாழியவென்று யாந்தொழ விசையுங்கொல்.

அந்தத்திருவடிகளை ச்ரமப்படுத்திக் காரியங் கொண்டவர்களைப்போலே நாமும் ஆகாமல் அவற்றுக்குப் பல்லாண்டுபாடப் பெறவேணும். வாழிய—வியங்கோள்வினைமுற்று. 4

2582 மாமுதலடிப்போதொன்று கவிழ்த்தலர்த்தி * மண்முழுதுமகப்படுத்து-* ஒண்சுடரடிப்போ
தொன்று விண்செலீஇ *நான்முகப்புத்தேள் நாடுவியந்துவப்ப * வானவர் முறைமுறை
வழிபட நிறீஇ *தாமரைக்காடு மலர்க்கண்ணெடு கனிவாயுடையது
மாய்* இருநாயிருயிரம் மலர்ந்தன்ன * கற்பகக்காவு பற்பலவன்ன *
முடிதோளாயிரம் தழைத்த * நெடியோய்க்கல்லது மடியதோவுலகே. 5

மா முதல் அடி போது ஒன்று	(உலகத்துக்கெல்லாம்) மூலாதாரமாகிய திருவடிகளில் ஒன்றை
கவிழ்த்து அலர்த்தி	நிலமட்டமாகப் பரப்பி
மண் முழுதும்	பூமியை யெல்லாம்
அகப்படுத்து	திருவடிக்குள்ளடக்கி ஸ்வாதீனப்படுத்திக்கொண்டும்
ஒண் சுடர் அடி போது ஒன்று	அழகிய தேஜஸ்ஸு நிறைந்த மற்ருெரு திருவடித் தாமரையை
நான் முகன் புத்தேள் நாடு	பிரமதேவனுடைய உலகமானது
வியந்து உவப்ப	ஆச்சரியமும் ஸந்தோஷமும் அடையும்படியாகவும்
வானவர்	மற்றுமுள்ள தேவர்கள்
முறை முறை	சாஸ்திர விதிப்படி
வழிபட	ஆராதிக்கும்படியாகவும்
விண் செலீஇ நிறீஇ	ஆகாசத்திலே செலுத்தி நிறுத்தி
தாமரை காடு மலர் கண்ணெடு	தாமரைக்காடு மலர்ந்தாற்போலிருக்கிற திருக்கண்களையும்
கனி வாய்	கொவ்வைக் கனிபோன்ற திரு அதரத்தையும்
உடையதும் ஆய்	உடையவனையும்
இரு நாயிறு ஆயிரம் மலர்ந்தன்ன	பெரிய ஆயிரம் ஸூர்யர்கள் சேர்ந்து உதித்தாற்போன்ற
முடி	திருவபிஷேகத்தை யுடையனையும்
பல் பல கற்பகம் காவு அன்ன	பலவகைப்பட்ட கற்பகச் சோலைகள் போலே
தோள் ஆயிரம் தழைத்த	ஆயிரம் திருத்தோள்கள் பணைத்திருக்கப் பெற்றவனையுமுள்ள
நெடியோய்க்கு அல்லதும்	பரம புருஷனை உனக்குத் தவிர (வேறு யார்க்கேனும்)
உலகு அடியதோ	இவ்வுலகம் அடிமைப்படக் கூடியதோ ?

* * *—[மாமுதல்] எம்பெருமான் உலகமளந்த சரிதையை அநுஸந்தித்து, ‘இப்படியும் ஒரு ஸௌலப்யமும் ஸௌசீல்யமும் உண்டாவதே!’ என்றீடுபட்டு

ஆச்ரிதர்க்காகத் தன்னை அழிய மாறிக் காரியஞ்செய்கிற மஹோபகாரகனாகிய பரமபுருஷனுக்கன்றி வேறுயாருக்கு இவ்வுலகம் அடிமைப்படமுடியும்? எல்லார் தலையிலும் திருவடிகளைப் பரப்பின தெய்வத்தை நோக்கி "அன்றிவ்வுலகமளந்தாய் அடிபோற்றி" என்று மங்களாசாஸநம் பண்ணுகை ஏற்குமேயன்றி அவன் திருவடிகளின்கீழ்த் துகையுண்ட சிலரை நோக்கி 'ஜய விஜயீபவ' என்னக் கூடுமோ வென்கிறார்.

மாமுதல்—என்பதைத் திருவடிக்கு விசேஷணமாக்கி உரைப்பதன்றி அண்மைவிளியாகக் கொண்டு, உலகங்கட்கெல்லாம் ஆதிகாரணனான எம்பெருமானே! என்று ஸம்போதநமாக உரைத்தலும் ஒக்கும். **போது**—புஷ்பம்; அதாவது தாமரைப்பூ; அடிப்போது—பாதாரவிந்தம். அதைக் கவிழ்த்துப் பரப்பிப் பூமண்டலம் முழுவதையும் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டானாயிற்று.

செலீஇ—செலுத்தி; சொல்லிசையளபெடை. "வானவர் முறை முறை வழிபட நெறீஇ" என்றே பெரும்பாலும் ஓதுகின்றனர். **நிறீஇ** என்றபாடமும், நிறுத்தி என்று அதற்குப்பொருளும் அஸ்மதாசார்யர் அருளிச் செய்தது. **நெறீஇ** என்ற பாடமும் பொருந்தும்; வியாக்கியானத்திற்கும் இணங்கும். **வானவர்**—தேவர்கள், **நெறீஇ**—நல்வழிப்பட்டு, **முறை முறை**—சாஸ்த்ர விதிப்படி, **வழிபட**—ஆராதிக்கும்படியாக என்று பொருளாகக் கடவது. **நெறீஇ**—இறந்தகால வினையெச்சம். **நெறி**—பகுதி; **இ**—இறந்த கால வினையெச்ச விகுதி; இகரம் ஈகாரமானதும் அளபெடுத்ததும் விகாரம். **நான்முகப்புத்தேள்=புத்தேள்** என்று தெய்வத்திற்குப் பெயர்; நான்முகன்+புத்தேள், நான்முகப்புத்தேள் பிரமதேவன் என்றபடி. அவனுடைய நாடு வியந்து உவப்ப என்றது—அவனுடைய நாட்டிலே உள்ளவர்கள் 'தாமரை போல் பரம போக்யமான ஒரு திருவடி இங்கே வந்து ஸேவை ஸாதிப்பதே!' என்று ஆச்சரியமும் ஸந்தோஷமும் அடைய என்றபடி.

தாமரைக்காடு என்று தொடங்கி உலகளந்த பெருமானுடைய சில அவயவங்களையும் திருவபிஷேகத்தையும் வருணிக்கிறது. இப்படி விலக்ஷணனான பரமபுருஷனுக்குத் தவிர மற்று யார்க்கேனும் அடிமைப்பட உரியதோ இவ்வுலகம்?

நெடியோன் என்பதன் முன்னிலை **நெடியோய்** என்பது. 5

2583 ஓஒ உலகினதியல்வே * ஈன்றோளிருக்க மணைநீராட்டி * படைத்திடந்துண்டுமிழ்ந்
தளந்து * தேர்ந்துலகளிக்கும் முதற்பெருங் கடவுள் நிற்ப * புடைப்பலதானறி
தெய்வம் பேணுதல் * தனது புல்லறிவாண்மை பொருந்தக்காட்டி *
கொல்வன முதலா வல்லன முயலும் * இனையசெய்கை யின்புதுன்பளி *
தொன்மாமாயப் பிறவியுள் நீங்கா * பன்மா மாயத்தழுந்துமா நளிர்ந்தே. 6

உலகு	லோகங்களை	தேர்ந்து	இப்படியாகவே இன்னும் பல ரக்ஷண வழிகளைச் சிந்தித்துக் கொண்டும்
படைத்து	ஸ்ருஷ்டித்தும்	அளிக்கும்	(முக்காலங்களிலும்) ரக்ஷித்துக்கொண்டே யிருக்கிற
இடந்து	(ஒருகால் வராஹா வதாரத்தில்) உத்தரித்தும்	முதல் பெரு கடவுள் நிற்ப	ஸர்வகாரணனும் பராத்பரனுமான ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளி யிருக்கவும்
உண்டு	மற்றொருகால் பிரளயம் வந்தபோது) வயிற்றிலே வைத்து நோக்கியும்		(அவனை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்க மாட்டாமல்)
உமிழ்ந்து	பிறகு வெளிப்படுத்தியும்		
அளந்து	(பின்னுமொருகால் த்ரிவிக்ரமனாய்) ஸ்வாதீனப்படுத்திக்கொண்டும்		

புடை	ஏதோ வொரு மூலேயில் சொல்லப்பட்டும்
தான் அறி	தான்தோன்றித்தனமாக அறிந்து கொள்ளக் கூடியவும்
பல	பலவகைப்பட்டு மிருக்கிற
தெய்வம்	தேவதைகளே
பேணுதல்	ஆராதிப்பது,
தனது	தன்னுடைய
புல் அறிவாண்மை	நீசபுத்தியை
பொருந்த காட்டி	விளங்கக் காட்டிக்கொண்டு
ஈன்றோருள் இருக்க மணை நீராட்டி	பெற்ற தாய்க்கு ஒரு உபசாரமும் பண்ணுதே விட்டிட்டு அறிவற்றதொரு மணைக்கட்டைக்கு உபசாரம் பண்ணுவது போல,
கொல்வன முதலா	ஆடு பலிகொடுத்தல் கோழி பலி கொடுத்தலாகிற ஜீவ ஹிம்ஸை முதலான
அல்லன முயலும்	தப்புக் காரியங்களேச் செய்ய நினைக்கையாகிற
இனைய செய்கை	இப்படிப்பட்ட காரியங்களாயிரா நின்றன ;
அளி	(அந்த க்ஷுத்ரதெய்வங்களின்) ப்ரஸாதமோ
இன்பு துன்பு	ஸுகமென்று பேர் மாத்திரமான துக்கம் ;
	(அதாவது என்னெனில்;)
தொல்	அநாதியாய்
மா	மஹத்தாய்
மாயம்	ஆச்சரியமான
பிறவியுள்	ஸம்ஸாரத்தில் நின்றும்
நீங்கா	ஒருநாளும் நீங்குதலின்றிக்கே
பல் மா மாயத்து	பலவகைப்பட்ட வ்யாமோஹ ஜநகங்களான சப்தாதி விஷயங்களிலே
நளிர்ந்து அழுந்தும் ஆ	ஆழ அழுந்திக் கிடப்பதாம்;
ஓஓ உலகினது இயல்வு	இப்படிப்பட்ட லோகஸ்வபாவம் என்ன பரிதாபம் ஐயோ ! (என்கிருர்.)

* * *—"முடிதோளாயிரந்தழைத்த நெடியோய்க்கல்லது மடியதோவுலகே" என்று கீழ்ப்பாட்டிலருளிச்செய்த ஆழ்வார் தம்முடைய கொள்கைப்படியே உலகமனைத்தும் எம்பெருமானே வணங்கி வழிபட்டு உஜ்ஜீவிக்கின்றதா என்று ஆராய்ந்துபார்த்தார். க்ஷுத்ர பலன்களே விரும்பி க்ஷுத்ரதேவதைகளே ஆராதிக்கின்ற க்ஷுத்ர ஜனங்களே மிகுதியாகக் காணப்பட்டன; பரிதாபம் பொறுக்கமாட்டாமல் ஐயோ ! ஐயோ !! இப்படியும் உலகம் பாழாய்ப்போவதே ! என்று வயிற்றிலும் தலேயிலும் அடித்துக்கொள்ளுகிருர்—ஓ ஓ என்று கதறுகிருர். இப்படி இவர் ஓ ஓ என்று கதறுகிற கதறல் எவ்வளவு தூரம் கேட்குமென்னில், இவர்தாம் கீழ்ப்பாட்டில் பேசின மேலுலகளந்த திருவடி எவ்வளவுதூரம் சென்றதோ, அவ்வளவிலும் மேலாகவே சென்று ஒலிக்குமென்று கொள்ளீர்.

இவ்வுலகின் ஸ்வபாவத்தை நாம் என்ன சொல்லுவோம் ! இவ்வுலகம் செய்கிற காரியம் என்னவென்ருல், நன்றிகெட்ட காரியஞ்செய்யாநின்றது. பிள்ளேயைப் பெறுவதற்கு முன்பு பலவகைக் கஷ்டங்கள் பட்டும் பெற்றபின்பும் குறையற ஸம்ரக்ஷிப்பதற்காக எத்தனேயோ வருத்தங்கள் பட்டும் நன்மையே செய்து போருகிற மாதாவுக்குப் பலவகை உபசாரங்கள் செய்யவேண்டியது ப்ராப்தமாயிருக்க, அவளேத் திரஸ்கரித்துவிட்டு உபயோகமற்றவொரு மணைக்கட்டையை ஆதரித்து அதற்குக் கொண்டாட்டங்கள் செய்வாரைப்போலே இவ்வுலகத்தவர்கள், பலவகை உபகாரங்களும் செய்து போருகிற எம்பெருமானே அநாதரித்துவிட்டு ஒரு நன்றியும் செய்யமாட்டாத அசேதநப்ராயங்களான புதுத்தெய்வங்களேக் கொண்டாடுகின்ருர்களே ! இது விவேகமிருந்து செய்கிற காரியமோ ? அறிவு உள்ளவர்கள் இப்படியுஞ் செய்வார்களோ ? எம்பெருமான் இவ்வுலகுக்குச் செய்த உபகாரங்களே இன்று நான் புதிதாகச் சொல்லவேண்டுமோ ? இறகு ஒடிந்த பக்ஷிகளேப்போலே கரண களேபரங்களே யிழந்துகிடந்த இவ்வாத்துமாக்களேக் கரணகளேபரங்களோடே கூட்டினதும், ஹிரண்யாக்ஷன் பாயாகச் சுருட்டிக்கொண்டுபோன இந்நிலவுலகத்தை மஹா வராஹமாகி மீட்டுக்

கொணர்ந்ததும், இவ்வுலகமெல்லாம் பிரளயப் பெருங்கடலில் நசித்துப்போக நேர்ந்தகாலத்துத் திருவயிற்றிலே வைத்து ஸம்ரக்ஷித்ததும், பிரளயங்கழிந்த வாறே பழையபடி வெளியிட்டதும், மாவலியிடத்து நீரேற்றுப் பெற்றுத் தாளின் கீழ் ஆட்படுத்திக்கொண்டதும் முதலான உபகாரங்கள் சொல்லிமுடியுமோ? இப்படிப்பட்ட உபகாரங்கள் இன்னும் எத்தனையோ செய்வதாகத் திருவுள்ளம் பற்றி யிருப்பவனன்றோ திருமால். அவனைத்தவிர வேறொரு முழு முதற்கடவுள் இவ்வுலகுக்கு உண்டோ? நன்றியறிவுள்ளவர்கள் அப்பெருமானுக்கன்றோ பணி விடைகள் செய்ய ப்ராப்தம்; அவனுக்குச் செய்யாததோடு ஒரு நன்றியுஞ் செய்யமாட்டாத தேவதாந்தரங்களுக்குப்போய்ப் பணிவிடை செய்கிற இவ்வுல கின் அவிவேகத்தை என்ன சொல்லுவோம்? அந்த தேவதாந்தரங்களுக்கு இவர் கள் செய்கிற ஆராதனம் என்னவென்றால் ஆட்டைவெட்டிப்பலியிடுவதும் கோழி யைக்கொன்று நைவேத்யஞ் செய்வதும் இவைபோல்வன ஜீவஹிம்ஸைச் செயல்களேயாகும். இதற்குப்பலனாக அந்த தேவதைகள் கொடுப்பது என்ன வென்றால், இந்த ஸம்ஸாரத்திலேயே தரைப்பட்டு அழுந்தி உழல்வதற்கு உறுப் பான ஆபாஸ ஸுகங்களேயாம். உண்மையில் இவை ஸுகங்களல்ல; துக்கமே யாம். இப்படிப்பட்ட துக்கங்களைப்பெற விரும்பி இவ்வுலகம் ப்ராப்த தேவ தையைவிட்டு தேவதாந்தர பஜநம் பண்ணித்திரிகின்றதே! அநியாயமாய் அநர்த்தப்பட்டுப் போகின்றதே! இதனில் மிக்க பரிதாபமுண்டோ? என்றா ராயிற்று.

ஈன்றோளிருக்க மணைநீராட்டி—“பேயிருக்கு நெடுவெள்ளம் பெருவிசும்பின் மீதோ டிப் பெருகுகாலம், தாயிருக்கும் வண்ணமே உம்மைத் தன் வயிற்றிருத்தி உய் யக்கொண்டான், போயிருக்க மற்றிங்கோர் புதுத்தெய்வங் கொண்டாடுந் தொண்டீர் பெற்றதாயிருக்க மணை வெந்நீராட்டுதிரோ மாட்டாத தகவற்றீரே” என்ற திருமங்கை யாழ்வார் ஸ்ரீஸூக்தியும் இதனையடியொற்றியதே. மணை நீராட்டி—மணை என்றது அசேதநவஸ்துக்களை யெல்லாம் சொன்னபடி. நீராட்டி என்றது உபசாரங்கள் பலவற்றையுஞ் சொன்னபடி. ‘மணைநீராட்டுமா போலே’ என்று சொல்ல வேண்டுமிடத்து (அவாய் நிலையாக) உவமையை உள்ளடக்கி மணை நீராட்டி என்றே சொன்னதன் கருத்து யாதெனில்; தேவதாந்தர பஜநம் பண்ணுவதோடு மணை நீராட்டுவதோடு ஒரு வாசியில்லை; இதுதான் அது, அதுதான் இது என்று இரண் டுக்குமுள்ள அபேதத்தைக் காட்டினபடியாம்.

மாதர்கள் ப்ரஸவித்தவுடனே பெற்ற அத்தாயையும் பிறந்த சிசுவையும் ஸ்நாநஞ்செய்வித்தல் மலைநாட்டு வழக்கமாக வெகு முற்காலத்தில் இருந்ததாம். ப்ரஸவித்தவுடனே தாயை நீராட்டுவது பலவகைக் கஷ்டங்களுக்குக் காரணமாவ தால் அத்தாய்க்குப்பதிலாக ஒரு மணைக்கட்டையை ஸ்நானஞ்செய்விப்பது இடைக்காலத்து வழக்கமாக இன்றைக்கும் நடந்து வருகின்றதாம். அதனைத் திருவுள்ளம்பற்றி இங்கு ஆழ்வார் இப்படி அருளிச்செய்தார் என்று சிலர் சொல்லுவர்.

புடைப்பலதானறி தெய்வம்பேணுதல்—புடை என்றது ஏதோவொரு பக்கம் என்ற படி. வேதத்தில் ஏதோ ஒரு மூலையில் சிவன் என்றும் ருத்ரன் என்றும் ஹிரண்யகர்ப் பன் என்றும் சில பதங்கள் கிடந்தால் அவற்றின் ப்ரகரணத்தையும் பொருளையும் தெரிந்துகொள்ளாது அந்த தேவதைக்குப் பரத்துவஞ் சொல்லியிருப்பதாகக் கொள்வார்களே சிலர்; அதைச் சொல்லுகிறது. ஆனதுபற்றியே தானறிதெய்வம் என்றுஞ் சொல்லப்பட்டது. புத்ரகாமனுக்கு ஒருதெய்வம், ஐச்வரிய காமனுக்கு ஒரு தெய்வம், ஆரோக்யகாமனுக்கு ஒரு தெய்வம் என்றிப்படி அவரவர்கள் பற் றும் தெய்வங்கள் பலபலவாயிருப்பது பற்றிப் பலதெய்வம் பேணுதல் என்றார்.

தனது என்பது ‘தனுது’ என்று நீட்டல் விகாரம் பெற்றுக்கிடக்கிறது. ‘புல்லறிவாளன்’ என்று விவேகமற்றவனைச் சொல்லுகிறது; புல்லறிவாண்மை யாவது அவிவேகம். கோல்வன முதலா அல்லன = இவ்வாழ்வார் தாமே திருவாய்மொழியில் “தீர்ப்பாரையாமினி” என்ற திருவாய்மொழியில் “நீர் எதுவானுஞ் செய்து அங்கோர் கள்ளும் இறைச்சியுந் தூவேல்மின்” என்றும், “நீர் கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும் களனிழைத் தென்பயன்” என்றும், “அணங்குக் கருமருந் தென்றங்கோர் ஆடுங் கள்ளும்பராய்” என்றும்,” “ஏதம்பறைந்து அல்ல செய்து கள்ளூடுகலாய்த்தூய், கீதமுழவிட்டு நீரணங்காடுதல் கீழ்மையே” என்றும் அருளிச்செய்தவை இங்கு அநுஸந்திக்கத்தகும்.

இன்புதுன்புஅளி = அளிப்பது அளி; அதாவது கொடுக்கும்வஸ்து; தேவதாந்தரங்கள் தரும்பொருள் யாதெனில், இன்புதுன்பு = இன்பாவது ஸுகம், துன்பாவது துக்கம்; ஸுகமென்று ப்ரமிக்கக்கூடிய துக்கமென்றவாறு. ஸம்ஸாரத்தில் கிடைக்கும் ஸுகங்களெல்லாம் இப்படிப்பட்டவையேயாம். பிள்ளை பெறுவது செல்வம் பெறுவது என்னுமிவை மேலெழப்பார்க்கையில் ஸுகமாகத் தோன்றி, வரவரத் துன்பமாகவே முடிகின்றமையைப் பன்னியுரைக்குங்காற் பாரதமாம்.

தேவதாந்தர பஜனம் பண்ணுவது நித்ய ஸம்ஸாரியா யொழிவதற்கு க்ருஷிபண்ணுவதேயன்றி வேறில்லை யென்பதைக் கூறி முடிக்கிறார் தொன்மாமாயப் பிறவியுள்நீங்காப் பன்மாமாயத் தழுந்துமா நளிர்ந்தே என்று. 6

2584 நளிர்மதிச் சடையனும் நான்முகக்கடவுளும்*தளிரொளி யிமையவர் தலைவனும்முதலா*
யாவகையுலகமும் யாவருமகப்பட*நிலநீர் தீகால்சுடரிரு விசும்பும்*
மலர்சுடர்பிறவும் சிறிதுடன் மயங்க*ஒருபொருள்புறப்பாடின்றி முழுவது
மகப்படக் கரந்து—*ஓராலிலைச் சேர்ந்தவெம்
பெருமாமாயனையல்லது—*ஒருமாதெய்வம் மற்றுடையமோ யாமே. 7

திருவாசிரியம் முற்றிற்று.

நளிர் மதி சடையனும்	குளிர்ந்த சந்திரனை ஜடையிலேயுடைய சிவனும்
நான்முகன் கடவுளும்	பிரமதேவனும்
தளிர் ஒளி இமையவர் தலைவனும் முதலா	தழைத்த ஒளிபொருந்திய தேவேந்திரனும் ஆகிய இவர்கள் முதலாக
யாவரும்	எல்லாப்பிராணிகளும்
யாவகை உலகமும்	எல்லா வுலகமும்
அகப்பட	உட்பட,
நிலம் நீர் தீ கால் சுடர் இரு விசும்பும்	பூமி ஜலம் அக்நி வாயு, தேஜஸ்ஸுக்களை யுடைய மஹத்தான ஆகாசம் ஆகிய பஞ்ச பூதங்களும்
மலர் சுடர் பிறவும்	சந்திரன் ஸூர்யன் முதலிய மற்றும் சிறந்த தேஜஸ் பதார்த்தங்களும்
சிறிது	சிறியதான திருவயிற்றின் ஒரு பக்கத்தில்
மயங்க	கலசும்படியாக
ஒரு பொருள் புறப்பாடு இன்றி	ஒரு வஸ்துவும் வெளிப் படாதபடி
முழுவதும்	எல்லாப் பொருள்களையும்
அகப்பட கரந்து	உள்ளேயிட்டு மறைத்து
ஓர் ஆல் இலை சேர்ந்த	அத்விதீயமான வொரு ஆலந்தளிரிலே பள்ளி கொண்ட
எம்	எமக்கு ஸ்வாமியாய்
பெரு மா மாயனை அல்லது	மிகப்பெரிய ஆச்சரியங்களை யுடையனான ஸ்ரீமந்நாராயணனைத் தவிர்த்து
மற்று ஒரு மா தெய்வம்	வேறொரு க்ஷுத்ரதேவதையை
யாம் உடையமோ	நாம் சேஷியாகக் கொள்ளுவோமோ? (கொள்ளமாட்டோம்.)

* * *—ஸகல சேதநர்களும் ஸ்வரூபப்ராப்தசேஷியான எம்பெருமானை அடிபணிந்து அவனுக்கே வழுவிலாவடிமைகள் செய்ய ப்ராப்தமாயிருக்க, அப்படி செய்யரதே தேவதாந்தரங்களை ஆச்ரயித்து ஸம்ஸாரத்தையே பூண்கட்டிக் கொள்ளுகிறுர்களே! அந்தோ! இஃது என்ன அனர்த்தம்! என்று கீழ்ப்பாட்டில் கவலைப்பட்டார். ஒரு ஸம்ஸாரியாவது இவருடைய துயரத்தைப் பரிஹரிக்க முன்வராமற்போகவே, 'இப்பாழும் ஸம்ஸாரிகள் எக்கேடாவது கெடட்டும்; நாமும் அவர்களைப்போலே அனர்த்தப்பட்டுப் போகாமல் எம்பெருமானுக்கே அடிமைப்பட்டிருக்கப் பெற்றேமே!' என்று தம்முடைய மனவுறுதிக்கு உகந்து பேசுகிறுர் இதில்.

ஸம்ஸாரிகள் பற்றுகிற தேவதாந்தரங்கள் யாவும் நம்மைப்போலவே பல வகை ஆபத்துக்களுக்கு உள்ளாகி எம்பெருமானுடைய திருவருளால் தப்பிப் பிழைப்பவர்களே யொழிய, பிறருடைய ஆபத்துக்களைத் தாம் பரிஹரிக்கவல்ல ஸர்வ சக்தர்களல்லர் என்பதை விளக்க வேண்டி 'இந்தத் தெய்வங்களெல்லாம் பிரளயகாலத்தில் எம்பெருமானது திருவயிற்றிலே பதுங்கிக்கிடந்தவை காண் மின்' என்கிறுர். எல்லாத் தெய்வங்களையும் உய்யக்கொண்ட பரமபுருஷனை ஸ்ரீமந்நாராயணனுக்கன்றி மற்று யார்க்கும் நாம் அடிமைப்பட்டவர்களல்லோம் என்பது நிகமனம்.

தளிர்மதிச்சடையனும் என்றவிடத்துப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செயல்: "ஸாதக வேஷம் தோற்ற ஜடையைத் தரித்துக் கொண்டிருக்கச் செய்தேயும் துர்மானத்தாலே ஸுகப்ரதானன் என்று தோற்றும்படி தாழை மடலைக்கீறித்தலை யிலே வைப்பாரைப் போலே குளிர்ந்த சந்திரனை ஜடையிலே தரித்த ருத்ரனும்" என்று. இதில் "**தாழைமடலைக்கீறி**" இத்யாதி த்ருஷ்டாந்த வாக்யத்திற்குப் பொருள் யாதெனில்; உலகில் மூட்டை சுமந்து வருந்திக் கூலிஜீவனம் பண்ணு கிறவர்கள் தாங்கள் கஷ்டப்படுகிறவர்களென்பது பிறர்க்குத் தெரியாமைக்காக வும் இவர்கள் ஸுகமாக இருப்பவர்களென்று பலரும் நினைத்துக்கொள்வதற் காகவும் தாழம்பூ முதலிய பூக்களை யெடுத்துச் சூட்டிக்கொண்டு திரிவர்களாம்; அப்படியே சிவபிரானும் தான் ஸம்ஹாரக்கடவுளென்பதையும் ஸாதனுநுஷ்டா நம் பண்ணி ச்ரமப்படுகிறவன் என்பதையும் பிறரறிந்து அருவருக்காமைக்காக வும் 'இவன் உல்லாஸமாக இருக்கக்கூடிய ரஸிகன்' என்று பலரும் நினைத்துக் கொள்வதற்காகவும் அழகிய சந்திர கலையைச் சிரமீது அணிந்தான்போலும் என்று ஒரு விநோதமாக அருளிச்செய்தபடி.

இந்திரன், அரம்பை, ஊர்வசி முதலிய அப்ஸரஸ் ஸ்திரீகள் தன்னை நன்கு காதலிக்கும்படி அலங்காரங்கள் செய்துகொண்டு அதனுல் மேனிநிறம் வீறுபெற் றிருப்பனுதலால் **தளிரொளி** என்று விசேஷிக்கப்பட்டான். ஆக முக்யமாகவுள்ள மூன்று தேவர்களைச் சொல்லவே மற்ற சேதநாசேதநங்களை விவரித்துச் சொல்ல வேண்டாமை பற்றி **முதலா யாவகை யுலகமும் யாவருமகப்பட** என்றுர். எம்பெருமானது திருவயிற்றினுள்ளே அடங்கிக்கிடந்து ஸத்தைபெற்ற பதார்த்தங்களைத் தாம் வாய்கொண்டு சொல்லுவதும் நமக்குப் பெரும் பாக்யமன்றே என்றெண்ணி **நிலநீர்தீகால் சுடரிருவிசும்பும் மலர்சுடர்** என்று மீண்டு விவரித்துச் சொல்லத் தொடங்கி னர் போலும்.

சிறிதுடன் மயங்க என்பதற்குப் பலவகையும் பொருள் கொள்ளலாம்;— (கீழ்ச்சொன்ன வஸ்துக்களெல்லாம்) **சிறிது**—மிகச்சிறிய வடிவத்தை உடையன வாய்க் கொண்டு, உடன்—ஏககாலத்திலே, **மயங்க**—உள்ளேயடங்கும்படியாக-என் பது ஒருவகை. உடன் **மயங்க** என்றவிடத்து உடல்மயங்க என்று பதம் பிரித்து, சிறிதாகிய உடலிலே—பேதைக்குழவியான எம்பெருமானது மிகச்சிறியவுட

லிலே மயங்க என்றல் மற்றெருருவகை. மற்றுங் கண்டுகொள்க. ஆக எல்லாப் பதார்த்தங்களேயும் ஒன்று தப்பாமல் திருவயிற்றினுள்ளே அடக்கிக்கொண்டு "பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு ஆலிலையின், மேலன்று நீவளர்ந்த மெய் யென்பர்" என்றபடி சிறு குழந்தைவடிவமாகி முகிழ்விரியாத சிற்ருலந்தளிரிலே கண்வளர்ந்த அற்புத சக்திவாய்ந்த ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைத் தவிர்த்து வேறெரு தெய்வத்தை நாம் தெய்வமாகக் கொள்ளோம்.

"நெற்றி மேற்கண்ணுனும் நிறைமொழிவாய் நான்முகனும் நீண்டநால் வாய், ஒற்றைக்கை வெண்பகட்டிலொருவனை யுமுள்ளிட்டவமரரோடும், வெற்றிப் போர்க்கடலரையன் விழுங்காமல் தான்விழுங்கி உய்யக்கொண்ட, கொற்றப் போராழியான் குணம் பரவாச்சிறுதொண்டர் கொடியவாறே" என்றும், "அன்றெல்லாருமறியாரோ எம்பெருமா னுண்டுமிழ்ந்த எச்சில் தேவர், அல்லாதார் தாமுளரே" என்றும் (பெரிய திருமொழியில்) திருமங்கையாழ்வாரருளிச்செய்த பாசுரங்கள் இங்கே அநுஸந்திக்கத்தக்கவை.

"மங்கைபாகன் சடையில் வைத்த கங்கை யார்பதத்து நீர்?........அங்கண்ஞால முண்டபோது வெள்ளிவெற்பு அகன்றதோ? ஆதலாலரங்கனன்றி வேறு தெய்வமில்லையே" என்ற பிள்ளைப்பெருமாளையங்கார் விடுதிப்பாசுரமும் குறிக்கொள்ளத்தக்கது.

இத்திவ்யப் பிரபந்தம் பெரும்பாலும் எம்பெருமானுடைய பரத்வஸ்தாபனத்திலே நோக்குடையதென்று உணரத்தக்கது.

திருவிருத்தத்திலும் திருவாய்மொழியிலும் ஆழ்வார் தம்முடைய திருநாமத்தை அருளிச்செய்துளர்; இப்பிரபந்தத்தில் அப்படி அருளிச்செய்யவில்லை என்பதைக் காரணமாகக்கொண்டு சிலர் சொல்லுவதாவது—இத்திருவாசிரியம் இன்னும் பல பாசுரங்களையுடைய பிரபந்தமாயிருந்ததென்றும், காலக்கிரமத்தில் சில பாசுரங்கள் லோபித்துவிட்டன வென்றும் சொல்லுகிருர்கள்; நம்மாழ்வாரருளிச்செய்த நான்கு பிரபந்தங்களுள் இதற்கு அடுத்ததான பெரிய திருவந்தாதியிலும் ஆழ்வாருடைய திருநாமம் அருளிச்செய்யப்பட்டிருக்கவில்லையாகையால் இது சேராது. அந்தாதித்தொடையாக அமைந்த பிரபந்தங்கள் எல்லாவற்றிலும் முடிவு பாசுரத்தின் அந்தமும் முதற்பாசுரத்தின் ஆதியும் ஒன்ருக அமையும்படி அருளிச்செய்யப்பட்டிருப்பதுபோல் இப்பிரபந்தத்தில் அமையாமையால் இதைக்கொண்டு இதில் சில பாசுரங்கள் லோபித்துவிட்டனவென்று சொல்லுவர் சிலர்; அதுவும் சேராது; ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமையவைத்தல் மண்டலித்தல் என்று தமிழர் சொல்லிவைத்திருக்கையால் இப்பிரபந்தம் மண்டலித்தலாகாது என்று சொல்லலாமத்தனையொழிய, பாசுரங்கள் லோபித்தன என்றல் பொருந்தமாட்டாது. ஆகவே இப்பிரபந்தம் பூர்ணமென்றே கொள்ளத்தக்கது. .... *

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

நாலாயிரதிவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகையில்

திருவாசிரியவுரை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரிய திருவந்தாதி

(ஸ்ரீ காஞ்சீ. பிரதிவாதிபயங்கரம்—அண்ணங்கராசாரியர்)

இது— மயர்வற மதிநல மருளப் பெற்ற ஆழ்வார்களுள் தலைவரும், ப்ரபந்ந ஜநகூடஸ்தருமான நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு திவ்யப்ரபந்தங்களுள் மூன்றாவதான பிரபந்தம். திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களும் நம்மாழ்வாருடைய திவ்ய ஸூக்தி களாம். இந் நான்கும், முறையே நான்கு வேதங்களின் ஸாரமாம். நாலாயிரப் பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில் இது ஏழாவதாகும். அதர்வண வேத ஸாரமுமாம்.

பெரிய திருவந்தாதி என்பதற்குப் பெருமை பொருந்திய திருவந்தாதிப் பிரபந்த மென்று பொருள். அந்தத்தை ஆதியாக வுடையது அந்தாதி. அன்மொழித் தொகை; வடமொழித் தொடர். அந்த ஆதி எனப் பிரிக்க. அந்தாதியாவது— முன் நின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்துவருஞ் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது. இங்ஙனம் பாடும் நூலினது ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற் செய்யுளின் ஆதி யாக அமையவைத்தல் மண்டலித்த லெனப்படும். அந்தாதி யென்பது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாம். பதிற்றந்தாதி என்றும் நூற்றந்தாதி என்றும் வகைகளுண்டு. பத்து வெண்பாவினாலேனும் பத்து கட்டளைக் கலித்துறை யினாலேனும் அந்தாதித் தொடையாற் கூறுவது பதிற்றந்தாதி. நூறு வெண்பா வினாலேனும் நூறு கட்டளைக் கலித்துறையினாலேனும் அந்தாதித் தொடையாற் கூறுவது நூற்றந்தாதி. இப்பிரபந்தம் நூற்றுக்குக் குறைந்த எண்பத்தேழு வெண் பாவினாலமைந்துள்ளதொரு திவ்யப்ரபந்தம். சொற்றொடர் நிலைச் செய்யுள் பொருட் டொடர் நிலைச் செய்யுள் என்ற வகையில் இது சொற்றொடர் நிலை; "செய்யுளந் தாதி சொற்றொடர் நிலையே" என்றார் தண்டியலங்காரத்தும். இந்நூலின் பா சுரங்கள் பொருளில் ஒன்றை ஒன்று தொடர்ந்து நிற்றல் தோன்ற அறிவிற் சிறந்த மஹான்கள் உபந்யஸிக்கக் கூடுமாதலால் இது பொருட்டொடர் நிலையுமாம். "பொருளினுஞ் சொல்லினுமிருவகை தொடர்நிலை" என்னுந் தண்டியலங்காரச் சூத்திரத்தின் உரையில் "இரண்டென்றது வகை யென்ற மிகையான் மூன்றாவது பொருளினுஞ் சொல்லினுந் தொடர்தலுமுண்டெனக் கொள்க" என்றமை காண்க. நெடுக ஒரு கதையாகக் கூறுதலல்லாமல் ஸ்தோத்ரரூபமாக அருளிச் செய்யப்பட்ட பாசுரங்களாதலால் சொற்றொடர் நிலையாகவே கொள்ளலாம்.

தொல்காப்பியத்துச் செய்யுளியலிற் கூறப்பட்ட அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்ற எண்வகை வனப்பினுள் இந்நூல் விருந்தென்னும் வனப்பின் பாற்படும். *"விருந்தேதானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்ற தொல்காப்பியச் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் "விருந்து தானும் பழங்கதை மேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரத்தொடுத்துச் செய்யப்படும் தொடர்நிலை மேலது" என்றும், "அது—முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த அந் தாதிச் செய்யுளும் என உணர்க; கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப" என்றும் உரைத்துள்ளமை காண்க.

முதலாழ்வார்க ளருளிச்செய்த திருவந்தாதிப் பிரபந்தங்கள் நூறு பா சுரங்களையுடையனவாதலால் அவற்றினுங் குறைந்த பாசுரங்களையுடையதாய்ச் சிறியதான இத்திருவந்தாதிப் பிரபந்தத்தைப் பெரிய திருவந்தாதி என வழங்குதல் எங்ஙனே யெனின்; கேண்மின்;—உருவத்தால் பெருமை பெற்றதைப் பெரிது என வழங்குதல்போலக் குணங்களால் பெருமை பெற்றதையும் பெரிது என வழங் குதல் உண்டு; 'பெரிய மனிதர்' என்று உலகில் சிலரைச் சொல்வது குணப்பெரு

மையைக் கொண்டேயன்றி ஊன்மல்கி மோடுபருத்திருக்கையாகிற உடற்பெருமையைக் கொண்டு அல்ல. கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் சிறுபிராயத்திலே ஒரு நாள் ஆழ்வான் திருவாய்மொழி அநுஸந்திக்கும்போது "உறுமோ பாவியேனுக்கு" [8-10-3] என்ற பாசுரத்தில் "சிறுமாமனிசராய் என்னை யாண்டாரிங்கே திரியவே" என்றதைக் கேட்டு அதில் சிறுமாமனிசர் என்றதைக் குறித்து ஆக்ஷேபங்கொண்டு தந்தையாரை நோக்கி ஒன்றுக்கொன்று எதிர்த்தட்டான சிறுமை பெருமை என்கிற குணங்களிரண்டும் ஒரு பொருளினிடத்து ஒன்றுசேர்ந்திருக்குமோ? ஆழ்வார் 'சிறு மா மனிசர்' என்று இரண்டையும் ஒருவரிடத்தே சேர அருளிச் செய்தது பொருந்துவது எங்ஙனே? என்று வினவினர். அதற்கு ஆழ்வான் ஆலோசித்து, 'பிள்ளாய்! நன்கு வினவினாய்; உனக்கு உபநயநமாகாமையால் இப்பொழுது வேத சாஸ்திரங்களைக் கொண்டு விடை சொல்லலாகாது; ஆயினும் ப்ரத்யக்ஷத்திற் காட்டுகிறோம் காண்' என்று சொல்லிச் சில பெரியோர்களைக் காட்டி 'திருமேனி சிறுத்து ஞானம் பெருத்திருக்கிற சிறியாச்சான் அருளாளப் பெருமாளெம்பெருமானார் போல்வாரைச் சிறுமாமனிசர் என்னத் தட்டில்லையே; முதலியாண்டான் எம்பார் முதலிய பெரியோர்கள் உலகத்தாரோடொக்க அந்நபாநாதிகள் கொள்வதோடு எம்பெருமான் பக்கல் ஈடுபடுவதிற் பரமபதத்து நித்ய ஸூரிகளைப் போலுதலால், இப்படிப்பட்டவர்கள் சிறுமாமனிசர் என்னத் தக்கவரன்றோ? இங்ஙனமே வடிவு சிறுத்து மஹிமை பெருத்தவர்களும், மனிதரென்று பார்க்குமிடத்துச் சிறுமை தோன்றினும் பகவத்பக்தி ஞானம் அநுஷ்டாநம் முதலிய நற்குணங்களை நோக்குமிடத்து நித்யமுக்தர்களினும் மேன்மை பெறுகின்றவர்களுமான மஹா புருஷர்களையே ஆழ்வார் சிறுமா மனிசரென்று குறித்தருளினர்; என்று அருளிச் செய்ய, அது கேட்டுப் பட்டர் 'தகும் தகும்' என்று இசைவு கொண்டனர்—என்கிற இதிஹாஸம் இங்கு உணரத்தக்கது. ஆகவே, இப்பிரபந்தம் மற்ற திருவந்தாதிகளிற் காட்டிலும் உருவத்தால் சிறிது சிறியதாயிருந்தாலும், சொல்லின்பம் பொருளின்பம் முதலிய குணங்களாற் பெருமை பெற்று விளங்கிற்றென்று கொண்ட நம் பூருவர்கள் இதன் பெருமை தோன்ற இதற்குப் பெரிய திருவந்தாதி யென்று திருநாமமிட்டனரென்க.

இது பெரிய திருவந்தாதியாய் விட்டால் முதலாழ்வார்களின் திருவந்தாதிகள் சிறிய திருவந்தாதிகளோ? அவற்றில் குணங்கள் ஸ்வல்பமாகத்தானிருக்கின்றனவோ? என்று கேட்பது ரஸிகர்கட்குப் பணியன்று. இப்பிரபந்தம் மிக்க பெருமை பெற்றது என்பது மாத்திரம் இங்குக் கொள்ளத்தக்கதேயன்றி மற்றவற்றின் லாகவமும் சொல்லிற்றாகாது.

இனி, பெரிய திருவந்தாதியென்று வழங்குதற்கு வேறொரு காரணமுங் கூறலாம்; அதாவது—"புவியுமிரு விசும்பும் நின்னகத்த, நீ என் செவியின் வழி புகுந்து என்னுள்ளாய்-அவிவின்றி, யான் பெரியன் நீ பெரியை என்பதனை யாரறிவார்?, ஊன்பருகு நேமியாயுள்ளு" என்று இப்பிரபந்தத்தில் ஒரு பாசுரம் (75) உண்டு. ஆழ்வார் எம்பெருமானை நோக்கி, பிரானே! உபயவிபூதிகளும் உன்னிடத்தே அடங்கியிருக்கின்றன என்பது வாஸ்தவம்; அந்த உபய விபூதிகளைத் தரிக்கின்ற நீ பெரியவனா? அன்றி உபயவிபூதியுக்தனான உன்னைச் செவியின் வழியே உள்ளே புகுவித்துத் தரித்துக்கொண்டிருக்கிற நான் பெரியவனா? "மஹதோ மஹீயாந்" [பெரிய வஸ்துவிற் காட்டிலும் மிகப்பெரியவஸ்து]என்று உன்னை வேதங்கள் மிகப்பெரியவனாகச் சொல்லுகின்றனவே, இது தகுமா? பெரியவனான உன்னையும் ஒரு மூலையிலே அடக்கிக்கொண்டிருக்கிற நானன்றோ பெரியவன்; இதனை ஆராயவேணும் என்று ஒரு சமத்காரமாக அருளிச் செய்கிறார், ஆகவே ஆழ்வார் தம்முடைய பெருமையைப் பேசிக் கொண்ட பிரபந்தம் இதுவாதலால் இதற்குப் பெரியதிருவந்தாதியென்று பேராயிற்றென்னலாம் போலும்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்,

பெரிய திருவந்தாதி-தனியன் உரை

முந்துற்ற நெஞ்சே! முயற்றி தரித்துரைத்து
வந்தித்து வாயார வாழ்த்திச்—சந்த
முருகூருஞ் சோலைசூழ் மொய்பூம் பொருநல்
குருகூரன் மாறன்பேர் கூறு.

முந்துற்ற	(நல் விஷயங்களில்) முற்பட்டுச் செல்லுகிற	முருகு ஊரும் சந்தச் சோலை சூழ்	தேன் பெருகுகின்ற சந்தனச் சோலைகள் சூழ்ந்ததும்
நெஞ்சே	ஓமனமே!		
முயற்றி தரித்து	(நான் இப்போது உனக்கு உரைக்கும் விஷயத்தில்) உத்ஸாஹங்கொண்டு	மொய்பூ பொருநல்	நெருங்கிய அழகிய தாமிரபர்ணி நதியை யுடையது மான
உரைத்து	(என் நிலைமையை) ஆழ்வாரிடத்து விஜ்ஞாபித்து	குருகூரன்	திருநகரிக்குத் தலைவரான
வந்தித்து	தண்டன் ஸமர்ப்பித்து	மாறன்	நம்மாழ்வாருடைய
வாய் ஆர வாழ்த்தி	வாய்படைத்தது ஸபலமாம்படி வாழ்த்தி	பேர்	திருநாமங்களை
		கூறு	நீ சொல்லு.

***—முயற்றியாவது முயற்சி; ஊக்கம். வந்தித்தல் - வணங்குதல். வாயார வாழ்த்தி என்ற பாடத்தில் வெண்டளை பிறழ்கின்றமையால் "வாயார வாழ்த்தியே" என்று பாடமிருந்திருக்க வேணும்.

முயற்றி தரித்து என்பதற்கு—முயற்றி என்னுஞ் சொல்லை முதலிலே வைத்து ஆழ்வார் அருளிச் செய்த பிரபந்தத்தைத் தரித்துக் கொண்டு என்று பொருள் கொள்ளுதலும் சிறக்கும். "முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே" என்றிறே இப்பெரிய திருவந்தாதியின் தொடக்கம். ... ... *

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரிய திருவந்தாதி உரையின் அவதாரிகை.

ஆழ்வார், முதற்பிரபந்தமாகிய திருவிருத்தத்தில்—தமது ஞானக் கண்ணுக்கு இலக்கான எம்பெருமானை நோக்கி 'தேவரீரை அநுபவிப்பதற்கு இடையூறான தேஹஸம்பந்தத்தைத் தொலைத்தருளவேணும்' என்று ஸம்ஸாரஸம்பந்த நிவ்ருத்தியை அபேக்ஷித்தார். ஆழ்வார் அப்படி பிரார்த்தித்த போதிலும், எம்பெருமான் இவ்வாழ்வாரைக் கொண்டு நாட்டுக்கு நன்மையாகச் சில திவ்யப்ரபந்தங்களை வெளியிடுவித்து அவற்றால் ஸம்ஸாரிகளைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம் பற்றினவனாகையாலே "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு மிந்நின்ற நீர்மை இனியாமுறாமை" என்று இவர் பிரார்த்தித்த போதே இவருடைய பிரார்த்தனையைத் தலைக்கட்டித் தந்தருளவில்லை. "இவ்வாழ்வார் இந்த ஸம்ஸாரத்தை விட்டுவிலகி ஸ்ரீ வைகுண்டத்திற்சென்று சேரவேணு

மென்று பாரிப்பது நம்முடைய குணங்களை யநுபவிப்பதற்காகவேயன்றி வேறென்றுக்காகவுமன்றே; அந்த குணுநுபவத்தை நாம் இவர்க்கு இவ்விடத்திலேயே வாய்க்கச் செய்வோம்; இங்கேதானே இவர் குணுநுபவம் பண்ணிக் களிப்புற்றவராகி அவ்வநுபவம் உள்ளடங்காமல் புறவெள்ளமிட்டுப் பிரபந்தங்களாகப் பெருகி லோகோபகாரமும் செய்தாராகட்டும்." என்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றித் தனது ஸ்வரூப ரூப குண விபூதிகளைக் காட்டிக்கொடுக்க, ஆழ்வார் அவற்றைக் கண்டு பரமாநந்தம் பொலிய அநுபவித்தார் திருவாசிரியப் பிரபந்தத்திலே. அப்படி அநுபவித்த பகவத் விஷயத்திலே அவ்விஷயத்திற்குத் தகுதியாக ஆசை கரை புரண்டு பெருகிச் செல்லுகிறபடியைப் பேசுகிருர் இப்பெரிய திருவந்தாதியில்.

ஸ்ரீசக்ரவர்த்தி திருமகனுர் காட்டுக்கெழுந்தருளின பிறகு மாதுலக்ருஹத்தினின்றும் அயோத்திக்கு மீண்டுவந்த பரதாழ்வானை நோக்கிக் கைகேயியானவள் ராஜந் [அரசனே!] என்று ஸம்போதித்தவளவில் பரதன் அச் சொல்லைக்கேட்டு என்ன ஸங்கடமடைந்தனனே அந்த ஸங்கடம் ஆழ்வார்க்குத் திருவிருத்தத்திலேயாயிற்று. பிறகு அப்பரதன் சில பரிஜனங்களைக் கூட்டிக்கொண்டு சித்திரகூடஞ் சென்று இராமபிரானை மீட்டு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வருவதாகப் புறப்பட்டுச் செல்லும்போது அப்பரதனது நெஞ்சில் என்ன தரிப்பு இருந்ததோ அவ்வகையான தரிப்பு ஆழ்வார்க்குத் திருவாசிரியத்திலேயாயிற்று. பிறகு பரதன் ஸ்ரீ நந்திக்ராமத்திலே யிருந்துகொண்டு பதினலு வருஷம் தனது ஆசையை வளர்த்துக் கொண்டிருந்த நிலைபோலும் இப்பெரிய திருவந்தாதியில் ஆழ்வாருடைய நிலை.

பெருமாள் மீண்டு திருவயோத்திக்கெழுந்தருளித் திருவபிஷேகங் கண்டருளி அப்பரதனும் ஸ்வரூபாநுரூபமான பேறுபெற்ருற்போலேயாம் மேலே திருவாய்மொழியில் ஆழ்வார் பெறும்பேறு.

அருளிச் செயல் நாலாயிரத்திற்கும் அற்புதமான வியாக்கியானமருளிச் செய்த பெரியவாச்சான்பிள்ளை இயற்பாவுக்கு அருளிய வியாக்கியானம் சுருக்கமுடைத்தாதலாலும், அவற்றினுள்ளும் இப்பிரபந்தத்திற்கு அருளிய வியாக்கியானம் மிக்க சுருக்க முடைத்தாதலாலும், ஆழ்ந்த பல கருத்துக்களை அமைத்துக் கொண்டுள்ள அந்த வியாக்கியானத்தைத் தழுவி அடியேனுடைய சிற்றறிவிற்கு எட்டிய பல விஷயங்களையுஞ் சேர்த்துப் பாசுரப்பொருள் ஸ்பஷ்டமாகத் தெரியும்படி விரிவுரை எழுதப்படுகின்றது. குற்றங்குறைகளைப் பெரியோர் பொறுத்தருள்க. ... ... *

அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வார் அருளிச்செய்த

பெரிய திருவந்தாதி.

[ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய உரையுடன் கூடியது.]

2585. முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே!*
இயற்றுவாய் எம்மொடுநீ கூடி*—நயப்புடைய
நாவீன் தொடைகிளவி யுள்பொதிவோம்*நற்பூவைப்
பூவீன்ற வண்ணன் புகழ். 1

முயற்றி சுமந்து	எம்பெருமானைப் பற்றிப் பேசுகையிலே உத்ஸாஹப் பூண்டு
எழுந்து	கிளம்பி
முந்துற்ற நெஞ்சே	(அவ்விஷயத்தில் என்னை விட) முற்பட்டிருக்கிற மனமே!
நீ எம்மொடு கூடி	நீ (தனிப்பட்டுப் போகாமல்) என்னோடு சேர்ந்து
இயற்றுவாய்	காரியத்தை நடத்தவேணும்;

(நாம் இருவருஞ் சேர்ந்து நடத்த வேண்டிய காரியம் என்ன வென்றால்)

நல் பூவைப்பூ ஈன்ற வண்ணன்	அழகிய காயாம் பூவிலுண்டான நிறம போன்ற நிறத்தையுடையனான எம்பெருமானுடைய
புகழ்	திருக்கல்யாண குணங்களை
நயப்பு உடைய	அன்பு பொருந்திய
நா ஈன்	நாவினாலே கவனஞ் செய்யப் படுகிற
தொடை கிளவியுள்	சேர்க்கைப் பொருத்தமுடைய சொற்களிலே
பொதிவோம்	அடக்குவோமாக;

(இதுவே நீயும் நானும் சோந்து செய்ய வேண்டிய காரியம்.)

* * *—[முயற்றி சுமந்து] ஆழ்வார் தம்முடைய திருவுள்ளத்தை நோக்கிப் பேசுகிறார். தமது நெஞ்சானது தம்மைவிட்டுத் தனித்துப் போய்விட்டதாம் பகவத் விஷயானுபவத்திற்கு; அப்படி முற்பட்டுப்போன நெஞ்சைக் கூவி 'என்னையுங் கூடக் கூட்டிக்கொள்' என்கிறார்.

நெஞ்சு பிரிந்து போய்விட்டதென்பதும் அதனை அழைத்து வார்த்தை சொல்லுகிறதென்பதும் அஸம்பாவிதமன்றோ? நெஞ்சு போய்விட்டதென்றால் வார்த்தையே சொல்ல முடியாதன்றோ; நெஞ்சு நினைத்ததையன்றோ வாய்சொல்லும்; "முந்துற்ற நெஞ்சே! இயற்றுவாய் எம்மொடு நீ கூடி" என்று இப்போது சொல்லுகிற ஆழ்வார் நெஞ்சு அற்றவரென்று எப்படி கொள்ள முடியும்? நெஞ்சோடு கூடியிருந்துதானே இந்த வார்த்தை சொல்லியிருக்க வேண்டும்; அப்படியிருக்க "முந்துற்ற நெஞ்சே!—நீ எம்மொடுகூடி இயற்றுவாய்" என்று அருளிச்செய்வது எங்ஙனே பொருந்தும்? என்று சங்கிக்க வேண்டா; தம்மிற்காட்டில் நெஞ்சை வேறுபடுத்திச் சொல்லுதல் கவிமரபு. நெஞ்சைத் தூதுவிடுவதாகவுஞ் சொல்லுவர்களிறே. நல்ல விஷயங்களைச் சொல்லிக் கொண்டு போது போக்குவதற்கு இவ்விருள்தருமா ஞாலத்தில் வேறுயாரும் உடன்படாமல் உண்டியே உடையே உகந்தோடுகிறவர்களாயிருப்பதால், உசாத்துணையாவது நெஞ்சு தவிர வேறில்லாமையால் அந்த நெஞ்சை நோக்கித்தானே வார்த்தை சொல்லவேண்டும். "யானும் என்னெஞ்சும் இசைந்தொழிந்தோம்" என்று மேலே அருளிச்செய்யப்போகிறார். ஆகையாலே நெஞ்சை விளித்து வார்த்தை சொல்லுவதென்பது பக்தர்களுக்கு ஒரு நற்போது போக்காக அமைந்ததாம். நெஞ்சு பிரிந்து போயிற்றதாகச் சொல்வதும் அப்படியே; நெஞ்சுவிடுதூதாகச் சொல்வதும் அப்படியே இது நிற்க.

இப்பாட்டின் கருத்தை ஆழ்வாருக்கும் நெஞ்சுக்கும் ஸம்பாஷணையாக வைத்து எழுதுவோம்—

ஆழ்வார்: ஓ நெஞ்சே! நீ எனக்கும் முன்னடி வெகு உத்ஸாஹமாகக் கிளம்புகிறாயே; என்ன செய்யப்போவதாக உத்ஸாஹங்கொண்டிருக்கிறாய்?

நெஞ்சு: ஆழ்வீர்! நான் பகவத் விஷயத்திலே அவகாஹிக்கப் போகிறேன்; அதில் எனக்கு வெகு உத்ஸாஹமிருப்பதால் என்னைத் தடை செய்யவேண்டா.

ஆழ்வார்: உன்னை யாரும் தடை செய்வாரில்லை; என்னோடே சேர்ந்து காரியம் நடத்தினையாகில் நல்லது என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

நெஞ்சு: நீர் செய்வதாக உத்தேசித்திருக்கும் காரியம் யாது? நான் மேற்கொண்ட காரியத்தோடு அது விரோதப்படாத காரியமாயிருந்தால் பார்ப்போம்.

ஆழ்வார்: நீ கொண்ட காரியமே நானும் கொண்டது; வேறில்லை; காயாம் பூப்போல் அழகிய கறுத்த திருநிறமுடையனை எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை நல்ல சொல்தொடைகளிலே சேர்த்துப் பாடி அநுபவிக்கப் பாரிக்கின்றேன்; அதற்கு நீ துணை செய்யவேணும்—என்கிருர்.

முயற்றியாவது முயற்சி; அதனைச் சுமப்பதாவது மேற்கொள்ளுகை; ப்ரயத்னப்படுகை என்றபடி. இயற்றுதல்—காரியம் நடத்துதல்.

நயப்புடைய=(நயப்பாவது-ஆசை) இந்த விசேஷணம் நாவிலும் அந்வயிக்கலாம்; கிளவியிலும் அந்வயிக்கலாம். எம்பெருமானைத் துதிக்க ஆசைகொண்ட நாக்கினுல் கவனம் செய்யப்படுகிற என்றபடி. கிளவியில் அந்வயிக்கும்போது—அன்புமிகுதியினுலுண்டாகிற சொற்கள் என்றதாம். நாவீன் என்றவிடத்து ஈனுதலாவது உண்டாக்குதல்.

தொடைகிளவியுள்=*பதாநாம் ஸௌப்ராத்ராத் அநிமிஷநிஷேவ்யம் ச்ரவணயோ:* (ஸ்ரீ குணரத்நகோசம்) என்றபடி பதங்களுக்கு ஒன்றோடொன்று அமையும் சேர்த்தியழகுக்குத் தொடை என்று பெயர். ஆகவே, சேர்த்தியழகு பொருந்திய இனிய சொற்களிலே பகவத் குணங்களை அமைத்துப் பாடும்படி நெஞ்சே! நீ அநுகூலிக்கவேணுமென்றதாயிற்று. 1

2586. புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்*
இகழ்வோம் மதிப்போம் மதியோம்—இகழோம்*மற்று
எங்கள்மால்! செங்கண்மால் சீறல்நீ தீவினையோம்*
எங்கள்மால் கண்டாயிவை. 2

எம் கண் மால்	எங்களிடத்தில் வ்யாமோஹத்தையுடைய
செம் கண் மால்	புண்டரீகாக்ஷனை பெருமானே!
புகழ்வோம்	(ஒருவராலும் புகழ்ந்து முடிக்க வொண்ணுத உன்னை அற்ப ஞானிகளான நாங்கள்) புகழ்ந்தோமாகில்
பழிப்போம்	(அயோக்யர் புகழ்வது புகழ்ச்சியன்ருதலால்) உன்னை நாங்கள் பழித்தவர்களாகவே ஆய் விடுவோம்;
புகழோம்	(இவ்வுண்மையைத் தெரிந்துகொண்டு) புகழாதிருந்தோமாகில்
பழியோம்	உன்னைப் பழித்தவர்களாக ஆகமாட்டோம்;
மதிப்போம்	உன்னைச் சிறந்தவனுக நெஞ்சால் நினைத்தோமாகிலும்
இகழ்வோம்	உன்னை அகௌரவப் படுத்தினவர்களாக ஆய்விடுவோம்;
மதியோம்	அப்படி நெஞ்சால் நினையாதிருந்தோமாகில்
இகழோம்	அகௌரவப்படுத்தாதவர்களாக ஆவோம்:

(ஆக இப்படிப்பட்ட உண்மையை நாங்கள் நன்கு அறிந்திருந்தும் உன்னைப் புகழாமலாவது மதியாமலாவது இருக்கப் போகிறதில்லை; புகழ்வதும் மதிப்பதும் செய்யத்தான் போகிருேம்.)

நீ சீறல்	நீ கோபங்கொள்ளலாகாது;
இவை	புகழ நினைப்பதும் (பிறகு) புகழலாகாதென்று பின் வாங்குவதுமாகிற இவை
தீவினையோம் எங்கள் மால் கண்டாய்	மஹாபாபிகளான எங்களுடைய ப்ரமமேயாம்.

* * *[புகழ்வோம்]—"நற்பூவைப் பூவீன்றவண்ணன் புகழை நயப்புடைய நாவீன்தொடை கிளவியுள் பொதிவோம்" என்று கீழ்ப்பாட்டில், எம்பெருமானைத் துதித்துக் கவிபாடுவதாகத் தொடங்கின ஆழ்வார் 'இப்போது நாம் எடுத்துக்கொண்ட காரியம் என்ன?' என்று சிறிது ஆராய்ந்து பார்த்தார்; எம்பெருமானைப்

புகழ்வது என்கிற காரியத்தையா நாம் எடுத்துக்கொண்டோம்; ஹா ஹா!! இப்படியும் நமக்கொரு மதிகேடு இருக்குமோ? எம்பெருமானைப் புகழ்வது நம்முடைய காரியமாமோ? வேதங்களே புகழத்தொடங்கி முடியாதென்று மீண்ட விஷயத்தை நாமோ புகழக்கடவோம்! ஒருவனைப் புகழ்வதென்றால், அவனிடத்துள்ள குணங்களை யனைத்தையும் ஒன்று விடாமற் சொல்லித் தீர்த்து, மேலேயும் சில குணங்களை அதிகப்படியாக இட்டுச் சொல்லுவதன்றோ புகழ்வதாவது; எம்பெருமானிடத்து அது செய்ய ஆரால் ஆகும்? சிற்றறிவாளரான நாம் என்ன சொல்ல வல்லோம்!; "கேழ்த்த சீர் அரன் முதலாக் கிளர் தெய்வமாய்க் கிளர்ந்து, சூழ்த்தமரர் துதித்தால் உன் தொல்புகழ் மாசூணுதோ" என்னுமாபோலே அறிவிற்சிறந்த அரன் முதலானோர் புகழ்ந்தாலுங்கூட அது பகவத் குணங்களுக்கு இகழ்ச்சியாய்த் தலைக்கட்டா நிற்க, நமது ஊத்தைவாய்கொண்டு பேசுவது என்னாகும்!. "பகவானுடைய குணங்கள் இந்த அற்பன் பேசும்படியான அளவிலேயோ இருக்கின்றன?" என்று பலரும் இழிவாக நினைக்கவன்றோ காரணமாகும் நாம் புகழ்வது—என்றெண்ணி அந்த எண்ணத்தை வெளியிடா நின்றுகொண்டு எம்பெருமானை நோக்கிச் சொல்லுகிறார் இதில்.

புகழ்வோம் பழிப்போம்=திருமாலே! உன்னை நான் புகழ்ந்தேனாகில் பழித்தவனாவேன்; என்னுடைய புகழ்ச்சி உனக்குப் பழிப்பேயாம் என்றபடி. ஆசாரஹீநனான ஒருபயல் வஸிஷ்டனைப்பற்றிப் பேசத் தொடங்கி 'வஸிஷ்ட முனிவர் நல்ல ஆசாரசீலர்' என்று புகழ்வதானது எப்படியோ, அப்படியேயன்றோ குணஹீநனான நீசனேன் குணக்கடலாகிய தேவரீரைப் புகழ்வதும். புகழோம் பழியோம்=நான் தேவரீரைப் புகழாதிருக்கிற பக்ஷத்தில் பழித்தவனாக ஆகமாட்டேன். இவ்வர்த்தம் "புகழ்வோம் பழிப்போம்" என்றதிலேயே கிடைக்கக் கூடுமானாலும் ஸ்பஷ்டமாகச் சொல்ல விரும்பினரென்க. உன் திருநாமத்தையே நான் எடுக்காதிருப்பின் யாதொரு பழிப்புமில்லை யென்றவாறு.

இகழ்வோம் மதிப்போம்='மதிப்போ மிகழ்வோம்' என மாற்றி அந்வயித்துக் கொள்வது. இதன் கருத்தாவது—வாய்விட்டுப் புகழ்வதென்கிற விஷயம் அப்படி கிடக்கட்டும்; தேவரீரை நாயினேன் நெஞ்சால் நினைப்பதாவது தகுதியோ என்று பார்த்தால், அதற்கும் யோக்யதையில்லை; நெஞ்சால்நினைப்பதுதானும் இகழ்ந்தவாறாகும் என்றபடி. மதியோம் இகழோம்=உன்னை நான் நெஞ்சாலும் நினையாதிருக்கில் இகழ்ந்தவனாக ஆகமாட்டேனென்கை.

ஆழ்வார் இப்படிச் சொன்னதும், எம்பெருமான் திருவுள்ளஞ் சீறிக் கண் சிவந்து நின்றான்; ஏனென்னில்; 'திருநாவீறுடைய பிரானாகிய இவ்வாழ்வார் ஏதோ பாசுரம் சொல்வதாகத் தொடங்கினாரே, நல்லது, செவிக்கு இனிதாகக் கேட்போம்' என்று மிக்க ஆசைகொண்டிருந்தான் எம்பெருமான்; அந்த ஆசை *ஊமனார்கண்ட கனவிலும் பழுதா யொழியும்படி ஆழ்வார் அயோக்யதாநுஸந்தானம் பண்ணி 'நான் புகழத்தகாது, நெஞ்சால் நினைக்கவுந்தகாது' என்று பேசவே, உண்ணுஞ் சோற்றை எதிர்பார்த்திருந்த பசியனுக்குச் சோறு தடுமாறிப்போனால் கண் சிவந்து கோபமுண்டாவது போல எம்பெருமானுக்கும் *செவிக்கினிய செஞ்சொல் கேட்டுக்களிக்கப் பாக்கியமில்லாமற் போகிறதேயென்று கோபம் மேலிட்டுக் கண்கள் சிவந்தன; அந்த நிலைமையைக் கண்ட ஆழ்வார் "எங்கண்மால் செங்கண்மால்" என விளிக்கின்றார். பிரானே! நீ எங்களிடத்து இயற்கையாகவே வ்யாமோஹமுடையவனல்லையோ; இப்படி கண்கள் சிவக்கச் சீறலாமோ? என்ற கருத்து உள்ளுறை.

செங்கண்மால்! என்று ஆழ்வார் அழைத்தவாறே எம்பெருமான் "ஓய் என்னை எதுக்கு அழைக்கிறீர்? என்னை நெஞ்சால் நினைத்தாலும் இகழ்ந்ததாகும்

என்று சொல்லிவிட்டீரே; அப்படியிருக்க, என்னை நெஞ்சாலும் நினைத்து வாயாலும் ஏன் அழைக்கிறீர்? போம் போம்'' என்று சீற்றந் தோற்ற முகத்தை மாற வைத்தான்; ஆழ்வார் அது கண்டு சீறல் நீ என்கிறார்; நாயனே! அநந்யகதியான என்மேலோ நீ சீறுவது; சீறவேண்டா என்கை.

“புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம் இகழ்வோம் மதிப்போம் மதியோ மிகழோம்'' என்று வெகு அழகாக நீர் சொன்ன வார்த்தைக்கு நான் சீறாமலுமிருக்க வேணுமோ? என்று எம்பெருமான் திருவுள்ளமாக, அதற்கு ஸமாதானம் போல் “தீவினையோம் எங்கண் மால்கண்டாயிவை'' என்கிறார். இதன் கருத்து:— தேவரீரைப் புகழ்வோமென்றால் என்னுடைய அந்தராத்மா சீறுகிறது; புகழாதிருப்போமென்றால் தேவரீர் சீறுகிறது; இந்த பாவத்திற்கு என்ன பண்ணுவேன்; இது பெரிய தீவினையாயிரா நின்றதே! ஒருவிதத்தில் பார்த்தால் தேவரீரைப் புகழ நா எழும்பவில்லை; மற்றொருவிதத்தில் பார்த்தால் புகழாதிருக்க முடியவில்லை; ஆகையாலே, புகழவேண்டியதாயுமிருக்கிறது, நாமோ புகழ்வதென்று பின்வாங்க வேண்டியதாயுமிருக்கிறது; இது என்னுடைய ப்ராந்திநிலைமை யத்தனை; யான் என்ன செய்வேன் என்றாராயிற்று. பின்னடிகளின் கருத்தை வேறுவகையாகவும் உரையிடலாம். 2

2587. இவையன்றே நல்ல இவையன்றே தீய*
இவையென் றிவையறிவ னேலும்*—இவையெல்லாம்
என்னா லடைப்புநீக் கொண்ணா திறையவனே !*
என்னால் செயற்பால தென் ? 3

இறையவனே	எம்பெருமானே!
இவை அன்றே நல்ல	உன்னைப் புகழாமையும் சிந்தியாமையுமாகிற இவையன்றோ நல்லது;
இவை அன்றே தீய	உன்னைப் புகழ்வதும் சிந்திப்பதுமாகிற இவையன்றோ கெட்டது;
இவை இவை என்று அறிவனேலும்	(ஆகவே) 'இன்னது இப்படிப் பட்டது' என்று நான் உண்மையில் தெரிந்து கொண்டிருக்கிறேனாகிலும்
இவை எல்லாம்	புகழாமையும் மதியாமையும், புகழ்தலும் மதித்தலுமாகிற இவையெல்லாம்
என்னால்	என்னாலே
அடைப்பு நீக்கு ஒண்ணாது	பற்றவும் முடியாது, விடவும் முடியாது;
என்னால் செயற்பாலது என்	(சபலனான) என்னாலே செய்யக் கூடியது என்ன இருக்கிறது?

* * *—[இவையன்றே நல்ல.] “சீறல் நீ'' என்று திருவுள்ளத்தில் இரக்கமுண்டாம்படி பிரார்த்தித்த ஆழ்வாரை நோக்கி எம்பெருமான், “ஆழ்வீர்! என்னுடைய சீற்றம் கிடக்கட்டும்; நீர் என்ன நிர்ணயம் செய்து கொண்டீர்? 'புகழ்வது தகுதி தான்' என்று கொண்டீரா? அல்லது 'புகழத்தகாது' என்றே கொண்டீரா? அதை நிஷ்கர்ஷித்துச் சொன்னீராகில், பிறகு பார்ப்போம்'' என்றான்; அதற்கு உத்தரமாயிருக்கிறது இப்பாட்டு. இதில் சொல்லுகிறது யாதெனில்; எம்பெருமானே! இது யுக்தம், இது அயுக்தம் என்கிற விஷயம் அடியேனுக்குத் தெரியாமையில்லை; அற்ப ஞானிகள் உன்னைப் புகழ்வது அயுக்தம், புகழாதிருப்பது யுக்தம் என்பதை அடியேன் நன்கு அறிவேன். அதில் ஸம்சயமில்லை; ஆனால், அறிந்தபடியே அநுஷ்டிக்க என்னாலாகாது. நான் அறிந்திருக்கிறபடியே அநுஷ்டிக்க வேணுமானால், உன்னைப் புகழ்வதை விட்டுப் புகழாமையைப் பற்றவேணுமிறே. இந்த வீடுபற்றுக்கள் என்னால் செய்யப்போகாது. (உன்னைப் புகழாதிருக்க என்னால் முடியாது என்றபடி.)

என்னால் செயற்பாலது என்=என்னுடைய இஷ்டப்படி காரியம் நிறைவேறுமாகில் உன்னைப் புகழாமலிருந்து விடுவேன்; அதில் தடையில்லை. வாஸ்தவத்தில் என்னுடைய எண்ணமொன்றும் பலிக்கிறதில்லை; "என் நா முதல் வந்து புகுந்து நல்லின்கவி, தூமுதல் பத்தர்க்குத்தான் தன்னைச்சொன்ன என்வாய் முதலப்பன்" என்றபடி என்னுடைய வாக்குக்களுக்கு ப்ரவர்த்தகன் நீ யாகையாலே, அது புகழ்வதோ இகழ்வதோ உன் காரியமேயொழிய என்னுடைய காரியமாக யாதொன்றுமில்லைகாண் என்றவாறு.

இனி, "என்னால் செயற்பாலதென்" என்பதற்கு—எனது அன்பு செய்கிறதே யொழிய நான் செய்வதொன்றுமில்லை என்பதாகவும் உரைக்கலாம்.

நல்ல, தீய—பலவின்பால் குறிப்பு வினைமுற்று. அடைப்பு நீக் கொண்ணாது—அடைப்பாவது பரிக்ரஹித்தல்; நீக்காவது பரித்யஜித்தல். பரிக்ரஹிக்கத்தக்கதான புகழாமையைப் பரிக்ரஹிக்கவும் பரித்யஜிக்கத் தக்கதான புகழ்வதைப் பரித்யஜிக்கவும் என்னாலாகாது என்றபடி. ஏன் உம்மாலாகாது? என்னில்; அதற்கு ஸமாதானம் என்னால் செயற்பாலதென்? என்பதாம். 3

2588. என்னின் மிகுபுகழார் யாவரே?*பின்னையும்மற்
றெண்ணில் மிகுபுகழேன் யானல்லால்*—என்ன
கருஞ்சோதிக் கண்ணன், கடல்புரையும்*சீலப்
பெருஞ்சோதிக் கென்னெஞ்சாள் பெற்று. 4

என்ன	என்னுடையவனான	என்னில்	என்னைவிட
கரும் சோதி கண்ணன்	கறுத்த நிறத்தையுடைய ஸ்ரீக்ருஷ்ணனும்	மிகு புகழார் யாவரே	மிக்க புகழுடையவர் யார் கொல்?
கடல் புரையும் சீலன்	கடல்போன்ற (கம்பீர) ஸ்வபாவ முடையவனும்	மற்று பின்னையும் எண்ணில்	இன்னமும் ஆராய்ந்து பார்க்குமளவில்
பெரும் சோதிக்கு	மிகப் பெரிய சோதி வடிவமானவனுமான எம்பெருமானுக்கு	மிகு புகழேன் யான் அல்லால்	மிக்க புகழுடையவன் நானே தவிர வேறுயாருமில்லை.
என் நெஞ்சு ஆள் பெற்று	என்னுடைய நெஞ்சானது அடிமைப் பட்டதனால்		

* * *—[என்னில் மிகுபுகழார்.] முதற்பாட்டில், ஆழ்வார் எம்பெருமானைப் புகழத் தொடங்கி, இரண்டாம் பாட்டில், அவனை நாமோ புகழ்வதென்று பின்வாங்கி, மூன்றாம் பாட்டில்-புகழாதிருக்க முடியாமையைச் சொல்லி முடித்தார். அவனைப் புகழ்வது நமக்குத் தகாதென்று நாம் அயோக்யதையால் பின்வாங்க நினைத்தாலுங்கூட ஏதேனுமொருபடியாலே அவனது புகழ்களைப் பற்றி நம் வாயால் சில பாசுரங்கள் பேசியே தீரவேண்டியதாகிறதே! ஹா ஹா!, நம்முடைய பாக்கியமே பாக்கியம்; நம்மைவிட பாக்கியசாலிகள் வேறுயாருளர்? எம்பெருமானுடைய சில திருக்குணங்கள் நம் வாயிலும் புகுந்து புறப்படும்படியான நல்ல காலம் வாய்த்ததே! என்று மகிழ்கிறார் இதில்.

"என்னில் மிகுபுகழார் யாவரே" என்பதில் சொல்லுகிற அர்த்தமே "பின்னையும் மற்றெண்ணில் மிகுபுகழேன்யானல்லால்" என்பதிலும் கிடந்தாலும் ஸந்தோஷாதிசயத்தாலே இரட்டித்துச் சொல்லுகிறபடி. "இல்லையெனக்கெதிரில்லையெனக் கெதிரில்லையெனக் கெதிரே" என்பதுபோல. இவ்விடத்தில் இவர் நினைக்கிற புகழாவது-பாக்யசாலி என்கிற கீர்த்தியாம். ஆகவே, என்னைவிட பாக்யசாலி வேறு யார்? என்றதாயிற்று.

'உமக்கிப்போது என்ன பாக்கியம் வந்துவிட்டது?' என்ன, பின்னடிகளில் அந்த பாக்கியத்தை விவரிக்கிறார்;—என்ன கருஞ்சோதிக்கண்ணன் கடல் புரையுஞ் சீலப் பெருஞ் சோதிக்கு என்னெஞ்சு ஆளாகப் பெற்றதனால் "என்னில் மிகுபுகழார் யாவரே?" என்ன வேண்டியதாயிற்று என்கிறார். என்ன என்றது-என்னுடைய என்றபடி. தன்னுடைய வடிவை எனக்கு அநுபவிக்கக் கொடுத்தருளின கண்ணபிரான் என்கை. கடல்புரையும் சீலன் என்றது கடல்போன்ற கம்பீரஸ்வபாவமுடையனென்றபடி. சீலம் என்ற வடசொல்·ஸ்வபாவமென்றும் நல்லொழுக்கமென்றும் பொருள் படும். "சீலப்பெருஞ் சோதிக்கு" என்றவிடத்து சீலன் என்று பிரியும்; "சில விகாரமாமுயர்திணை" என்பது நன்னூல். ஆள் பெற்று என்றது-ஆளாகப் பெற்றது காரணமாக என்றபடி. எம்பெருமானை நெஞ்சால் நினைத்தாலும் கெடுதியாமென்று கொண்டிருந்த கொள்கை நீங்கி அப்பெருமான் விஷயத்திலேயே இன்று என்னெஞ்சு ஆழ்ந்து அவகாஹிக்கப்பெற்றதனால் நான் மஹாபாக்ய சாலியானேன் என்றாராயிற்று.

இதென்ன விசித்திரம்! எம்பெருமானை நீசனேன் நெஞ்சால் நினைப்பதும் கெடுதல் என்று சில ஸமயங்களில் சொல்லுகிறார்; மற்றுஞ் சில ஸமயங்களிலோ 'அவனை நினைப்பது மஹாபாக்யம்' என்கிறார்; இவ்விரண்டு வார்த்தைகளும் ஒன்றோடொன்று சேரவில்லையே; 'நினைத்தல் கூடும்' என்பது ஸித்தாந்தமா? 'கூடாது' என்பது ஸித்தாந்தமா? என்று சிலர் சங்கிக்கக்கூடும். இரண்டும் ஸித்தாந்தமே யென்று கொள்ளக்கடவது. இப்படியுமுண்டோ? என்னில்; கேண்மின்; "நீசனேன் நிறையொன்றுமிலேன்" என்னும்படியான தம்முடைய தாழ்வு நினைவுக்கு வந்துவிட்டால், அப்போது, 'நாயிலுங் கடைகெட்ட நாமோ பரம்பொருளை நினைப்பதற்கும் புகழ்வதற்கும் தகுதியுடையோம்? இதில் ப்ரவர்த்திக்க நமக்கு என்ன யோக்யதை?' என்று பின்வாங்க வேண்டியதாகிறது. இதுவும் தகுதியே. எம்பெருமானுடைய வடிவழகும் போக்யதையும் நோக்கப்படுமிடத்து நெஞ்சையும் வாயையும் கட்டிவைத்திருக்க முடிகிறதில்லை; பரவசமாகவே ப்ரவ்ருத்தி உண்டாய்விடுகிறது. அந்த ப்ரவ்ருத்தியினால் மிக்க ஆநந்தமும் உண்டாய்விடுகிறது. அந்த ஆநந்தத்தினால் தலைதடுமாறாகக் கூத்தாடிக் கொண்டு "என்னில் மிகுபுகழார் யாவரே" என்றும் "யானே தவஞ் செய்தேன்" என்றும் "எனக்காரும் நிகரில்லையே" என்றும் பலவாறு பேச வேண்டியதாகிறது. இதுவும் தகுதியே. ஆகையால் இரண்டுக்குங் குறையில்லையென்க. ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகையும், பண்ணின பிறகு அதற்கு அநுதாபங் காட்டுதலுமாகிற இரண்டும் அவிருத்தமென்று கொள்வது போல இதனையுங் கொள்க. ... 4

2589. பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தைநீ*
மற்றையா ராவாரும் நீபேசில்*—எற்றேயோ!
மாய! மா மாயவளைமாய முலை வாய்வைத்த*
நீயம்மா! காட்டும் நெறி. 5

மாய	மாயவனே!	பிறப்பித்த தந்தை நீ	உண்டாக்கின பிதாவைப் போல ஹிதமானதையே செய்பவனும் நீயே:
அம்மா	ஸ்வாமியே!,	மற்றையார் ஆவாரும் நீ	மற்றும் ஆசாரியரும் நீயே;
பேசில்	உன்னால் நான் பெற்ற உபகாரங்களைப் பேசப் புகுந்தால்	மா மாயவளை மாய	மஹத்தான வஞ்சனையை யுடையளான பூதனையை முடிப்பதற்காக
பெற்ற தாய் நீயே	பெற்றதாய் போலே ப்ரிய மானத்தையே செய்பவனும் நீயே;		

முலை { (அவளது விஷந்தடவின) முலையை
வாய் வைத்த நீ அமுது செய்த நீ
காட்டும் நெறி எனக்குக் காட்டின வழிகள்
எற்றே ஓ { என்ன ஆச்சரியமானவை! (என்று உருகுகிறார்.)

***—[பெற்றதாய் நீயே] எம்பெருமானை நினைப்பதற்கும் துதிப்பதற்கும் நான் யோக்யதை யற்றவன் என்று பின்வாங்கப் பார்த்த அடியேனை அந்த எண்ணம் நீங்கி ப்ரவர்த்திக்கும்படி செய்தருளிற்றே; இப்படி மஹோபகாரம் செய்கிற மஹானுபாவர் தேவரீர் தவிர வேறு யாருள ரெனக்கு? தாயும் தமப்பனும் ஆசாரியனுமாகிற உபகாரகர்கள் யாவரும் அடியேனுக்கு தேவரீரே யாயிற்று! என்று எம்பெருமானை நோக்கி உருக்கமாகப் பேசுகிறார்.

பேசில்—நீ பண்ணின உபகாரத்தை வாய்விட்டுப் பேசத்தொடங்கினால், நீயே பெற்ற தாய், நீயே பிறப்பித்த தந்தை, நீயே மற்றையா ராவாரும்—வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெறுகிற தாயும், பிறப்பிக்குமவனான தகப்பனும், ஆத்மாவுக்கு உற்ற நன்மைகளைச் செய்து விலக்ஷண ஜன்மத்தைக் கொடுக்கிற ஆசார்யனும் ஆகிய ப்ரஸித்தர்களான உபகாரகர்கள் மூவரும் அடியேனுக்கு தேவரீர் தாம். அயோக்யனென்று பின்வாங்கி தேவரீரை அடியேன் நினையாமலும் புகழாமலுமிருந்திட்டால் என்னுடைய ஸத்தையே போய்விடும்; அது போகாதபடி காப்பாற்றியருளின உபகாரகர் தேவரீரே யாதலால், ஸத்தைக்கு ஹேதுபூதர்களான தாய் தந்தை ஆசாரியர்கள் மூவரும் தேவரீரே யாயிற்றன்றோ என்கை.

மூன்றாமடியின் முதலிலுள்ள மாய என்பது ஸம்போதநம் (விளி); உன்னுடைய ஆச்சரிய சேஷ்டிதத்தை என்ன சொல்லுவேனப்பா! என்று கருத்து. "புகழ்வோம் பழிப்போம்" என்று கொண்டிருந்த எண்ணத்தைத் தவிர்த்து "என்னில் மிகுபுகழார் யாவரே" என்னும்படி பண்ணின விது என்ன ஆச்சரியம்! என்கிறார்போலும்.

மாமாயவனை மாய முலைவாய்வைத்த என்று பூதனையின் முலையைச் சுவைத்த வ்ருத்தாந்தத்தை எடுத்துக் காட்டியது-பிள்ளையாயிருந்து முலையுண்கிற பாவனையிலே அப்பூதனையின் உயிரை முடித்தது எப்படி ஆச்சரியமோ அப்படியே காண் இதுவும் ஒரு ஆச்சரியம் என்றபடி. உன்னைக் கொல்வதாக வந்த அவளை நீ கொன்று உலகுக்கு ஒருயிரான உன்னை ரக்ஷித்துத் தந்த உபகாரம் போலே இதுவும் ஒரு உபகாரங்காண் என்றதாகவுமாம்.

நீ காட்டும் நெறி எற்றேயோ?—அயோக்யதாநுஸந்தானம் பண்ணிப் பின்வாங்கப் பார்த்த வென்னை வசப்படுத்தி உன் பக்கலிலேயே அவகாஹிக்கும்படி ஒரு வழி காட்டிற்றே! இஃது என்ன ஆச்சரியம்! என்கை. எற்றே என்பது அதிசய விரக்கச் சொல்; எற்று—எத்தன்மையது! 5

2590. நெறிகாட்டி நீக்குதியோ? நின்பால்*கருமா
முறிமேனி காட்டுதியோ? *மேனாள்—அறியோமை
என்செய்வா னெண்ணினாய்? கண்ணனே!*ஈதுரையாய்
என்செய்தால் என்படோம் யாம்? 6

கண்ணனே — எம்பெருமானே!

நெறி காட்டி நின்பால் நீக்குதியோ — கரும்ம் ஞானம் முதலிய உபாயாந்தரங்களைக் காட்டி (இவற்றை அநுஷ்டித்துப் பலன் பெறுவாய் என்று சொல்லி என்னைக்) கைவிட்டு விடப் பார்க்கிறாயோ?

கரு மா முறி மேனி காட்டுதியோ — (அல்லது) கறுத்த மாமரத்தின் தளிர் போன்ற (உனது) திருமேனியை ஸேவை ஸாதிப்பித்து அநுக்ரஹிக்க நினைக்கிறாயோ?

மேல் நாள் அறியோமை — அநாதிகாலமாக அறியாதவர்களான எங்களை

என் செய்வான் எண்ணினாய்	என்ன செய்வதாகத் திருவுள்ளம் பற்றி யிருக்கிறது?	என் செய்தால்	நீ எமக்கு என்ன நன்மையைச் செய்தாலும்
ஈது உரையாய்	தேவரீருடைய திருவுள்ளமின்னதென்பதை அருளிச் செய்யவேணும்;	யாம் என் படோம்	யாம் என்ன அநர்த்தத்தைத் தான் அநுபவிக்க மாட்டோம்.

* * *—[நெறிகாட்டி] 'நம்மை விட்டுப் பின் வாங்கப் பார்த்த இவ்வாழ்வாரை நாம் உபாயமாகப் பொருந்தவிட்டுக் கொண்டோம்; இனி இவர் நம்மை நினைப்பதும் துதிப்பதும் செய்து கொண்டிருக்கப் போகிறார்; அப்படியே யிருக்கட்டும்; அல்லும் பகலும் அழுது கதறிக் கொண்டிருக்கட்டும்; நம்மைக் கிட்டி அநுபவிக்க விரும்பினாராகில் கருமம் ஞானம் முதலிய ஸாதநங்களை அனுட்டித்து மெதுவாக வந்து சேரட்டும்' என்று எம்பெருமான் திருவுள்ளம்பற்றியிருப்பதாகத் தெரிந்து கொண்ட ஆழ்வார் அப்பெருமானையே நோக்கிக் கேள்வி கேட்கிறார்:—பெருமானே! உனக்கு ஸ்வாதந்திரியம் என்கிற ஒரு குணமும், நிர்ஹேதுக க்ருபை என்கிற ஒரு குணமும் உண்டு; எந்த குணத்தைச் செலுத்தி நீ காரியம் செய்ய நினைத்தாலும் செய்யக்கூடும். சிலரிடத்தில் ஸ்வாதந்திரியத்தைச் செலுத்திக் கைவிடப் பார்ப்பாய்; சிலரிடத்தில் நிர்ஹேதுக கருணையைச் செலுத்தி வலிகட்டாயமாகக் கைக்கொள்ளப் பார்ப்பாய்: இப்படி எத்தனையோ செய்துமிருக்கிறாய். இப்போது அடியேன் விஷயத்தில் செய்யத் திருவுள்ளம் பற்றியிருப்பது எது? ஸ்வாதந்திரியத்தைக் காட்டிக் கைவிடப் பார்க்கிறாயோ? அல்லது, திருவருளைக் காட்டி அழகிய திருமேனியை ஸேவை ஸாதிப்பித்து விஷயீகரிக்கப் பார்க்கிறாயோ? எப்படி நீ செய்தாலும் அப்படிக்கு என்னைப் போன்ற ஸம்ஸாரிகள் உடன்பட வேண்டியவர்களே யன்றி உன்னை நியமிக்கவல்லார் ஆருமில்லை: ஆனாலும் 'இன்னது செய்ய நினைத்திருக்கின்றேன்' என்பதைச் சோதிவாய் திறந்து சொல்லி விட்டால் நெஞ்சுக்கு ஆறுதலாயிருக்கும் என்கிறார்.

நெறிகாட்டி நீக்குதியோ நின்பால்?=நெறியென்றால் வழி; வழியாவது உபாயம்; பகவத் கீதையில் சரமச்லோகத்துக்குக் கீழே விஸ்தாரமாகச் சொல்லப்பட்டுள்ள கர்ம ஜ்ஞாநாதி ஸாதநாந்தரங்களை இங்கு நெறி யென்கிறது. எம்பெருமான் யாரை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றுகிறானோ அவர்களை நோக்கி "நீங்கள் எவ்விதமான அலைச்சலும் படவேண்டா; என்னையே தஞ்சமாக உறுதிகொண்டு மார்விலே கைவைத்து உறங்குங்கள்" என்பன்; எவர்களைக் கைவிட நினைக்கிறானோ அவர்களுக்கு அருந்தொழில்களை அளவில்லாதபடி விதித்து 'இவற்றைச் சரியாகச் செய்து பேறு பெறுங்கள்' என்பன். ஆகையாலே நெறிகாட்டுகை யென்பதும் நீக்குகை யென்பதும் பர்யாயம். நெறியைக் காட்டுகையாவது—'இது கர்மயோகம். இது ஜ்ஞாநயோகம், இது பக்தியோகம்; இவற்றுள் எது உமக்கு ஸாத்யமோ அதனை அநுஷ்டிக்கக் கடவீர்' என்று சொல்லி, தான் உதாஸீநனாய் விடுகை. நெறி காட்டி நின்பால் நீக்குதியோ?=உன்னை யொழிய வேறோருபாயத்தைக் காட்டி உன் பக்கலில் நின்றும் என்னை அகற்றப் பார்க்கிறாயோ என்றவாறு.

நளமஹாராஜன் தமயந்தியை உடுத்த புடவையிலே ஒரு தலையையறுத்து 'இது விதர்ப்பதேசம் போகிறவழி, இது கோஸல தேசம் போகிறவழி; எந்த வழியில் வேணுமானாலும் போய்க்கொள்' என்று சொல்லிவிட்டு அகன்ற கதையை இங்கு நினைப்பது.

கரு மா முறி மேனி காட்டுதியோ?—நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு அடியேனை ஆளாக்கப்பார்க்கிறதோ என்கை. *நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந. யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்* என்று உபநிஷத்திலே சொல்லப்பட்டிருக்கிறபடி.

எவனை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றுகிறானோ அவனுக்குத் தனது திவ்ய மங்கள விக்ரஹத்தைப் பரிபூர்ணாநுபவ விஷயமாகக் காட்டிக்கொடுக்கக் கடவனாகையாலே, மேனி காட்டுதியோ வென்கிறார். முறி யென்று தளிர்க்குப் பெயர்; முறிக்கப்படுவது முறியென்று காரணப்பெயர். மாமுறி—மாந்தளிர்; அதுபோல் ஸுகுமாரமாயும், கரு—ச்யாமளமாயுமிருக்கிற திருமேனியைக் காட்டி யருள நினைக்கிறாயோ?

கண்ணனே! மேனாள் அறியோமை என்செய்வா னெண்ணினாய்?—அநாதிகாலமாக அவிவேகியாய்க்கிடக்கிற அடியேன் திறத்தில் எது செய்ய நினைத்திருக்கிறது? நிக்ரஹமோ? அல்லது அநுக்ரஹமோ? சொல்லவேணும் மேனாளறியோமை என்றதன் கருத்து யாதென்னில்; ஒன்றிலும் அறிவில்லாத அடியேனுக்கு உபாயாந்தரங்களை விதித்தால் என்ன செய்யமுடியும்? தேவரீருடைய நிர்ஹேதுக க்ருபைக்கு அஜ்ஞரும் அசக்தருமன்றோ இலக்கு; ஞான முள்ளவர்களும் சக்தியுள்ளவர்களும் தங்களுடைய ஞானசக்திகளைக் கொண்டு கரையேறிவிடக் கூடும்; அறிவில்லாதவர்களும் அசக்தர்களுமே தேவரீருடைய நிர்ஹேதுகவிஷயீகாரத்திற்குப் பாத்திரமாகக் கூடியவர்களாதலால் அஜ்ஞனான அடியேன் நெறிகாட்டி நீக்குவதற்கு உரியவனல்லேன்; கருமாமுறிமேனி காட்டுவதற்கே உரியேன்—என்று எம்பெருமான் திருவுள்ளத்தில் படும்படி சொல்லுகிறாரென்க.

என்செய்தாலென்படோம் யாம்—இதற்கு இரண்டுவகையாகப் பொருள்கொள்ள இடமுண்டு; நீ ஸ்வாதந்திரியத்தைக் காட்டி அகற்றப்பார்த்தாலும் ஸரி; அநுக்ரஹித்துத் திருமேனியை ஸேவைஸாதிப்பித்தாலும் ஸரி; திருவுள்ளமானபடி எது செய்தாலும் அதன்படி அடியேன் உடன்படத்தக்கவனே யொழிய வேறு என்ன தடை செய்யப்போகிறேன்—என்கிறார் என்னலாம். அன்றி, நீ என்ன நன்மை செய்தாலும் அதைத் தாங்கிக்கொள்ள என்னால் முடியப்போகிறதோ? யானையைக் குளிப்பாட்டி வைத்தாலும் நொடிப்பொழுதில் தும்பு தூசுகளையே வாரி மேற்கொள்ளுமாபோலே, நீ செய்யும் நன்மையையும் கெடுத்துக்கொண்டு தீமையையே ஏறிட்டுக்கொண்டவனாவேன்—என்கிறார் என்னவுமாம். 6

2591. யாமே அருவினையோம் சேயோம்*என்னெஞ்சினார்
தாமே அணுக்கராய்ச் சார்ந்தொழிந்தார்*—பூமேய
செம்மாதை நின் மார்வில் சேர்வித்து*பாரிடந்த
அம்மா! நின் பாதத் தருகு. 7

பூ மேய	தாமரைப் பூவில் பொருந்தி யிருக்கிற	நின் பாதத்து அருகு	தேவரீருடைய திருவடிகளின் சமீபத்திலே
செம் மாதை	*ஹிரண்ய வர்ணையான பிராட்டியை	என் நெஞ்சினார் தாமே	என்னுடைய நெஞ்சுதானே
நின் மார்வில் சேர்வித்து	உனது திருமார்பிலே சேர்த்துக் கொண்டவனாயும்	அணுக்கர் ஆய் சார்ந் தொழிந்தார்	அந்தரங்கமாகச் சென்று சேர்ந்து விட்டது;
பார் இடந்த	(பிரளயத்திலழுந்திக் கிடந்த) பூமியைக் குத்தி யெடுத்தவனாயு மிருக்கிற	அரு வினையோம்	போக்க முடியாத பாவத்தைப் பண்ணியுள்ள
		யாமே	நாங்கள் மாத்திரம்
அம்மா	ஸ்வாமீ!	சேயோம்	தூரத்திலிருக்கிறோம்.

*** [யாமே அருவினையோம்.] "கருமா முறிமேனி காட்டுதியோ?" என்றாரே கீழ்ப்பாட்டில். 'ஆழ்வீர்! இதோ என்னுடைய கருமாமுறிமேனியைப் பாரும்' என்று எம்பெருமான் சொல்லப் போகிறானென்றும் திருமேனிஸேவை கிடைக்கப்

போகிறதென்றும் ஆவல் கொண்டிருந்தார்; நெஞ்சுக்கு மாத்திரம் ஸேவை ஸாதித்தபடியே யொழிய, கட்கண்ணால் காணும்படியாகவும் கைகளாலே அணைத்துக் களிக்கும்படியாகவும் ஸேவை ஸாதிக்கப் பெறவில்லை. அப்படி பெறாத தனாலே தமக்குண்டான கஷ்டத்தைக் கூறுகின்றாரிதில்

“பூமேய செம்மாதை நின்மார்வில் சேர்வித்துப் பாரிடந்த அம்மா!, என் நெஞ்சினார் தாமே அணுக்கராய் நின்பாதத்தருகு சார்ந்தொழிந்தார்; அருவினையோம் யாமே சேயோம்” என்று அந்வயம். முதலிலேயே நான் எனது நெஞ்சைக் கூவி “முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே! இயற்றுவாய் எம்மொடு நீ கூடி” என்று என்னோடு சேர்ந்து நீ காரியத்தை நடத்து என்று சொல்லி வைத்திருந்தும் என் சொல்லை லக்ஷியம் பண்ணாத அந்த நெஞ்சானது என்னை நெடுந்தூரத்திலே தனிப்பட விட்டு விட்டுத் தான் மாத்திரம் எம்பெருமானுடைய திருவடிகளுக்கு அந்தரங்கமாக அணுகி அங்கேயே லயித்துவிட்டது; அது நல்ல பேறு பெற்று விட்டது; நான் தான் இப்படி தூரஸ்தனாய் வருந்திக் கிடக்கிறேன்; நான் பண்ணின பாவமிது! என்கிறார். ஆழ்வார் நம்மைப்போலே இவ்விருள் தருமா ஞாலத்திலே ஸம்ஸாரிகளுடைய மத்தியில் இருந்தாலும் அவருடைய திருவுள்ளம் மாத்திரம் பகவத் பாதாரவிந்தத்திலேயே அழுந்தியிருக்கு மென்பது இதனால் அறியத்தக்கது.

சேயோம்=சேய்மை என்னும் பண்படியாப் பிறந்த தன்மைப்பன்மை வினைமுற்று. சேய்மையாவது தூரம்; தூரத்திலுள்ளவன் சேயோன்; சேயோம் என்றது தூரத்திலிருக்கிறோம் என்றபடி. “என்னெஞ்சு சார்ந்தொழிந்தது” என்ன வேண்டியிருக்க, நெஞ்சினார் என்றும் சார்ந்தொழிந்தார் என்றும் உயர்திணையாகக் கூறியது—எம்பெருமானிடத்துத் தமக்குள்ள கௌரவத்தினால் அவனிடத்து ஆழங்காற்பட்ட மனத்தை உயர்த்திக்கூறவேணுமென்ற கருத்தினாலாம். அணுக்கர்—அந்தரங்கர், ஸமீபத்திலுள்ளவர்.

“பூமேய செம்மாதை நின்மார்வில் சேர்வித்து” என்ற விடத்துக் கடல் கடைந்த வரலாற்றையும், “பாரிடந்த” என்றவிடத்து வராஹாவதார வ்ருத்தாந்தத்தையும் அநுஸந்திப்பது. 7

2592. அருகும் சுவடும் தெரிவுணரோம்*அன்பே
பெருகும்மிக இதுவென்? பேசீர்*—பருகலாம்
பண்புடையீர்! பாரளந்தீர்! பாவியேம் கண்காண்பரிய*
நுண்புடையீர்! நும்மை நுமக்கு. 8

பருகலாம் பண்பு உடையீர்	வாய்மடுத்துப் பானம் பண்ணுதற்கு உரிய திருக்குணங்களை யுடையவரே!
பார் அளந்தீர்	(த்ரிவிக்ரமாவதாரத்தால்) பூமி யெல்லாமளந்தவரே!
பாவியேம் கண் காண்பு அரிய நுண்பு உடையீர்	பாவிகளான எங்களுடைய கண்களாலே காண முடியாத வைலக்ஷண்யத்தை யுடையவரே!
நும்மை	உம்மை
அருகும்	கிட்டுவதையும்
சுவடும்	கிட்டுவதற்கான உபாயத்தையும்
தெரிவு உணரோம்	(நாங்கள்) பகுத்தறிந்தோமில்லை;
	(அப்படியிருக்கச் செய்தேயும்)
நுமக்கே	உம் விஷயத்திலேயே
அன்பு மிக பெருகும்	(எமக்கு) ஆசையானது மிகவும் பெருகா நின்றது;
இது என்	இதற்கு என்ன காரணம்?
பேசீர்	நீர்தாம் சொல்லவேணும்,

* * *—[அருகுஞ் சுவடும்] எம்பெருமான் நெஞ்சுக்கு மாத்திரம் விஷயமானனே யன்றி, கண்களால் காணவாவது கைகளாலணைக்கவாவது விஷயமாகவில்லை என்றார் கீழ்ப்பாட்டில். அப்படி கண்ணால் காணப்பெறாதிருக்கச் செய்தேயும், கண்ணால்கண்ட விஷயங்களிற் போல அன்பு அதிகரித்து வருகின்றதே, இதற்கு என்ன காரணம்? சொல்லாய் என்று அப்பெருமானையே கேட்கிறார்.

"பருகலாம் பண்புடையீர்! பாரளந்தீர்! பாவியேம் கண் காண்பரிய நுண்புடையீர்! நும்மை அருகும் சுவடும் தெரிவுணரோம்: (அப்படியிருந்தும்) நுமக்கே அன்புமிகப் பெருகும்; இது என்? பேசீர்" என்று அந்வயம்.

பருகலாம் பண்புடையீர்—பண்பு என்று பொதுவாகக் குணத்தைச் சொல்லுகிறது; இவ்விடத்தில், ஸௌசீல்யம் ஸௌலப்யம் என்கிற குணங்களில் நோக்கு. "கண்ணாணில் ஓவாத்தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே!, ஓவாத ஊணாகவுண்" என்று மேலே அருளிச் செய்கிறபடி பகவத்குணங்களை உணவாகக் கொள்ளுகிறவராதலால் பருகலாம் பண்புடையீர் என்கிறார். அப்படிப்பட்ட பண்பு உலகளந்த சரிதையில் விளங்கிற்றென்பார்போல அடுத்தபடியாகப் பாரளந்தீர் என்கிறார். [பாவியேம் இத்யாதி] பாவிகளான என்போன்ற ஸம்ஸாரிகளுடைய கட்புலனுக்கு இலக்காகாத வைலக்ஷண்யத்தை யுடையவரே! என்றபடி. நும்மை அருகும் தெரிவுணரோம், சுவடும் தெரிவுணரோம்—"கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும் ஒரு தனிநாயகம்" என்றபடி நீ எங்கணும் நிறைந்திருந்தாலும் அருகில் இருப்பதாக உன்னை நான் தெரிந்துகொள்ளவில்லை; (நீ எனக்கு ஸமீபத்தில் வந்து ஸேவை ஸாதிக்கவில்லை யென்றபடி.) இப்போது அப்படி தெரிந்து கொள்ளாவிட்டாலும், இனி என்றேனு மொருநாள் தெரிந்துகொள்ள வழியுண்டோ என்னில்; சுவடுந் தெரிவுணரோம்—சுவடாவது அடையாளம்; உன்னுடைய ஸேவை கிடைக்கக் கூடுமென்று நினைப்பதற்குரிய அடையாளமு மொன்றுங் கண்டிலேன். என்னிடத்தில ஏதாவது யோக்யதையிருந்தால் அந்த யோக்யதை நிமித்தமாக உன் ஸேவை கிடைக்கக்கூடுமென்று நினைக்க வழியுண்டு; அப்படிப்பட்ட யோக்யதை ஒன்றும் என்பக்கல் இல்லாமையாலே அந்த நினைவுக்கு ப்ரஸக்தி யில்லை யென்கை. சுவடு என்பதற்கு போக்யதை என்கிற பொருளுங்கொள்ளலாம். திருவயோத்தியில் பிராட்டி இராமபிரானோடு பன்னிரண்டாண்டு கலந்திருந்து அவனுடைய ராஸிக்யத்தை அறிந்தாற்போலே நான் உன்னோடு கலந்தவனுமல்லேன், உனது ராஸிக்யத்தை அறிந்தவனுமல்லேன்; ஆயினும் அன்பு மாத்திரம் எனக்கு உன் மீதே வளர்ந்து செல்லுகின்றதே! இதற்கு என்ன காரணம்? சொல்லவேணும்—என்கிறாராகவுமாம்.

ஆசார்யஹ்ருதயம் நான்காம் ப்ரகரணத்தில் [பத்தாவது சூர்ணையில்] "அருகுஞ் சுவடும் போலே" என்ற விடத்திற்கு வியாக்கியானமருளிச் செய்யா நின்ற மணவாளமா முனிகள்-"உம்முடைய அருகு வருதல் உம்முடைய சுவடறிதல் செய்யாதிருக்க உம்மளவிலே ஸ்நேஹமானது அறமிக்கு வாராநின்றது; இதுக்கு அடி அருளிச் செய்யவேணும்" என்று இப்பாசுரத்திற்குக் கருத்து அருளிச் செய்தமை இங்கு நோக்கத்தகும்.

"பாட்டின் முடிவில் நும்மை நுமக்கு என்றிருக்கிறதே; அதற்கு எங்கே அந்வயம்?" என்று நஞ்சீயர் பிள்ளை திருநறை யூரரையரைக் கேட்டபோது அவர் "நும்மை அருகுஞ் சுவடுந் தெரிவுணரோம்; நுமக்கு அன்பே பெருகும் மிக" என்று அந்வயித்துக் காட்டிப் பொருளுரைத்தாராம். 8

2593. நுமக்கடியோ மென்றென்று நொந்துரைத்தென்?*மாலார்
தமக்கவர்தாம் சார்வரிய ரானல்*—எமக்கினி
யாதானும் ஆகிடுகாண் நெஞ்சே!*அவர்திறத்தே
யாதானும் சிந்தித் திரு. 9

நெஞ்சே	ஓ மனமே !
(மாலர்ர்) அவர் தாம்	எம்பெருமாளுகிற அப்பெரியவர் தாம்
சார்வு அரியர் ஆனல்	நமக்குக்கிட்ட முடியாதவரா யிருக்கும்போது
மாலார் தமக்கு	அவ்வெம்பெருமானை நோக்கி
நுமக்கு அடியோம் என்று என்று	"நாங்கள் உமக்கு அடிமைப் பட்டவர்கள்" என்று பல தடவை
நொந்து உரைத்து என்	வாய் நோவச் சொல்வதில் என்ன பயன் ?
இனி	இன்று முதலாக
எமக்கு ஆதானும் ஆகிடு காண்	நமக்கு எது வேணுமானலும் நேரட்டும் ;
அவர் திறத்தே யாதானும் சிந்தித்து இரு	அப்பெருமான் விஷயமாகவே எதையாவது சிந்தித்துக் கொண்டு கிடப்பாயாக.

* * *—[நுமக்கடியோம்.] எம்பெருமானுடைய திருமேனியை ஸேவிக்கப் பெற வேணுமென்று ஆசை கொண்ட தம்முடைய மநோரதப்படியே அவன் ஸேவை தந்தருளாமையால் அவனிடத்தில் வீணுக அன்பு வஹிப்பதில் என்ன பயன் ? என்று நினைத்த ஆழ்வார் 'இனி நாம் எம்பெருமானை நோக்கிப் பஞ்சைப் பாட்டுகள் பாடுவது அநாவச்யகம் ; "எனக்கு நீயே கதி, எனக்கு நீயே கதி" என்று பல காலும் சொல்லுவதில் என்ன ப்ரயோஜனம்? எவ்வளவு கதறினுலும் அந்தப் பெரியவர் நம்மை லக்ஷியம்பண்ணுகிறதில்லை ; ஆகையால், இனி நாம் அப்பெருமானை நோக்கி "நுமக்கு அடியோம்" என்று சொல்வதை நிறுத்திவிட வேண்டியது'—எனக் கருதி அக்கருத்தை இப்பாட்டில் முன்னடிகளில் வெளியிடுகிருர். அதற்கு மேல், 'இந்த உறுதியுடனே நாம் இருந்து விடமுடியுமா' என்று ஆலோசித்துப் பார்த்தார் ; க்ஷணகாலமும் இப்படியிருந்திட முடியாதென்று துணிந்து, நெஞ்சை நோக்கி 'நெஞ்சே ! அப்பெருமான் நம்மை அநுக்ரஹித்தாலும், அநுக்ரஹிக்கட்டும், நிக்ரஹித்தாலும், நிக்ரஹிக்கட்டும் ; திருவுள்ளமானபடி செய்திடட்டும். நீ மாத்திரம் சிந்தனையை அவர் விஷயத்திலேயே செலுத்திக்கிட' என்கிருர் பின்னடிகளில்.

"மாலார் தாம் சார்வரியரானல் (அந்த மாலார் தமக்கு நுமக்கடியோமென்றென்று நொந்து உரைத்து என் ?" என்று முன்னடிகளின் அந்வயம். மாலார்தாம் = 'ஆச்ரிதர்களிடத்தில் வ்யாமோஹமே வடிவு கொண்டவர்' என்று பேர் மாத்திரமேயாயிருக்கிற அவர் என்றவாறு. சார்வு அரியரானல் என்றது—நமக்கு நெருங்கி யநுபவிக்கக் கூடாதவராயிருக்கையினல் என்றபடி. நாம் ஆர்த்தியோடே நுமக்கடியோம் நுமக்கடியோம் என்று எத்தனை தடவை சொன்னுலும் அவர் ஸேவைஸாதியாதிருக்குமளவில் அந்த வார்த்தையை நாம் வாய் நோவ வீணுகப் பலகால் சொல்லிக் கதறுவதில் யாது பயன் ? நெஞ்சு உலரக் கத்துவது ஏதுக்கு? என்கை. நொந்து உரைத்தலாவது—ஆர்த்தியோடே சொல்லுதல் ; வாய் நோவச் சொல்லுதலுமாம். பசித்தபோது சோறிடாதவனை நோக்கிச் சோறு சோறு என்று பலகால் கத்தினுலும் வாய் தானே நோகும்.

நெஞ்சே ! எமக்கு இனி யாதானுமாகிடுகாண் ; அவர் திறத்தே யாதானும் சிந்தித்து இரு = "நல்லவென் தோழி ! நாகணைமிசை நம்பரர், செல்வர் பெரியர், சிறுமானிடவர் நாம் செய்வதென் ?" என்ருற்போலே, மிக்க பெரியவரான அவரை இன்னபடி செய்கவென்று நியமிக்க ஆராலாகும் ; அவர் *நெறி காட்டி நீக்கினுலும் நீக்கட்டும் ;* கருமாமுறிமேனி காட்டினுலும் காட்டட்டும் ; நீ அவர் விஷயமாகவே எதையாவது சிந்தித்திரு.

இவ்விடத்தில் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்மின் :—"[அவர் திறத்தே யாதானும் சிந்தித்திரு.] பேறும் இழவும் இரண்டு மொக்குமென்றிருக்கலாமோ ? நம்முடைய ஸத்தைக்கு அவன் வேணுமேயென்ன ; ஸத்தைக்கு இதெல்லாம் வேண்டாகாண் ; அவர் நம்மை வேண்டாவென்றத்தை நினைத்திருக்கவமையும் ;

நம்முடைய ஸத்தைக்கு அவர் ஸத்தையிறே காரணம்" என்று. இந்த ஸ்ரீஸூக்திகளின் ஆழ்பொருளை என் சொல்வோம். 'எம்பெருமானுடைய அநுக்ரஹத்தை நினைத்துக்கொண்டிருந்தால்தானே நமக்கு ஸத்தை; அவன் நம்மை அநுக்ரஹியாது நிக்ரஹித்துவிட்டாலும் அவனையே நினைத்துக்கொண்டிருக்கவேணுமென்று சொல்லலாமோ? "எமக்கினியாதானுமாகிடுகாண்" என்று எப்படி சொல்லலாம்? என்னில்; அவனுடைய அநுக்ரஹம் போலே அவனுடைய நிக்ரஹமும் நமக்கு அநுஸந்தேயமே. நம்மைப்பற்றி எம்பெருமான் திருவுள்ளத்தில் பட்டிருக்க வேண்டுமத்தனையே அபேக்ஷிதம். அது அநுக்ரஹரூபமாகவோ நிக்ரஹரூபமாகவோ எதுவாகிலுமாகலாம். திருவாய்மொழியிலும் [4-7-3.] "கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனி சோர நின்றால், பாவி நீ யென்றொன்று சொல்லாய் பாவியேன் காண வந்தே" என்றருளிச் செய்ததன் கருத்து நோக்கத்தக்கது. எம்பெருமான் விருப்பான வார்த்தையோ வெறுப்பான வார்த்தையோ எது சொன்னாலும் அதில் ஒரு நிர்ப்பந்தமில்லை; கண் முன்னே வந்து தோற்றிச் சொல்ல வேணுமென்பதொன்றே வேண்டுவது என்கிறானன்றோ ஆண்டாளும். "செம்மையுடைய திருமார்பில் சேர்த்தானேலும் ஒரு நான்று, மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி விடைதான் தருமேல் மிக நன்றே" என்றாள்;—கண்ணபிரான் தனது திருமார்பிலே எனது கொங்கைகளை அணைத்துக் கொள்ளவேணுமென்று விரும்பியிருக்கிற என் விருப்பத்தின்படி அவன் அணைத்துக் கொள்வனேல் நன்று; அப்படி அணைத்துக் கொள்ளத் திருவுள்ளமில்லையாகில், என் முகத்தை நேராகப் பார்த்து 'எனக்கு உன்மேல் அன்பு எள்ளளவுமில்லை, உன்னைக் கைவிட்டேன், நீ போ' என்று வாய் திறந்தொன்று சொல்லிவிடட்டும்; அஃது எனக்கு மிகவும் ப்ரியம் என்றாளன்றோ. உன்னைக் கைவிட்டேனென்று சொல்லுகிற வார்த்தையையாவது அவன், முகம் நோக்கிச் சொல்லுவனாகில் அப்போதைய ஸேவையாவது கிடைக்குமே என்றும் கண்ணிலே தென்பட்டானாகில் பிறகு அவனை உபாயங்களால் ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள வழியுண்டாகலாமென்றும் நினைத்துச் சொல்லுகிறபடியிறே இவை. அதுபோல, இவ்விடத்திலும் 'அவன் திருவுள்ளத்தில் அநுக்ரஹமில்லாமல் நிக்ரஹமே கொண்டிருந்தாலும் அதையாகிலும் சிந்தித்துக் கொண்டிரு' என்றது—நல்லபடியாகவோ தீயபடியாகவோ ஏதேனுமொரு விதமாக நம்மைப்பற்றின எண்ணம் அவனது திருவுள்ளத்தே பட்டிருக்குமாகில் அதுவே போதுமானது. நல்ல அபிப்ராயமோ கெட்ட அபிப்ராயமோ உண்டாகும் போது நம்மை ஒரு வ்யக்தியாக நினைத்தன்றோ உண்டாக வேண்டும்; அந்த நினைவுதானே நமக்குப் போதுமானது என்கை. ஆகிடு—ஆகிடுக. காண்—முன்னிலையசை. ... 9

2594. இருநால்வ ரீரைந்தின் மேலொருவர்*எட்டோ
டொருநால்வ ரோரிருவரல்லால்*—திருமாற்கு
யாமார்? வணக்கமார்? ஏபாவம் நன்னெஞ்சே!*
நாமா மிகவுடையோம் நாழ். 10

இரு நால்வர்	அஷ்டவஸுக்களென்ன	திரு மாற்கு	எம்பெருமானைப் பணிவதற்கு
ஈரைந்தின் மேல் ஒருவர்	ஏகாதச ருத்ரர்களென்ன	ஆர்	எவ்வளவு மனிசர்?
எட்டோடு ஒரு நால்வர்	த்வாதசாதித்யர்களென்ன	வணக்கம் ஆர்	நம்முடைய பணிவு தான் எத்தன்மையது!
ஓர் இருவர் அல்லால்	அச்விநீ தேவர்களென்ன ஆகிய முப்பத்துமூவரமரர்கள் தவிர (மற்றவர்களான)	ஏபாவம்	அந்தோ!
		நல் நெஞ்சே	நல்ல மனமே!
		நாமா	நாமோ வென்றால்
யாம்	நாம்	மிக நாழ் உடையோம்	மிகவும் குற்றமுள்ளவர்களாயிருக்கிறோமிறே,

* * *—[இருநால்வர்.] எம்பெருமானைச் சிந்திப்பதற்கும் துதிப்பதற்கும் அர்ஹரல்லாத நாம் நிறக்கேடாக அவனைச் சிந்தித்தல் செய்து 'அவன் நமக்குத் திருமேனியை ஸேவை ஸாதிப்பிக்க வில்லையே!' என்று இப்படி வருத்தப்படுவதிற் காட்டிலும் 'நாம் அயோக்யர்' என்று கை யொழிந்து கிடப்பதே நல்லதன்றோ என்று திருவுள்ளம் பற்றின ஆழ்வார், பழைய அயோக்யதாநு ஸந்தாநமே பண்ணுகிருர் இதில். ஜன்மத்தாலும் ஆசாரத்தாலும் தூயரான முப்பத்து முக் கோடி தேவர்களன்றோ அவனுக்கு அடிமைசெய்ய அர்ஹதையுடையார்; ஒரு குணமுமின்றிக் குற்றமே வடிவமான நாம் அப்பெருமானை வணங்குதற்கு எவ் வளவு?. நாம் என்பதற்கும் நம்முடைய வணக்கமென்பதற்கும் இங்கே என்ன விஷயமிருக்கிறது! என்று தம்முடைய அயோக்யதையைக் கூறி அகலப் பார்க் கிருர். பகவதநுபவம் விலக்ஷணர்க்கே கிடைக்குமத்தனை யல்லதுநம்மைப் போன்ற பாவிகளுக்குக் கிடையாதுகாண் நெஞ்சே!; நீ ஏன் வீணாக நாக்கை நீட்டிக் கிடக்கிருய்? என்கிருர் போலும்.

இதற்கு மற்ருெருபடியாகவும் கருத்துரைக்க இடமுண்டு:—"நின்னை விண் ணோர் தாள் நிலந்தோய்ந்து தொழுவர் நின்மூர்த்தி பல் கூற்றிலொன்று காணலு மாங்கொலென்றே?" என்றபடி எம்பெருமானுடைய வடிவழகில் சிறிதும் ஈடு பாடின்றியே 'எங்களுக்குச் சாவாமைக்கு மருந்து கொடுக்கக் கடலைக்கடை; மா வலியைக் கொல்லு; இரணியனைக் கொல்லு; இராவணனைக் கொல்லு' என்று உடம்பு நோகக் காரியம் செய்யுமாறு நிர்பந்திக்கிற ப்ரயோஜநாந்தர பரர்களான தேவதைகளுக்கு அப்பெருமானுடைய அநுபவம் எளிதாகக் கிடைக்குமே யன்றி ப்ரயோஜநாந்தர மொன்றையும் வேண்டாதே 'உன் வடிவழகின் அநுபவமே எமக்குப் பரம ப்ரயோஜநம் என்றிருக்கிற நமக்குக் கிடைக்குமோ நெஞ்சே!; ப்ரயோஜநாந்தரபரர்கட்குத்தான் காரியம் செய்யக்கடவோமென்று ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிற அப்பெரியவர்க்கு நம்முடைய அநந்ய ப்ரயோஜநத்வம் தோஷ மாகவன்றோ திருவுள்ளத்திற்பட்டும் கிடக்கிறது; இப்படிப்பட்ட தோஷம் நிறைந் துள்ள நமக்கு அவருடைய அநுக்ரஹம் கிடைக்குமா என்ன? கிடைக்காது தான் என்று இன்னுப்பாகச் சொல்லுகிருர் என்றுரைக்கவுமாம். ப்ரயோஜநாந்தரங்களை நச்சினவர்களும் உபாயாந்தரங்களைப் பற்றினவர்களுமான தேவதைகட்குக் காரி யம் செய்கிற எம்பெருமான் அநந்ய ப்ரயோஜநராயும் அநந்யோபாயராயுமுள்ள ஆழ்வார் தமக்குக் கடுகக் காரியஞ் செய்யவில்லை யென்ருல் இப்படிதானே சொல்ல வேண்டும்.

"எண்மர் பதினெருவர் ஈரறுவ ரோரிருவர்" என்று முதல் திருவந்தாதியில் பொய்கையார் அருளிச்செய்த முப்பத்துமூன்று தேவர்களையே இவரும் சப்த பேதத்தாலே அருளிச் செய்கிருர். அவர் அஷ்டவஸுக்களை எண்மர் என்ருர்; இவர் இருநால்வர் என்கிருர்; அவர் ஏகாதச ருத்ரர்களைப் பதினெருவர் என்ருர்; இவர் ஈரைந்தின்மேலொருவர் என்கிருர்; அவர் த்வாதசாதித்யர்களை ஈரறுவர் என்ருர்; இவர் எட்டோடொருநால்வர் என்கிருர்; அச்விநீ தேவர்களை ஓரிருவர் என்றது மாத்திரம் இருவர்க்குமொத்தது. ஆக முப்பத்துமூன்று தேவர்களைச் சொன்னது ஸமஸ்த தேவர்களையும் சொன்னபடியாமென்பர்; ஆண்டாளும் "முப்பத்து மூவரமரர்க்கு முன் சென்று" என்ருளிறே. வேதமும் த்ரயஸ்த்ரிம்சத்வைதேவா என்று பலவிடங் களிலும் ஓதாநின்றது. முப்பத்து மூவரமரர்கள் தாம் எம்பெருமானுக்கு உரியவர் கள்; நாம் ஆர், நம்முடைய வணக்கமென்பது யாது? என்று நைச்யானுஸந்தான மாகவோ வெறுப்பாகவோ அருளிச் செய்தாராயிற்று யாம் ஆர்=பிறப்பு ஒழுக்கம் முதலியவற்ருல் அயோக்யரான நாம் அவனுக்கு எந்த வகுப்பில் சேர்ந்தவர்கள்? ரக்ஷ்யவர்க்கங்களுள் ஒரு வகுப்பிலும் சேர்ந்தவர்களல்லோம் என்றபடி. வணக்கம்

ஆர்=அயோக்யரான நம்முடைய ஆச்ரயணந்தான் அவனுக்கு எங்ஙனே? நாம் ஆச்ரயித்தோமென்பது அவனுக்கொரு பொருளோ?

"பிறையேறு சடையானும் நான்முகனு மிந்திரனும், இறையாக விருந்தேத்த வீற்றிருத்தலிது வியப்பே" என்னும்படியாயுள்ள அவனுக்கு, அறிவொன்றுமில்லாத நம்முடைய வணக்கம் ஒரு வஸ்துவாகவும் இட்டெண்ணத் தக்கதோ வென்றபடி. "வணக்கம் எது" என்னமல் "வணக்கம் ஆர்" என்று அஃறிணைச் சொல்லுக்கு உயர்திணை வினச்சொல் இட்டுச் சொன்னது ஒரு வகைக் கவிமரபு. ஏபாவம்=வடமொழியில் [அஹஹ] [ஹந்த] என்னும் அவ்யயங்கள் போலே தமிழில் இது ஒரு இரக்கக் குறிப்பிடைச் சொல்போலும். "இருநிலத்தோர் பழிபடைத்தேன் ஏபாவமே" என்ற திருநெடுந்தாண்டகமுங் காண்க.

திருமாற்கு யாமார் வணக்கமார் ஏபாவம்!=புருஷோத்தமனுகிய அவன் முன்னே நாம் ஒரு பதார்த்தமாக நிற்பதும், அவனை நாம் வணங்கினோ மென்பதும் எவ்வளவு ஹேயமான விஷயம்!—என்று தம்மில் தாம் கர்ஹித்துக் கொள்ளுகிறபடி. ஏன் இப்படி சொல்லுகிறீர்? என்ன; நாமா மிகவுடையோம் நாழ் என்கிறார். நாமா என்றது—நாமோ வென்றால் என்றபடி. நாம் அளவற்ற குற்றமுடையவர்களன்றோ; ஆனது பற்றி "நாமார் வணக்கமார்" என்றோம் என்கை. இப்பாட்டில் அயோக்யாநுஸந்தானம் பண்ணுகிறாராகக் கொள்ளும் பக்ஷத்தில் "நாமாமிகவுடையோம் நாழ்" என்றது அபராத ஸஹஸ்ர பாஜநம்" என்னுமாபோலே ஸ்வரூபமாகச் சொல்லிக் கொண்டதாம். அங்ஙனன்றி, ப்ரயோஜநாந்தர பரர்கட்கு அவர் காரியம் செய்வரேயன்றி அநந்ய ப்ரயோஜநரான நமக்குக் காரியம் செய்வரோ? என்று வெறுப்பாகச் சொல்லுகிறாரென்று கொள்ளும் பக்ஷத்தில், இங்கு நாமா மிகவுடையோம் நாழ் என்றது—ப்ரயோஜநாந்தர பரர்களுக்கே காரியஞ் செய்கிறவரான அவருடைய திருவுள்ளத்தாலே குற்றமாகத் தீர்மானிக்கப்பட்ட அநந்யப்ரயோஜநத்வத்தை நாம் உடையோமன்றோ? என்றவாறு. நாழ்—குற்றம். .. 10

2595. நாழா லமர்முயன்ற வல்லரக்க னின்னுயிரை*
வாழா வகைவலிதல் நின்வலியே*—ஆழாத
பாருநீ வானுநீ காலுநீ தீயுநீ*
நீரும் நீயாய்நின்ற நீ. 11

ஆழாத பாரும் நீ	(நீரில்) அழுந்தாமலிருக்கிற பூமியும் நீயிட்ட வழக்கு;	நாழால் அமர் முயன்ற	அஹங்காரத்தினால் யுத்தம் செய்வதில் கைவைத்த
நீரும் நீ	ஜலதத்வமும் நீ;	வல் அரக்கன்	கொடிய இராவணனுடைய
தீயும் நீ	தேஜஸ்தத்வமும் நீ;	இன் உயிரை	இனிமையான பிராணனை
காலும் நீ	வாயுதத்வமும் நீ;	வாழா வகை	வாழ்ந்திருக்க ஒட்டாமல்
வானும் நீ	ஆகாசமும் நீ;	வலிதல்	கவர்ந்து கொண்டது
ஆய் நின்ற நீ	இப்படி பஞ்ச பூதங்களையும் வடிவாகவுடைய நீ,—	நின் வலியே	உனக்கு ஒரு சூரத்தனமோ? (அல்ல).

* * *—[நாழாலமர் முயன்ற.] அநந்யப்ரயோஜநரான நம்மை உபேக்ஷிக்கின்ற எம்பெருமானுடைய சிந்தனை இனி நமக்கு ஏதுக்காக? அவனைக் குறித்துப் பாசுரஞ் சொல்வது தான் இனி நமக்கு ஏதுக்கு? இனி நாம் வாயை மூடிக்கொண்டு கிடப்போம்—என்றிருக்கப் பார்த்தார் ஆழ்வார்; எம்பெருமான் அவரை அப்படியே இருக்கவொட்டவில்லை; பாசுரம் பேசவே தூண்டிவிட்டான்; இதென்ன அற்புதம்! நாம் வாயை மூடிக் கிடப்போமென்று பார்த்தாலும் பரவசமாகவே வாய் பேசத் தொடங்குகின்றதே! நமது முயற்சி இல்லாதிருக்கச் செய்தேயும் வாய்பேச எழும்புகிறதென்றால் இது யாருடைய செயலாக இருக்கவேணுமென்று ஆராய்ந்தார்;

தேந விநா த்ருணாக்ரமபி ந சலதி=[அவ்வெம்பெருமானை யொழியத் துரும்பும் எழுந்தாடாது]" என்றிருப்பதனாலே, அவ்வெம்பெருமானே இது செய்விக்கிறனாகவேண்டும்; அவன்றான் மறைந்து உறைந்திருந்து நம் வாயைக் கிளப்புகிறான் போலும் என்று நிச்சயித்து இனி நாம் இவன் விஷயமாக வாய்திறப்பதில்லை' யென்று உறுதியாக நாம் கொண்டிருந்த எண்ணத்தைப்போக்கி வாயைக் கிளப்புகின்ற இவனுடைய ஸாமர்த்தியத்தை நாம் என் சொல்வோம்! என வியப்புற்று, பண்டு இராவணனென்பானோரரக்கன் 'நான் யார்க்கும் தலை சாய்ப்பதில்லை; நிமிர்ந்த தலையைக் குனியவேமாட்டேன்' என்று கொண்டு இறுமாப்புடனிருந்த நிலைமையைத் தொலைத்து அவனைப் பங்கப்படுத்தினான் இப்பெருமான் என்று எல்லாரும் பெரிய புகழ்ச்சியாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, அந்தோ! இஃதொரு புகழ்ச்சியோ இவனுக்கு? இராவணனது உறுதியைக் காட்டிலும் வலிதான எனது உறுதியைச் சிதைத்து என்னை வாய் திறக்கப் பண்ணுகின்ற இப்பெருமானுக்கு அது ஒரு அருந்தொழிலோ? என்று ஈடுபட்டு எம்பெருமானையே நோக்கி இதனைப் பேசுகிறார்.

(திருமாலே!), "ஆழாத பாரும் நீரும் தீயும் காலும் வானும் நீயாய் நின்ற நீ, நாழாலமர் முயன்ற வல்லரக்கனின்னுயிரை வாழா வகை வலிதல் நின்வலியே?" என்று அந்வயம். மண் நீர் எரி காற்று ஆகாயம் என்கிற பஞ்ச பூதமுமாய் நிற்கிற நீ என்றதற்குக் கருத்து யாதெனில்; "விருத்தமான விபூதிகளைச் சேர விட்டு அநுபவிக்கிறவுனக்கு என்னைச் சேரவிடுகை ஒரு பணியோ?; விபூதி ஸாமாந்யங்களுக்கு நிர்வாஹகனாய் அவற்றைச் சொல்லுகிற சப்தம் உன்னளவும் வரும்படி நிற்கிறவுனக்கு, உனக்கே அஸாதாரணமாய் உன்னையல்லது செல்லாதவர்களைச் சேரவிடுகை பணியோ வென்றுமாம்" என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி. மண்ணானது நீரில் கரைந்துவிடும்; நீரானது தீயை அணைத்துவிடும்; இப்படி பரஸ்பரம் விருத்த ஸ்வபாவங்களான பஞ்சபூதங்களை ஒன்றுசேர சரீரமாகக்கொண்டு "யஸ்ய ப்ருதிவீ சரீரம், யஸ்ய ஆபச் சரீரம்" என்று வேதங்கள் ஓதும்படி நிற்கிறவுனக்கு அருமையென்று சொல்லக்கூடிய காரியம் ஒன்றுமேயில்லை என்றவாறு. ஆனாலும், நீ அருமையான காரியங்களைச் செய்கிறவன் என்று பாராட்டிச் சொல்லவேண்டுமானால் என்னுடைய உறுதியைப் போக்கடித்து என்னை வாய்திறக்கப்பண்ணின இக்காரியமொன்றே அருமையாகப் பாராட்டிச் சொல்லவுரியது; என் உறுதியைக் காட்டிலும் லகுவான உறுதியையுடையரான இராவணாதிகளைப் பங்கப்படுத்தினையென்பதை அருந்தொழிலாகப் பலரும் பாராட்டிச் சொல்லுகிறார்களே, அது பயனற்ற சொல் என்கிறாராயிற்று.

நாழாலமர்முயன்ற என்றது—வணங்கா முடித்தனமாகிற அஹங்காரதோஷத்தினால் உன்னை எதிரிட்டுச் சண்டை செய்வதாக ஒருப்பட்டு வந்த என்றபடி. அப்படிப்பட்ட வல்லரக்கனுண்டு—பெருமிடுக்கனான இராவணன், அவனுடைய தித்திப்பான பிராணனை அந்த சரீரத்தில் வாழவொட்டாமல் கவர்ந்து கொண்டது உனக்கு மிடுக்கோ? வலியே என்ற ஏகாரம் வலியல்ல என்பதைக் காட்டும். என்னுடைய உறுதியைப் போக்கினது வலியேயன்றி அவனது உயிரைப் போக்கினது வலியல்லகாண் என்கை. 11

2596. நீயன்றே ஆழ்துயரில் வீழ்விப்பான் நின்றுமுன்றாய் ?*
போயொன்று சொல்லியென் ? போநெஞ்சே ?*—நீயென்றும்
காழ்த்துபதேசந் தரினும் கைக்கொள்ளாய்*கண்ணன்தாள்
வாழ்த்துவதே கண்டாய் வழக்கு. 12

நெஞ்சே	ஓ மனமே !,	போ	அது கிடக்கட்டும்
ஆழ் துயரில்	அகாதமான துக்க ஸாகரத்தில்	உபதேசம் தரினும்	('எம்பெருமானுக்கு நம்பக்கல் உள்ளூற வாத்ஸல்யமுண்டு' என்று உலக்கு நான்) உபதேசித்தாலும்
வீழ்விப்பான்	என்னைக்கொண்டு போய்த் தள்ளுவதாக	நீ காழ்த்து என்றும் கைக்கொள்ளாய்	நீ என்மேற் கோபங்கொண்டு என்றைக்கும் (அவ்வுபதேசத்தைக்) குறிக்கொள்கிறுயில்லை ;
நின்று உழன்றுய் நீ அன்றே	இடைவிடாதே நின்று யத்னம் பண்ணினது நீயன்றே;		

[என்னை வருத்தத்திற்கு ஆளாக்கப் பார்த்தது நீயே யன்றே]

('உம்மை ஆழ்துயரில் வீழ்வித்தது நானன்று; நீரே நும்மை வீழ்வித்துக் கொள்ளுகிறீர்' என்று நெஞ்சு பதில் சொல்ல,

(இப்போது முடிவாகச் சொல்லுகிறேன கேள் ;)

போய் ஒன்று சொல்லி என்	மேன்மேலும் நீ யொன்று நாலென்றாக வாத ப்ரதிவாதங்கள் சொல்லுவதில் என்ன பயன் ?
கண்ணன் தாள்	எம பெருமானது திருவடிகளை
வாழ்த்துவதே	வாழ்த்துவதுதான
வழக்கு	நியாயம

(கண்டாய்—முனனிலையசை.)

* * *—[நீயன்றேயாழ்துயரில்.] கீழ் பத்காம் பாட்டில் "திருமாற்கு யாமார் வணக்கமார் ஏபாவம் நன்னெஞ்சே !, நாமா மிகவுடையோம் நாழ்" என்று சொல்லி எம்பெருமானிடத்தில் நின்றும் பின்வாங்கப் பார்த்ததை நினைத்துக் கொண்டு 'அப்படியும் நமக்கொரு எண்ணம் தோற்றிற்றே! என்ன கஷ்டகாலம !; "ஏகஸ்மின்னப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ந்ருணாம் [எம்பெருமானுடைய சிந்தனையில்லாமல ஒரு க்ஷண காலம் கழிந்து போனாலும், ஸர்வஸ்வத்தையும் கள்வர் கவர்ந்தால் எப்படி முட்டிக்கொண்டழுவர்களோ அப்படி 'பழுதே பல பகலும் போயின' என்றும் 'ஊமனர் கண்ட கனவிலும் பழுதாயொழிந்தன கழிந்தவந்நாள்கள்' என்றுங் கதறி யழவேண்டும்]" என்று சொல்லிக்கிடக்கிறதே ; 'எம்பெருமானைச் சிந்தியாமலே யிருந்து விடுவோம்' என்கிற ஒரு கெட்ட எண்ணம் நமக்கு உண்டாயிற்றே! அந்த எண்ணமே நமக்கு நிலைத்திருக்குமாகில் துக்க ஸாகரத்திலே யன்றே நாம் மூழ்கிக்கிடக்க வேண்டியதாகும் ; எம்பெருமான் தானே அருள் செய்து அந்த எண்ணத்தை ஒழிக்கவே இப்போது தேறினோம் ; அவன் அருள் செய்யாவிடில் ஆழ்துயரில் அழுந்தியே போயிருப்போமே! என்றிப்படியெல்லாம் பலவாறாக வருத்தமுற்று 'இந்த கெட்ட எண்ணம் நமக்கு உண்டானதற்கு எது காரணம்?' என்று பார்த்தார்; மந ஏவ மநுஷ்யாணும் காரணம் பந்த மோக்ஷயோ: என்று எல்லாவற்றுக்கும் நெஞ்சுதான் காரணமென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே மனது இப்படிப்பட்ட கெட்ட எண்ணம் தோன்றினது நெஞ்சின் குற்றமேயாம் என்று நிச்சயித்து, அந்த நெஞ்சோடே வாது செய்யத்தொடங்கினர் - நீயன்றே ஆழ் துயரில் வீழ்விப்பான் நின்றுழன்றாய் என்று. அதாவது—"திருமாற்கு யாமார் வணக்கமார் ஏபாவம்!" என்று சொல்லி அகன்று துன்பக்கடலில் நான் விழுந்தேனும்படி என்னைக் கொலைசெய்யப்பார்த்த பாவி நீயன்றே நெஞ்சே ! என்றார்.

இதைக் கேட்ட நெஞ்சானது ஆழ்வாரை நோக்கி, "ஓய் என்ன சொன்னீர்? நானு உம்மை ஆழ்துயரில் வீழ்விப்பான் நின்றுழன்றது ; ஸாஹஸமாக நீர் இப்படி சொல்லிவிடுவது யுக்தமன்று ; 'திருமாற்கு யாமார் வணக்கமார்' என்று சொன்ன பாசுரத்தை மறுபடியம் ஆலோசித்துப் பார்த்து வார்த்தை சொல்லும்" என்று சொல்லிற்று

அது கேட்ட ஆழ்வார் 'நெஞ்சே' ஏது நீ ப்ரமாதமாகக் கத்துகிறய் ; "யத் மநஸா த்யாயதி, தத் வாசா வததி" என்றும், "மந: பூர்வோ வாகுத்தர:"

என்றும் 'நெஞ்சு எதை நினைக்கிறதோ அதை வாய் சொல்லக்கடவது' என்று தானே சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது; அனுபவமும் அப்படிதானே யுள்ளது; ஆனபின்பு நீ யில்லாமல் என் வாய்தானே "திருமாற்கு யாமார் வணக்க மார்" என்று சொல்லிவிட்டதோ? என்றார்.

இதைக்கேட்ட நெஞ்சானது, 'ஆழ்வீர்! நீர் சொன்ன பாசுரத்தை மறு படியும் சொல்லிப்பாரும்; "திருமாற்கு யாமார் வணக்கமார் ஏபாவம் நன்நெஞ்சே" என்றன்றே சொல்லியிருக்கிறீர்; நன்நெஞ்சே! என்று என்னை அழைத்து நீர் எனக்குச் சொல்லியிருக்கிறீரே யொழிய உமக்கு நான் யாதொன்றும் சொல்ல வில்லையே; நீராகவே என்னையழைத்து அயோக்யதாநுஸந்தாநம் பண்ணிவிட்டு, இப்போது "நீயன்றே ஆழ்துயரில் வீழ்விப்பான் நின்றுழன்றாய்" என்று என் தலைமேல் பழி சுமத்துவது என்ன தருமம்!' என்று சொல்லிற்று.

அது கேட்ட ஆழ்வார், 'நன்நெஞ்சே என்று உன்னை நோக்கி நான் சொன்னேனென்பது உண்மையே; அதை நான் இல்லைசெய்ய வரவில்லை; நான் 'யாமார் வணக்கமார்' என்று தப்பாகச் சொன்னால் அதை நீ ஏன் தடுக்கக் கூடாது? அதற்கு நீ இசைந்தாயன்றோ; ஆகையாலே "நீயன்றே ஆழ்துயரில் வீழ்விப்பான் நின்றுழன்றாய்" என்று நான் சொல்லுகிறேன்' என்றார்.

அது கேட்ட நெஞ்சானது, ஆழ்வீர்! பூர்வோத்தர விருத்தமாக நீர் இப்படி வார்த்தை சொல்லுவது உசிதமல்ல; முதலிலேயே நீர் என்னையழைத்து "முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே! இயற்றுவாய் எம்மொடு நீ கூடி" என்று உம் மோடே கூடிக் காரியம் செய்யும்படி எனக்குக் கட்டளையிட்டீர்; 'நான் சொன்னால் அதை நீ தடுப்பதற்கென்ன?' என்று இப்போது சொல்லுகிறீர்; நான் போகிற வழிக்கே நீ தலையாட்டவேண்டியதென்று எனக்கு நீர் முன்னடியே நியமித்து விட்டு இப்போது அதற்கு விருத்தமாகச் சொல்லுவது யுக்தமன்று' என்றது.

அது கேட்ட ஆழ்வார், 'நெஞ்சே! நான் எப்போதும் விருத்தமாக ஒன்றும் சொல்ல மாட்டேன்; "இயற்றுவாய் எம்மொடு நீ கூடி" என்று நான் சொன்னது உண்மையே; என்ன காரியத்திற்கு உனை நான் உடன்படச் சொல்லியிருக் கிறேன் தெரியுமோ? "நயப்புடையநாவீன் தொடைகிளவியுள் பொதிவோம் நற் பூவைப் பூவீன்ற வண்ணன் புகழ்" என்றுதானே நான் சொன்னது; பகவத் குணுநுபவத்திற்கு உசாத்துணையா யிருக்கும்படி உனக்கு நியமித்தேனே யொழிய 'திருமாற்கு யாமார் வணக்கமார்" என்கிற அயோக்யதாநுஸந்தாநத்திற்கோ உன்னை நான் துணை கூட்டினது" என்றார்; இதைக் கேட்ட நெஞ்சானது, அதற்கும் ஏதோ மறுமொழி கூறுவதாகத் தொடங்க, அவ்வளவிலே ஆழ்வார் 'இந்த வாத ப்ரதிவாதங்களுக்கு முடிவு எங்கே? இந்த வீணை கக்ஷி ப்ரதிகக்ஷி வார்த்தைகளால் என்ன பயன்?' என்று நினைத்து நெஞ்சை நோக்கி, 'பேரய் ஒன்று சொல்லி என்போ நெஞ்சே!—போதும் போதும்; நான் ஒன்றுசொல்ல நீ ஒன்றுசொல்ல இப்படி மேன்மேலும் வாத ப்ரதிவாதங்களை வளர்த்துக் கொண்டு போவதில் என்ன பலன்?' இந்த வீண் பேச்சுக்கள் ஒழியட்டும் என்கிறார்.

அதற்குமேல் நெஞ்சானது ஆழ்வாரை அடிபணிந்து விநயமுடன் நின்று 'ஸ்வாமிந்! அடியேன்மீது தேவரீர்க்குச் சீற்றம் வேண்டா; அடியேன் தேவரீர்க்கு விதேயனை சேஷபூதன்; ஆனபின்பு அடியேன் தேவரீர்க்கு உகப்பாக எப்படி நடந்து கொள்ள வேணுமோ அப்படி உபதேசித்தருளீர்; அதன்படியே நடந்து கொள்கிறேன்' என்ன; அதற்கு ஆழ்வார், "உபதேசம் தரினும் நீ என்றும் காழ்த்துக் கைக்கொள்ளாய்=நெஞ்சே! என் உபதேசத்தை நீ லக்ஷியம் பண்ணுகிறாயோ? இது வரை உனக்கு எத்தனையோ உபதேசங்கள் செய்தாயிற்று. ஒன்றையும் நீ கைக்

கொண்டாயில்லை; 'நீர் என்ன எனக்கு உபதேசிக்கிறது? என்று சீறி உதறித் தள்ளிவிடுகிறாய்" என்று சொல்ல; அதற்கு நெஞ்சானது 'ஸ்வாமிந்! இதுவரை அடியேன் ஒருநாளும் இப்படி அபசாரப்பட்டதில்லை; பட்டிருந்தாலும் க்ஷமிக்க வேணும்; இப்போது அடியேனுக்குக் கர்த்தவ்யத்தை ஸ்பஷ்டமாக உபதேசித் தருளீர்' என்று வேண்ட, அதற்கு உபதேசிக்கிறார்—கண்ணன்தாள் வாழ்த்துவதே கண் டாய் வழக்கு—என்று. நாம் ஒருநாளும் அயோக்யதாநுஸந்தாநம் பண்ணி அகலப் பார்க்கலாகாது; எம்பெருமான் நம்மையே தேடித்திரிவானாயிருக்க, நாம் விமுக ராய்ப் பின்வாங்கலாமோ? அவன் திருவடிகளை வாழ்த்துவதே நமக்கு ப்ராப்தம் காண் என்றாராயிற்று.

காழ்த்து—காழ்த்தலாவது கோபித்தல். உறைப்பாகச் சொல்லுதலுக்கும் பேருண்டு; அப்போது, காழ்த்து உபதேசம் தரினும்—உனக்கு நான் த்ருடமாக உப தேசித்தாலும் என்றவாறு. கைக்கொள்ளாய்—முன்னிலை யெதிர்மறை வினைமுற்று. 12

2597. வழக்கொடு மாறுகொ ளன்றடியார் வேண்ட*
இழக்கவுங் காண்டு மிறைவ!—இழப்புண்டே?*
எம்மாட் கொண்டாகிலும் யான்வேண்ட*என்கண்கள்
தம்மாற் காட்டுன் மேனிச்சாய். 13

வழக்கொடு மாறுகொள் அன்று	(இப்போது அடியேன் விஜ்ஞாபிக்கப் போகிற ஒரு விஷயம்) நியாயத்தோடு மாறுபட்டதன்று;	இழப்பு உண்டே	(என் வேண்டுகோளை நிறை வேற்றுதற்காக) நீ நஷ்டப் படவேண்டியது ஏதேனு முண்டோ? (ஒன்றுமில்லை).
	(அஃது என்னவெனில்)	யான் வேண்ட	என்னுடைய வேண்டு கோளுக்காக
அடியார் வேண்ட	(மேன்மக்களை நோக்கிக்) கீழ் மக்கள் ஒன்று பிரார்த்தித் தார்களாகில்	எம் ஆள் கொண்டு ஆகிலும்	என்னை அடிமைப்படுத்திக் கொண்டாவது
இழக்கவும் காண்டும்	(மேன்மக்கள்) நஷ்டப்பட்டா கிலும் காரியம் செய்வதை (உலகில் காண்கிறோம்;	என் கண்கள் தம்மால்	எனது கண்களுக்கு
		உன் மேனி சாய்	உனது திருமேனியின் ஒளியை
இறைவ	ஸ்வாமீ!	காட்டு	காட்டியருளவேணும்.

***—கீழ்ப்பாட்டில் "கண்ணன் தாள் வாழ்த்துவதே கண்டாய் வழக்கு" என்று திருவுள்ளத்திற்கு உபதேசித்தபடியே எம்பெருமானை வாழ்த்தத் தொடங் கினார்; வாழ்த்துவதென்றால் விஷயத்தைக் கண்ணாலே நன்கு கண்டு வாழ்த்த வேணுமே; அப்படிக்கு அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹ ஸேவை கிடைக்க வில்லை ஆழ்வார்க்கு; அது கிடைக்காமல் என்னவென்று வாழ்த்துகிறதென்று தடுமாறி, எம்பெருமானை நோக்கி 'இறைவனே! உன் வடிவழகை அடியேனுடைய கண்களுக்குக் காட்டியருளவேணும்' என்று பிரார்த்திக்கின்றார் இதில்.

வழக்கொடுமாறுகொளன்று—அடியேன் பிரார்த்திக்கிற விஷயம் வழக்கோடு மாறு கொண்டதன்று; வழக்காவது நியாயம்; நியாயத்தோடு மாறுபட்டதன்று; நியா யத்திற்கு ஒவ்வாததை அடியேன் விண்ணப்பம் செய்கின்றிலேன்; நியாய மானதையே சொல்ல வருகின்றேனென்றபடி.

வார்த்தை சொல்லத் தொடங்கும்போதே இன்னவிஷயமென்று சொல்லா மலே 'அநியாயமாக நான் ஒன்றும் சொல்ல வரவில்லை' என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான், 'ஆழ்வீர்! நீர் சொல்லுவது நியாயமோ அநியாயமோ விஷயத்தைக்

கேட்டன்றே நான் தெரிந்து கொள்ளவேண்டும் ; சொல்ல நினைத்த விஷயத்தைச் சொல்லிக்காணீர்' என்ன ; அடியார் வேண்ட இழக்கவுங் காண்டும் என்கிறார். அதாவது —சேஷபூதரா யுள்ளவர்கள் சேஷியை நோக்கி ஏதாவது அபேக்ஷித்தார்களாகில் சேஷியானவன் தான் கஷ்டப்பட்டாகிலும் சேஷபூதர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றக் காணுநின்றோம் உலகத்தில்—என்றபடி. [அடியார் வேண்ட இழக்கவுங் காண்டும்] 'நம்முடைய அடியார்களன்றோ நம்மை வேண்டுகிறார்கள் ; இவர்களுக்கு நாம் உயிரை விட்டாகிலும் பரிந்து காரியம் செய்ய வேண்டாவோ' என்று நெஞ்சு கனிந்து, பொருளையோ உடலையோ உயிரையோ எதையேனும் இழப்பதற்கும் இசைந்து தங்கள் பேருகக் காரியஞ்செய்யக் காண்கிறோமிறே என்கை.

இப்படி ஆழ்வார் சொன்னதைக் கேட்ட எம்பெருமான், 'ஆழ்வீர்! நன்ருகச் சொன்னீர்; உமக்காக என்னை உயிரிழக்கச் சொல்லுகிறீரோ இப்போது; வார்த்தை அழகா யிருக்கிறது!' என்ருன். எம்பெருமான் இப்படி திருவுள்ளங் கன்றிநிற்போல் அருளிச் செய்வதைக் கேட்ட ஆழ்வார் அநுதபித்து இறைவ! இழப்புண்டே? என்கிறார். அதாவது உலகில் நடக்கிறபடியை ஏதோ நான் எடுத்துக் காட்டினேனே யொழிய, தேவரீருக்கு இழவு உண்டாகவேணுமென்று அடியேன் சொன்னேன் ; தேவரீர் எதையும் இழக்க வேண்டா—என்கை.

இதுகேட்ட எம்பெருமான், "ஆழ்வீர்! உலகத்தில் தலைவராயுள்ளவர்கள் அடியார் விஷயத்தில் உயிர் முதலியவற்றை இழந்தாகிலும் காரியம் செய்கிறார்க ளென்று எடுத்துக் காட்டின உம்முடைய கருத்து எனக்குத் தெரியாமையில்லை ; நீர் மறைப்பதில் என்ன பயன்? உம்முடைய எண்ணப்படி நான் எதைவேணு மானாலும் இழந்து காரியம் செய்யத் தடையில்லை ; "அடியார் வேண்ட இழக்கவுங் காண்டும்" என்று நீர் சொல்லியிருக்கிறீர் ; நீர் மெய்யே அடியாராகிலன்றோ நான் காரியம் செய்வேன் ; நீர் அடியவர்தானே?" என்று கேட்டான்.

அதற்கு ஆழ்வார் எம்மாட்கொண்டாகிலும் என்கிறார். நான் அடியவனே அல் லேனே வென்று உனக்கு ஸந்தேஹமிருக்குமானல் நீயே என்னை அடியவனுக்கிக் கொண்டாவது காரியம் செய்யவேணும் என்கை. எதைக்கொண்டு உம்மை நான் அடியவராக்கிக் கொள்வதென்று எம்பெருமான் கேட்க ; அதற்கு ஆழ்வார் யான் வேண்ட என்கிறார். "ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்றுதானே சொல்லப் பட்டிருக்கிறது ; ரக்ஷ்யனுடைய அபேக்ஷையை மாத்திரமன்றோ ரக்ஷகனை நீ எதிர்பார்த்திருப்பது ; நான் இப்போது அபேக்ஷிக்கிறேனன்றோ ; இவ்வளவையே கொண்டு காரியம் செய்யலாமே. என் வாயால் உன்னை இறைவ! என்று சொன்னேனே ; என்னுடைய அடிமைக்கு இசைந்துதானே உன்னை இறைவ னென்றேன்—என்றார். அதுகேட்ட எம்பெருமான் இந்த விபூதியில் இவ்வளவு வார்த்தை சொல்லுவார் ஆர்?' என்று ஆச்சரியப்பட்டுத் திருவுள்ளமுவந்து 'ஆழ் வீர்! உமக்கு என்னால் ஆகவேண்டிய காரியம் என்ன? சொல்லும்' என்ன ; என் கண்கள் தம்மால் காட்டு உன்மேனிச்சாய் என்கிறார். உனது திருமேனியின் சாயலை என் கண்களுக்குக் காட்டவேணுமென்னுமிவ்வளவே நான்வேண்டுவதுஎன்றுராயிற்று.

கண்கள் தம்மால்—உருபுமயக்கம் ; கண்கள் தமக்கு என்க. அன்றி, மூன்றும் வேற்றுமைப் பொருளே கொண்டு, உன் மேனிச்சாயை என் கண்களால் நான் காணும்படி செய் என்றுரைக்கவுமாம். சாய்=[சாயா] என்ற வடசொல் சாயை எனத் திரிந்து சாய் எனத் சிதைந்தது.

இப்பாட்டுக்குப் பெரியவாச்சான் பிள்ளை அருளிய வியாக்கியானத்தில் சிறிது வேறு வகையான பொருள் கொள்ளப்பட்டிருப்பதுபோல் தெரிகிறது. அப்பொருளை வல்லார்வாய்க் கேட்டுணர்க. 13

2598. சாயால் கரியானை உள்ளறியாராய் நெஞ்சே!*
பேயார்முலை கொடுத்தார் பேயராய்*—நீ யார் போய்த்
தேம்பூண் சுவைத்து ஊனறிந்தறிந்தும்*தீவினையாம்
பாம்பார்வாய்க் கைநீட்டல் பார்த்தி. 14

நெஞ்சே — ஓ மனமே!
பேயார் — பூதனையானவள்,
சாயால் கரியானை — நிறத்தால் கரியனான கண்ணபிரானை
உள் அறியார் ஆய் — உள்ளே புகுந்து அநுபவிக்க அறியாதவளாய்
(அப்பெருமானைக் கொன்றுவிட நினைத்து)
பேயர் ஆய் — அறிவு கெட்டவளாய்
முலை கொடுத்தார் — (விஷம் தடவின) முலையை (உண்ணக்) கொடுத்தாள்;
நீ ஆர் — அவளுக்கு நீ உறவு முறையில் என்ன ஆகவேண்டும்?
(இப்படி கேட்பது எதுக்காக? என்கிறாயோ? சொல்லுகிறேன், கேள்;)
தேம்பு ஊண் சுவைத்து — ஆத்மா கெட்டுப் போம்படியான சப்தாதி விஷய போகங்களை நீ அநுபவித்து
ஊன் அறிந்து அறிந்தும் — (அதனால்) ஊனமடைந்திருக்கிறாயென்பதை நன்றாக நீ அறிந்திருந்தும்
போய் — நம்முடைய தாழ்வுக்குத் (தகாததான சிறந்த பகவத் விஷயத்தை அநுபவிப்பதாகப்) போய்
தீவினை ஆம் பாம்பார் வாய் கை நீட்டல் பார்த்தி — அநர்த்தத்தை விளைக்கவல்ல பாம்பின் வாயிலே கை நீட்டுவாரைப் போலே பகவதநுபவம் பண்ணி முடியப் பார்க்கிறாயே.

***—கீழ்ப்பாட்டில் "காட்டு உன்மேனிச் சாய்" என்று வடிவழகைக் காட்டுமாறு பிரார்த்தித்தார்; அப்படியே இவர்க்கு வடிவழகைச் சிறிது காட்டுவோமென்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றினான்; அஃதறிந்த ஆழ்வார் 'அயோக்யனாகிய நான் பரம்பொருளை அநுபவிக்கப் பார்ப்பது தகுமோ?' என்று பழைய படியே நைச்சியம் சிந்தித்து 'நெஞ்சே!, பகவத் விஷயத்தை நீ அநுபவிக்கப் பார்ப்பது அதனைக் கெடுக்கிறபடியன்றோ; பண்டு பூதனை யென்பவள் அவ்வெம்பெருமானைக் கிட்டி அவனைக் கெடுக்கப் பார்த்ததை ஒக்குமன்றோ உனது நினைவும்; அந்தப் பூதனையோடு உனக்கும் உறவுமுறை உண்டுபோலும்' என்கிறார்.

பேயார் சாயால்கரியானை உள்ளறியாராய் பேயராய் முலை கொடுத்தார்=பேய்ச்சி முலை கொடுத்த வரலாறு ஐந்தாம் பாட்டினுரையிற் காணத்தக்கது. "பேய் முலை கொடுத்தது" என்றாவது, "பேய்ச்சி முலை கொடுத்தாள்" என்றாவது சொல்ல வேண்டியிருக்க, பேயார் என்றும் கொடுத்தார் என்றும் பெருமை தோற்றக் கூறியது என்? எனில்; "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பால்திணை இழுக்கினு மியல்பே" என்பது நன்னூற் சூத்திரம். ஆழ்வார்க்கு அப்பேய்ச்சியினிடத்துள்ள கோபத்தினாலும் அவளுடைய இழிவை விளக்கவேண்டியும் பேயார் என்றாரென்க; பெருமைப் படுத்திக் கூறினாரல்லர்.

சாயால் கரியானை என்றது—கரியசாயலையுடையனான கண்ணபிரானை என்றபடி. சாய்—(சாயா) என்ற வட சொற் சிதைவு; நிறம் எனப்பொருள்படுமிங்கு. உள் அறியாராய்=இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறலாம்; நிறமழகிய பெருமானை நாம் கிட்டி நல்ல எண்ணத்துடன் பக்தியைச் செலுத்தி உள்ளூற அநுபவிக்கலாமென்று ஆசைப்படாதவளாய் என்னுதல்; (அன்றி,) உள் அறியாராய்= உண்மையைத் தெரிந்து கொள்ளாதவளாய்; 'இவன் ஸாக்ஷாத் பரமபுருஷன்; இவனைத் தொலைக்க நம்மாலாகாது; நாம் தொலைந்திடுவோமேயன்றி இவனைத் தொலைக்க நாமார்?' என்று உண்மை யுணராதவளாய் என்னுதல்.

பேயராய் முலைகொடுத்தார்=விவேகமற்றவளாய் முலைகொடுக்கிற வியாஜத்தாலே அப்பெருமானை அழிக்கப் பார்த்தாள் என்கை. "உள்ளறியாராய்" என்ற

வளவே போதுமாயிருக்க, மீண்டும் "பேயராய்" என்றது அவளுடைய ஞான ஹீனத் தன்மையை நன்கு விளக்குதற்காகவாம்.

இங்ஙனே பூதனை செய்த செயலைச்சொன்னவுடனே "நீ யார்" என்கையாலே 'அந்தப் பூதனைக்கு நீ என்ன ஆகவேண்டும்? அவளுக்கு நீ முன்னே பிறந்தாயோ? பின்னே பிறந்தாயோ?' என்று கேட்பதாகப் பொருள்படுகின்றது.

நெஞ்சை நோக்கி நீ யார்? என்றுகேட்ட ஆழ்வாரைப் பார்த்து அந்த நெஞ்சானது, "ஆழ்வீர்! படுபாவியான பூதனை செய்தாற் போலே நான் என்ன கொடுந்தொழில் செய்து விட்டேன்? எனக்கு அவளை ஒப்புக்கூறவேண்டிய காரணம் யாது? சொல்வீர்" என்று கேட்க; அதற்கு உத்தரம் அருளிச் செய்கிருர் "தேம்பூண் சுவைத்து ஊனறிந்தறிந்தும் தீவினையாம் பாம்பார்வாய் கைநீட்டல் பார்த்தி" என்று. ஊண் என்று இவ்விடத்தில், விஷயாந்தரங்களைச் சொல்லுகிறது. உண்ணப்படுவது ஊண்; சப்தாதி விஷயங்கள் செவி வாய் கண் முதலிய இந்திரியங்களினல் உண்ணப்படுதல் [அநுபவிக்கப்படுதல்] பற்றி அவை ஊணெனப்படும். தேம்புதலாவது நாசமடைதல். தேம்பூண் என்றது—ஆத்மா நசிக்கும்படியான விஷயாந்தரங்கள் என்றபடியாயிற்று. பகவத் விஷயத்தை அநுபவித்தலே ஆத்மாஸத்தை பெறுவதற்கு ஹேது வென்றும், மற்ற விஷயங்களை அநுபவித்தல் ஆத்மா நாசமடைவதற்கு ஹேதுவென்றும் உணர்க. இப்படிப்பட்ட விஷயங்களைச் சுவைக்கையாவது இனிதாக அநுபவித்தல். அப்படி அநுபவிப்பதனலே உண்டாவது ஊன்; ஊநம் என்ற வடசொல் ஊனென்று கிடக்கிறது; குறைவு என்று பொருள்; நெடுநாளாக விஷயாந்தரங்களை அநுபவித்து வருவதனலே நீ மிகவும் குறைவு அடைந்துவிட்டாய்; (அதாவது) அயோக்யனய்விட்டாய்; இந்த அயோக்யதை உனக்குத் தெரியாமையில்லை; நன்கு தெரிந்திருந்தும், உன்னுடைய நிலைமைக்குத் தகாததொரு தப்புக் காரியத்தை நீ செய்ய நினைப்பது இன்னமும் கெடுதியை விளைத்துக்கொள்ளப் பாம்பின் வாயிலே கை நீட்ட முயல்வது போலிராநின்றது. அயோக்யரான நமக்கு எம்பெருமானை யநுபவிக்க ஆசை பிறப்பது தப்பு; அது அப்பெருமானுக்கு அவத்யம்; நமக்கும் ஸ்வரூப நாசம்—என்று தெளிந்து ஒதுங்கி யிருக்கவேண்டியிருந்தும் நீ பகவதநுபவத்திற்கு நாக்கை நீட்டிச் செல்லுகிருயே! இதைவிட வேறு தீவினையுண்டோ? பாம்புபோலே அநர்த்தத்தை விளைக்கவல்ல தீவினையன்ரே இது. இந்தப் பாம்பின் வாயிலே கை வைக்கவன்ரே நீ பார்ப்பது. ஆகையாலே பூதனைக்கு நீ உறவாகவே யிருக்க வேண்டுமன்ரே. பூதனையானவள் தனக்குக் கேடு வரும்படியான காரியத்தை எப்படி செய்தாளோ, அப்படி நீயும் உனக்குக் கெடுதி விளையும்படியான காரியத்தைச் செய்யப் பார்க்கிருயாகையாலே பூதனையோடு ஒப்பாயன்ரே நீ.

பூதனையின் காரியத்தால் எம்பெருமானுக்கு யாதொரு கேடும் விளையாதது போல, ஆழ்வாருடைய பகவதநுபவவிருப்பத்தாலும் பகவானுக்கு யாதொரு கெடுதியும் விளையமாட்டாது; இவருடைய அதிசங்கை மாத்திரமே யுள்ளது—என்பதும் இதில் குறிப்பிடப்படுகிறது.

பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி:—"பூதனை மனிச்சியாய் வஞ்சித்தாளன்றே; பேயாகையாலே வஞ்சித்தாளத் தனையிறே; உன்னைப் பார்த்தால் பூதனை நித்யஸூரிகளோடொக்குமிறே."

"பாம்பின்வாய்" என்னமல் பாம்பார்வாய் என்றது திணைவழுவமைதி; இங்கு ஆர் விகுதி கொடுமையின் கனத்தைக் காட்டும். பார்த்தி=முன்னிலை யொருமை வினைமுற்று. இகர வீற்றதான இவ்வெண்பா முடிவு சாந்தஸப்ரயோகம்போல் போற்றத்தக்கதென்ப. 14

2599. பார்த்தோர் எதிரிதா நெஞ்சே !* படுதுயரம்
பேர்த்தோதப் பீட்ழிவாம் பேச்சில்லை*—ஆர்த்தோதம்
தம்மேனி தாள்தடவத் தாம்கிடந்து*தம்முடைய
செம்மேனிக் கண்வளர்வார் சீர். 15

நெஞ்சே	ஓ மனமே !,
ஓதம்	கடலானது
ஆர்த்து	கோஷித்துக் கொண்டு
தம் மேனி தாள்	தம்முடைய திருமேனியையும் திருவடியையும்
தடவ	(அலையாகிற கையினாலே) தடவும்படியாக
தாம் கிடந்து	(அக்கடலில்) பள்ளிகொண்டருளி
தம்முடைய செம்மேனி கண் வளர் வார்	தம்முடைய செந்நிறமான திருக்கண்கள் வளரப் பெறுகின்றவரான பெருமாளுடைய
சீர்	திருக்குணங்களை,
படு துயரம் பேர்த்து ஓத	கொடிய துக்கங்கள் தீரும்படி நாம் பேசுவதனால்
பீடு அழிவு ஆம் பேச்சு இல்லை	அவனுடைய பெருமைக்கு அழிவு உண்டாய்விடுமென்பதில்லை ;
எதிரிதா பார்த்து ஓர்	(இவ்விஷயத்தை) கண்ணெதிரே நிற்பதாகக் கண்டு தெரிந்து கொள்.

* * *—கீழ்ப்பாட்டுக்கு எதிர்த்தடையாயிருக்கும் இப்பாட்டு; 'ஹேயரான நாம் பகவானை அநுபவிக்கப் பார்ப்பது பொல்லாங்கு' என்றார் கீழ்ப்பாட்டில் ; இப்பாட்டிலோ வென்னில்; எம்பெருமானுடைய குணங்களைப் பேசுவதனால் நமது பாவங்களெல்லாம் தொலையுமாகையால் அது செய்யலாம்; அவனுடைய பெருமைக்கு யாதொரு குறைவும் விளையமாட்டாது என்கிறார்.

ஓதம் ஆர்த்து தம்மேனி தாள் தடவத் தாம் கிடந்து தம்முடைய செம் மேனிக் கண் வளர்வார் சீரை நெஞ்சே ! எதிரிதாப் பார்த்து ஓர் ; படுதுயரம் பேர்த்து ஓதப்பீடு அழிவாம் பேச்சு இல்லை என்றும் அந்வயம். கடலானது ஆரவாரஞ் செய்துகொண்டு (தனது அலைகளாகிற கைகளாலே) திருவடிகளைத் தடவப் பெற்று இனிதாகத் திருக்கண் வளர்ந்தருளாநின்ற பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை நெஞ்சே ! நம் கண்முன்னே நிற்பனவாகக் கொண்டு அநுஸந்தானம் செய் ; கங்கையில் நாய் நீராடினால் நாயின் பாவங்கள் தொலையுமேயன்றி, கங்கைக்கு உள்ள பெருமை குறைந்து விடாது ; அதுபோல, எம்பெருமானுடைய குணங்களை நாம் பேச, நமது பாவங்கள் தொலையுமேயன்றி அவனுடைய பெருமைக்குக் குறைவு நேரிடுமென்கிற பேச்சுக்கு இடமில்லைகாண் ; திருப்பாற் கடலிலே சயனித்துக்கொண்டு "உறங்குவான் போல் யோகு செய்த பெருமானை" என்கிறபடியே நம்முடைய ரக்ஷணத்தையே சிந்தித்துக் கொண்டிருக்கின்ற பெருமானுடைய குணங்களை நாம் பேசி நமது பாவங்களைப் மாற்றிக்கொள்ள வேண்டாவோ? அவனுடைய குணங்கள் நம்மால் மறக்கமுடியுமோ ? கண்ணெதிரே நிற்பனபோல் தோன்றுகின்றனவன்றோ என்றாராயிற்று.

எதிரிதா=எதிரில் உள்ளது எதிரிது. ஆ—ஆக என்பதன் குறை ; எதிரிதாக என்றபடி. படுதுயரம் பேர்த்து ஓத=ஸம்ஸாரத்திலே நாம் படுகிற துக்கங்களையெல்லாம் உதறிவிட்டு ஆநந்தமாக அக்குணங்களையே பேசுகிறபக்ஷத்தில் என்றும் பொருள் கொள்ளலாம் ; 'நமது துக்கங்கள் தீருவதற்காக' என்று பொருள் கொள்ளில், பேர்த்து என்பதை எச்சத்திரிபாகக் கொள்ளவேண்டும் ; பேர என்றபடி.

பீடு அழிவுஆம் பேச்சு இல்லை=பீடு என்று பெருமைக்குப் பெயர் ; உயர்ந்தோருடைய குணங்களைத் தாழ்ந்தோர் பேசினால் உயர்ந்தோருடைய உயர்த்திக்கு அழிவு உண்டாகுமோ வென்று சங்கிக்கவேண்டிய ப்ரஸக்தியில்லை யென்றபடி.

செம்மேனிக்கண்=மேனி என்று இங்கு நிறத்தைச் சொல்லுகிறது. செந்தாமரையின் நிறம்போன்ற நிறத்தையுடைய திருக்கண் என்றவாறு. நித்திரை செய்வதைக் கண் வளர்தலென்பர். சீர் என்னுஞ் சொல் பால்பகா அஃறிணைப்பெயராதலால் குணங்கள் என்று பன்மைப் பொருள்படும்; இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் குணங்களை என்க.

கீழ்ப்பாட்டில் 'பகவதநுபவத்திற்கு நாம் அயோக்யர்' என்று கருதி நெஞ்சைச் சீறி உரைத்தவர் இப்பாட்டில் "சீர் ஓதப் பீடழிவாம் பேச்சில்லை" என்று உரைத்தல் கூடுமோ? என்று சங்கிக்கவேண்டா; தம்முடைய தாழ்ச்சியை நோக்குமிடத்து அயோக்யதாநுஸந்தானம் பண்ணி அகலப் பார்ப்பதும், அவனுடைய விலக்ஷணமாய் போக்யமான திருக்குணங்களை நோக்குமிடத்து 'நம் வாயாலும் இக்குணங்களைச் சிறிது பேசி ஆநந்திப்போம்' என்று ஒருப்படுவதும் ஆக இவ்விரண்டும் மாறி மாறி வருமென்றும் இவை ஒன்றோடொன்று விருக்தமல்ல என்றும் கீழே பன்னியுரைத்தோம். 15

2600. சீரால் பிறந்து சிறப்பால் வளராது*
பேர்வாம னாகாக்கால் பேராளா! *மார்பாரப்
புல்கிநீ யுண்டுமிழ்ந்த பூமிநீ ரேற்பரிதே ?*
சொல்லு நீ யாமறியச் சூழ்ந்து. 16

பேராளா	'மஹாநுபாவனான பெருமானே!	நீர் ஏற்பு அரிதே	தாரைவார்த்து தத்தம் பண்ணிக் கொடுக்கப்பெற முடியாதோ?'
சீரால் பிறந்து சிறப்பால் வளராது	சிறப்புடன் பிறப்பதையும் சிறப்புடன் வளர்வதையும் செய்யாமல்	யாம் அறிய	இவ்விஷயத்தை அடியோம் தெரிந்து கொள்ளும்படி
பேர் வாமன் ஆகாக்கால்	திருநாமம் வாமநனென்று வைத்துக் கொள்ளாமலிருந்தால்	நீ சூழ்ந்து சொல்லு	நீ ஆராய்ந்து அருளிச்செய்ய வேணும்.
மார்பு ஆர புல்கி நீ உண்டு உமிழ்ந்த பூமி	உன்னாலே மார்பால் அணையப்பட்டும் வயிற்றில் வைக்கப்பட்டும் பின்பு வெளிப்படுத்தப் பட்டும் இப்படி ஸ்வாதீநமாயிருந்த இப்பூமியானது		

***—"சீர் ஓதப் பீடழிவாம் பேச்சில்லை" என்றாரே கீழ்ப்பாட்டில்; அப்படியே அவனுடைய திருக்குணங்களை ஓதத் தொடங்குகிறார்; ஸ்ரீவாமநாவதார குணத்திலீடுபட்டு அருளிச்செய்யும் பாசுரம் இது.

எல்லா விதங்களாலும் உனக்கே அஸாதாரணமாக உரிமைப்பட்டதான இப்பூமியை நீ மாவலியிடமிருந்து பெறவேண்டில், அதற்காக யாசகனாக வரவேண்டுமோ? எல்லாரும் கண்டு ஏசும்படியான குள்ள வடிவமெடுத்துக்கொள்ள வேண்டுமோ? குள்ளனென்றே திருநாமமும் தரிக்கவேண்டுமோ? ஸ்ரீராமனாகப் பிறந்து வளர்ந்த காலத்தும் ஸ்ரீகிருஷ்ணனாகப் பிறந்து வளர்ந்த காலத்தும் எவ்வளவோ சீராகப் பிறந்து எவ்வளவோ சிறப்பாகவளர்ந்தவனன்றோ நீ; அப்படியே பிறந்து வளராமலும், ஸ்ரீராமன் ஸ்ரீக்ருஷ்ணன் என்றாற்போலே சிறந்த திருநாமங்களை இட்டுக்கொள்ளாமலும், சீரும் சிறப்புமின்றிப் பிறந்து வளர்ந்து பரிஹாஸத்துக்கு ஆஸ்பதமான வாமநனென்ற நாமத்தையும் வஹித்து நின்றது ஏதுக்கு?

இப்படியானல்தான் பூமியை ஸம்பாதித்துக் கொள்ள முடியுமென்றும் இல்லாவிட்டால் முடியாதென்றும் திருவுள்ளமோ? என்கிறார்.

இந்தப் பூமி உனக்கே உரிமைப்பட்டதென்பதை மார்பாரப் புல்கி நீ உண்டுமிழ்ந்த என்ற விசேஷணத்தால் விளக்குகின்றார். மார்பாரப் புல்கி என்றது—பூமிப்பிராட்டி திவ்ய மஹிஷியா யிருப்பது பற்றி யென்க. பண்டு அண்டபித்தியில் ஒட்டிக் கிடந்த பூமியை, வராஹாவதாரம் பண்ணிக் கோட்டாற்குத்தி ஒட்டுவிடுவித்தெடுத்தபோது மார்பாரப் புல்கி யெடுத்தானென்னவுமாம்.

இப்பாசுரத்தின் தாத்பரியத்தைத் திருவுள்ளம்பற்றி ஆழ்வான் ஸுந்தர பாஹுஸ்தவத்தில் அருளிச் செய்துள்ள ச்லோகம் வருமாறு:—[க்ஷிதிரியம் ஜநி ஸம்ஹ்ருதி பாலநை: நிகிரணோத்கிரணோத்தரணை ரபி—வநகிரீச! தவைவ ஸதீ கதம் வரத வாமந! பிக்ஷணமர்ஹதி?] என்பதாம்; இப்பூமியைப் படைப்பவனும் நீ; துடைப்பவனும் நீ; காப்பவனும் நீ; பிரளயத்தில் திருவயிற்றில் வைத்து நோக்குமவனும் நீ; பிறகு வெளிநாடுகாணப் புறப்பட விடுமவனும் நீ; ஆகையாலே உனக்கே உடைமையா யிராநின்ற இந்தப் பூமியை நீ பெறவேண்டிப் பிச்சை யெடுத்தது எங்ஙனே? என்று திருமாலிருஞ்சோலை யழகரை நோக்கி விண்ணப்பஞ் செய்த ச்லோகம் இது.

சீரால் பிறந்து சிறப்பால் வளராது=சீர் என்றாலும் சிறப்பு என்றாலும் பொருள் ஒன்றே. "சீரால் சிறப்பால் பிறந்து வளராது" என்று அந்வயித்து, மிக்க சிறப்புடனே பிறந்து வளராமல் எனப் பொருள் கொள்க. வளராது என்றவிடத்துள்ள எதிர்மறை, பிறந்து என்றவிடத்தும் கருதத்தக்கது; பிறவாமலும் வளராமலும் என்றவாறு. "பிறவாமலும் வளராமலும் பேர்வாமனாகாக்கால்" என்றால் கருத்து ஒட்டிவரவில்லையே என்று சிலர் மயங்குவர்; 'சிறப்பால் பிறவாமலும் வளராமலும் வாமநனாக ஆனாயே, அப்படி ஆகாமற்போனால்' என்று விரித்துக் கொள்ள வேண்டுகையாலே பொருந்தாமை யொன்றுமில்லையென்க.

பேர்வாமனாகாக்கால்='வாமநன்' என்றது வாமன் எனச் சிதைந்தது. வாமநனென்று பேரிட்டுக்கொண்டு குள்ளனாகாவிடில் என்றபடி. பேர் என்பதற்குத் திருநாமமென்று பொருள் கொள்ளாமல் 'பெரிய' என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். பெரிய வாமனனென்றது—இவனுக்கு மேற்பட்ட குள்ளனில்லை யென்னும்படியான ஒப்பற்ற குள்ளன் என்றபடி.

பேராளா!=பெருமை பொருந்தியவனே! என்றும், பல திருநாமங்களையுடையவனே! என்றும் பொருள்படும். வாமனனென்று பேரிட்டுக்கொண்டது உன்பெருமைக்குத் தகுமோ? என்றும், பேரிட்டுக்கொள்ளப் பல திருநாமங்களிருக்கவும் இந்தத் திருநாமந்தானா உனக்கு அகப்பட்டது? என்றும் கேட்கிறார்போலும். 16

2601. சூழ்ந்தடியார் வேண்டினக்கால் தோன்றாது விட்டாலும்
வாழ்ந்திடுவர் பின்னும்தம் வாய்திறவார்*—சூழ்ந்தெங்கும்
வாள்வரைகள் போலரக்கன் வன்தலைகள் தாமிடிய*
தாள்வரை வில்லேந்தினார் தாம். 17

எங்கும் சூழ்ந்து	நாற்புறங்களிலும் சுற்றிக்கொண்டு	தாள் வரைவில் ஏந்தினார் தாம்	காலுரத்தை யுடைத்தாய் மலைபோன்றதான வில்லைத் தாங்கி நின்றவரான இராமபிரான்
அரக்கன்	இராவணனுடைய		
வாள் வரைகள் போல் வன் தலைகள் தாம் இடிய	ஒளி பொருந்திய, மலைகள் போல் வலிதான தலைகளானவை இற்று விழும்படி	சூழ்ந்து	(இந்த லீலா விபூதியிலே வந்து) வளைத்துக்கொண்டு

அடியார் வேண்டின் அக்கால்	"ஓ ஜனங்களே! நீங்கள் எனக்கு அடிமைப்பட வேணும்' என விரும்பினுல்	வாழ்ந்திடுவர்	(திருவுள்ளத்தில் வெறுப்பு இல்லாமல்) உகந்தே யிருப்பர்;
		பின்னும்	எக்காலத்திலும்
தோன்ருது விட்டாலும்	ஒரு அடியவனும் அகப்படாதபடி உபேக்ஷிக்கப் பெற்ருலும்	தம் வாய் திறவார்	(பிராட்டிமாரிடத்திலும் இந்த மனக்குறையை) வாய் திறந்து சொல்லிக்கொள்ள மாட்டார்.

***—ஆச்ரிதர்களிடத்தில் எம்பெருமானுக்குள்ள வாத்ஸல்யத்தைப் பேசுகிருர். "எங்கும் சூழ்ந்து அரக்கன் வாள்வரைகள் போல் வன்தலைகள் தாம் இடியத் தாள் வரை வில்லேந்தினர் தாம் சூழ்ந்து அடியார் வேண்டினக்கால் (அடியார்) தோன்ருது விட்டாலும் வாழ்ந்திடுவர்; பின்னும் தம் வாய் திறவார்." என்று அந்வயம். இராவணனது தலைகளை அறுத்துத்தள்ள வலிய வில்லைக் கையிலேந்தி நின்ற இராமபிரானுகிய திருமால் இந்த லீலா விபூதியில் வந்து சேர்ந்து இங்குள்ள ஸம்ஸாரிகளைச் சூழ்ந்துகொண்டு 'எனக்கு நீங்கள் அடியாராக வேண்டும்' என்று அபேக்ஷித்தவளவில், "த்வம் மே" என்ருல் "அஹம் மே" என்கிற ஸம்ஸாரிகள் வணங்காமுடித் தனத்தினுல் அநாதரவுகாட்டி அடியவர்களாக ஆகாவிட்டாலும், அதனுல் திருவுள்ளத்தில் சிறிதும் வருத்தங் கொள்ளாமல் "நாம் அபேக்ஷித்த படியே இந்த ஸம்ஸாரிகளெல்லாரும் அடியவர்களாக ஆய்விட்ட பக்ஷத்தில் இந்த லீலாவிபூதி ஆளற்று அழிந்துபோய் விடுமன்ருே; இஃது அழியாதபடி நோக்குவதற்கு இவர்கள் அமைந்தார்கள் என்று தேறி மகிழ்ந்தே செல்வர்; ஏகாந்தமான ஸங்கதிகளையெல்லாம் கூசாமல் சொல்லுகைக்குரிய பிராட்டிமாரிடத்திலும் இவ் விஷயத்தைச் சொல்லிக்கொள்ள வாய்திறக்கமாட்டார்; "ஸம்ஸாரிகள் என்னை அலக்ஷியம்பண்ணிக் கைவிட்டார்கள்" என்று ஒருபோதும் சொல்லமாட்டார் என்றதாயிற்று.

ஸ்ரீவசநபூஷணத்தில் (மூன்ரும் ப்ரகரணத்தில்—"பிராட்டி, ராக்ஷஸிகள் குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கும் அறிவியாதாப்போலே, தனக்குப் பிறர் செய்த குற்றங்களை பகவத் பாகவத விஷயங்களில் அறிவிக்கக் கடவனல்லன்" என்றருளிச் செய்தபின் "அறிவிக்க வுரியவனகப்பட வாய்திறவாதே ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்குமென்னு நின்றதிறே" என்று அருளிச்செய்தது இந்தப்பாசுரத்தைக்கொண்டேயாம். அவ்விடத்தில் ஸ்ரீமணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்தி வருமாறு:—"'எதிர் சூழல்புக்கு என்கிறபடியே தன்னுடைய சீல ஸௌலப்யாதிகளைக் காட்டி ஸம்ஸாரி சேதநர்களைத் தப்பாமல் அகப்படுத்திக் கொள்வதாக வந்தவதரித்துத் தமக்கு அடியார் வேணுமென்றபேக்ஷித்தால் அவர்கள் அப்படி அநுகூலராய்த் தோன்ருதொழிந்தாலும் 'இவர்கள் செய்தபடி செய்கிருர்கள்; நாம் இவர்களுக்கு உறுப்பாகப் பெற்ருேமிறே' என்று அதுதானே போக்யமாக விருப்பர்; அதுக்குமேல், அவர்கள் வைமுக்கியம் பண்ணினர்களென்று அவர்கள் குற்றத்தைத் தனியிருப்பிலே பிராட்டிக்கு மருளிச் செய்யாரென்கிற சூழ்ந்தடியார் என்கிற பாட்டிலே, சேதநர் செய்த குற்றங்களைத் தன் திருவுள்ளத்துக்கு உகந்தவர்களுடன் அறிவிக்கைக்கு ப்ராப்தனை ஸர்வேச்வரனுமுட்படத் தன் திருப்பவளம் திறந்து அருளிச்செய்யாதே, தானருளிச் செய்யாதொழிந்தாலு மறியவல்ல ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்குமென்று சொல்லா நின்றதிறே" என்று.

இப்பாட்டை மற்ருெரு வகையாகவும் பெரியவாச்சான் பிள்ளை உரைத்தருளினர்;—" அடியார் சூழ்ந்து வேண்டினக்கால், சூழ்ந்தெங்கும் வாள் வரைகள் போலரக்கன் வன்தலைகள் தாமிடியத் தாள்வரை வில்லேந்தினர் தாம் தோன்ருது

விட்டாலும் (அடியார்) வாழ்ந்திடுவர்; பின்னும் தம் வாய்திறவார்'' என்று அந்வயித்து, அடியவர்களாயுள்ளவர்கள் எம்பெருமானைச் சூழ்ந்து கொண்டு எமக்கு நீ ஸேவைஸாதிக்க வேணுமென்று வேண்டிக்கொள்ள எம்பெருமான் அவர்களுக்கு முகங்காட்டா விடினும், 'அவன் திருவுள்ளமானபடியே ஆகக்கடவது' என்று மகிழ்ந்திருக்கக் கடவர்கள் அடியவர்கள்; 'ஆர்த்தியின் கனத்தாலே நாங்கள் ஓயாது புலம்பி வேண்டினாலும் எங்களுக்கு ஸேவை ஸாதியாமலிருப்பது ஏன்?' என்று ஆக்ஷேபிக்க வாய் திறக்கவும் கடவரல்லர்; அபேக்ஷிப்பது மாத்திரம் அடியவர்களது கடமையேயன்றி அபேக்ஷித்தபடியே அவன் காரியஞ் செய்யாவிடில் அவனை யெதிர்த்து வாய் திறக்க இவர்களுக்கு அதிகாரமில்லை—என்று சேதநர்களின் ஸ்வரூபத்தை சிக்ஷித்தருளிச் செய்வதாக.

முந்தின யோஜனையில் எம்பெருமானுடைய ஸ்வரூபம் சொல்லுகிறது; இந்த யோஜனையில் சேதநருடைய ஸ்வரூபம் சொல்லுகிறது. இரண்டு வகையும் பொருந்தக் குறையில்லை.

சூழ்ந்து எங்கும்=இலங்கை முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டு என்றபடி. வாள் என்பதும் வரைகள்போல் என்பதும்—அரக்கனது வன்தலைகட்கு விசேஷணங்கள்; வாள்—ரத்னங்களிழைத்த கிரீடங்களணிந்திருக்கையாலே ஒளிபொருந்திய என்றபடி. தாள் வரைவில்=விற்களுக்கு அடிப்பக்கம் உரத்திருக்கவேண்டியது அவசியமாதலால் 'தாள்வில்' எனப்பட்டது; காலுரமுடைய வில் என்றபடி. மலைபோல் பிறரால் சலிப்பிக்கவும் ஒண்ணாதபடி சிக்கென்றிருத்தல் பற்றி "வரைவில்" எனப்பட்டது. 17

2602. தாம்பாலாப் புண்டாலு மத்தழும்பு தானிளக*
பாம்பாலாப் புண்டு பாடுற்றாலும்*—சோம்பாதுஇப்
பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா! *உன்
தொல்லுருவை யாரறிவார்? சொல்லு. 18

தாம்பால் ஆப்புண்டாலும்	(அசோதையினால்) தாம்பு கொண்டு கட்டியடிக்கப் பெற்றாலும்	சோம்பாது	(ஜகத் ஸ்ருஷ்டியில்) சோம்பல் படாமல்
அத்தழும்பு தான் இளக	அந்தத் தாம்பினால் கட்டினதாலுண்டான காய்ப்பு அற்பம் என்னும்படி	இ பல் உருவை எல்லாம்	இவ்வுலகில் காணப்படுகிற பலபல பிராணிகளையெல்லாம்
பாம்பால் ஆப்புண்டு	காளியனாகிற பாம்பினால் கட்டப்பட்டு	படர்வித்த வித்தா	விஸ்தாரமாக வுண்டாக்கின ஆதிமூலமே!
பாடுஉற்றாலும்	கஷ்டங்களை யடைந்தாலும் (சிறிதும் திருவுள்ளம் வருந்தாமல்)	உன் தொல் உருவை ஆர் அறிவார்	உன்னுடைய திவ்ய ஸ்வரூபத்தை அறிவாருண்டோ?
		சொல்லு	நீயே சொல்லு.

* * *—ஸம்ஸாரிகள் அலக்ஷியம் பண்ணினாலும் எம்பெருமான் திருவுள்ளம் வெறுக்கமாட்டான் என்றது கீழ்ப்பாட்டில்; அவ்வளவேயன்று; ஸம்ஸாரிகள் எம்பெருமானுக்குப் பலவகையான துன்பங்களை உண்டு பண்ணினாலும் அப்போதும் அவன் தன் காரியத்தைத் தான் விடுவதில்லை யென்கிற மஹா குணத்தைப் பேசுகிறாரிதில்.

ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்த காலத்து யசோதைப் பிராட்டியாகிற மாதாவானவள் "தீராமிது செய்தீரென்றோர் நெடுங்கயிற்றால், ஊரார்களெல்லாருங் காணவுரலோடே, தீரா வெகுளியளாய்ச் சிக்கன ஆர்த்தடிப்ப, ஆராவயிற்றினோடாற்றாதான்" (சிறிய திருமடல்) என்றபடி, வெண்ணெய் களவுகண்ட காரணத்திற்காகக் கண்ணிநுண் சிறுத்தாம்பினால் உரலில் பிணைத்து அடித்துப் பக

வானுடைய திருமேனியில் கஷ்டத்தை யுண்டுபண்ணினாள்; "தாம்பே கொண்டார்த்த தழும்பு" என்றபடி அவள் தாம்பினால் கட்டினவிடம் காய்ப்புக் காய்த்துக் கிடந்ததென்றும் தெரிகிறது இது அநுகூலர் அன்பின் மிகுதியால் கட்டின கட்டாகையாலே எம்பெருமானுக்கு ஸஹ்யம் என்று கொண்டாலும், யமுனையில் ஒரு துறையிலிருந்து கொண்டு விஷத்தைக் கக்கி அனைவர்க்கும் கொடுமை புரிந்த காளிய நாகத்தோடு பிணங்க நேர்ந்தபோது, அந்த நாகம் கண்ணபிரானைத் தனது வாலால் கட்டிற்றென்றும், எசோதை கட்டின தாம்பினாலுண்டான காய்ப்பு அற்பமென்னும்படி காளியன் வாலால் கட்டின காய்ப்பு வலிதாயிருந்ததென்றும் சொல்லப்படுகிறது. இப்படி அநுகூலரோடு பிரதிகூலரோடு வாசியற எல்லாரும் அவனைக் கட்டியடித்துத் துன்பப் படுத்துவதே இந்த பிராகிருத லோகத்தின் காரியமாக இருக்கின்றது. இருந்தாலும் எம்பெருமான் தன்னுடைய க்ருஷியில் நின்றும் கைவாங்குவதில்லை. 'நமக்குத் துன்பத்தையே உண்டு பண்ணுகிற இவ்வுலகை அடியோடு ஒழித்திடுவோம்' என்று நிக்ரஹிக்க நினையாமல் "சென்று சென்றாகிலுங் கண்டு சன்மங்கழிப்பானெண்ணி ஒன்றியொன்றி யுலகம் படைத்தான்" என்றபடி என்றைக்காவது ஒரு நாள் இவ்வுலகம் சீர்படக் கூடுமென்றே திருவுள்ளம்பற்றிச் சிறிதும் சோம்பலடையாமல் பிரஜைகளைப் படைக்கின்றானென்று இதனால் சொல்லிற்றாயிற்று.

இப்பாட்டின் கருத்தை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் உத்தர சதகத்தில் "ஸார்வ! த்வத்கம் ஸகலசரிதம் ரங்கதாமந்! துராசாபாசேப்யஸ் ஸ்யாந்ந யதி ஜகதாம் ஜாது மூர்க்கோத்தராணாம். நிஸ்தந்த்ராளோஸ் தவ நியமதோ நர்த்துலிங்க ப்ரவாஹா ஸர்க்கஸ்தேமப்ர ப்ருதிஸ ஸதாஜாகரா ஜாகடீதி" என்ற ச்லோகத்தால் அநுஸந்தித்தமை அறியத்தக்கது.

தாம்பாலாப்புண்டாலும்=நம்மாலே படைக்கப்படுகிறவர்கள் நம்மையே கயிற்றால் கட்டி நலிகின்றார்களே!; இப்படிப்பட்ட பாவிகளை நாம் ஏன் ஸ்ருஷ்டிக்கவேணும்; இறகொடிந்த பறவைபோலே கரணகளேபரங்களற்று ப்ரளய ஸீமாவில் மங்கிக் கிடக்கிற சேதந வர்க்கங்கள் அப்படியே மங்கிக்கிடக்கட்டும்; அவற்றுக்குக் கையுங் காலும் உண்டாம்படி நாம் ஸ்ருஷ்டிக்கவேயன்றோ அந்தக் கையையும் காலையுங் கொண்டு அவை நம்மையே புடைக்கின்றன; அவற்றை அப்படியே மங்கிப் போகும்படி போட்டு வைத்தால் நம்மைக் கட்டியடிப்பார் ஆருமில்லையே என்று கருதி எம்பெருமான் வெறுமனிருந்து விடலாம்; ஆயினும் இந்த சேதநர்கள் பக்கல் உள்ள நப்பாசையானது அப்படி இருக்கவொட்டுகிறதில்லை என்று உணர்க.

அத்தழும்புதானிளகப் பாம்பாலாப்புண்டு பாடுற்றாலும்=காளியன் தனது வாலினால் கண்ணபிரானை அழுந்தக் கட்டி, திருமேனி தழும்பேறும்படி வருத்தத்தை உண்டு பண்ணினன்; இந்தத் தழும்பின் முன்னே எசோதையின் தாம்பாலாப்புண்ட தழும்பு அற்பமென்ன வேண்டும்படி பாம்பாலாப்புண்ட தழும்பே வலிதாயிருந்ததென்பது விளங்க "அத்தழும்பு தானிளக" என்றார். பாடு—வருத்தம். வித்தா=உலகங்கட்கெல்லாம் வித்தாக இருப்பவனே! என்றபடி. இப்படிப்பட்ட உன்னுடைய ஸ்வரூபத்தை அறியவல்லார் ஆர்? என்றது—ஸம்ஸாரிகள் உன்னைப் பரிபவித்தாலும் அவர்கள் மேல் ஆசாபாசம் விட்டு நீங்காமல் நன்மையையே நாடியிருக்கையாகிற உன்னுடைய ஸ்வரூபம் ஒருவர்க்கும் நிலைகாண வொண்ணாதது என்றபடி.

2603. சொல்லில் குறையில்லை சூதறியா நெஞ்சமே!*
எல்லிப் பகலென்னா தெப்போதும்*—தொல்லைக்கண்
மாத்தானைக் கெல்லா மோரைவரையே மாறாக*
காத்தானைக் காண்டுநீ காண். 19

சூது அறியா நெஞ்சமே	செய்யவேண்டியது இன்னதென்றறியாமல் தளும்புகிற மனமே!,
சொல்லில் குறை இல்லை	பகவத் விஷயத்தைப் பேசினால் பேச்சில் குறையில்லை; (அல்லது) நமக்கொரு குறையில்லை;
தொல்லை கண்	அநாதியான இப்பூமியில்
மா தானைக்கு எல்லாம்	(துரியோதநாதிகளுடைய) பெரிய சேனைகளுக்கெல்லாம்
ஓர் ஐவரையே மாறு ஆக	பஞ்சபாண்டவர்களை எதிரிகளாம்படி
எல்லி பகல் என்னாது எப்போதும் காத்தானை	இரவு பகலென்னுமல் எக்காலத்திலும் ரக்ஷித்துக் கொண்டிருந்த பெருமானை
(மெய்யே காண விரும்பினால்)	
காண்டும்	காண்போம்!
நீ காண்	நீ காணலாம்.

***—பஞ்ச பாண்டவர்கள் விஷயத்தில் கண்ணபிரான் பக்ஷபாதியாயிருந்து செய்தருளின செயல்களை ஆலோசித்துப் பார்த்தால், அவன் அடியவர்களுக்கு எளியவன் என்பது நன்கு வெளியாகும். அந்த பஞ்சபாண்டவர்களைப் போலே நாமும் அப்பெருமான் மீது அன்பு வைத்து அவனை ஸேவிக்கவேணுமென்று மெய்யே ஆசைப்பட்டால் "மெய்யர்க்கே மெய்யனாகும்" என்னப்படுகிற அவன் ஸேவை ஸாதித்தே தீருவன்; அவனை ஸேவிப்பதற்கு இதுவே உபாயம். இப்படிப்பட்ட உபாயத்தைத் தெரிந்துகொள்ளாமல் நெஞ்சே! நீ ஏன் வீணாகக் கவலைப்படுகிறாய்? இப்போதாவது நான் சொல்வதைக் குறிக்கொள்; என்கிறார்.

சொல்லில் குறையில்லை = இதற்குப் பலவகையாகப் பொருள் கொள்ளலாம். பகவத் குணங்களைப் பேசத்தொடங்கினால் அவற்றுக்கு ஓய்வு இல்லை; எவ்வளவு பேசினாலும் குறைவு படாமல் மேன்மேலும் பெருகுகின்ற குணங்கள் அவனுக்கு எல்லையில்லாமலிருப்பதால் நாம் சொல்லி முடிக்கும்படியானவையல்ல பகவத் குணங்கள் என்று கொள்ளலாம். பரமபுருஷனுடைய குணங்களை அயோக்யரான நாம் பேசினால் அவற்றுக்குக் குறைவு நேரிடுமென்பதில்லை என்றும் கொள்ளலாம். அவனுடைய குணங்களை நாம் சொல்லத் தொடங்கினோமாகில் நம்முடைய குறைகளெல்லாம் நீங்கிவிடும் என்பதாகவுங் கொள்ளலாம். நாம் கற்ற கல்விகளுக்கீடாகக் குறைவில்லாமல் பலபல பாசுரங்களையிட்டு பகவத் குணங்களைப் பேசிவிடலாம்; பேச்சில் குறையில்லை; ஆனால், அந்த குணங்கள் எல்லைபற்றவையாதலால் அவற்றைக் கரை காண்பதில் குறையுண்டு என்பதாகக் கொள்ளுதல் சிறக்கும்.

அப்படி கரைகாண முடியாத குணங்களில் ஒரு குணத்தைச் சொல்லிக் காட்டுகிறார்—பாண்டவ பக்ஷபாதித்வத்தை யருளிச் செய்கிற முகத்தாலே.

சூது அறியா நெஞ்சமே! = சூது என்பதற்குப் பல பொருள்களுண்டு; உபாயம் என்ற பொருள் இங்குக் கொள்ளத்தக்கது. உபாய மறியாத நெஞ்சே! என்றபடி. எம்பெருமானை நாம் காணவேண்டில், மெய்யே காணவேணுமென்று விரும்புகிற பக்ஷத்தில் தவறாது காண முடியும்; ஆகையாலே நம்முடைய மெய்யான விருப்பமே அவனைக் காண்பதற்கு உபாயம் என்று தெரிந்து கொண்டு அந்த வுபாயத்தால் அவனைக் காணலாமாயிருக்க அது செய்யாத மடநெஞ்சே! என்கிறாரென்க.

மெய்யே காணவேணுமென்று விரும்பினால் காண்பதற்கு எளியனோ அவன்? என்ன; அவனுடைய எளிமையை எடுத்துக் காட்டுகிறார் மேல். தொல்லைக்கண் மாத்தானைக்கெல்லாம் ஓரைவரையே மாறாகக் காத்தவனன்றோ அவன். தொல்லைக் கண் என்றது அநாதியான இப்பூமியிலே என்றபடி. "மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர்" என்றபடி பாண்டவர்கட்கு எதிர்த்தலையில் திரண்ட சேனைகள் பிரபலமாகையால் மாத்தானைக்கெல்லாம் என்றார். தானை யென்று சேனைக்குப் பெயர். ஓர் ஐவரையே மாறாக = பல்லாயிரம் போர் வீரர்கள் திரண்டு கிடக்கிற சேனைகளுக்கெல்லாம் எதிர்க்கக்ஷியில் பாண்டவர்கள் ஐந்துபேர் மாத்

திரமே நின்று வெற்றி பெற்றார்களென்று உலகில் புகழ் கிளம்பும்படி ரக்ஷித்தமை சொல்லுகிறது. எம்பெருமான் தானே துரியோதனாதியர்க்கு எதிரியாய் நின்று போர் செய்யக் கூடுமாயினும், அப்படி நின்றால் அவர்கள் போர்க்களத்திற்கே வர மாட்டார்களென்று, தான் ஆயுத மெடுப்பதில்லையென்று ப்ரதிஜ்ஞையும் பண்ணி, பஞ்சபாண்டவர்களே போர்புரிந்து வெற்றி பெற்றனரென்று பாரோர்புகழச் செய்து வைத்தனனென்க.

காத்தானைக் காண்டும் நீ காண் = ‘அடியவர்கள் விஷயத்தில் இவ்வளவு பக்ஷபாதம் வைத்து ரக்ஷிப்பதில் தீக்ஷிதனாயிருப்பன் எம்பெருமான்’ என்று நாம் தெரிந்துகொண்டோமாயின், இனி நாம் அவனைக் காணவேணுமென்று மெய்யே விரும்பவேண்டுமென்பதே யுள்ளது. அப்படி காண விரும்புகிறபக்ஷத்தில் கண்டே விடலாம்; இதை நீ அநுபவத்தில் காண்பாய் என்று ஆழ்வார் தமது திருவுள்ளத்தை நோக்கி அருளிச் செய்தாராய்த்து.

எல்லிப்பகலென்னுதெப்போதும் என்பதை காத்தானை என்ற விடத்திலும் அந்வயிக்கலாம், காண் என்றவிடத்திலும் அந்வயிக்கலாம். இரவுபகலென்று பாராமல் ஸர்வ காலத்திலும் பாண்டவர்களை ரக்ஷித்துக்கொண்டிருந்தவனை என்று முந்தின யோஜனையில் பொருளாம்; நெஞ்சே! அவனை நீ இரவுபகல் வாசியின்றி எப்போதும் காண் என்று பிந்தின யோஜனையில் பொருளாம். காண்டும் = தன்மைப பன்மை வினைமுற்று. காண்போம் என்றபடி. 19

2604. காணப் புகிலறிவு கைக்கொண்ட நன்னெஞ்சம்*
நாணப் படுமன்றே! நாம்பேசில்*—மாணி
யுருவாகிக் கொண்டுலகம் நீரேற்ற சீரான்*
திருவாகம் தீண்டிற்றுச் சென்று. 20

அறிவு கைக்கொண்ட நல் நெஞ்சம்	அறிவையுடைய நல்ல நெஞ்சே!,	சென்று	தானே எங்கும் பரவி
		திரு ஆகம்	தனது திருமேனியினாலே
மாணி உரு ஆகிக் கொண்டு	வாமநரூபியாய்	தீண்டிற்று	(உலகங்களையெல்லாம்) தீண்டிற்றென்பதை
		காணப்புகில்	ஆராய்ந்தோமாகில்
உலகம் நீர் ஏற்ற சீரான்	(மாவலியிடத்திற் சென்று) உலகங்களை நீரேற்றுப் பெற்ற சீர்மை பொருந்திய திருமால்	நாம் பேசில்	நாம் பேசும் வார்த்தைகளுக்கு
		நாணப்படும் அன்றே	வெட்கப்பட வேண்டுமன்றோ.

* * *—ஸ்வகதஸ்வீகாரமென்றும் பரகதஸ்வீகாரமென்றும் சாஸ்த்ரங்களில் இரண்டு வகையான பற்றுதல்கள் சொல்லப்படும். எம்பெருமானை நாம்சென்று பற்றுகிற பற்று ஸ்வகதஸ்வீகார மெனப்படும். அவன்தானே வந்து நம்மைஸ்வீகரித்தருள்வது பரகத ஸ்வீகாரமெனப்படும். இவ்விரண்டுள், எம்பெருமான் தானே நம்மை வந்து ஸ்வீகரிக்கையாகிற பரகத ஸ்வீகாரமே சிறந்த தென்பது ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம். “அவனை இவன் பற்றும் பற்று அஹங்கார கர்ப்பம், அவத்யகரம்; அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம்” என்றார் பிள்ளையுலகாசிரியரும். கீழ்ப்பாட்டில் ‘அவனை நாம் காண நினைத்தோமாகில் காணலாம்’ என்றருளிச் செய்த ஆழ்வார், ‘அப்பெருமானை நாமாகக் காண நினைப்பது தகுதியன்றே, அவன்தானே வந்து நம்மை ஸ்வீகரிக்கும்படி பார்த்திருக்கையன்றோ ஸ்வரூப ப்ராப்தம்’ என்று தெளிந்து அந்தத் தெளிவை இப்பாட்டால் வெளியிடுகிறார்.

அறிவு கைக்கொண்ட நன்னெஞ்சம் என்பது நெஞ்சை நோக்கின அண்மை விளி; நெஞ்சே! நீ அறிவு இல்லாத அசேதந வஸ்துவன்றே; அறிவு கொண்டிருப்ப

வனன்றே; உன் அறிவுக்கு என்ன ப்ரயோஜநம்? நான் ஒன்று சொன்னால் 'இது தகும், தகாது' என்பதை நீ ஆராய்ந்து பார்க்க வேண்டாவோ? "காத்தானைக் காண்டும் நீ காண்" என்று நான் சொல்லிவிட்டால் இதை நன்கு ஆராயாமல் காண முயல்வதுதானோ உனக்குத் தகுதி? இப்படியாகில் உன் அறிவுக்குப் பயனில்லையே; உன்னையும் அசேதநமாகவே எம்பெருமான் படைத்திருக்கலாமே என்கிறார் போலும்.

நாம் காணப்புகில் பேசில் நாணப்படுமன்றே=எம்பெருமானை நாம் காணப்புகுவதும் பேசப்புகுவதும் வெட்கப்படத்தக்க விஷயமன்றோ. ஏனென்றால், இதைப் பின்னடிகளில் விவரிக்கின்றார். எம்பெருமான் குறட் பிரமசாரியாகி மாவலிபக்கல் நீரேற்றுப் பெற்ற காலத்துத் தானே தனது திருமேனியைக் கொண்டு இவ்வுலகத்தை யெல்லாம் தீண்டினான் என்பது உனக்குத் தெரிந்ததே யன்றோ. ஆகையாலே நம்மை வந்து தீண்டிக் கைக் கொள்வதற்கு அவன் தானே ஸித்தனாயிருக்க, அதற்கு மாறாக அவனை நாம் காணப்புகுவதும் பேசப்புகுவதும் தகாத காரியமன்றோ ஒருவருடைய அபேக்ஷையுமில்லாமல் எல்லார் தலையிலும் திருவடியைக் கொண்டு வைத்தான் அவனாயிருக்க, நம்முடைய முயற்சி நாணத்தக்கதன்றோ என்கிறார்.

"மாணியுருவாகிக் கொண்டு உலகம் நீரேற்ற சீரானுடைய திருவாகமானது (தானே) சென்று தீண்டிற்று; (இப்படியிருக்க,) நாம் காணப்புகில் நாம் பேசில் நாணப்படுமன்றே" என்றும், "மாணியுருவாகிக் கொண்டு உலகம் நீரேற்ற சீரானவன் தான் சென்று தன்னுடைய திருவாகத்தாலே உலகத்தைத் தீண்டின விஷயத்தைக் காணப்புகில்—(ஆராயுமளவில்) நாம் பேசில் அறிவு கைக்கொண்ட நன்னெஞ்சம் நாணப்படுமன்றே" என்றும் அந்வயித்துப் பொருள் கொள்ள இடமுண்டு.

[யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:, தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்] என்ற வேதவாக்கியம் இங்கே நினைக்கத் தக்கது. இதன் பொருள்:—இந்த எம்பெருமான் தானே எந்த சேதநனை ஸ்வீகரிக்கிறானோ, அந்த சேதநனாலே இவன் அடையத் தக்கவன்; பரகத ஸ்வீகார நிஷ்டனை அப்படிப் பட்ட சேதநனுக்கே எம்பெருமான் தனது திருமேனியை வ்யக்தமாக ஸேவை ஸாதிப்பிக்கிறான் என்பதாம்.

எம்பெருமானே உலகங்களை யெல்லாம் தன் பேறாகச் சென்று தீண்டினான் (த்ரிவிக்ரமாவதாரவ்யாஜத்தாலே) என்று நாம் தெரிந்துகொண்டால், அவனை நாம் பற்ற நினைப்பது தகாது; ஆகிலும் நாம் சேதநராகையால் வெருமனிருக்க முடியாது. எதையாவது வாயாலே சொல்லிக்கொண்டிருக்க நேர்கின்றது; அதனால் நாம் காண விரும்புவதாகவும் நாம் பற்றுவதாகவும் ஏதோபோது போக்குக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறோமத்தனை. "நான் சென்று நாடி நறையூரில் கண்டேனே" என்றாற்போலே ஆழ்வார்கள் அருளிச்செய்வதும் காலக்ஷேபார்த்தமாகவே யொழிய வேறில்லை. அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம். அசோக வனத்திலே பிராட்டி தரித்திருப்பதற்காகப் பெருமாளுடைய குணங்களை அநுபவித்துக் கொண்டிருந்ததுபோல இந்த ஸம்ஸாரத்தில் நாம் உள்ள வரையில் பகவத் குணாநுபவம் பண்ணிப் போதுபோக்க வேண்டியது அவசியமாதலால் அதற்காகப் பாசுரங்கள் பேசுமவை அயுக்தமல்ல. 20

2605. சென்றங்கு வெந்நரகில் சேராமல் காப்பதற்கு*
இன்றிங்கென் னெஞ்சா லிடுக்குண்ட*—அன்றங்குப்
பாருருவும் பார்வளைத்த நீருருவும் கண்புதைய*
காருருவன் தான்நிமிர்த்த கால். 21

அன்று	முன்பு மாவலியால் உலகம் நெருக்குண்ட காலத்தில்
அங்கு	அந்த மாவலியின் யாக பூமியிற் சென்று
பார் உருவும்	பூமியாகிற வஸ்துவும்
பார் வளைத்த நீர் உருவும்	அந்த பூமியைச் சூழ்ந்து கிடக்கிற ஜல தத்துவமும்
கண் புதைய	மறையும்படி
கார் உருவன் தான் நிமிர்த்த கால்	காளமேகத் திருவுருவனான எம்பெருமான் நிமிர்த்தருளிய திருவடிகள்
அங்கு வெம் நரகில் சென்று சேராமல் காப்பதற்கு	கொடிய அந்த நரகங்களிலே நான் சென்று சேராதபடி என்னை உஜ்ஜீவிக்கச் செய்யும் பொருட்டு
இன்று	இப்போது
இங்கு	இவ்விடத்தில்
என் நெஞ்சால்	என்னுடைய நெஞ்சிலே
இடுக்குண்ட	நெருக்குப்பட்டுக் கிடக்கின்றன.

* * *—எம்பெருமானுடைய உலகளந்த சேவடியானது தானாகவே வந்து தம்முடைய திருவுள்ளத்தில் குடிகொண்டதென்கிறார். அன்று அங்குப் பாருருவும் பார்வளைத்த நீருருவும் கண்புதையக் காருருவன் தான் நிமிர்த்த கால் இன்று இங்கு என்னெஞ்சா லிடுக்குண்ட; (ஏதுக்காக வென்னில்;) அங்கு வெந்நரகிற் சென்று சேராமல் காப்பதற்கு. "ஒண்மிதியில் புனலுருவி யொருகால் நிற்ப ஒருகாலும் காமரு சீரவுணனுள்ளத் தெண்மதியுங் கடந்து அண்டமீது போகி இருவிசும்பினூடு போயெழுந்து, மேலைத் தண்மதியுங் கதிரவனுந் தவிர வோடித்தாரகையின் புறந்தடவி யப்பால் மிக்கு, மண்முழுது மகப்படுத்து நின்றவெந்தை" என்றபடி ஸகல லோகங்களையும ஆக்ரமித்து நின்ற திருவடிகள் இன்று என்னுடைய நெஞ்சினுள்ளே வந்து சேர்ந்து நெருக்குண்டிரா நின்றது. எல்லாவுலகங்களையும் அளாவின திருவடிகள் எவ்வளவு பெரிதாயிருக்க வேண்டும்; சிறியேனுடைச் சிந்தையானது அவை அடங்குவதற்குப் போதுமான இடமன்றாகிலும் 'நெருக்குப் பட்டாகிலும் ஆழ்வார் நெஞ்சினுள்ளே இருந்திட வேண்டியது' என்ற ஸங்கல்பத்தினால் அப்பெருமான் அப்பெரிய திருவடிகளை இந்த நெஞ்சினுள் கஷ்டப்பட்டுப் புகுவித்து நிற்கின்றான்; இப்படி செய்தருளாவிடில் நான் நற்கதி பெற்று உஜ்ஜீவிக்க வழியில்லை யாகையால் என்னுடைய உஜ்ஜீவநார்த்தமாகவே இவ்வளவு காரியம் செய்தான் என்கிறார்.

நரகு=நரகம் என்ற வடசொல் விகாரம். கும்பீபாகம், ரௌரவம் முதலிய கொடிய நரகங்களைக் கருதி வெந்நரகு என்கிறார். "யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா" [எம்பெருமானோடு கூடியிருக்கை ஸ்வர்க்கம்; அவனை விட்டுப் பிரிந்திருக்கை நரகம்] என்றபடி நான் தன்னை விட்டுப் பிரிந்திருக்கக் கூடாதென்று திருவுள்ளம்பற்றித் தனது திருவடிகளை என்னெஞ்சினுள் அமைத்தான் என்னவுமாம்.

இன்று இங்கு என்னெஞ்சால் இடுக்குண்ட=விஸ்தாரமான இடங்களிலே அன்று ஸுகமாக வளர்ந்து விளங்கின அத்திருவடிகள் இன்று இவ்விடத்திலே இந்தச் சிறிய நெஞ்சினால் இடுக்குப்பட்டன. இடுக்குண்ட என்றது—இடுக்குண்டன என்றபடி; வினைமுற்று. கால் என்பது பால்பகா அஃறிணைப் பெயராதலால் கால்கள் எனப் பொருள்படும். **21**

2606. காலே பொதத்திரித்து கத்துவராம் இனநாள்*
மாலார் குடிபுகுந்தா ரென்மனத்தே*—மேலால்
தருக்கு மிடம்பாட்டினொடும் வல்வினையார்தாம்*வீற்
றிருக்குமிடம் காணா திளைத்து. **22**

என் மனத்தே	எனது நெஞ்சினுள்ளே
மாலார் குடி புகுந்தார்	திருமால் வந்து சேர்ந்து விட்டார் ;
வல் வினையார் தாம்	(இதுவரையில் இங்கே குடியிருந்த) கொடிய பாவங்கள்
மேலால்	முன்பெல்லாம்
தருக்கும்	என்னைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்த
இடம் பாட்டினொடும்	பெருமையோடே
வீற்றிருக்கும் இடம் காணாது	(இனிமேலும்) அதிகாரம் செலுத்திக்கொண்டு தங்கியிருக்க இடம் காணாமல்
கால் பொத திரிந்து	கால் நோவத்திரிந்து அலைந்ததனால்
இளைத்து	வருத்தமுற்று
இனநாள்	இப்போது
கத்துவராம்	கத்திக்கொண்டு கிடக்கின்றன போலும்.

* * *—எம்பெருமானுடைய திருவடிகள் தமது திருவுள்ளத்தில் வந்து சேர்ந்தனவாகக் கீழ்ப்பாட்டில் அருளிச்செய்தார். அவயவியான வ்யக்தியைவிட்டு அவயவமான திருவடிகள் தனியே வந்து சேரமாட்டாவாகையால், எம்பெருமானே தமது திருவுள்ளத்தில் வந்து சேர்ந்தமையைக் கூறினபடியாய்த்து. அதை இப்பாட்டில் "மாலார் குடிபுகுந்தார் என் மனத்தே" என்று வ்யக்தமாக அருளிச்செய்து, இன்றுவரையில் என்னுடைய நெஞ்சினுள் துக்கங்களும் பாவங்களும் நித்யவாஸம் பண்ணிக்கொண்டு செங்கோல் செலுத்திக் கிடந்தன ; இப்போது அவற்றுக்கு இங்கு இடம் கிடையாமையாலே 'எங்கே போய்க் குடியிருக்கலா'மென்று அவை அலைந்து திரிந்து வருந்துகின்றன என்று அருளிச்செய்கிறார்.

என்மனத்தே மாலார் குடிபுகுந்தார்=அடியவர்களிடத்திலே மிக்க மோஹங்கொண்டிருக்கின்ற எம்பெருமான் இன்று என்னுடைய நெஞ்சினுள்ளே குடிபுகுந்துவிட்டார் ; இருள் மூடிக் கிடந்தவிடத்தில் ப்ரகாசம் வந்து சேர்ந்தால் பிறகு இருள் தன்னடையே விலகிப் போய்விடுவதுபோல், இதுவரையில் இங்கே குடியிருந்த பாவங்கள் இனி இவ்விடத்தில் தங்கமாட்டாமல் கிளம்பிப்போய் 'இனி நாம் எங்கே சுகமாக வாழலாம்' என்று இடந்தேடுகின்றன. "ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல், அவனுடைய பேருந் தார்களுமே பிதற்ற" என்றபடி நான் வாழ்கிற வூரிலே எல்லாரும் என்னைப்போலவே யிருப்பார்களாதலால் அவை குடிபுகுவதற்கு எங்கே இடம் கிடைக்கும்? கால் பாவி நிற்க எங்கும் இடங் கிடைக்காமையினால் பரிச்ரமப்பட்டுத் திரிந்து அலைந்து பார்த்தன. எங்கும் இடம்வாய்க்கவில்லை ; "ஐயோ! இதுவரையில் ஆழ்வாருடைய நெஞ்சில் செங்கோல் செலுத்திக் கொண்டு வாழ்ந்த வெமக்கு இன்று இக்கதி நேர்ந்துவிட்டதே! என் செய்வோம்!" என்று கத்துகின்றன.

"வல்வினையார்தாம் மேலால் தருக்குமிடம் பாட்டினொடும் வீற்றிருக்குமிடம் காணாது காலே பொதத் திரிந்து இளைத்துக் கத்துவர்" என்று அந்வயித்துக் கொள்க.

அசேதனங்களான வல்வினைகள் வல்வினையார்தாம் என்று சிறப்பித்துக் கூறுவது ஏன் ; என்னில் ; "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பால்திணை யிழுக்கினுமியல்வே" என்பர் நன்னூலார் ; இழிவு தோற்றச் சொல்லவேண்டும்போதும் சீற்றந் தோற்றச் சொல்லவேண்டும்போதும் பால் திணைகளை மாறாடிச் சொல்லலாமென்றிருப்பதனால், சீற்றமும் இழிவும் தோற்ற இங்கு வினையார் என உயர்திணையாகக் கூறுகின்றாரென்க. துஷ்டர்களைக் கண்டால் "ஸ்வாமி எழுந்தருளுகிறார்" என்று சொல்வதுண்டிறே, அதுபோலக் கொள்க.

மேலால் தருக்குமிடம்பாட்டினொடும் வீற்றிருக்குமிடம் காணாது=மேலால் என்பதற்கு, இனிமேல் என்றும், இதற்கு முன்பு என்றும் பொருள் கொள்ளலாம். இதுவரையிலும் என்னை நெருக்கிக்கொண்டு பெருமதிப்போடு எழுந்தருளியிருந்த இந்த

வல்வினையார்கள் இப்படியே இன்னமும் எழுந்தருளியிருக்க இடம் காணுமல் என்றபடி. இனிமேல் பிறரை ஹிம்ஸித்துக்கொண்டு வைபவமாகக் குடியிருப்ப தற்கு உரிய இடம் காணுமல் என்றுமாம். இடப்பாடு—பெருமை.

வீற்றிருக்குமிடம்=வீற்றிருத்தலாவது வீறுதோற்ற இருத்தல்; வீறு—பெருமை. தனது பெருமைக்குக் குறையில்லாமல் மேனுணிப்போடே யிருத்தல் வீற்றிருத்த லெனப்படும். 'தாங்கள் விழுந்துகிடக்க இடம் கிடைக்காமல்' என்று இழிவாகச் சொல்லவேண்டியதை இப்படி மாற்றியருளிச்செய்தாரென்க.

எப்படியாவது ஓரிடத்தில் குடியிருந்து தீரவேண்டியவர்கள் ஓரிடத்தில் இடம் கிடைக்காவிடினும் மற்றுமெங்கேயாவது கிடைக்குமோவென்று பலவிடங் களிலும் திரிந்தலைந்து தடுமாறிப் பார்ப்பதுபோல இப்பாவங்களும் கால்நோவப் பலவிடங்களிலும் திரிந்துபார்த்தனவென்கிறார். காலேபோதத்திரிந்து என்பதனால். அப்படி திரிந்துபார்த்தும், "பொலிக பொலிக பொலிக! போயிற்று வல்லுயிர்ச் சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கி யாதொன்றுமில்லை, கலியுங்கெடுங் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல், மலியப் புகுந்திசை பாடி யாடி யுழிதரக் கண்டோம்" என்னும்படியான இந்நிலத்திலே கால் பாவுவதற்கு எங்கும் இடம் நேராமையாலே, கத்துவராம்='ஐயோ! எங்கள் குடியிருப்புப் போயிற்றே!' என்று வாய்விட்டுக் கதறுகின்றனவாம்.

இன்று எம்பெருமான் என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே எழுந்தருளினமை யால் என்னைப் பற்றிக்கிடந்த பாவங்களெல்லாம் பறந்துபோயின என்று சொல்ல வேண்டியதை இங்ஙனே ஒரு சமத்காரமாக விரித்துரைத்தாரெனக் கொள்க.

"இனநாள்" என்றும் "இந்நாள்" என்றும் பாடபேதங்களுண்டு; பொருள் ஒன்றே. 22

2607. இளைப்பா யிளையாப்பாய் நெஞ்சமே! சொன்னேன் *
இளைக்க நமன்தமர்கள் பற்றி—இளைப்பெய்த *
நாய்தந்து மோதாமல் நல்குவான் நல்காப்பான் *
தாய்தந்தை எவ்வுயிர்க்கும் தான். 23

நெஞ்சமே	ஓ மனமே !,	நல்குவான் நல் காப்பான்	(எம்பெருமான் நமக்கு) அருள் செய்தாலும் சரி, அருள் செய்யாவிட்டாலும் சரி ;
நமன் தமர்கள்	யமபடர்கள்	தான்	அந்த எம்பெருமான் தான்
இளைக்க பற்றி	பிடிக்கிற பிடியிலே நாம் துடிக்கும்படி நம்மைப் பிடித்து	எவ்வுயிர்க்கும்	எல்லாப் பிராணிகளுக்கும்
		தாய் தந்தை	தாயும் தகப்பனுமாவன் ;
இளைப்பு எய்த	அதற்கு மேலும் அதிகமாகத் துடிக்கும்படி	சொன்னேன்	(இவ்வுண்மையை உனக்குச்) சொல்லிவிட்டேன் ;
நாய் தந்து மோதாமல்	நாய்களை ஏவி நலியாமற்படி	இளைப்பாய் இளையாப்பாய்	இனி நீ அநர்த்தப்பட்டாலும் படு சுகப்பட்டாலும் படு.

* * *—எம்பெருமான் சில சமயங்களில் தனது பேருளைப் பிரகாசப்படுத்து வன்; சில ஸமயங்களில் உதாஸீநரைப்போல உபேக்ஷையாயிருந்திடுவன். அவன் எப்படியிருந்தாலும் நம்முடைய அத்யவஸாயம் மாத்திரம் மாறக்கூடாது; அவன் நம்மை ரக்ஷிக்கும் போதோடு ரக்ஷியாத போதோடு வாசியற அவனையே நாம் ஸகலவித பந்துவுமாகக் கருதி விச்வஸித்திருக்கவேணும்—என்கிற சாஸ்த்ரார்த் தத்தைத் திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிற முகத்தாலே அஸ்மதாதிகளுக்குத் தெரிவிக்கிறார் இதில்.

நமன் தமர்கள் இளைக்கப் பற்றி, இளைப்பு எய்த நாய் தந்து மோதாமல் (எம்பெருமான்) நல்குவான் நல்காப்பான்; தானே எவ்வுயிர்க்கும் தாய் தந்தை; (இதை) நெஞ்சமே! (உனக்குச்) சொன்னேன்; (இனி) இளைப்பாய் இளையாப்பாய்.

"காவலிற் புலனை வைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து நாவலிட்டுழி தருகின்றோம் நமன் றமர் தலைகள் மீதே" என்றபடி யமகிங்கரர்களை நாம் தகர்க்கும்படியும் அவர்களால் நமக்கு எள்ளளவு துன்பமும் நேரிடாதபடியும் எம்பெருமான் நம்மைக் காத்தருள்பவன். அப்படி அவன் நம்மைக் காத்தருளாவிடினும் அவனிடத்தில் நம்முடைய ப்ரதிபத்தி குலையக்கூடாது; "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய் தந்தையும் அவரேயினி யாவாரே" என்றபடி அவனையே நாம் ஸகலவித பந்துவுமாக விச்வஸித்திருக்க கடமைப்பட்டிருக்கிறோம். அவன் நம்மை ரக்ஷிக்கும்போதுதான் அவனிடத்தில் நாம் ப்ரபத்தி வைக்கவேண்டியது, உபேக்ஷித்தகாலத்தில் நாமும் அவனை உபேக்ஷித்து விடவேண்டியது என்று ஒருகாலும் கருதவொண்ணாது. நெஞ்சமே! இவ்விஷயம் எல்லார்க்கும் எளிதில் தெரியமாட்டாது; ரஹஸ்யமான இவ்வர்த்தத்தை அன்பினால் உனக்குக் காதுபடச் சொன்னேன்; இந்த என் வார்த்தையை நீ உறுதியாகக் கடைப்பிடித்திருப்பாயாகில் உனக்கு ஒருபோதும் இளைப்பு நேரிடாது; இந்த வார்த்தையை நீ அலக்ஷியம் செய்து விச்வாஸம் குலைய நின்றாயாகில் உனக்கு மிக்க இளைப்பு நேரிடும். உண்மை இது; இனி நீ உன் கருத்தின்படி ஒழுகலாம் என்றாராயிற்று.

யமபடர்கள் நம்மை வந்து பிடிக்கும்போதே நமக்கு மிக்க கிலேசம் உண்டாகும்படி பிடிப்பர்களாதலால் "நமன் றமர்கள் இளைக்கப்பற்றி" என்றார். அவர்கள் நம்மைப் பிடித்துக்கொண்டு போய், செந்நாய், கருநாய், வெறிநாய் முதலியவற்றை ஏவி நம்மை அளவற்ற க்லேசத்துக்கு ஆளாக்குவர்களாதலால் "இளைப்பெய்த நாய்தந்து மோதாமல்" என்றார்.

நல்குவான் நல்காப்பான் = நல்குதலாவது அருள்புரிதல்; அருள் செய்தாலும் செய்வன், அருள் செய்யாவிடினும் செய்யாதொழிவன் என்றபடி. அவன் எது செய்தாலும் "களைவாய் துன்பங் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்றிருப்பதே நமக்கு ஸ்வரூபம் என்கிறார் ஈற்றடியால்.

இளைப்பாய் இளையாப்பாய் = 'எக்காலத்திலும் அவனே எவ்வுயிர்க்கும் தாய் தந்தை' என்கிற அத்யவஸாயம் குலையாதிருந்தால் நீ தளர்வடையாமலிருக்கலாம்; அந்த அத்யவஸாயம் குலைந்தால் தளர்வடைவாய்; உள்ள விஷயத்தை உனக்கு நான் சொல்லி விட்டேனாகையால் இனி நீ தளர்ந்தாலும் தளர், தளராதொழிந்தாலும் ஒழி என்கிறார். 23

2608. தானே தனித்தோன்றல் தன்னளப்பொன் றில்லாதான்*
தானே பிறர்கட்கும் தற்றோன்றல்*—தானே
இளைக்கில் பார்கீழ்மேலா மீண்டமைப்பா னானால்*
அளக்கிற்பார் பாரின்மே லார்? 24

தானே தனி தோன்றல்	அவ்வெம் பெருமானொருவனே புருஷோத்தமன்;	பிறர் தானே கட்கும் தற் றோன்றல்	அவனே மற்றெல்லாம் பொருள்களிலும் வியாபித்திருப்பவன்;
தானே தன் அளப்பு ஒன்று இல்லாதான்	அவனே ஒப்பற்றவன்;	(தானே)	இப்படிப்பட்ட எம்பெருமானானே

இளைக்கில்	(ரக்ஷிக்குந் தொழிலில்) சளைத்து நிற்கிற பக்ஷத்தில்	மீண்டு அமைப்பான் ஆனால்	(தலைகீழானவற்றை அவனே) மறுபடியும் சரிப்படுத்தப் புகுந்தால்
பார்	இவ்வுலகமானது	பாரின் மேல் ஆர் அளக்கிற்பார்	இப்பூமியில் ஆர்தாம் (அவனுடைய ரக்ஷகத்வத்தை) அளவிடவுரியர்?
கீழ் மேல் ஆம்	தலைகீழாக விபரீதமாய்விடும்;		

* * *—"தாய் தந்தை யெவ்வுயிர்க்குந் தான்" என்றார் கீழ்ப்பாட்டில், அப்படி சொல்லி விடலாமோ? மற்றும் பல தேவதைகளும் ரக்ஷகராயிருக்கலாமே யென்று நெஞ்சு நினைக்க, அதைக் கண்டித்து, எம்பெருமானே ரக்ஷகன் என்பதை நன்கு நிலைநாட்டிப் பேசுகிறார் இதில்.

தானே தனித்தோன்றல் என்பதற்குப் பலவகையாகப் பொருள் கொள்ளலாம்; தோன்றல் என்று ஆண்மகனையும் அரசனையும் பெருமையிற் சிறந்தவனையும் சொல்லும்; அவ்வெம்பெருமானொருவனே புருஷோத்தமன்; அவனே உலகங்கட்கெல்லாம் இறைவன்; அவனே பெருமையிற் சிறந்தவன். இனி, தோன்றல் என்று வெளிப்படுதலுக்கும் பேராகையாலே, அவன் மற்றவர்களைப்போலே கருமங்களால் பிறப்பவனல்லன்; தன்னருளால் தானே தோன்றுதலையுடையவன் என்றுமுரைக்கலாம். "அஜாயமாநோ பஹுதா விஜாயதே; தஸ்யதீரா: பரிஜாநந்தி யோநிம்" என்று வேதம் கூறும். இதன் பொருள்:—எம்பெருமான் பிறப்பு இல்லாதவனாயினும் பல பிறவிகள் பிறக்கிறான்; அப்படி அவன் பிறப்பதற்குக் காரணம் இன்னதென்பதை ஞானிகள் அறிவர் என்பதாம். தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையினாலே பிறக்கிறானென்றபடி. இனி, தானே தனித்தோன்றல் என்பதற்கு எம்பெருமான் தன்னுடைய விருப்பமிருந்தால் மாத்திரம் பக்தர்களுக்கு ஸேவை ஸாதிப்பவனேயொழிய, வேறொரு காரணங்கொண்டு ஸேவை ஸாதிப்பவனல்லன் என்பதாகவுங் கருத்துரைக்கலாம்.

தன் அளப்பு ஒன்றில்லாதான் = தனக்கு வேறொருவரையும் ஒப்பாக உடைத்தாகாதவன். "ஒருவரையும் நின்னொப்பா ரொப்பிலாவென்னப்பா வென்கின்றாளால்" என்றது காண்க. உலக முழுவதும் இவனாலே படைக்கப்பட்டு இவனாலே காக்கப்பட்டு இவனாலே அழிக்கப்படுதலால், இவனோடு உபமானமாகப் போருவதற்கு யாருளர்?

தானே பிறர்கட்கும் தற்றோன்றல் = எந்த வஸ்துவிலும் அவன் அநுப்ரவேசித்திருப்பவன்; அவனில்லாமல் ஒரு துரும்பும் எழுந்தாடாதாகையால் எல்லாப் பொருள்கட்கும் தான் அந்தர்யாமியாயிருந்து அவற்றின் ஸத்தையை நோக்குமவன் என்கை. "கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையுமொரு தனி நாயகம்" என்றபடி.

தானே இளைக்கில் பார்கீழ்மேலாம் = இப்படி ஒரு தனி நாயகனாய் நின்ற எம்பெருமான் தான் ரக்ஷிக்குந் தொழிலில் சோம்பிக் கைவாங்கி நிற்பனாகில் இவ்வுலகம் முழுதும் அநாதமாய்த் தலை கீழாக விகாரப்பட்டுவிடும். அமைப்பானானால் பாரின்மேல் அளக்கிற்பார் ஆர்? = அமைத்தலாவது—பார் கீழ்மேலாகாதபடி ஒழுங்குபட நியமித்தல்; அவரவர்களை அந்தந்த நிலைமைகளிலே நிறுத்திக் காப்பாற்றுதல். இது செய்வதற்கு எம்பெருமானே சக்தன்; அவன் இப்படி நியமித்து ரக்ஷிக்குமாகில் அந்த ரக்ஷகத்வத்தை எல்லைகாணக் கூடியவர்கள் இவ்வுலகில் ஆருளர்? அவனுடைய ரக்ஷண ஸாமர்த்தியம் இப்படிப்பட்டதென்று பரிச்சேதித்தறிவதற்கே இங்கு ஆளில்லையென்னும்போது, வேறு ரக்ஷகரில்லையென்பது சொல்லவும் வேணுமோ? என்று கருத்து

மூன்றாமடியில் "பார் கீழ் மேலாமீண்டமைப்பானானால்" என்றவிடத்து, மீண்டு எனப் பிரிப்பதிற்காட்டிலும் ஈண்டு எனப் பிரித்தல் மோனையின்பத்திற்குச் சேர்ந்திருக்கும். ஈண்டு—இவ்வண்ணம், இவ்விடம், சீக்கிரம். மீண்டு என்று பிரித்தலில் பொருட்சுவை யிருப்பது கொண்டு பெரியவாச்சான் பிள்ளை மீண்டெனப், பிரித்தெடுத்துரைத்தருளினர். பார்கீழ்மேலான நிலைமையில் நின்றும் மீட்டு அமைப்பானாகில் என்கை. 24

2609. ஆரானு மாதானும் செய்ய *அகலிடந்தை
ஆராய்ந் ததுதிருத்த லாவதே ?—சீரார்
மனந்தலை வன்துன்பத்தை மாற்றினேன் *வானோ
ரினத்தலைவன் கண்ணனால் யான். **25**

ஆரானும் ஆதானும் செய்ய	யாராவது எதையாவது செய்து கொள்ளட்டும் ;	சீர் ஆர் மனத் தலை	(எனது) சிறந்த மனத்தி லுள்ள
அகல் இடத்தை ஆராய்ந்து	விசாலமான இப்பூமியை ஆராய்ந்து	வன் துன்பத்தை	வலிய துன்பங்களை
அது திருத்தல் ஆவதே	அவரவர்களதுகாரியங்களைத் திருத்த நம்மாலாகுமோ ?	வானோர் இனம் தலைவன் கண்ணனால்	நித்ய ஸூரிகளின் திரளுக்குத் தலைவனான கண்ண பிரானால்
யான்	நானென்றால்	மாற்றினேன்	நீக்கிக்கொண்டேன்.

* * *—கீழ்ப்பாட்டில் விரித்துரைத்தபடி எம்பெருமானே ஸர்வ ரக்ஷகனாயிருக்கவும் இதனைப் பலர் தெரிந்துகொள்ளாமல் புறந்தொழுகின்றபடியைக் கண்ட ஆழ்வார், இவ்வுண்மைப் பொருளைப் பலர்க்கும் உபதேசித்துத் திருத்துவோம் என்று முயன்றார் ; "கருவிலே திருவிலாதீர் காலத்தைக் கழிக்கின்றீரே" என்றபடி ஜாயமான கடாக்ஷமில்லாதார் பலருளராகையால் அவர்கள் திருந்திவரக் கண்டிலர்; "சொன்னால் விரோதமிது ஆகிலுஞ் சொல்லுவன் கேண்மினோ" என்று நாம் கெஞ்சிக் கெஞ்சி உபதேசித்த விடத்திலும் பாழும் ஸம்ஸாரிகள் திருந்தாவிடில் நாம் என் செய்வோம்? யானைக்குக் கோமணங்கட்ட யாரால் முடியும்? அளவில்லாமல் பரந்துகிடக்கிற இவ்வுலகத்திலுள்ளா ரெல்லாரையும் திருத்துவதென்றால் இது நம்மாலாகக்கூடிய காரியமோ? நம்மாலானது நாம் நன்மை சொல்லலாம்; ஆனவளவு சொல்லிப் பார்த்தோம் ; பாக்கியமுள்ளவர்கள் திருந்துவர்கள் ; கர்ப்ப துர்ப்பாக்யசாலிகள் இழப்பர்கள் ; யார் எப்படி வேணுமானாலும் செய்யட்டும் என்று முன்னடிகளில், ஸம்ஸாரிகள்மேல் வெறுப்புத்தோற்ற அருளிச்செய்கிறார். இந்த இருள்தருமா ஞாலத்திலே இவர்களைப்போல் நான் கெட்டுப் போகாமல் எம்பெருமானை யடிபணிந்து வாழப்பெற்றேனென்று தம்முடைய நிலைமைக்குத் தாம் உகக்கிறார் பின்னடிகளில் வழிப்போக்கர்களின் கைப்பொருள்களையெல்லாம் கொள்ளைகொள்ளுங் கள்வர் நிறைந்த காட்டிலே மற்றெல்லாரும் பறிகொடுத்து நிற்க, ஒன்றும் பறிகொடாமல் தப்பிப்போன வொருவன் "தைவாதீனமாய் நாம் தப்பப் பெற்றோமே!" என்று உகப்பதுபோல, ஆழ்வாரும், எல்லாரையும் மதிகெடுக்கின்ற இவ்விருள்தருமா ஞாலத்திலே முந்துற முன்னம் நாம் தப்பிப் பிழைக்கப் பெற்றோமே! என்று உகக்கிறாராய்த்து.

ஆரானும் ஆதானும் செய்ய=கற்றுணர்ந்தவர்களோடு கல்லாதவர்களோடு வாசியற எல்லாருமே இந்நிலத்தில் கலங்குவார்களாதலால் ஆரானும் என்கிறார். தேவதாந்தர பஜநம் பண்ணுவார் சிலர், உபாயாந்தரங்களை அநுஷ்டிப்பார் சிலர், ப்ரயோஜநாந்தரங்களை நச்சுவார் சிலர் என்றிப்படி தப்புச்செய்கைகள் பல இருப்பதால் ஆதானும் என்கிறார். ஸம்ஸாரிகளை யெல்லாம் திருத்துவதற்கென்றே திருவவ

தரித்த ஆழ்வார்தாமும் "அகலிடத்தை ஆராய்ந்து அது திருத்தலாவதே!" என்று திருவுள்ளம் வெறுத்துச் சொல்லும்படியாய்த்து ஸம்ஸாரிகளின் பொல்லாங்கு. வழிதப்பி நடக்கும் பிள்ளையின் பக்கல், பெற்ற தகப்பனும் சில ஸமயங்களில் மனம் வெறுத்து "அது எக்கேடு கெட்டாலும் கெட்டும்" என்று சொல்லிக் கைவாங்கியிருப்பதுண்டிறே.

மனத்தலை என்றவிடத்து, தலை—ஏழனுருபு; மனத்திலே என்றபடி. தம்முடைய நெஞ்சு திருத்தப்பெற்ற ஸந்தோஷத்தினால் "சீரார்மன" மென்கிறார். "வானோரினத்தலைவன்" என்று பரத்வமும் "கண்ணனால்" என்று ஸௌலப்யமும் சொல்லிற்று. நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாயிருக்கையாகிற மேன்மையைப் பாராமல் இடக்கை வலக்கை யறியாத இடையர்களுக்குள்ளே ஒருவனாக வந்து பிறந்து காட்டியருளின ஸௌலப்ய குணத்திலே நான் ஈடுபட்டு என்னுடைய மனத்துன்பங்களை யெல்லாம் போக்கிக்கொண்டேன்; துன்பங்களுக்கே நிலமான இவ்விபூதியில் நானொருவனாகிலும் இன்பம் பெற நேர்ந்ததேயென்று ஆநந்திக்கின்றேனென்றாராயிற்று. 25

2610. யானு மென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம் வல்வினையைக்
கானும் மலையும் புகக்கடிவான்*—தானோர்
இருளன்ன மாமேனி யெம்மிறையார் தந்த*
அருளென்னுந் தண்டா லடித்து. 26

ஓர் இருள் தான் அன்ன மா மேனி	இருள்தானே ஒரு வடிவு கொண்டாற்போலிருக்கிற விலக்ஷணமான திருமேனி யையுடைய
எம் இறையார்	எம்பெருமான்
தந்த	அளித்த
அருள் என்னும் தண்டால்	க்ருபையாகிற ஒரு தடியினாலே
வல் வினையை	கொடிய பாவங்களை
அடித்து	புடைத்து,
கானும் மலையும் புக	(அவை) காடுகளிலும் மலைகளிலும் சென்று புகுரும்படியாக
கடிவான்	துரத்துவதற்கு
யானும் என் நெஞ்சம் இசைந்தொழிந்தோம்	நானும் என் மனமுமாகிற இருவரும் இசைந்து நின்றோம்.

* * *—கீழ்ப்பாட்டில் "யான் வன் துன்பத்தை மாற்றினேன்" என்று துன்பங்களைத் தாம் போக்கிக்கொண்டதாக அருளிச்செய்தார்; ஆராய்ந்து பார்த்தவாறே, "யான் வன் துன்பத்தை மாற்றினேன்" என்று சொன்னது அவ்வளவு பொருத்தமானதல்லவென்றும் தமக்குக் கர்த்ருத்வம் தோன்றாமல் எம்பெருமானுடைய திருவருளுக்கே கர்த்ருத்வம் தோன்றும்படி ஸ்வரூபாநுரூபமாகப் பாசுரத்தைச் சிறிது மாறுபடுத்திச் சொல்லவேணுமென்றும் திருவுள்ளமுண்டாகி, கீழ்ப்பாட்டின் பின்னடிகளிற் கூறிய அர்த்தத்தையே ப்ரக்ரியா பேதத்தாலும் சப்த பேதத்தாலும் அருளிச்செய்கிறார்.

ஓரிருளன்ன மாமேனி யெம்மிறையார் தான் தந்த அருளென்னுந் தண்டால் வல்வினையை அடித்துக் கானும் மலையும் புகக் கடிவான் யானும் என்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்—என்று அந்வயம். எம்பெருமான் தனது நிர்ஹேதுக கருணையினால் என் பாவங்களைத் தொலைக்கத் தொடங்கினபோது அடியேனும் அடியேனுடைய நெஞ்சும் அக்காரியத்திற்கு உடன்பட்டிருந்தோமத்தனை; நான் செய்த காரியம் வேறொன்றுமில்லை என்கிறார்.

இருளன்னமாமேனி என்றது—கண்டவர்கள் நெஞ்சைக் குளிரச் செய்யவல்ல ச்ரமஹரமான திருமேனி யென்றபடி. அப்படிப்பட்ட தனது திருமேனியைக்

காட்டினபோதே பாவங்கள் அஞ்சி ஓடத்தொடங்கினபோலும். உலகத்தில் ஒருவனை அடித்துத் துரத்த வேண்டில் கொம்பு தடி முதலியன இன்றியமையாதன வாதலால், இவ்விடத்தில் பாவங்களைத் துரத்தித் தள்ளுவதற்கு எம்பெருமானுடைய திருவருளாகிற தடி ஸாதனமாயிற்றென்றார். "நீ பணித்தவருளென்னு மொள் வாளுருவி யெறிந்தேன்" என்ற திருமங்கை யாழ்வாரருளிச்செயல் இங்கு ஸ்மரிக்கத்தகும்.

"வல்வினையைக் கானும் மலையும் புகக் கடிவான்" என்ற விடத்து ஒரு ஆக்ஷேபம் தோன்றும்; வல்வினையென்பது உருத்தெரியக்கூடிய ஒரு வஸ்து வல்லவே; எம்பெருமானுடைய அநுக்ரஹமே புண்யமென்றும், அவனுடைய நிக்ரஹமே பாபமென்று மன்றோ சொல்லப்படுகிறது. ஆகவே பாபமென்பது உருத் தெரியாத அத்ருஷ்ட ரூபமான ஒரு வஸ்துவென்று தேறுகிறது. இப்படிப்பட்ட பாபத்தைத் தண்டாலடித்துக் காடுகளிலும் மலைகளிலும் ஓடிப்போய்விடும்படி துரத்துவதென்பது பொருந்தாத பேச்சாயிருக்கின்றதே! என்று சங்கிக்கக்கூடும். எம்பெருமானுடைய நிக்ரஹம் ஒழிந்துவிட்டது என்று சொல்லவேண்டியதை இப்படி சமத்காரமாகப் பேசுவர்கள் கவிகள் என்று தெளிக. பெரியாழ்வாரும் "நெய்க்குடத்தைப்பற்றி" என்கிற திருமொழியிலே இங்ஙனமே பன்னியுரைத்தா ரென்றுணர்க.

யானும் என்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்=அவன் அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றி மேல்விழுந்து வந்தபோது நான் இரய்த்துப் பின்வாங்காமல் அவனுடைய அநுக்ரஹத்துக்கு அநுமதிபண்ணி யிருந்தேனென்கை. 26

2611. அடியால் படிகடந்த முத்தோ? * அதன்றேல்
முடியால் விசும்பளந்த முத்தோ?—நெடியாய்!
செறிகழல்கொள் தாள்நிமிர்த்துச் சென்றுலக மெல்லாம்*
அறிகிலமால் நீயளந்த வன்று. **27**

நெடியாய்	பகவானே!
செறி கழல் கொள் தாள் நிமிர்த்து	செறிந்த வீரக் கழலை அணிந்த திருவடிகளை நீட்டி
உலகம் எல்லாம் சென்று நீ அளந்த அன்று	கீழுலகம் மேலுலகமெல்லாம் வியாபித்து அளந்த காலமாகிய த்ரிவிக்கிரமாவதாரத்திலே
அடியால் படி கடந்த முத்தோ	திருவடியால் பூமி முழுவதையும் அளந்து கொண்டதனாலுண்டான ஸந்தோஷமோ?
அது அன்றேல்	அல்லது,
முடியால் விசும்பு அளந்த முத்தோ	திருமுடியால் மேலுலகத்தையெல்லாம் அளந்துகொண்டதனாலுண்டான ஸந்தோஷமோ?
அறிகிலம்	அவ்விரண்டு ஸந்தோஷங்களுள் எந்த ஸந்தோஷம் இப்போது உன் நெஞ்சில் ஓடுகிறதென்பதை அறிகிறோமில்லை.

* * *—கீழ்ப்பாட்டில் "யானுமென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்று ஆழ்வார் பேசின பாசுரத்தைத் திருச்செவி சாத்தின எம்பெருமான் "இவ்விபூதியிலே இப்படிப்பட்ட வார்த்தை சொல்லுவாருமுண்டாவதே!; த்வம் மே என்றால் அஹம் மே என்கிற இந்நிலத்திலே "யானுமென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்று அழகாக ஒரு பாசுரம் செவிப்படுவது அற்புதமே!" என்றுகொண்டு பரமாநந்தப்பட்டான்; அதனை ஞானக்கண்ணாலே கண்டறிந்த ஆழ்வார், எம்பெருமானே! இப்போது உனது திருவுள்ளத்தில் ஓடுகிற ஆநந்தம் பண்டு உலகளந்த காலத்து உண்டான ஆநந்தத்தோடு ஒக்குமோ? அன்றி அவ்வானந்தத்தினும் மேற்பட்டதோ? என வினவுகின்றார்போலும்.

நெடியாய்! நீ செறிகழல்கொள் தாள் நிமிர்த்து உலகமெல்லாம் சென்று அளந்தவன்று அடியால் படிகடந்த முத்தோ? அதன்றேல் முடியால் விசும்பளந்த முத்தோ? அறிகிலம் என்று அந்வயம். "செரிகழல்கள்தாள்" என்று இக்காலத்தில் பாடம் வழங்கி வந்தாலும் "செறிகழல் கொள்தாள்" என்றே ப்ராசீந பாடமென்று அழகியமணவாளச்சீயர் அருளிச்செய்வர். அதுவே நன்கு பொருந்தும். நெருங்கின வீரத்தண்டைகளை அணிந்துள்ள திருவடிகளை நீட்டி உலகங்களை அளந்த காலத்தில் திருவடியாலே பூமிப்பரப்பை யெல்லாம் ஆக்ரமித்து ஸ்வாதீநப் படுத்திக்கொண்டதனல் ஒரு ஸந்தோஷமும், திருமுடியை நிமிர்த்தி மேலுலகங்களை யெல்லாம் அளாவி ஸ்வாதீனப்படுத்திக்கொண்டதனல் ஒரு ஸந்தோஷமும் ஆக இரண்டு ஸந்தோஷங்கள் உண்டாயின; அவற்றுள் எந்த ஸந்தோஷத்தோடொக்கும் இப்போதைய உன்னுடைய ஸந்தோஷம்? என்று கேட்கிறபடி.

[முத் ப்ரீதி: 'ப்ரமதோ' ஹர்ஷ:] என்ற அமரகோசத்தின்படி வடமொழியில் முத் என்று ஸந்தோஷத்திற்குப் பெயர்; அச்சொல்லே இங்குத் தமிழிலக்கணப்படி முத்து என்றிருக்கிறது.

"முடியால் விசும்பளந்த முத்தோ"= இவ்விடத்தில் ஒருசங்கை உதிக்கக்கூடும்; "ஒரு குறளாயிருநில மூவடிமண் வேண்டி உலகனைத்துமீரடியாலொடுக்கி" என்று திருமங்கையாழ்வாரும், "மாமுதலடிப்போதொன்று கவிழ்த்தலர்த்தி மண் முழுதுமகப்படுத்து. ஒண் சுடரடிப்போதொன்று விண் செலீஇ" என்று இவர்தாமும் அருளிச்செய்தபடி மேலே நீட்டப்பட்ட ஒரு திருவடியே மேலுலகங்களையெல்லாம் அளந்ததாயிருக்க முடியால் விசும்பளந்த என்று இங்கே இவர் அருளிச்செய்வானேன்? என்று, (இதற்கு ஸமாதாநம்:—) ஒரு திருவடியே மேலுலகங்களையும் அளந்ததென்பது உண்மையே; அந்தத் திருவடியோடு கூடத் திருமுடியும் ஓங்கி வளர்ந்தபடியாலும், எல்லாச் செயலையும் திருவடிக்கே சொன்னல் கண்ணெச்சிலாகுமென்று ஒரு செயலைத் திருமுடியிலேறிட்டுச் சொல்வோமென்று ஆழ்வார் திருவுள்ளம் பற்றினபடியாலும் முடியால் விசும்பளந்த என்றவிதில் அநுபபத்தி ஒன்றுமில்லை யென்றுணர்க.

முத்து என்பதற்கு அழகு என்கிற பொருளும் கொள்ள இடமுண்டாகையால் அப்பொருள்கொண்டு, எம்பெருமானே! நீ அடியால் பூமியையெல்லாம் அளந்தது அழகியதோ? அன்றி முடியால் மேலுலகங்களை யெல்லாம் அளந்தது அழகியதோ? இரண்டு காரியங்களில் எது அழகியது? சொல்லாய் என்று கேட்கிறுரென்றுரைக்கவுமாம். இரண்டும் அழகியதே என்று வெளியிடுவதே இக்கேள்வியின் கருத்தாகும். அளந்த என்றது அளந்தது என்றபடி. இப்பொருளில், உலகளந்தபடியைப் பரமபோக்யமாக அநுபவிக்கிறுர் என்று அவதாரிகை ஆகக்கடவது.

இனி, முத்து என்பதற்கு நவரத்னங்களிற் சேர்ந்த முத்துக்கள் என்றே பொருள் கொண்டு உரைப்பதும் ஒரு புடையுண்டு. திருவடியிலணிந்த வீரக்கழலில் சாத்தியுள்ள முத்துக்களே பூமியை அளந்துவிட்டனவோ? திருமுடியில் சாத்தியுள்ள முத்துக்களே விசும்பை அளந்து விட்டனவோ? என்கை. இப்பொருளில், கடந்த என்பதும் அளந்த என்பதும் ஈறுகெட்ட வினைமுற்றுக்கள். முத்தோ அடியால் படிகடந்தன, முத்தோ முடியால் விசும்பளந்தன? என்றபடி. உலகளந்த காலத்தில் திருவடியும் திருமுடியும் முத்துமயமாயிருந்தபடியால் அவயவங்கள் கண்ணுக்குத் தோற்றுமல் முத்துக்களே தோற்றின என்பதை வெளியிடுதல் இக்கேள்விக்குக் கருத்தாகும். 27

2612. அன்றே நம்கண்காணு மாழியான் காருருவம்*
இன்றேநாம் காணா திருப்பதுவும்*—என்றேனும்
கட்கண்ணால் காணாத வவ்வுருவை*—நெஞ்சென்னும்
உட்கண்ணேல் காணு முணர்ந்து. 28

என்றேனும்	எக்காலத்திலும்	ஆழியான் கார் உருவம்	திருவாழியை நிரூபகமாக வுடையனான எம்பெருமானுடைய கரிய திருமேனியை
கண் கண்ணால்	வெளிக்கண்ணாலே	நம் கண் காணும்	நமது புறக்கண்ணும்காணப் பெறும்;
காணாத	காணக்கூடாத	நாம் காணா திருப்பதுவும் இன்றே	நாம் அவ்வுருவத்தைக்காணாமல் வருந்திக் கிடப்பது அகக்கண்மலராத இப்போது மாத்திரமே.
அவ்வுருவை	அப்படிப்பட்ட விலக்ஷணமான திருவுருவத்தை		
நெஞ்சு என்னும் உள் கண் உணர்ந்து காணுமேல்	நெஞ்சாகிற அகக்கண் விகஸித்து ஸாக்ஷாத்கரிக்குமாகில்,		
அன்றே	அப்போதே,		

***—கீழ்ப்பாட்டில் உலகளந்த வரலாற்றைச் சிறிது ப்ரஸ்தாவம் செய்யவே, * ஓங்கி யுலகளந்த உத்தமனுடைய அந்த விலக்ஷணமான திருவுருவத்தை ஸேவிக்கப்பெற வேணுமென்று ஆழ்வார்க்கு ஆசை கிளர்ந்தது; கிளர்ந்தாலும் பரமபக்தி தலையெடுத்தாலன்றி அவன் ஸேவை ஸாதிக்கமாட்டானாகையால், அந்தப் பரமபக்தி தலையெடுக்கும்போது விகஸிக்கக் கூடியதான நெஞ்சென்னு முட்கண்ணுக்கு விஷயமாகக் கடவதான பரம்பொருள் நமது புறக்கண்ணாகிய மாம்ஸசக்ஷுஸ்ஸுக்கு இப்போது எப்படி விஷயமாகுமென்று தம்மில்தாமே ஸமாதானப்படுகிறார்போலும்.

என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண் உணர்ந்து காணுமேல் அன்றே ஆழியான் காருருவம் நம் கண் காணும்; நாம் காணாதிருப்பதுவும் இன்றே—என்று அந்வயம்.

[ந மாம்ஸசக்ஷுரபிவீக்ஷதே தம் = அந்த எம்பெருமானை மாம்ஸக் கண் காணமாட்டாது] என்றும், [ந சக்ஷுஷா பச்யதி கச்சனைநம் = ஒருவனும் இவ்வெம்பெருமானைக் கண்ணால் காண மாட்டான்] என்றும் வேதங்களிற் சொல்லுகிறபடியே யாராலும் ஒருகாலும் புறக்கண்ணால் காணமுடியாத பரமாத்ம ஸ்வரூபத்தை அகக்கண்ணால் காணமுயன்றால் காணலாமத்தனையொழிய, புறக்கண்ணால் இப்போது காண்கைக்கு என்ன ப்ரஸக்தி?

ஆழியான் காருருவம் அன்றே நம் கண் காணும் = நெஞ்சென்னுமுட்கண் காணுமேல் அன்றே ஆழியான் காருருவத்தை நம் கண் காணும்; நாம் காணாதிருப்பதுவும் இன்றே = நெஞ்சென்னுமுட்கண் காணப்புகாமையால் இன்று நாம் காணாதிருக்கின்றோம்.

கட்கண்ணால் = கண் என்று உலகத்தில் ஸாமாந்யமாக வ்யவஹரிக்கப்படுகிற கண்ணாலே என்றபடி. இந்த மாம்ஸசக்ஷுஸ்ஸாலே எம்பெருமானுடைய திருவுருவம் காணப்படாது என்னில், "கமலக் கண்ணனென் கண்ணினுள்ளான்" "என் கண்ணனை நான் கண்டேனே" "தேவர்கட்கெல்லாங் கருவாகிய கண்ணனைக் கண்டுகொண்டேனே" என்றிப்படி பலகாலும் கண்டதாகத் திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச்செய்வானேன்? என்றால், அவ்விடங்களெல்லாம் மாநஸ ஸாக்ஷாத்காரத்தையே சொல்லுகின்றனவாகையால் ஒரு குறையுமில்லை. "கமலக் கண்ணனென்று தொடங்கிக் கண்ணுள் நின்றிறுதி கண்டேனென்ற பத்தும் உட்கண்ணாலேயாய்" என்று ஆசார்யஹ்ருதய முடிவில் அருளிச் செய்தது

காண்க. அகக்கண் எனப்படுகிற ஞானக்கண் விகஸிக்கப் பெற்றவர்கள் புறக்கண்ணாலும் பரம்பொருளைக் காணவல்லராவர் என்பர் சிலர். அங்ஙனன்றி எம்பெருமான் தன்னுடைய விருப்பத்தாலே பரிக்ரஹித்துக் கொள்ளுகிற திவ்யமங்கள விக்ரஹம் மாத்திரம் பரமபக்தர்களுடைய புறக்கண்ணுக்குப் புலப்படுமேயன்றி அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபம் ஒருகாலும் புறக்கண்ணுக்குப் புலப்படாதென்பர் பெரியோர்.

இப்பாட்டில் "அன்றே நம் கண்காணும்" என்கிறாரே, இங்குக் கண் என்றது புறக்கண்ணோ அகக்கண்ணோ? என்னில்; புறக்கண் என்று கொள்க. அகக்கண் திறந்து திவ்யாத்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றோமாகில் பின்பு புறக்கண்ணாலே திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவிக்கப் பெறுவோம் என்பதே இப்பாட்டின் கருத்தாகக் கொள்ளத்தக்கது. 28

2613. உணர வொருவர் கெளியனே? செவ்வே*
இணரும் துழாயலங்க லெந்தை*—உணரத்
தனக்கெளிய ரெவ்வளவ ரவ்வளவ னானால்
எனக்கெளிய னெம்பெருமா னிங்கு. 29

இணரும் துழாய் அலங்கல் எந்தை	(திருமேனியின் ஸம்பந்தத்தாலே) மேன்மேலும் தழைத் தோங்குகின்ற திருத்துழாய் மாலையையுடைய எம்பெருமான்
ஒருவருக்கு	(தாமாகவே முயற்சிசெய்பவர்களில்) ஒருவர்க்காவது
செவ்வே	நேராக
உணர எளியனே?	அறியக் கூட்டியவனே?
(ஒருவர்க்கும் அறியக் கூடியவனல்லனாயினும்)	
தனக்கு எளியர்	தனக்கு அடிமைப்பட்டவர்கள்
எவ்வளவர்	(தன்மேல்) எவ்வளவு அன்பு உடையவர்களோ
அவ்வளவன்	அவர்களுக்குத் தானும் தன்னை அவ்வளவு காட்டிக் கொடுப்பவன் (திருமால்);
ஆனால்	ஆகையினாலே
இங்கு	இவ்விடத்தில்
எம்பெருமான் எனக்கு உணர எளியன்	எம்பெருமான் என்னாலறிந்து கொள்ளக்கூடியவன்

* * *—"இன்றே நாம் காணாதிருப்பதுவும்" என்று கீழ்ப்பாட்டில் ஆழ்வார் பேசின பேச்சு எம்பெருமானது திருச்செவியில் விழுந்தவாறே "ஆழ்வாருடைய திருவாயினாலே இப்படி சொல்லும்படி நாம் அருமைப்பட்டிருக்கலாமோ? 'நாங் காணாதிருப்பதுவும்' என்கிற வார்த்தை சொல்லவேண்டியவர்கள் *உண்டியே உடையே உகந்தோடும் ஸம்ஸாரிகளே யொழிய, * உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன் என்றிருக்கிற ஆழ்வார் இவ்வார்த்தை சொல்லும்படி ஆகலாமோ? ஆழ்வார்க்கு நாம் எளிமைப்பட்டு நம்மை அவர்க்குக் காட்டிக் கொடுக்க வேண்டாவோ" என்று திருவுள்ளங்கொண்ட எம்பெருமான் தன்னுடைய ஸௌலப்ய குணத்தை ஆழ்வார் நெஞ்சிலே பிரகாசப்படுத்த, அதனை அநுபவித்துப் பேசுகிறாரிதில்.

இணருந் துழாயலங்க லெந்தை ஒருவர்க்கு செவ்வே உணர எளியனே? (எளியனல்லன்) (ஆனபோதிலும்) எம்பெருமான் தனக்கு எளியர் எவ்வளவர் அவ்வளவன்; ஆனால் எனக்கு இங்கு உணர எளியன் என்று அந்வயம்.

"தோளிணைமேலும் நன்மார்பின்மேலுஞ் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந் துழாயுடையம்மான்" என்றபடி திருத்துழாய் மாலைகளைப் பரமபோக்யமாக அணிந்துகொண்டுள்ள எம்பெருமான் யாராலாவது

உள்ளபடி அறிந்து கொள்ளக் கூடியவனே? ஸ்வப்ரயத்நத்தால் ஒருவராலும் அறிந்துகொள்ளக்கூடியவனல்லன்; ஒருவனுடைய ஞானத்துக்கும் எம்பெருமான் விஷயமாகிறதில்லை என்று சொல்லிவிட்டால், ஆகாசத்தாமரை, முயற்கொம்பு, மலடிபிள்ளை முதலான வஸ்துக்கள்போல் ப்ரஹ்மமும் அடியோடு இல்லாதபொருள் என்று தேறிவிடுமே என்று நினைக்க வேண்டா; ஒருவருடைய ஞானத்துக்கும் எம்பெருமான் விஷயமாகிறதில்லையென்று யாரும் சொல்லவரவில்லை. எவரெவர்கள் எவ்வௗவெவ்வளவு அன்பு பாராட்டுவர்களோ அவரவர்களுக்கு அவ்வளவவ்வளவு எம்பெருமான் தன்னைக் காட்டிக்கொடுப்பன் என்றே சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருப்பதால் நானும் என்னுடைய அன்புக்குத் தக்கவளவு எம்பெருமானை லபிக்க உரியேன் என்கிறார்.

முதலடியில் "ஒருவர்க்குச் செவ்வே உணர எளியனே" என்றது—அன்பு அற்ற ஒருவர்க்கும் ருஜுவாக அறியக்கூடாதவன் என்றபடி. புத்தி சாதுரியத்தாலே சாஸ்த்ரங்களை யெல்லாம் ஸந்தேஹமறக் கற்றுணர்ந்தவர்களுக்கும் பக்தியில்லாத வளவில் ப்ரஹ்மஜ்ஞான முண்டாகமாட்டாதென்று பெரியோர்களால் சொல்லப்பட்டுள்ளது. "யே து த்வதங்க்ரி ஸரஸீருஹபக்தி ஹீநா: தேஷாம் அமீ பிரபி நைவ யதார்த்த போத:—பித்தக்ந மஞ்ஜந மநாபுஷி ஜாது நேத்ரே நைவ ப்ரபாபிரபி சங்கஸிதத்வபுத்தி:" [எம்பெருமானே! உனது திருவடித் தாமரைகளில் அன்பு இல்லாதவர்கள் எவரோ அவர்களுக்கு சாஸ்த்ரங்களாலும் உண்மையுணர்ச்சி உண்டாகமாட்டாது; பித்தம் கொண்டவனுடைய கண்ணில் பித்தஹரமான அஞ்ஜனம் இடாவிடில் ஆயிரம் ஸூரியர்கள் காய்ந்தாலும் சங்கு மஞ்சள் நிறமாகக் காணப்படுமேயன்றி வெண்ணிறமாகக் காணப்படாதன்றோ, அதுபோல.] என்று ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் கூரத்தாழ்வானருளிச் செய்தது இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

இணருந்துழாயலங்கல் என்றவிடத்துப் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த அர்த்த விசேஷம் குறிக்கொள்ளத்தக்கது;—"[இணரும்] தன்னிலத்திற் காட்டிலும் இவன் தோளில் விகஸியா நிற்கும்; தேவர்கள் தோளில் மாலை வாடாது; ஸர்வாதிகனுகையாலே இவன் தோளிலிட்டது அரும்பியா நிற்கும்" என்று. தேவர்கள் மாலை அணிந்துகொண்டால் அந்த மாலை தோளில் வாடாமல் வதங்காமல் விளங்கிக்கொண்டிருக்கும் என்பது மாத்திரமே யுள்ளது; ஸர்வாதிகனுன எம்பெருமானுடைய திருத்தோளிலோ வென்னில், மாலை வாடாதிருப்பது மாத்திரமேயன்று; மேன்மேலும் அரும்புவிட்டு விகஸிப்பதும் செய்யும் என்று, இணரும் என்ற பதஸ்வாரஸ்யத்தை நோக்கி இங்ஙனே அருளிச் செய்யப்பட்டதென்க. இணர்தலாவது கொத்துக்கொத்தாக அலர்தல்.

எம்பெருமான் தனக்கு எளியர் எவ்வளவர், (தானும்) அவ்வளவன்="பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே வாச மலர்த்துழாய் மாலையான்—வடிவு." என்று பேயாழ்வாரருளிச்செய்ததை ஒரு புடையொத்திருக்கின்றது இதுவும். தாழ்ந்தவர்களைச் சொல்வதான எளியர் என்ற சொல் இங்கு தாத்பர்ய வ்ருத்தியால் சேஷபூதர்களைச் சொல்லுகிறது. தனக்கு அடிமைப்பட்டவர்கள் எவ்வளவு அன்பையுடையவர்களாக இருக்கின்றார்களோ அவ்வளவாகத் தானிருப்பன்; "பசிக்குத் தக்க ப்ரஸாதம்" என்னுமாபோலே, ஸ்நேஹத்துக்குத்தக்க ஸ்வரூபாவிஷ்காரஞ் செய்வனும் எம்பெருமானும். ஆனல் எனக்கெளியனெம்பெருமானிங்கு=ஆனல் என்றது ஆனதால் என்றபடி. அன்புக்குத் தக்கவளவு தன்னைக் காட்டிக் கொடுப்பவனுகையாலே என்னுடைய அன்புக்குத் தக்கவளவு எனக்கு அவன் எளியனுகத் தடையில்லை என்றாராயிற்று. 29

2614. இங்கில்லை பண்டுபோல் வீற்றிருத்தல்*என்னுடைய
செங்கண்மால் சீர்க்கும் சிறிதுள்ளம்*—அங்கே
மடியடக்கி நிற்பதனில் வல்வினையார்தாம்*ஈண்டு
அடியெடுப்ப தன்றோ வழகு? 30

இங்கு	என்னுடைய இந்த நெஞ்சில்	அங்கே	முன்பு விசாலமாக வாழ்ந்த விடத்திலே
பண்டு போல்	இத்தனை நாளும் போலே	வல்வினையார் தாம்	கொடிய பாவங்கள்
வீற்றிருத்தல் இல்லை	(பாவங்கள் இனி) தங்கியிருக்க முடியாது; (ஏனென்றால்)	மடி அடக்கி நிற்பதனில்	துணியை இடுக்கிக்கொண்டு நெருக்கமாக நிற்பதைவிட
என்னுடைய செம் கண் மால்	என்மேல் வாத்ஸல்யத்தாலே சிவந்த திருக்கண்களை யுடையனான பெருமானுடைய	ஈண்டு	இவ்விடத்தில் நின்றும்
சீர்க்கும்	கல்யாண குணங்களுக்கே	அடி எடுப்பது அன்றோ அழகு	கால் பேர்ந்து வெளிக் கிளம்பிப் போவதன்றோ அழகியது.
உள்ளம் சிறிது	எனது நெஞ்சு இடம்போராததாயிருக்கின்றது,		

* * *—கீழ்ப்பாட்டில் "எனக்கெளிய னெம்பெருமானிங்கு" என்று எம்பெருமானுடைய ஸௌலப்யகுணத்தை அநுஸந்தித்தார்; அந்த குணாநுபவம் வரவர அதிகரித்துத் திருவுள்ளத்தில் தாங்கமுடியாதபடி விஞ்சிற்று; விஞ்சவே, அந்த ஆநந்தத்தினால் பாவங்களைக் குறித்துப் பேசுகின்றார். ஓ பாவங்களே! பகவத் குணாநுபவத்திற்கே என் நெஞ்சில் இடம் போரவில்லை; அதற்கே இன்னும் இடம் கடன் வாங்க வேண்டியிருக்கிறது; அப்படியிருக்கும்போது உங்களுக்கு இங்கே இடம் ஏது? ஒரு மூலையில் சுருங்கிக்கொண்டு கிடக்கிறோமென்று நீங்கள் சொல்லக்கூடும்; அப்படி வருத்தப்பட்டுக் கொண்டு இங்கு இருக்கவேண்டா; விசாலமாகக் கிடப்பதற்குரிய வேறிடந் தேடி ஓடிப்போங்கள் என்கிறார்.

பண்டுபோல் வீற்றிருத்தல் இங்கில்லை=பாவங்களே! இது வரையில் நீங்கள் என்னுடைய நெஞ்சை உங்களுக்கு வாஸஸ்தானமாக ஆக்கிரமித்துக் கொண்டு உங்களுடைய பெருமையெல்லாந் தோற்ற விசாலமாகக் கிடந்தீர்கள்; நான் பகவத் விஷயவாஸனை யறியாத காலத்தில் நீங்கள் என் நெஞ்சில் குடியிருந்தீர்களத்தனை; இனி அப்படியிருக்க முடியாது; ஏனென்றால், இப்போது என்னெஞ்சு பகவத் குணாநுபவம் பண்ணத் தொடங்கிவிட்டது. *"உயர்வறவுயர் நலமுடையவன்" என்றபடி அநந்த கல்யாண குணாத்மகனான அப்பெருமானுடைய குணங்களுக்கே இங்கு இடம் அற்பமாயிருக்கும்போது உங்களுக்கு இங்கே இடம் கிடைக்க ப்ரஸக்தி ஏது?—என்றிப்படி ஆழ்வார் பாபராசிகளை சேதநஸமாதியாலே விளித்துச் சொன்னவாறே, அவை "ஆழ்வீர்! நெடுநாள் இங்கே பழகிக்கிடந்த எங்களை இன்று இப்படி அடித்துத் துரத்தி விடலாகாது; உமது நெஞ்சில் எங்களுக்கு முன்போல் விசாலமாக இடம் கிடைக்காவிட்டாலும் ஒரு மூலையில் பதுங்கி நிற்கும்படி மிக்க சுருக்கமான இடம் கிடைத்தாலும் எங்களுக்குப் போதும்; அரைத் துணிகளை இடுக்கி நெருக்கிப் பிடித்துக்கொண்டு ஒரு மூலையிலே மழைக்கு ஒதுங்கி நிற்பாரைப்போலே நாங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டாகிலும் ஒரு பக்கமாகக்கிடக்கிறோம்; எங்களை விலக்காமல் இடங்கொடுத்துக் காத்தருளவேணும்" என்று பணிந்து வேண்டிக்கொள்ள, பின்னடிகளால் அதற்கு மறுமொழி கூறுகின்றார்—பெருமை தோற்ற நன்றாக வாழ்ந்தவர்கள் அப்படி வாழமுடியாமல் கஷ்டப்பட நேர்ந்தகாலத்துக் கண்மறைய ஓடிப்போய் விடுவதன்றோ அழகு என்கிறார்.

வல்வினைகாள்! என்று முன்னிலையாகக் கூறாமல் வல்வினையார்தாம் என்று படர்க்கையாகக் கூறியதனால் அவற்றின்மேல் ஆழ்வார்க்குள்ள கோபமும் த்வேஷமும் நன்கு விளங்கும். முகம் நோக்கி வார்த்தை சொல்லக் கூசுகின்றாரென்க.

"இங்கே மடியடக்கி நிற்பதனில்" என்று பாடமிருந்திருக்கவேணுமென்று சிலர் சொல்லுவர்; அது வேண்டா; அங்கே என்றிருப்பதே அழகியது. ஆழ்வாருடைய நெஞ்சுக்கும் பாவங்களுக்கும் இப்போது நெடுந்தூரம் உள்ளமை உணர்க. தூரமான இடத்தைக் குறிப்பிடும்போது அங்கே என்றே குறிப்பிடவேண்டும். தவிரவும், "அங்கே மடியடக்கி நிற்பதனில் மீண்டடியெடுப்பதன்றோ வழகு" என்று உலகவழக்கச் சொல்லாகவும் கருதத் தக்கது. 'தாங்கள் பெருமையாக வாழ்ந்த விடத்திலே தங்களுக்கொரு குறைநேரிட்டால் அவ்விடத்திலேயே பிறர் சிரிக்கும்படி வருந்தி வாழ்வதிற்காட்டிலும் அவ்விடத்தைவிட்டுக் கண்மறைய ஓடிப்போவது நலம்' என்று உலகில் ஸாமாந்யமாக வழங்குவதுண்டிறே; அந்த வார்த்தையை அநுவதிக்கிறபடியாகவுமிருக்கின்றது.

இங்கு, மடியடக்கி நிற்பதனில் என்றது எங்ஙனே பொருந்தும்? பாவங்களுக்கு மடியென்று ஒன்றுண்டாகிலன்றோ அதை யடக்கி நிற்க வேண்டா என்னலாம்— என்று சிலர் சங்கிக்கக்கூடும்; வல்வினையார் என்று உயர்திணையாகச் சொன்னதுக்குச் சேர உலக வழக்கச் சொல்லையும் கூட்டிக்கொண்டு அருளிச் செய்கிறபடி. மூன்றாமடியின் இறுதியில் மீண்டு என்றும் ஈண்டு என்றும் பதம் பிரிக்கலாம். ஈண்டு என்பதற்கு சீக்கிரமாக என்றும் பொருள் கொள்ளலாம். 30

2615. அழகு மறிவோமாய் வல்வினையைத் தீர்ப்பான்*
நிழலு மடிதாறு மானோம்*—சுழலக்
குடங்கள் தலைமீதெடுத்துக் கொண்டாடி*அன்றத்
தடங்கடலை மேயார்த மக்கு. **31**

வல் வினையை தீர்ப்பான்	வலிய பாவங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக
அழகும் அறிவோம் ஆய்	அழகிய உபாயத்தை அறிந்தோமாக,
குடங்கள்	குடங்களை
தலைமீது எடுத்துக் கொண்டு	தலையின்மேலே எடுத்து வைத்துக்கொண்டு
சுழல ஆடி	ஆகாசத்திலே சுழன்றுவரும்படி கூத்தாடி
அன்று	முற்காலத்திலே

(அக்குடக்கூத்தாடினவிடாய் தீர்வதற்காக)

அத் தடங் கடலை மேயார் தமக்கு	(முதலில் விட்டு வந்த) அப்பெரிய திருப்பாற் கடலிலேயே போய்ச் சேர்ந்த பெருமானுக்கு
நிழலும் அடி தாறும் ஆனோம்	பாத நிழலாகவும் பாதரேகையாகவும் உடன்பட்டோமானோம்.

(வல்வினையைத் தீர்ப்பதற்கு அறிந்த உபாயம் இதுவே.)

* * *—வல்வினையைத் தீர்ப்பான் அழகுமறிவோமாய், குடங்கள் தலைமீதெடுத்துக் கொண்டு சுழல ஆடி அன்று அத்தடங்கடலைமேயார் தமக்கு நிழலும் அடிதாறும் ஆனோம் என்று அந்வயிப்பது. கீழ்ப்பாட்டில் "வல்வினையார் தாமீண்டடி யெடுப்பதன்றோ அழகு" என்று பாவங்களை யெல்லாம் துரத்தித் தள்ளும்படியானார். 'நெடுநாளாகப் பாவங்களின் கீழே அமுக்குண்டிருந்த உமக்கு இன்று இப்படிப்பட்ட சக்தி எங்ஙனே உண்டாயிற்று?' என்று யாராவது கேட்கக்கூடுமே; அவர்களுக்கு ஸமாதாநமாம்படி இப்பாட்டு அருளிச்செய்கிறார். வல்வினைகளைத் துரத்தித் தள்ளுவதற்கு அழகான ஒரு உபாயமறிந்தோம்; அஃது என்னென்னில்; எம்பெருமானுக்குத் திருவடி நிழல் போலவும் திருவடி ரேகை போலவும் விட்டு நீங்காது அத்தாணிச் சேவகமானோம். ஆகவே; காரியம் கை கூடிற்று என்கிறார்.

"ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:. நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யா கதோ மதுராம் புரீம்." என்றபடி திருப்பாற் கடலில் நின்றும் எழுந்தருளி ஸ்ரீக்ருஷ்ணனாய்த் திருவவதரித்துக் குடக்கூத்தாடி, அந்த ஆட்டத்தினாலுண்டான விடாய் தீர மீண்டும் திருப்பாற் கடலிலே போய்ச் சேர்ந்து சயனித்து இளைப்பாறுகின்ற பெருமானுக்கு நிழலும் அடிதாறுமானோம் என்கிறார்.

"அத்தடங்கலே" என்றவிடத்து அகரச் சுட்டு—எந்தத் திருப்பாற்கடலில் நின்றும் வந்து அவதரித்தாரோ அந்தத் திருப்பாற்கடலிலேயே போய்ச் சேர்ந்தா ரென்கைக்காக. மேயார்—மேவியவர்.

அழகுமறிவோமாய்=அழகு என்பதற்கு உபாயம் என்ற மட்டும் பொருள் கொண்டது பிரகரண பலத்தினுலென்க.

"வல்வினையும் தீர்ப்பான்" என்றும் பாடமுண்டு. தீர்ப்பான்—பான்விகுதி பெற்ற எதிர்கால வினையெச்சம்.

நிழலுமடிதாறுமானேம்='நிழலானேம்' என்று முதலில் சொன்னுர்; அதில் த்ருப்தி பிறக்கவில்லை; உலகத்திலே நிழலானது வ்யக்தியை விட்டுத் தனிப்படவும் காணப்படும். அப்படியல்லாமல் வ்யக்தியோடு உடன்பட்டே காணக்கூடியது பாதரேகையால் "அடிதாறுமானேம்" என்று பின்னே சொன்னுர். தாறு என்று அளவுக்கும் ரேகை [கோடு]க்கும் பேராகையாலே, பாதத்தளவான பாதுகையென் றும் பாதரேகையென்றும் பொருள் கொள்ளலாம். ஸம்ப்ரதாயத்திலே எம்பா ரைச் சொல்லும்போது 'எம்பெருமானுடைய திருவடி நிழல்' என்றும், ஸ்ரீவான மாமலைச் சீயரைச் சொல்லும்போது 'மணவாளமாமுனிகளுடைய திருவடிரேகை' என்றும், முதலியாண்டானைச் சொல்லும்போது 'எம்பெருமானுருடைய பாதுகை' என்றும் அவரவர்களுடைய தனியன்களில் அநுஸந்திக்கப்பட்டு வருமாறு காண்க. ["ராமாநுஜ பதச்சாயா" "ரம்யஜாமாத்ருயோகீந்த்ர பாதரேகாமயம்" "பாதுகே யதிராஜஸ்ய" இத்யாதிகள் தனியன்கள்.]

மூன்ருமடியிலும் நான்காம்டியிலும் "குடங்கடலை" "தடங்கடலை" என யமகம் அமைந்தமை காண்க. 31

2616 தமக்கடிமை வேண்டுவார் தாமோதரனுர்
தமக்கு * அடிமைசெய்யென்ருல் செய்யாது *—எமக்கென்று
தாம்செய்யும் தீவினைக்கே தாழ்வுறுவர் நெஞ்சினுர் *
யாம்செய்வ திவ்விடத்திங்கி யாது ? **32**

தமக்கு அடிமை வேண்டுவார்	தாம் அடிமையாய் யிருப்ப தற்கு ஆசைப்படும்வரான	செய்யாது	அப்படியே அடிமை செய்யாமல்
		எமக்கென்று	என் வார்த்தை கேளாத ஸ்வாதந்திரியம் பாராட்டி
தாமோதரனுர் தமக்கு	தாம்பாலாப்புண்ட பெருமானுக்கு	தாம் செய்யும் தீ வினைக்கே	(வெகுகாலமாகத்) தான் செய்து வருகிற தப்புக் காரியத்திலேயே
அடிமை செய் என்ருல்	('நெஞ்சே! நீ') அடிமை செய் என்று சொன்னுல்	தாழ்வுறுவர்	ஊன்றி யிருக்கின்றது;
		இங்கு	இப்படிப்பட்ட நிலைமையில்
நெஞ்சினுர்	எனது நெஞ்சானது	யாம் செய்வது யாது	நான் செய்யத்தக்கது என்னே?

* * *—கீழ்ப்பாட்டில் "நிழலுமடிதாறுமானேம்" என்று தாம் எம்பெரு மானேடு ஐக்கியப் பட்டமையைப் பேசினுரே; உடனே இவருடைய நெஞ்சானது பழையபடியே நைச்சியம் பாவித்துப் பின்வாங்கத் தொடங்கிற்று. அந்த நிலைமை யைக் கண்டு ஆழ்வார், 'அந்தோ! என் செய்வேன்? நெஞ்சு அநுகூலித்து வரும் போது எம்பெருமான் அருமைப்படுகிருன்; எம்பெருமான் எளியனும்போது நெஞ்சு பின்வாங்குகிறது; இந்த இழவுக்கு என்ன செய்வேன்?' என்று அலமருகின்ருர். பாயை விரித்துவிட்டுக் கணவனை அழைத்து வரப் போவளாம் ஒரு நாயகி; கணவனை அழைத்து வருவதற்குள்ளே பாய் சுருட்டிக்கொள்ளுமாம்; மறுபடியும் பாயை

விரிக்கப் பார்ப்பளாம்; அந்த க்ஷணந்தன்னிலே நாயகன் ஓடிப்போவனும். பாயை விரிப்பதற்கும் கணவனை யழைத்து வருவதற்குமே அவளுடைய போது சரிப்போகுமாம். அப்படியே ஆழ்வார்க்கு நெஞ்சை இணங்கிக் கொள்வதற்கும் எம்பெருமானை இழுத்துப் பிடிக்க நினைப்பதற்குமே போது சரிப்போகிறது போலும். இவர்க்கு இப்படியே அடிக்கடி சிரமம் உண்டாவதுபற்றி அந்த வருத்தம் தோன்ற "யான்செய்வதிவ்விடத்திங்கியாது" என்று தீநஸ்வரப் பாசுரம் பேசுகிறபடி காண்மின்.

"தமக்கடிமை வேண்டுவார்" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்; 'தாம் பிறர்க்கு அடிமை செய்ய ஆசைப்படுவன் எம்பெருமான்' என்கிற ஒரு பொருளும், 'தமக்கு அடிமை செய்வார் வேணுமென்று எம்பெருமான் ஆசைப்பட்டிருப்பன்' என்கிற மற்றொரு பொருளும் செவ்வனே கிடைக்கும் அடிமை என்ற பதத்திற்கு சேஷத்வம் என்றும், சேஷபூதர் என்றும் அர்த்தமுண்டாகையாலே இவ்விரண்டு யோஜனைகளும் ஒக்கும். தனக்கு சேஷத்வத்தை வேண்டுகையாவது—தான் தாஸனாயிருக்க விரும்புகை. தனக்கு சேஷபூதரை வேண்டுகையாவது—தான் ஸ்வாமியாயிருக்க நினைக்கை. எம்பெருமானுக்கு ஸ்வாமித்வம் அஸாதாரணமாயிருக்கச் செய்தேயும் சேஷத்வத்திலே அவனுக்கு ஆசையாம். ஏனென்னில்; தனக்கு அடிமைப்பட்டவர் பரமாநந்தமடைகிறபடியைத் தான் காண்கையினாலே, தான் ஸ்வாமியா யிருக்குமிருப்பிலே அவ்வளவு ஆனந்தமில்லை யென்றும் சேஷப்பட்டிருக்கு மிருப்பிலேயே ஆநந்த மிகுதியுண்டென்றும் கை கண்டு, சேஷித்வத்திற் காட்டிலும் சேஷத்வத்திலே மிக்க விருப்பமுடையனா யிருக்கிறானும் எம்பெருமான். இங்கு இவ்வர்த்தத்தையே பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்கிறார்—"தமக்கு அடிமையை உகக்குமவர்; அது எங்கே கண்டோமென்றால் [தாமோதரனார்] அநுகூலையான தாயார்க்கு அடியுண்பது கட்டுண்பதான விடத்திலே கண்டோம்." என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி.

தாமோதரனார் என்ற சொற்சேர்க்கை யழகுக்கு ஏற்ப இவ்வர்த்தமே இங்குப் பொருந்தும். தாமோதரன் என்றால் கயிற்றை வயிற்றிலே உடையவன் என்று பொருள். அதாவது—வெண்ணெய் களவு கண்ட காரணத்திற்காக யசோதைப் பிராட்டியினால் கண்ணிநுண் சிறுத்தாம்பு கொண்டு கட்டப்பட்டவன் என்கை. இதனால், எம்பெருமானுக்கு, சேஷத்வத்திலே விருப்பமுடைமை விளங்குமிறே. இங்கே இவ்விசேஷண மிடுவதற்குப் பயன்யாதெனில்; சேஷியாக இருப்பதற்கே இட்டுப் பிறந்த எம்பெருமானும் அந்த சேஷித்வ நிலைமையை உபேக்ஷித்துவிட்டு சேஷவ்ருத்தி செய்ய ஆசைப்படுகிறான்; என்னுடைய நெஞ்சோவென்றால் சேஷவ்ருத்தி செய்வதற்கே இட்டுப் பிறந்து வைத்தும் இந்த ரஸமறியாதே பிற்காலிக்கின்றது! என்கைக்காகச் சொல்லுகிறபடி. 'தமக்கு அடிமை வேண்டுவாராகிய தாமோதரனார் தமக்கு (நெஞ்சே! நீ) அடிமை செய்' என்று நான் உரைத்தால், அந்தப் பாவிநெஞ்சானது அதைக் கேளாமல், அப்படி அடிமை செய்யாமல் ஸ்வாதந்திரியங் கொண்டு, நெடுநாளாகத் தான் செய்து வருகிற [நைச்சியாநுஸந்தாநம் பண்ணிப் பின்வாங்குகையாகிற] தப்புக் காரியத்தையே செய்யப்பார்க்கின்றது!. எம்பெருமானோ மேல்விழுகிறான், நெஞ்சோ பின்வாங்குகின்றது; இந்த அவஸ்தையில் இன்னது செய்வதென்று எனக்குத் தோன்றவில்லையே!. எம்பெருமான் வழியே போவதா? நெஞ்சு போம் வழியே போவதா? என்ன செய்யத்தக்கது என்று அலைபாய்கின்றாராழ்வார்.

[எமக்கென்று.] நெஞ்சானது எனக்கு சேஷப்பட்டதாகையாலே நான் சொன்னபடியே கேட்கக் கடமைப்பட்டிருந்தும் பாரதந்திரியம் வஹியாமல் தான் போனபோக்கே போம்படியாக ஸ்வாதந்திரியம் வஹிக்கின்றது. உனக்கென்றிருக்கையன்றியே எமக்கென்றிருக்கை ஸ்வாதந்திரிய காரியமாதலால் இங்கு, எமக்கென்று என்பதற்கு 'ஸ்வதந்த்ரமாகி' என்று பொருளுரைக்கப்பட்டது. 'எனக்

கென்று' என்ன வேண்டுமாயினும் நெஞ்சினுர் என்ற பன்மைக்குச் சேர எமக்கென்று எனப்பட்டது.

தாம் செய்யும் தீவினைக்கே தாழ்வுறுவர் = இதற்கு இரண்டுபடியாகப் பொருளுரைக் கலாம்; நெஞ்சினர் தாம் செய்கிற பாவங்களையே நினைத்து, இப்படி பாவியான நாமோ பகவானை அநுபவிப்பது! என்று கொண்டு, தாழ்வுறுவர்—நைச்சியம் பேசிப் பின்வாங்குகின்ருர் என்னலாம். அன்றி, எம்பெருமான் நெருங்கினவாறே நெஞ்சினுர் தாம் பின்வாங்கிப் போவதாகிற ஒரு பாபத்தை அடிக்கடி செய்வது வழக்கமாயிற்றே, அந்தப் பாபத்திலேயே இப்போதும் ஊன்றுகின்ருர் என்றும் உரைக் கலாம். இந்த யோஜனையில், தாழ்வுறுதலாவது—ஆஸக்தியையுடைத்தாயிருத்தல். "விஷயங்களிலே கால்தாழ்ந்தான்' என்ருல் விஷய ப்ரவணனுன் என்று பொருள்படுமிறே. தீவினைக்கே என்றது—தீவினையிலேயே என்றபடி. முந்தின யோஜனையில், தான் செய்த பாவங்களை நினைத்தே என்றபடி. நெஞ்சினுர் என்ற பன்மை கோவத்தினுலாயது.

இங்கு+யாது, இங்கியாது; "உயிர்வரினுக்குறள் மெய்விட்டோடும், யவ்வரினியய்யாம்" என்பது நன்னூல்.

எம்பெருமான் அணுகிவரும்போது ஆழ்வார் நைச்சியம் பேசிப் பின் வாங்குதலென்பது திருவாய் மொழியிலும் வந்தாலும், இப்பிரபந்தத்தில் அடிக்கடி வருகின்றது. பரமபுருஷன் தனது பரத்துவத்தை மறைத்து ஸௌலப்ய குணத்தை எவ்வளவுதான் காட்டினுலும், பொய்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்பு முடையவர்களுக்கு ஸ்வதோஷமே அடிக்கடி நெஞ்சில் பட்டுக் கூச்சமுண்டாகுமென்பது இதனுல் காட்டப்படுகின்றதென்றுணர்க. 32

2617 யாதானு மொன்றறியில் தன்னுகக்கி லென்கொலோ? *
யாதானும் நேர்ந்தணுகா வாறுதான் *—யாதானும்
தேறுமா செய்யா வசுரர்களை * நேமியால்
பாறு பாருக்கினுன் பால். **33**

யாதானும் தேறும் ஆ செய்யா அசுரர்களை	கொஞ்சமும் விச்வஸிக்கும் படியான செயலைச் செய்யாதவர்களான அஸுரர்களை
	[எப்போதும் தீங்கையே செய்பவர்களை]
நேமியால்	திருவாழியினுலே
பாறுபாறு ஆக்கினுன் பால்	துண்டம் துண்டமாகத் துணித்தொழித்த எம்பெருமான் பக்கலில்
யாதானும் நேர்ந்து	எதையாவது ஸமர்ப்பித்து
அணுகா ஆறு தான் என் கொல்	கிட்டாமலிருப்பது என்னே?
	(சிறந்த பெருமானை அயோக்யரான நாம் கிட்டலாமோ என்னில்)
யாதானும் ஒன்று அறியில்	எதையாவது ஒரு வஸ்துவை அறியக்கூடிய சைதந்யத்தை யுடைத்தாயிருந்து வைத்தும்
தன் உகக்கில்	தான் ஆநந்தப்படுவதைத் தன்மையாக உடைத்தாயிருந்து வைத்தும்
	அணுகாவாறு தான் என் கொல்?—

* * *—நைச்சியங் கொண்டாடி அகலுகிற நெஞ்சுக்கு நன்மை சொல்லுகிறது போலேயிருக்கிறது இப்பாட்டு. நெஞ்சு என்றும் ஆத்மா என்றும் பர்யாயம் போலே கொள்ளுங்கள்.

"ஜ்ஞாநாநந்த மயஸ்த்வாத்மா" என்று ஞானமும் ஆநந்தமும் ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகச் சொல்லப்பட்டுள்ளது. அதைப் பிடித்துக் கொண்டு அருளிச் செய்கிற பாசுரம் இது. இந்த நெஞ்சு அசேதநப் பொருளல்ல; சேதநப் பொருள்;

அதாவது அறிவையும் ஆநந்தத்தையும் உடைய பொருள். இது அறிவில்லாத வஸ்துவா யிருந்தால் இதைப்பற்றிக் கவலையில்லை. எப்போது அறிவுடைய தாயிற்றோ அப்போதே எம்பெருமானைப் பற்றினதாகவே ஆய்விட்டது. “ஒண் தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கு முணர்வு” என்கையாலே ஞான மாகில் பகவத் விஷயத்தைப் பற்றித்தானேயிருக்கும். ஆகையாலே இந்த நெஞ்சு பகவத் விஷயத்தைக் கண்டு பின்வாங்குவது எப்படி சேரும்? அது கிடக்கட்டும் ஞானம் போலே ஆநந்தமும் ஒரு தன்மையாக இருக்கிறது இதற்கு. ஆநந்த முண்டாகில் பகவத் விஷயத்தைப் பற்றாமல் எப்படி ஆநந்தம் ஸித்திக்கும்? ஸித்திக்க மாட்டாது. ஆகவே, ஞானம் ஆநந்தம் என்கிற இரண்டு தன்மைகள் இதற்கு உள்ள போதே இது பகவத் விஷயத்தைப்பற்றினதாகவே ஆகா நிற்க. அந்தோ அந்த பகவானை அணுகமாட்டேனென்று ஓடுகிறதே! இஃது என்ன பேதைமை! என்கிறார்.

“யாதானுமொன் றறியில் தன்னுகக்கில், யாதானுந்தேறுமா செய்யாவசுரர் களை நேமியால் பாறு பாறாக்கினான் பால் யாதானும் நேர்ந்து அணுகாவாறுதான் என் கொலோ” என்று அந்வயிப்பது. எம்பெருமான்றனக்கு விச்வாஸ முண்டாகும்படி ஒரு நல்ல காரியத்தையும் செய்யாத அசுரர்களைத் திருவாழியினாலே துண்டு துண்டாகத் துணித்துப் பொகட்ட அப்பெருமான் விஷயத்திலே இந்த நெஞ்சானது ஏதாவதொன்றைச் செய்து [ஆத்ம ஸமர்ப்பணமாவது செய்து] அணுகாமலிருப்பது என்னோ? என்று கரைகின்றார். நம்முடைய குற்றங் குறைகளைக் கண்டு நாம் பின்வாங்குவதேன்? எம்பெருமான் கையில் திருவாழி இல்லையோ? அசுரர்களை யெல்லாம் துணித்தாற்போலே நம்முடைய விரோதியான பாபங்களையும் அவன்றானே அவ்வாழிகொண்டு துணித்திடானோ? ஏதுக்கு நைச்சியம் பேசிப் பின்வாங்க வேணும்? என்கை.

நைச்சியங் கொண்டாடிப் பிற்காலிக்க நேரிடுங் காலத்து எம்பெருமானுடைய அபார சக்தியை அநுஸந்தித்துத் தேறுதலடைந்து அணுக முயலவேண்டும் உணர்த்துவது போலும் இப்பாட்டு. ஆழ்வார் ஸ்வாநுபவ ரூபத்தாலே சாஸ்த் ரார்த்தங்களையன்றோ நமக்கு வெளியிடுகிறார். 33

2618 பாலாழி நீகிடக்கும் பண்பை * யாம்கேட்டேயும்
காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும் *— நீலாழிச்
சோதியாய்! ஆதியாய்! தொல்வினை யெம்பால்கடியும் *
நீதியாய்! நிற்சார்ந்து நின்று. **34**

நீலாழி சோதியாய்	நீலக்கடல் போன்ற நிறத்தை யுடையவனே!	சார்ந்து நின்று	அணுகி
ஆதியாய்	முழுமுதற்கடவுளே!	நீ பால் ஆழி கிடக்கும் பண்பை	நீ திருப்பாற் கடலில் சயனிக்கு மழகை
எம்பால் தொல்வினை கடியும் நீதியாய்	எம்மிடத்திலேயுள்ள பழைய பாவங்களைத் தொலைக்கு மியல்வுடையவனே?	கேட்டேயும்	காதாற் கேட்ட மாத்திரத்திலும
யாம்	அடியோம்	கால் ஆழும்	கால்கள் தடுமாறுகின்றன;
நின்	உன்னை	நெஞ்சு அழியும்	நெஞ்சு சிதிலமாகாநின்றது;
		கண் சுழலும்	கண்கள் சுழலமிடா நின்றன.

* * *—நைச்சியங்கொண்டாடி அகலப் பார்ப்பது தகாது, எப்படியாவது அவனை அணுகப் பார்ப்பதே நன்று என்று கீழ்ப்பாட்டில் அருளிச்செய்த ஆழ்வார் தாம் அணுகி அநுபவிக்க இழிந்தார்; திருப்பாற் கடலிலே திருமால் பள்ளி கொள்ளுந் திறத்தை அனுபவிக்கத் தொடங்கும்போதே தாம் விகாரப்படும்படியைப் பேசுகிறார் இதில்.

ஒரு வெள்ளைக் கடலிலே ஒரு கருங்கடல் சாய்ந்தாற்போல், நீலமணி வண்ணனான நீ திருப்பாற் கடலிலே கிடந்ததோர் கிடக்கையை சாஸ்த்ரமறிந்த மஹான்கள் சொல்ல நான் காதாற்கேட்ட மாத்திரத்திலும் 'இப்படியும் ஒரு அழகுண்டோ!' என்று ஈடுபட்டு, கால் நடை தாராமல் ஆழ்ந்து போகவும், நெஞ்சு நீர்ப் பண்டமாகக் கரைந்து அழிந்து போகவும், கண்கள் ஒரு வஸ்துவையும் க்ரஹிக்க முடியாமற் சுழலமிடவும் பெற்றேன் என்கிறார்.

"நீலாழிச் சோதியாய்! பாலாழி நீ கிடக்கும் பண்பை" எனச் சேர்த்து அந்வயித்துப் பரபாகசோபா ரஸத்தைப் பாங்காக அநுபவிக்க. நீலம் என்பது நீல் எனச் சிதைந்தது என்றாவது, நீல + ஆழி, (நீலவாழி என்றாகாமல்) வடமொழித் தீர்க்க சந்திபெற்றுக் கிடக்கிறது என்றாவது கொள்க. நின் + சார்ந்து, நிற் சார்ந்து. நைச்சியம் பேசிப் பின்வாங்குதலை தவிர்ந்து உன்னை அணுகினேன்; அணுகினவாறே உன் சரிதைகளைக் கேட்க ஆவல் கொண்டேன்; க்ஷீராப்திசயன வ்ருத்தாந்த விஷயமாகச் சிறிது கேட்டேன்; கேட்டவுடனே விகாரமடைந்தொழிந்தேன். காதால் கேட்டதற்கே இவ்வளவானால் கண்ணால் காணப்பெற்றால் என் படுவேனோ அறியேன் என்றாராயிற்று.

"தொல்வினை எம்பாற்கடியும் நீதியாய்!" என்பதற்கு—நைச்சியம் கொண்டாடிப் பிற்காலிக்கையாகிற பழைய பாவத்தைப் போக்கடிக்கு மியல்வினனே! என்பதாகவும் பொருள் கொள்ளலாம். 34

2619 நின்று மிருந்தும் கிடந்தும் திரிதந்தும் *
ஒன்றுமோ வாற்றானென் நெஞ்சகலான் *—அன்றங்கை
வன்புடையால் பொன்பெயரோன் வாய்தகர்த்து மார்விடந்தான் *
அன்புடையா னன்றே அவன்? **35**

அன்று	முற்காலத்தில்
அம் கை வன் புடையால்	அழகிய திருக்கைகளாலே ஓங்கி அறைந்ததனால்
பொன் பெயரோன் வாய் தகர்த்து	இரணியாசுரனுடை (ப்ரஹ்லாதனை அதட்டின) வாயைப் புடைத்து
மார்வு இடந்தான் அவன்	(அவ்விரணியனுடைய) மார்பைக் கிழித்தெறிந்த பெருமான்
அன்பு உடையான் அன்றே	(ஆச்ரிதர் திறத்தில்) மிக்க அன்புடையவனன்றோ;
	(ஆனதுபற்றியே)
நின்றும்	(என்னெஞ்சிலே) நின்று கொண்டிருந்தும்
இருந்தும்	வீற்றிருந்தும
கிடந்தும்	சயனித்திருந்தும்
திரிதந்தும்	எழுந்து உலாவியும்
ஒன்றும்	கொஞ்சமும்
ஓவாற்றான்	த்ருப்தியடைகிறானில்லை;
என் நெஞ்சு அகலான்	என்னுடைய நெஞ்சைவிட்டு நீங்குகிறானில்லை.

* * *—கீழ்ப்பாட்டில் "பாலாழி நீ கிடக்கும் பண்பையாம் கேட்டேயும்" என்று எம்பெருமான் விஷயமான சரிதைகளைக் கேட்பதில் தமக்கு முயற்சி உண்டானமையைக் கூறினாரே; அவ்வளவிலே எம்பெருமான் "இவ்வாழ்வாருடைய காதலை மேன்மேலும் வளரச் செய்யவேணும்" என்று திருவுள்ளம்பற்றி இவருடைய நெஞ்சிலே படுகாடு கிடக்கத்தொடங்கிவிட்டான்; அதைப் பேசுகிறாரிதில்.

"நின்றதெந்தை யூரகத்து" என்றபடி திருவூரகத்தில் நிற்கிறாப்போலே என்னெஞ்சில் நிற்கிறான். நின்றுநின்று திருவடிகள் ஓய்ந்து போனால் "இருந்த தெந்தை பாடகத்து" என்றபடி திருப்பாடகத்தில் வீற்றிருக்கிறாப்போலே என்னெஞ்சில் வீற்றிருக்கிறான். வீற்றிருக்குமிருப்பிலும் இளைப்பு உண்டானவாறே "அன்று வெஃகணைக் கிடந்தது" என்றபடி திருவெஃகாவிலே சயனித்தருளுகிறாப்போலே என்னெஞ்சில் சயனித்தருளுகிறான். அதிலும் சிரமம் தோன்றினால்

எழுந்து உலாவுகின்றான் ; இப்படியே நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் என்னும் தொழில்களை ஓயாமல் செய்துகொண்டு என்னெஞ்சை விட்டுப் பேர்கின்றானில்லை. ஆனால், பக்தர்திறத்தில் எம்பெருமான் இவ்வளவு அன்பு கொண்டிருக்கிறானென்பது புதிதான ஒரு ஆச்சரிய விஷயமல்ல. பண்டே ப்ரஹ்லாதாழ்வான்பக்கலில் அன்பு பூண்டு அரியன செய்துகாட்டிய பெருமானுக்கு இவை ஒரு வியப்போ ? அன்பின் மிகுதியினால் இத்தனையும் செய்கிறான் என்றாராயிற்று.

முதலடியிற் சொன்ன நிற்றலிருத்தல் கிடத்தல் திரிதல்கள் ஆழ்வாருடைய நெஞ்சிலே செய்யப்பட்டவை யென்று கொள்ளாமல் * கண்டியூர ரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லை முதலிய திவ்யதேசங்களிலே செய்திருப்பவற்றைச் சொல்வதாகக் கொண்டு உரைப்பதும் ஒக்கும். அந்தந்த திவ்யதேசங்களிலே நின்றது மிருந்ததும் கிடந்ததும் திரிந்தது மெல்லாம் ஸமயம் பார்த்து என்னெஞ்சைப் பெறுகைக்காகவே ; என் நெஞ்சைப் பெற்றானான பின்பு அந்தத் திருப்பதிகளையெல்லாம் மறந்தொழிந்து என்னெஞ்சையே பற்றிக்கிடக்கிறான் ; இதை விட்டு ஒரு நொடிப் பொழுதும் நீங்குவதில்லை ; இவ்வளவு செய்தும் ஒன்றுஞ் செய்யாதானாக நினைத்திரா நின்றான் என்றபடி.

ஒன்று மோவாற்றான் = ஓவு ஆற்றான் எனப்பிரித்து, ஓய்வதை ஸஹிக்கமாட்டான் [அதாவது—ஓயமாட்டான்] என்று பொருள் கொள்ளலாம். அன்றி, ஓ ஆற்றான் எனப்பிரித்து, ஓ என்பதை ஆச்சரியக் குறிப்பிடைச் சொல்லாகக் கொண்டு, ஆற்றான்—ஆறியிருக்க மாட்டான் [இன்னமும் ஏதேதோ செய்யவேணுமென்று பாரித்திரா நின்றான்] என்று முரைக்கலாம். 35

2620 அவனு மிவனு முவனும் * மற்றும்ப
ரவனு மவனென் றிராதே *—அவனும்
அவனே யெனத்தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால் *
அவனே யெவனேலு மாம். **36**

அவன்	ஸர்வேச்வரனானவன்
அவன் ஆம்	துர்லபனாயிருப்பனோ ?
இவன் ஆம்	ஸுலபனாயிருப்பனோ ?
உவன் ஆம்	மத்யஸ்தனாயிருப்பனோ ?
மற்று உம்பரவன் ஆம்	அல்லது, மிகவும் உயர்ந்தவனாய் எட்டாதேயிருப்பனோ?
என்று இராதே	என்றிப்படி பலவகையாக ஸந்தேகங்கள் கொண்டிராமல்
அவன் அவனே ஆம் என தெளிந்து	எம்பெருமானுடைய ஸ்வரூபமே ஸௌலப்யம் என்று தெளிவாகத் தெரிந்து கொண்டு
கண்ணனுக்கே தீர்ந்தால்	அந்த ஸௌலப்யத்தை க்ருஷ்ணாவதார முகத்தாலே விளங்கக்காட்டிய அவனுக்கே ஆட்பட்டால்
அவனே	அப்பெருமானே
எவனேலும் ஆம்	எல்லாவுறவுமுறையுமாவன்

* * * —சில ஸமயங்களில் எம்பெருமான் ஸுலபன் என்று தோற்றும் ; சில ஸமயங்களில் அவன் துர்லபன் என்று தோற்றும் ; மற்றுஞ் சில ஸமயங்களில் ‘அவன் ஸுலபனுமல்லன், துர்லபனுமல்லன் ; நடுத்தரமாயுள்ளவன்’ என்று தோற்றும். பின்னையும் சில ஸமயங்களில் ‘அப்பப்ப ! அவன் மிக உயர்ந்தவன், மேலோர்க்கும் மேலானவன், அவனைப்பெறுதல் கூடுமோ’ என்று தோற்றும். ஆக இப்படி யெல்லாம் பலபடியாகத் தோற்றும் தோற்றங்களைத் தொலைத்திட்டு அப்பெருமானுக்கு ஸௌலப்யமொன்றே அஸாதாரணமான வடிவு என்று தெளிந்த ஞானத்தைப்பெற்று அக்கண்ணபிரானுக்கே ஆட்பட்டு விட்டால் அவன் நமக்கு ஸகலவித பந்துவுமாய் நின்று எல்லா நன்மைகளையும் செய்தருள்வான் என்கிறார்.

அவனுமிவனுமுவனும் = அவன் என்றும் அது என்றும்—கைக்கு எட்டாத தூரத்திலுள்ள பொருள்களைச் சொல்லுவது வழக்கம். ஆகவே இங்கு அவனும் என்றது—கைக்கு எட்டாமல் துர்லபனுயிருக்கும்படியைச் சொல்லுகிறது. இவன் என்றும் இது என்றும் கைக்கு எட்டின பொருளைச் சொல்லுவது வழக்கமாகையாலே இங்கு இவனும் என்றது ஸுலபனும் என்றபடி. எம்பெருமானை துர்லபனுக நினையாமல் ஸுலபனுக நினைக்கவேணுமென்று சொல்லுகிற இப்பாட்டில் "அவனுமென்றிராதே, உவனுமென்றிராதே, உம்பரவனுமென்றிராதே" என்று சொல்லுதல் மாத்திரமேயன்றோ பொருந்தும். "இவனுமென்றிராதே" என்றும் சொல்லுதல் எப்படி பொருந்தும்? எம்பெருமான் ஸுலபன் என்று நினையாதே என்று சொல்லுதல் இப்பாட்டுக்குச் சேராதன்றோ? என்னில்; கேண்மின்;—அவனுமிவனுமென்று தொடங்கிச் சொல்லுவதெல்லாம் அவரவர்கள் ஸந்தேஹிக்கிறபடிகளைச் சொல்லுகிறது. அதாவது—அவன் துர்லபனோ, ஸுலபனோ, மத்யஸ்தனோ, மிகவும் துர்லபனோ என்றிப்படி ஸந்தேஹப்படாதே என்று ஸந்தேஹநிவ்ருத்தியை முன்னடிகளிலே விதித்து, மேலே 'அவன் ஸுலபனே' என்கிற நிச்சய வுணர்ச்சி பெறுமாறு விதிக்கிறது.

அவனும் அவனேயெனத் தெளிந்து என்றதை 'அவன் அவனேயாம் எனத் தெளிந்து' என்று இயைத்துக்கொள்க. அவன் அவனே யாகையாவது என்னவென்றால், எம்பெருமானுடைய ஸ்வரூபமே ஸௌலப்யம் என்று தெரிவித்தபடி. எம்பெருமான் நம்மால் உணரப்படும்போதே ஸௌலப்ய குணவிசிஷ்டனுகவே உணரப்படுவான். இதிஹாஸ புராணங்களைக்கொண்டு. எம்பெருமானை நாம் தெரிந்துகொள்ளும்போது முந்துறமுன்னம் ஸௌலப்யகுணமே தெரியவருவதனுல் அவன் என்கிற சொல்லில் ஸௌலப்ய குணமே பொருளாகப் பொதிந்துகிடக்கிறதென்று ஆழ்வார் திருவுள்ளம்பற்றி அவன் அவனேயாம் என்று இங்கு அருளிச்செய்யுமழகு அற்புதமானது.

"அவன் ஆமவனே எனத் தெளிந்து" என்றுகொண்டு, அவன்-எம்பெருமான், ஆமவனே—நமக்கே கையாளாயிருப்பவன் என்று பொருள் கொள்வாருமுளர். ஆக, அவன் அரியனோ எளியனோ என்கிற ஸந்தேஹங்களை யெல்லாம் அறவேயொழித்து, அவனுக்குப் பாரதந்திரியமே வடிவு என்று துணிந்து, அக்குணம் நிறைந்த கண்ணபிரானுக்கே நாம் ஆட்பட்டால், அவனே எவனேலுமாம் = 'எவனேலும்' என்றது மாதாவாகவோ பிதாவாகவோ உடன்பிறந்தவனுகவோ, உயிர்த்தோழனுகவோ மற்றும் எவ்விதமான உறவு முறையாக வேணுமானுலும் எல்லாவுறவும் அவனே ஆய்விடுவன் என்றபடி.

அர்ஜுநன்போல்வார்க்கு "யஸ்ய மந்த்ரீச கோப்தாச ஸுஹ்ருச்சைவ ஜநார்தந:" என்னும்படி எல்லாவுறவுமாக அமைந்தவனிறே கண்ணபிரான்.

இப்பாட்டுக்கு மற்றொருவகையாகவும் பொருள் கூறுவாருளர்;—நம்மால் ஆச்ரயிக்க வேண்டியவனுக சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட தேவன் சிவனோ பிரமனோ விஷ்ணுவோ? இவர்களினும் மேற்பட்ட வேறொரு தெய்வமோ? என்றிப்படி யெல்லாம் ஸந்தேஹப்படாமல் வேதாந்தங்களில் ஸ: என்றும் தத் என்றும் சொல்லப்பட்டுள்ள தெய்வம் கண்ணபிரானே என்று தெளிந்து அவனைப் பற்றினுல், அப்பெருமானே தேவதாந்தரங்கள் அளிக்கும் பலன்களையும் வேண்டுவார்க்கு அளித்திடுவான் என்பதாக. 36

2621 ஆமா றறிவுடையா ராவ தரிதன்றே ?
நாமே யதுவுடையோம் நன்னெஞ்சே! *—பூமேய்
மதுகரமே தண்டுழாய் மாலாரை * வாழ்த்தாம்
அதுகரமே அன்பா லமை. 37

நல் நெஞ்சே	நல்ல மனமே!
ஆம் ஆறு அறிவு உடையார் ஆவது	யுக்தமான அறிவை உடைய வராக ஆவது
அரிது அன்றே	(உலகில் யார்க்கும்) அருமையன்றோ;
அது	அப்படிப்பட்ட அறிவை
நாமே உடையோம்	நாமே (பகவத் கிருபையால்) பெற்றிருக்கின்றோம்;
ஆகையால் நீ செய்யத்தக்கது என்னவென்றால்	
பூ மேய் மது கரம் மே தண் துழாய்	பூக்களிலே மேய்கின்ற வண்டுகள் படிந்துள்ள குளிர்ந்த திருத்துழாயையுடையராய்
மாலாரை	(ஆச்ரிதர் திறத்தில்) வ்யாமோஹமுடையரான பெருமானை
வாழ்த்து ஆம் அது	வாழ்த்துவதாகிற அக்காரியமொன்றிலேயே
அன்பால்	பக்தியுடன்
கரமே	திண்ணமாக
அமை	ஊன்றியிரு.

* * *—கீழ்ப்பாட்டில் எம்பெருமானுடைய ஸௌலப்யத்தைப் பேசினார்; அது தம்நெஞ்சுக்கு மிகவும் ரஸித்தது. அந்த ஸௌலப்யத்தையே நெஞ்சு அநுஸந்தித்து ஆநந்தப்பட்டுக் கொண்டிருந்தது. ஆழ்வார் அந்த நெஞ்சை நோக்கி "இப்படிப்பட்ட ஸௌலப்யம் எம்பெருமானுக்குள்ளதென்று நீ நன்கு அறிந்து கொண்டாயன்றோ; இந்த அறிவு எல்லார்க்கும் எளிதாக உண்டாமதன்று; ஏதோ எம்பெருமானது இன்னருளாலே நமக்கு உண்டாகப் பெற்றோம்; ஆகையாலே இனி ஒருகாலும் நைச்சியம் பாவித்துப் பின்வாங்கப் பாராதே அப்பெருமானுடைய போக்யதையிலும் சீலத்திலும் ஈடுபட்டு அவனை வாழ்த்துவதே தகும் என்கிற அத்யவஸாயத்தைத் திண்ணிதாகக் கொள்" என்று உபதேசிக்கிறார்.

ஆமாறறிவுடையாராவது அரிதன்றே=ஸாமாந்யமாக அறிவு என்பது எல்லார்க்குமிருந்தாலும் அஃது ஆமாறறிவு அல்ல; ஸத்தை பெறுதற்கு உறுப்பான அறிவு அல்ல என்றபடி. எம்பெருமானுடைய உத்தம குணத்தை அநுஸந்திப்பதாகிற நல்லறிவு எல்லார்க்கும் உண்டாகக்கடவதன்றே; தைவாதீனமாக அது நமக்கே உண்டாகப் பெற்றோம் என்கிறார். "நான் அறிவில்லாதவன்" என்று சொல்லிக் கொள்ள வேண்டியதன்றோ ஸ்வரூபம்; அப்படியிருக்க 'நாமே நல்லறிவு உடையோம்' என்று சொல்லிக்கொள்ளுதல் தற்புகழ்ச்சியாகாதோ? எனின்; ஆகாது. "மயர்வற மதிநல மருளினன் யவனவன்" என்று முதலடியிலே அருளிச் செய்தது தற்புகழ்ச்சியாமாகில் இதுவும் அங்ஙனேயாம். எம்பெருமானது திருவருளாலே பெற்ற பேற்றை ஸந்தோஷ மிகுதியாலே வெளியிடுகிறாரித்தனை.

நல் நெஞ்சே!="மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ:" என்று நல்வழி போவதற்கும் தீவழி போவதற்கும் அவரவர்களுக்கு நெஞ்சே காரணம் என்று சாஸ்த்ரம் சொல்லியிருப்பதனால், நெஞ்சைப் பாராட்டி விளிக்கின்றார், எப்போதும் தமக்கு நன்மையே புரிவதற்காக.

[பூ மேய் இத்யாதி.] பூவிலே பொருந்தும் வண்டுகள் சேர்ந்திருந்துள்ள திருத்துழாயை அணிந்திரா நின்ற ஸர்வேச்வரனை அன்பினால் மங்களாசாஸநம் பண்ணுகையாகிற ஒரு காரியத்தையே சிக்கனப் பிடித்துக்கொள் என்று தம் திருவுள்ளத்திற்கு உபதேசித்தாராயிற்று. கீழ்ப்பாட்டில் எம்பெருமானுடைய ஸௌலப்யம் சொன்னாரே; அது மாத்திரமல்ல, அவனுடைய போக்யதையும் ஒப்பற்றது என்கிறார் இதில். மாலாரை என்றதனால் ஆச்ரிதர் திறத்திலே வ்யாமோஹங் கொண்டிருக்கையாகிற சீலகுணம் சொல்லுகிறது. கரம் என்ற வடசொல் இங்கே கரமெனத் திரிந்தது. அவ்வடசொல்லுக்கு த்ருடம் என்று பொருள். ... 37

2622 அமைக்கும் பொழுதுண்டே? ஆராயில் நெஞ்சே!
இமைக்கும் பொழுது மிடைச்சி—குமைத்திறங்கள் *
ஏசியே யாயினு மீன்துழாய் மாயனையே *
பேசியே போக்காய் பிழை. 38

நெஞ்சே	ஓ மனமே!
ஆராயில்	ஆராய்ந்து பார்த்தால்
இமைக்கும் பொழுதும்	ஒரு க்ஷண காலமாகிலும்
அமைக்கும் பொழுது உண்டே	வீண்போது போக்க முடியுமோ?
இடைச்சி குமை திறங்கள்	யசோதையின் கையிலே அகப்பட்டு இவன் நலிவு பட்ட பாடுகளை
ஏசியே ஆயினும்	பரிஹாஸோக்தியாகச் சொல்லியாவது
ஈன் துழாய் மாயனையே	போக்யமான திருத்துழாய் மாலையை அணிந்துள்ள அப்பெருமானைப் பற்றியே
பேசியே	(எதையாவது) பேசிக் கொண்டே
பிழை	உனது பாவங்களை
போக்காய்	போக்கிக் கொள்ளப்பார்.

* * *—அவனுடைய குணங்களை வாழ்த்துவதே ப்ராப்தம் என்று நெஞ்சுக்கு உபதேசித்தார் கீழ்ப்பாட்டில். அவனுடைய ஸௌலப்யத்தை வாழ்த்துவதென்றால் அபசாரத்தில் போய் முடியுமே; "வெண்ணெய் திருடினான், இடைச்சி கையில் அகப்பட்டுக் கொண்டான், தாம்பினால் கட்டுண்டான், உரலோடு பிணிப்புண்டான், அடியுண்டு அழுது ஏங்கினான்" என்று இப்படிப்பட்ட கதைகளைச் சொல்லி வாழ்த்துவதுதானே ஸௌலப்யகுணத்தை வாழ்த்துகையாவது; இவை பேசினால் சிசுபாலாதிகளோடு ஒப்போமன்றோ; இது நமக்குத் தகுமோ? என்று நெஞ்சு இருய்க்க அதனை ஸமாதாநப்படுத்துகிறார் இதில்.

பரத்வம் என்றும் ஸௌலப்யம் என்றும் இரண்டு தன்மைகள் எம்பெருமானுக்கு உள்ளன; நெஞ்சே! பரத்வத்தை அநுஸந்திக்க நீ யோக்யனல்லை; அவன் பரமபுருஷன் என்று தெரிந்தவாறே 'நான் நீசன் நான் நீசன்' என்று நெடுந்தூரம் ஓடப்பார்க்கிறாய்; ஆகையாலே பரத்வத்தைப் பற்றின பேச்சு உனக்கில்லை. இனி, ஸௌலப்யத்தைப் பேசு என்றால் அபசாரமாகுமே யென்கிறாய். ஆக இரண்டையும் விட்டுவிட்டால் வேறு எதைச்சொல்லிப் போது போக்கலாமென்றிருக்கிறாய் நெஞ்சே!; ஒரு நொடிப் பொழுதாகிலும் வீண் போகலாமோ? கீழே அநாதிகாலம் பாழே கழிந்தது போராதோ? அவனுடைய ஸௌலப்ய குணத்தைப் பேசினால் ஓரிடைச்சியாகிய யசோதையினிடத்தில் அவன் பட்ட பரிபவங்களை யெல்லாம் பேச வேண்டியதாமாகையால் அது அபசாரமா மென்கிறாய்; அபசாரமாயினும் ஆயிடுக. ஏதாகிலும் எம்பெருமான் விஷயமான பேச்சாயிருந்தால் போதுமானது; அவனை ஏசின சிசுபாலாதிகளும் முடிவில் நற்கதிபெற்று உய்ந்தனர்காண்; ஆகையாலே, ஏத்துதலோ ஏசுதலோ எதுவாயினும் ஆகுக. எம்பெருமான் விஷயமென்பதொன்றேபோரும்; பேசாய் என்கிறார்.

நெஞ்சே! ஆராயில் இமைக்கும் பொழுதும் அமைக்கும் பொழுது உண்டே? = ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே—தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ந்ருணாம்" [எம்பெருமானைப்பற்றின சிந்தையின்றியே ஒரு நொடிப் பொழுது கழிந்தாலும், கள்ளர் வந்து ஸர்வஸொத்தையும் கொள்ளை கொண்டால் எப்படி கதறுவோமோ அப்படி கதறவேண்டும்] என்று சொல்லுகிற பிரமாணத்தை ஆராய்ந்தால் ஒரு நிமிஷமாவது வெறுமனிருக்க வொண்ணுமோ என்றபடி. அமைத்தல்—அடங்கியிருத்தல், வாய் மூடியிருத்தல்.

இடைச்சி குமைத்திறங்களேசியேயாயினும் = இங்கே இடைச்சியென்று யசோதைப் பிராட்டியை மாத்திரம் சொல்லிற்றாகலாம்; அன்றியே ஜாத்யேகவசநமாய் மற்றும் பல இடைச்சிகளையும் சொல்லிற்றாகலாம். குமைத்திறங்களாவன—இடைச்சிகள் கையிலே அகப்பட்டுக்கொண்டு துன்பப்பட்ட விதங்கள். அவற்றைச் சொல்லி ஏசுகையாவது—"கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப் பெற்றான் காடுவாழ் சாதியுமாகப்பெற்றான், பற்றியுரலிடையாப்பு முண்டான்" "வண்ணக்கருகுழலாய்ச்

சியால் மொத்துண்டு, கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டான் காணேடீ" என்றாற்போலே வசை கூறுகை.

போக்காய் பிழை = ஈன்துழாய் மாயனை ஏசிப்பேசியேயாகிலும் (காலத்தைப்) போக்காயாகில் (அது) பிழை—பிசகு என்றும், ஏசிப் பேசியேயாகிலும் பிழைகளைப் போக்கிக் கொள்ளுகிறாயில்லை என்றும், பிழைகளைப் போக்கிக்கொள் என்றும் உரைக்கலாம். 38

2623 பிழைக்க முயன்றோமோ ? நெஞ்சமே ! பேசாய்*
தழைக்குந் துழாய்மார்வன் தன்னை *—அழைத்தொருகால்
போயுபகாரம் பொலியக் கொள்ளாது * அவன்புகழே
வாயுபகாரங் கொண்ட வாய்ப்பு 39

நெஞ்சமே	ஓமனமே !
தழைக்கும் துழாய் மார்வன் தன்னை	தழைத்தோங்குகின்ற திருத் துழாய் மாலையைத் திரு மார்விலே யுடையனான எம் பெருமானைக் குறித்து
அழைத்து	கூப்பிட்டு
ஒருகால்	அவனுக்குத் திருவுள்ளமான வொரு காலத்திலே
போய்	பரமபதத்திலே சென்று
பொலிய	நன்றாக
உபகாரம்	கைங்கரியங்கள் செய்கையாகிற உபகாரத்தை
கொள்ளாது	கொள்ள முயலாமல்
அவன் புகழே	அப்பெருமானது திருக்குணங்களையே
வாய் உபகாரம் கொண்ட	வாயாலே சொல்லிக்கொண்டிருக்கையாகிற
வாய்ப்பு	இந்த நேர்பாடு
பிழைக்க முயன்றோமோ	தப்பு செய்ததாமோ ?
பேசாய்	நீ சொல்லாய்.

***—"ஈன் துழாய் மாயனையே எசியேயாயினும் பேசியே போக்காய் பிழை" என்று பகவத் கீர்த்தனமே பண்ணும்படி கீழ்ப்பாட்டில் நெஞ்சுக்கு உபதேசித்தார். "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை யினியாமுறாமை "என்று முதலடியிலே விண்ணப்பம் செய்தபடி இந்நிலம் அடிக்கொதித்துப் பரமபதத்திலே விரைந்து சென்று அங்கே நித்ய கைங்கரியம் பண்ணவேண்டியது ப்ராப்தமாயிருக்க அது செய்யத்தேடாமல் இங்கே இருந்துகொண்டு அவனது திருக்குணங்களைப் பேசிக்கொண்டிருப்பது ஏதுக்கு ? என்று திருவுள்ளத்தில் பட்டதாக, அதனை அநுவாதம் செய்கிறாரிப்பாட்டில்.

தழைக்குந் துழாய் மார்வன்தன்னை அழைத்து ஒருகால் போய் உபகாரம் பொலியக்கொள்ளாது அவன்புகழே வாயுபகாரங்கொண்ட வாய்ப்பு, நெஞ்சமே ! பிழைக்க முயன்றோமோ பேசாய் என்று அந்வயிப்பது. ஒரு வாடல் மாலையை இட்டாலும் அது தன்னிலத்திற் காட்டிலும் அதிகமாகத் தழைத்து விளங்குதற்கிடமான திருமார்விலே அம்மாலையை அணிந்துள்ள ஸர்வேச்வரனை நோக்கிக் "கூவிக்கொள்ளுங் கால மின்னங்குறுகாதோ?" என்றாற்போலே கதறியழைத்தால் ஒரு கால் அவன் நம்மைப் பரமபதத்திலே சேர்த்துக்கொண்டு ஸகலவித கைங்கர்ய ஸாம்ராஜ்யங்களைக் கொடுத்தருள்வன் ; ஆகையாலே அப்படி கதறி அக் கைங்கரியங்களைக் கொள்ளப்பாராமல் இங்கிருந்துகொண்டு அவனது திருப்புகழ்களையே வாய் வெருவிக்கொண்டிருப்பதும் ஒரு வாய்ப்பான விஷயமேயாகிலும் ஓ நெஞ்சே ! இது தப்போ சரியோ ? எனக்குத் தெரியவில்லை, நீ சொல்லாய் என்கிறார்.

பரமபதத்திற் சென்றாலும் குணாநுபவமே யாத்திரையாகையாலே அதனை இங்கிருந்து செய்தாலென்ன ? அங்கிருந்து செய்தாலென்ன ? என்று தோன்றும்

போது இங்கிருந்து செய்யுமிக் குறைநுபவம் அயுக்தமல்ல என்று தோற்றும். இந்நிலத்தில் குறைநுபவம் நடந்தாலும் இது இருள்தரு மாஞால மாகையாலே "ஆற்றங் கரைவாழ் மரம்போ லஞ்சுகின்றேன்" "பாம்போடொரு கூரையிலே பயின்ருற்போல் தாங்காதுள்ளம் தள்ளும்" என்று ஞானிகள் அஞ்சவேண்டிய நிலமாயிருப்பதால் இங்கிருந்து குறைநுபவம் செய்வதில் விருப்பமற்று இங்கே அடிக்கொதித்து அங்கே போய்ச் சேரவேணுமென்று விரைவு உண்டாம்போது இங்கிருந்து செய்யுமிக்குறைநுபவம் யுக்தமல்ல என்று தோற்றும். ஆக இரண்டு வகையாகவுந்தோற்ற இடமுண்டாகையாலே ஆழ்வார் தம்முடைய நிஷ்கர்ஷத்தைத் துணிந்து சொல்லமாட்டாமல் "பிழைக்க முயன்ருேமோ நெஞ்சமே!" என்கிருர்;' பிழைக்க என்றது—பிழைசெய்ய என்றபடி. 'நாம் தப்பாகச் செய்கிருேமோ என்று சொல்லுகிற ஸ்வரவகையில் 'இது தப்பு அல்ல, என்றும் 'இது தப்பு ஆகலாம்' என்றும் தோற்றுமா றிருக்கும்.

"ஜ்ஞாநம் பிறந்த பின்பு அடிமைக்கு அநுகூலமல்லாத ஸம்ஸார ஸம்பந்தம் விட்டு நீங்குவது எப்போதோவென்று இந்நிலமடிக்கொதித்து அடிமைக்கு அநுகூலமான பரமபதத்திலே போய்ப் பரிபூர்ணமாக அநுபவித்து அடிமை செய்து வாழ்வோ மென்று அங்கே போகப்பாரியாமல் இங்கே குறைநுபவ மாத்ரத்திலே த்ருப்தி பிறந்திருக்கையாவது பகவத் விஷயத்தில் கண்ணழிவற்ற ருசியில்லாமையிறே என்று தாத்பர்யம்" என்ற முன்னோருரைவாக்கியம் நோக்கத்தக்கது.

ஒருகால் போய் = நாம் எவ்வளவு கதறினுலும் எம்பெருமான் திருவுள்ளமிரங்கின காலத்திலன்றிப் பரமபதம் செல்ல முடியாதாகையாலே அவனுக்குத் திருவுள்ளமானதொரு காலத்திலே அங்குச் சென்று என்றபடி. ... 39

2624 வாய்ப்போ விதுவொப்ப மற்றில்லை வாநெஞ்சே ! *
போய்ப்போஒய் வெந்நரகில் பூவியேல் *—தீப்பால
பேய்த்தா யுயிர்கலாய்ப் பாலுண்டு * அவளுயிரை
மாய்த்தானை வாழ்த்தே வலி. 40

வா நெஞ்சே	வாராய் மனமே !	பேய் தாய்	தாய் வடிவு கொண்டு வந்த பூதனையினுடைய
இது ஒப்ப வாய்ப்பு மற்று இல்லை	இப்போது நமக்கு வாய்த்திருக்கிறமாதிரி மற்று எப்போதும் வாய்க்கமாட்டாதுகாண்;	உயிர்	பிராணனை
போய் போய்	மறுபடியும் மறுபடியும்	பால்	அவளது முலைப்பாலோடே
வெம் நரகில்	(நைச்சியம் பேசிப் பின் வாங்குவதாகிற) கொடிய நரகத்திலே	கலாய்	கலந்து
பூவியேல்	கொண்டு தள்ளிவிடாதே ;	உண்டு	அமுது செய்து
தீ பால	தீயதான தன்மையை யுடையளான	அவள் உயிரை மாய்த்தானை	அப்பூதனையினது உயிரை முடித்த பெருமானை
		வாழ்த்தே	வாழ்த்துதலே
		வலி	நமக்கு மிடுக்காம்.

* * *—எம்பெருமானுடைய திவ்ய சரிதங்களைச் சொல்லிப் புகழ்வதில் ஆழ்வார் தமக்குண்டான ருசியின் மிகுதியை வெளியிடுகிருரிப்பாட்டில். நெஞ்சே! இப்படிப்பட்டதொரு வாய்ப்பு நமக்கு வேறென்றில்லை ; இவ்வுலகிலுள்ளாரெல்லாரும் தங்கள் தங்கள் வாய்வந்தபடி கண்ட விஷயங்களையும் பாடிக்கொண்டு திரிபவர்களாயிருக்க, நாம் மாத்திரம் அப்படியிராமே பகவானுடைய புகழ்களைப் பேசும்படியானவிது இவ்விருள் தருமாஞாலத்தில் ஸம்பவிக்கக் கூடியதோ? அல்ல; ஆயினும் "விதிவாய்க்கின்று வாய்க்குங் கண்டீர்" என்னுமாபோலே தெய்வயோகத்தாலே நமக்கு இப்பெரும்பாக்கியம் வாய்த்தது. ஆனல் பகவத் குணங்களின் தூய்மையையும் நமது நாவின் எச்சில்தன்மையையும் நோக்கும்போது "வாக்குத்

தூய்மையிலாமையினாலே மாதவா வுன்னை வாய்க்கொள்ள மாட்டேன்'' என்றாற் போலே இருய்த்து நிற்கத் தோன்றுவதுண்டு; அப்படி நைச்சியம் பாவித்து பகவத் குணங்களைப் பேசாதிருப்பதானது சாஸ்த்ரங்களில் ப்ரஸித்தமான நரகங்களிற் காட்டில் மிகக்கொடிய நரகமேயாம் என்று கருதவேண்டும். அப்படிப்பட்ட நரகத்தில் என்னை நீ தள்ளப்பாராமல் அவனுடைய சரிதைகளில் ஏதேனுமொன்றைச் சொல்லிக்கொண்டே யிருக்கப்பார்; கஞ்சனாலேவப்பட்டுக் கண்ணபிரானைக் கொல்லக்கருதி முலையில் விஷந்தடவிக்கொண்டுபேய் வேஷத்தை மறைத்துத் தாய் வேஷத்தோடு வந்து முலை கொடுத்த பூதனையைப் பாலுண்கிற பாவனையிலே முடித்த சரிதையைச் சொல்லிப் புகழப்பார்; அவளுயிரை முடித்தாற்போலே நமது நைச்சியத்தையும் முடிக்கவல்லவன் அப்பெருமான் என்று கொண்டு அவ்வரலாற்றைச் சொல்லி ஏத்தப் பார் என்று தமது திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிறபடி.

வாய்ப்பு=ஸித்தி, சிறப்பு, தகுதி, நயம் பேறு, வளமை. போய்ப்போய் வெந்நரகில் பூவியேல்=''திருமாற்கு யாமார் வணக்கமார் ஏபாவம் நன்நெஞ்சே!, நாமாமிக வுடையோம் நாழ்'' என்று அடிக்கடி நைச்சியம் பாவித்துப் பின்வாங்குவது வழக்கமாகையால் இனி அப்படி வேண்டாமென்கிறார். வெந்நரகு = ''யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா'' என்று—எம்பெருமானோடு கூடியிருப்பது சுவர்க்கம், அவனைப் பிரிந்திருப்பது நரகம் என்று இளையபெருமாள் [ஸ்ரீராமாயணத்தில்] கூறினது இங்கு உபலக்ஷணமாகக் கொள்ளத்தக்கது. எம்பெருமானை ஏத்துகை சுவர்க்கம்; ஏத்தாதிருக்கை நரகம் என்கைக்கும் உபலக்ஷணம். ''நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க, நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி'' என்ற திருமாலைப் பாசுரமும் இங்கு அநுஸந்திக்கத்தகும்.

வெண்டளை பிறழாமைக்காக இரண்டாமடியின் முதற்சீர் தேமாங்காய்ச் சீராக அமைய வேண்டுதல் பற்றிப் ''போய்ப்போஒய்'' என்றருளிச் செய்யப்பட்டது. ''போய்ப்போய்'' என்னில் தேமாச் சீராய் தளை தட்டுமே. ''காய்முன் நேரும் மாமுன் நிரையும் விளமுன்நேரும் வருவது வெண்டளை.''

பூவியேல் = 'புகுவியேல்' என்ற எதிர்மறை வினைமுற்று மருவியிருக்கின்றதென்னலாம். உயிர் கலாய் பாலுண்டு = உயிரைப் பாலோடே கலந்து உண்கையாவது பாலுண்கிற பாவனையிலே உயிரை முடிப்பதாம். கலாய்—கலந்து. ''களாய்'' என்பர் அத்யாபகர். அவளுயிரை மாய்த்தவனை எம்பெருமானை வாழ்த்துவதே நமக்கு மிடுக்கு என்றாவது, மாய்த்தவனை வாழ்த்துகையிலே துணிவுகொள் என்றாவது, மாய்த்தவனை வலிதாக [நன்றாக] வாழ்த்து என்றாவது உரைக்கலாம். 40

2625 வலிய மெனநினைந்து வந்தெதிர்ந்த மல்லர் *
வலியமுடி யிடிய வாங்கி *—வலியநின்
பொன்னாழிக் கையால் புடைத்திடுதி கீளாதே *
பன்னாளும் நிற்கு மிப்பார். 41

வலியம் என நினைந்து	'நாமே பலசாலிகள்' என்று நினைத்துக்கொண்டு	புடைத்திடுதி	(அந்த மல்லர்களை) அடித்துவிட்டாய்;
வந்து எதிர்ந்த மல்லர்	எதிரிட்டுவந்த மல்லர்களுடைய		(நீ கைநோகக் காரியம் செய்ததைக் கண்ணால் கண்டு வைத்தும்)
வலிய முடி	வலிதான தலைகள்		
இடிய	சிதறியொழியும்படி	இப்பார்	இவ்வுலகமானது
வாங்கி	போக்கடித்து		
நின்	உன்னுடைய	கீளாதே	வயிறு வெடித்து மாய்ந்து போகாமல்
வலிய பொன் ஆழி கையால்	வலிதாயும் அழகிய திருவாழியை யுடையதாயுமுள்ள திருக்கையாலே	பல் நாளும் நிற்கும்	சிரஞ்ஜீவியா யிருக்கின்றதே! (என்ன கல் நெஞ்சோ!)

* * *—பூதனையை முடித்த விஷயத்தைக் கீழ்ப்பாட்டில் பேசவே, அத்தோடு ஒரு கோவையான மல்லவத சரித்ரமும் நினைவுக்குவர, அதனை இப்பாட்டில் பேசுகிருர். முரட்டு மல்லர்களோடு நீ போர்செய்ய நேர்ந்த காலத்து உனது ஸுகுமாரமான திருக்கைகளாலே அந்த மல்லர்களை நீ புடைக்கும்போது இவ்வுலகின்கண் இருந்த படுபாவி ஜனங்களெல்லாம் "ஐயோ! நமது சரண்யனுக்கு என்ன தீங்கு விளைந்திடுமோ!" என்று சிறிதும் வயிற்றெரிச்சல் படாதே கல்லாகக் கிடந்தனரே! அந்தோ! என்று இன்று தாம் வயிற்றெரிச்சல் படுகிருர்.

நாங்களே மஹா பலசாலிகள் என்று செருக்குற்று எதிரிட வந்த மல்லர்களுடைய வலிமிக்க முடிகள் சிதறிப்போம்படி நீ உனது அழகிய திருக்கைகளால் புடைக்கச்செய்தே அதனைக் கண்டுகொண்டிருந்த இவ்வுலகமானது வயிறு வெடித்து மாய்ந்து போகாமல் சிரஞ்சீவியாயிருந்ததே! என்ன கல் நெஞ்சு! என்ருராயிற்று.

பின்னடிகட்கு மற்ருெரு வகையாகவும் பொருள் கொள்ளலாம்; வலியநின் பொன்னுழிக்கையால் கீளாதே புடைத்திடுதி=இரணியனது மார்வைக் கீண்டெறிந்தது போலும் கேசியின் வாயைக் கீண்டெறிந்தது போலும் மல்லர்களையும் கீண்டெறியாமல் மற்போர் செய்யும் முறைமைக்குத் தகுதியாகத் திருக்கைகளாலே புடைத்திட்டாய்; அப்படி புடைத்திராவிடில் இந்த உகைம் அஸ்தமித்துப் போயிருக்கும். அந்த மல்லர்களை நீ புடைத்திடவே (நீயும் பிழைத்து) இவ்வுலகமும் நிலைபெற்று நிற்கிறது என்னவுமாம். 41

2626 பாருண்டான் பாருமிழ்ந்தான் பாரிடந்தான் பாரளந்தான் *
பாரிட முன்படைத்தா னென்பரால் *—பாரிட
மாவானும் தானு லாரிடமே? * மற்ருெருவர்க்கு
ஆவான் புகாவா லவை. 42

(ஸ்ரீமந்நாராயணனே)	
பார் உண்டான் — (பிரளய காலத்தில்) பூமியை விழுங்கினுன்;	என்பர் — என்று சாஸ்த்ர ஞானிகள் சொல்லுகிருர்கள்;
பார் உமிழ்ந்தான் — (பிறகு) அதைப் புறப்பட விட்டான்;	பார் இடம் ஆவானும் தான் — அவனே ஸகல ப்ரபஞ்ச ஸ்வரூபியாகவு மிருக்கிருன்;
பார் இடந்தான் — (மஹாவராஹமாகிப்) பூமியை ஒட்டுவிடுவித்தெடுத்தான்;	ஆனல் — ஆனபின்பு
பார் அளந்தான் — (திருவிக்கிரமனுகிப்) பூமியை அளந்துகொண்டான	இடம் ஆர் — (நமக்கு) ஆச்ரயமாகக் கூடியவர்கள் வேறு யார்? (ஆருமில்லை.)
முன் — முதல் முதலாக	அவை — இவ்வுலகங்கள்
பார்இடம் படைத்தான் — இப்பூமியை யெல்லாம் உண்டாக்கினுன்	மற்று ஒருவர்க்கு ஆவான்புகா — ஸ்ரீமந்நாராயணனைத் தவிர மற்ருெரு தெய்வத்துக்கு சேஷப்பட்டிருக்கமாட்டா.

* * *—கீழ்ப்பாட்டில் இப்பார் என்று இவ்வுலகத்தின் ப்ரஸ்தாவம் வரவே உலகிலுள்ள பிராணிகளின் தன்மைகளில் ஆழ்வார்க்கு ஆராய்ச்சி சென்றது. ஸ்ரீமந்நாராயணனையே ஸர்வ ஸ்வாமியென்று கொண்டு பற்ருமல் கண்ட தெய்வங்களின் காலிலே விழுந்து அலைந்து திரியும் ராஜஸ தாமஸப் பிராணிகள் விஞ்சியிருக்கக் கண்டார். திருவுள்ளத்திலே பரிதாபம் தோன்றி, ஸ்ரீமந்நாராயணனுக்கு அடிமைப்பட்டிருக்கை தவிர வேருென்றும் தகுதியல்ல என்பதைக் காரணத்துடன் வெளியிடுகிருர்.

பிரளயங் கொள்ளாதபடி உலகங்களைத் திருவயிற்றிலே வைத்து நோக்கினவன் நாராயணன்; அவற்றை மறுபடியும் வெளிப்படுத்தினவனும் அவனே;

பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போன ஹிரண்யாக்ஷனை மஹாவராஹமாகிக் கொன்று அப்பூமியை மீட்டுக் கொணர்ந்தவனும் அவனே; மற்றொருகால் மஹாபலியின் அஹங்காரத்தை அடக்கி அவன் பக்கலில்நின்றும் இவ்வுலகை ஸ்வாதீநப்படுத்திக் கொண்டவனும் அவனே; இங்ஙனே பல பல சொல்வதேன்? இப்புவனி முழுவதையும் உண்டாக்கினவன் அவனே; இவ்விஷயம் நான் உத்ப்ரேக்ஷித்துச் சொல்லுகிறதல்ல; வேதங்களும் வைதிகர்களும் சொல்லுவது இதுவே. ஆகவிப்படி எம்பெருமான் இவ்வுலகத்திற்கு ஸர்வப்காரங்களாலும் ரக்ஷகனா யிருப்பதுபற்றி சாஸ்த்ரங்களில் "எம்பெருமானே இவ்வுலகம், இவ்வுலகமே எம்பெருமான்" என்று ஒற்றுமைநயந் தோன்றச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையாலே இவ்வுலகங்கட்கு அப்பெருமானைத் தவிர்த்து வேறொருவரும் ஆச்ரயமா யிருக்க முடியாது; இவ்வுலகமும் அவனுக்கன்றி மற்றொருவர்க்கு சேஷப்பட்டிருக்க வழியில்லை என்றாராயிற்று.

பாரிடமாவானும் தான்=உபநிஷத்தில் "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம." என்று சொல்லியிருப்பது இங்கே நினைக்கத்தக்கது. எல்லாம் பரப்ரஹ்மமே யென்றது—எல்லாப் பொருள்களும் ப்ரஹ்மத்தையே ஆதாரமாகவும் ரக்ஷகமாகவும் சேஷியாகவும் தாரகமாகவுங் கொண்டவை என்றபடி.

ஆனால் ஆர் இடமே=எல்லா உலகமும் ஸ்ரீமந்நாராயணனிட்ட வழக்காயிருக்கும்போது வேறொருவர் புகலிடமாயிருக்கக் கூடுமோ? என்கை. ஆனால் என்றது ஆனதால் என்றபடி. இரண்டாமடியிலும் நான்காமடியிலும், ஆல்—அசைச்சொல். அவை மற்றொருவர்க்கு ஆவான் புகா=ஆவான் புகுதலாவது அடிமைப்படநேர்தல். "இவன் அவனுக்கு ஆனான்" என்றால் 'இவன் அவனுக்கு அடிமைப்பட்டான்' எனப் பொருள்படுதல் காண்க. புகா—பலவின்பால் எதிர்கால எதிர்மறை வினைமுற்று. பாருண்கை, பாருமிழ்கை முதலிய கீழ்ச்சொன்ன செயல்களெல்லாம் எம்பெருமானிடத்தில் தவிர மற்ற தெய்வங்களிடத்துப் பொருந்தமாட்டா என்னவுமாம். 42

2627 அவய மெனநினைந்து வந்த சுரர்பாலே *
நவையை நளிர்விப்பான் தன்னை *—கவையில்
மனத்துயர வைத்திருந்து வாழ்த்தாதார்க் குண்டோ? *
மனத்துயரை மாய்க்கும் வகை. 43

அவயம் என நினைந்து வந்த	அபயம் வேண்டி வந்து சரணமடைந்த	உயர வைத்து இருந்து	பரிபூர்ணமாக வைத்துக் கொண்டிருந்து
சுரர் பால்	தேவதைகளிடத்திலுள்ள	வாழ்த்தாதார்க்கு	மங்களாசாஸனம் பண்ணாதவர்களுக்கு
நவையை	குற்றங்குறைகளை		
நளிர்விப்பான் தன்னை	போக்கடிக்குமெம்பிரானை	மனம் துயரை மாய்க்கும் வகை உண்டோ?	தங்கள் மனத்திலேயுள்ள துக்கங்களைப் போக்கிக் கொள்ள வழி ஏது?
கவை இல் மனத்து	ஒருபடிப்பட்ட மனத்திலே		

* * *—ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை என்று கீழ்ப்பாட்டிற் சொன்னதையே மற்றொரு முகத்தாலும் ஸ்தாபித்துக்கொண்டு அப்படிப்பட்ட எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் செய்பவர்கட்கன்றி மற்றையோர்க்குத் துன்பங்கள் நீங்க வழியில்லை யென்கிறார். ஸாமாந்யரான உலகர்கள் எந்தத் தெய்வங்களைப் பரதேவதை யென்று கொள்ளுகின்றார்களோ அந்தத் தெய்வங்களும் தங்கள் தங்களுக்கு ஆபத்து நேருங் காலங்களில் ஸ்ரீமந்நாராயணனையே வந்து அடிபணிந்து உய்ந்து போகின்றன என்பதை முன்னடிகளில் அருளிச்செய்கிறார்.

சுரர்பாலே என்ற விடத்து ஸுரா: என்ற வடசொல் சுரர் எனத் திரிந்துகிடக்கிறது. தேவதைகள் என்று பொருள். இங்கே, பிரமன், சிவன் முதலிய ப்ரதாந தேவதைகளை நினைக்கிறது. வேதங்களை மதுகைடபர் முதலான அசுரர் கையிலே பறிகொடுத்துவிட்டு அழுது கொண்டேவந்து சரணம் புகுந்துநின்ற பிரமனென்ன, ப்ரஹ்மஹத்தி சாபத்தால் கண்டவிடமெங்குந் திரிந்து எங்கும் புகலற்று வந்துநின்ற பரமசிவனென்ன, மாவலிபோல்வார்கையிலே தகர்ப்புண்டு பரிபவப்பட்டு வந்து நின்ற இந்திரனென்ன இவர்கட்கும் மற்றும் பல தெய்வங்கட்கும் துன்பந் தவிர்த்தபிரான் ஸ்ரீமந் நாராயணனேயிறே.

அவயமென நினைந்து வந்த=“ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே—அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம” என்று கடற்கரையிலே ஸ்ரீவிபீஷணாழ்வானை நோக்கி அபயமளிப்பதை நெஞ்சிலேகொண்டு “அஞ்சேலென்று கைகவியாய்” என்றும் “அடைக்கலம் புகுந்தவென்னை அஞ்சலென்ன வேண்டுமே” என்றும் அபயப்ரதானம் வேண்டி வருகின்றனராம் தேவர்கள். அப்படிப்பட்டவர்கள்திறத்திலே திருவருள்செய்து அவர்களுடைய நவையை நளிர்விப்பவன் எம்பெருமான்; நவையாவது குற்றம்; துக்கமுமாம். நளிர்வித்தலாவது நடுங்கச் செய்தல்; பகைவரை நடுங்கச் செய்கிறானென்றால் பகைவரை ஒழிக்கின்றானென்று கருத்தாகுமிறே.

அபயம் என்ற வடசொல் அவ்வயமெனத் திரிந்தது. அந்தாதித் தொடைக்கு நன்கு சேரும்படியாக அவையம் எனப் பாடமென்பாருமுண்டு; அப்போது இடைப்போலி.

இப்படி ஸர்வரக்ஷகனை எம்பெருமானைக் கவை இல் மனத்து உயரவைத்திருந்து வாழ்த்தார்க்கு மனத்துயரை மாய்க்கும் வகை உண்டோ? = கவை என்று இரண்டுபட்டிருக்கைக்குப் பெயர்; கவையில்லாமையாவது ஒருபடிப்பட்டிருக்கை; “அநந்யாச்சிந்தயந்தோ மாம்” என்று கீதையில் சொல்லுகிற நிலைமை வாய்ந்திருக்கை. எம்பெருமானையே உபாயமாகவும் உபேயமாகவும் துணிந்திருக்கையைச் சொன்னபடி. பரமைகாந்திகளாய்க்கொண்டு அவனை வாழ்த்ாதவர்களுக்கு மனத்துன்பங்களை நீக்கிக்கொள்ள வழியில்லை யென்றதாயிற்று.

திருவாய்மொழியில் [9-8-3] “எவைகொ லணுகப்பெறு நாள்” என்ற பாட்டில், நவை, கவை என்ற பதப்பிரயோகம் காண்க. 43

2628 வகைசேர்ந்த நன்னெஞ்சும் நாவுடைய வாயும் *
மிகவாய்ந்து வீழா வெனிலும் *—மிகவாய்ந்து
மாலைத்தாம் வாழ்த்தா திருப்ப ரிதுவன்றே? *
மேலைத்தாம் செய்யும் வினை. 44

வகை சேர்ந்த நல் நெஞ்சும்	(ஞானத்திற்கு) மார்க்கமாக ஏற்பட்டிருக்கிற நல்ல நெஞ்சும்
நா உடைய வாயும்	(எம்பெருமானைப் பேசுவதற்கு உறுப்பான) நாவோடு கூடிய வாக்கும்
மிக வாய்ந்து வீழா எனினும்	(எம்பெருமானை) நன்றாகக் கிட்டி அநுபவிக்கா விட்டாலும்,
தாம்	சேதநராய்ப் பிறந்திருக்கிற தாங்கள்
மிக ஆய்ந்து	நன்றாக ஆராய்ச்சி பண்ணி
மாலை	எம்பெருமானை
வாழ்த்தாது இருப்பர்	வாழ்த்தாமல் வாளா கிடக்கின்றார்கள்;
மேலை தாம் செய்யும் வினை இது அன்றே	மேலுள்ள காலமும் கெட்டுப் போவதற்காகத் தாங்கள் செய்து கொள்ளுகிற பாவ மன்றோ இது.

* * *—இப்பாட்டுக்குப் பிள்ளை திருநரையூரரையர் ஒரு படியாகவும் பட்டர் ஒரு படியாகவும் நிர்வஹிப்பராம். அரையர் நிர்வஹித்தபடி எங்ஙனே யென்னில்;

வகை சேர்ந்த நல்நெஞ்சும்=எம்பெருமானுடைய ஏதோவொரு குணத்திலும் ஏதோவொரு சரித்திரத்திலும் பொருந்தி நின்ற நல்ல மனமும், அந்த ஒரு குண சேஷ்டிதத்தையே பேசிப் புகழ்ந்துகொண்டிருக்கிற நாவோடு கூடின வாக்கும் அப்பெருமானுடைய எல்லாக் குணங்களிலும் எல்லாச் சரித்திரங்களிலும் பொருந்தி மேல்விழுந்து அநுபவிக்கமாட்டாதிருந்தனவேயாகிலும், எப்படியாவது கஷ்டப்பட்டு ஸகல குணங்களிலும் ஸகல சரித்திரங்களிலும் நெஞ்சு பொருந்தும்படி செய்து கொண்டு ஸர்வேச்வரனை அநுபவித்து மங்களாசாஸநம் பண்ணவேண்டியிருக்க, அங்ஙனே பண்ணாதிருக்கிறார்கள் ஸம்ஸாரிகள்; இஃது ஏன்? என்றால், முற்காலத்தில் அவர்கள் செய்த பாவமே இதற்குக் காரணம்—என்பதாக அரையர் நிர்வாஹம்.

பட்டர் நிர்வாஹமெங்ஙனே யென்னில்;—ஆத்மாவினுடைய ஞானம் வெளியில் ப்ரஸரிப்பதற்கு வழியாக அமைந்திருக்கின்ற நெஞ்சும், எம்பெருமானைப் பேசுகைக்கு யோக்யமான நாவோடு கூடிய வாயும் ரஜோ குணமும் தமோ குணமும் மிக்கு ஸ்வயமாகவே பகவத் விஷயத்திற் படிந்தனவில்லையே யாகிலும், 'நம்மை ஈச்வரன் படைத்தது ஏதுக்கு?' நமக்குக் கைகால் முதலிய கரண களேபரங்களைக் கொடுத்தது ஏதுக்கு?' என்று ஆராய்ச்சிசெய்து பகவத் விஷயத்திலே பல்லாண்டு பாட இழிய வேண்டியது ப்ராப்தமாயிருந்தும் பாழும் ஸம்ஸாரிகள் பகவத் விஷயத்தில் அடியோடு இழியாதிருக்கிறார்களே; இதுவரையில் மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து ஸம்ஸாரிகளா யொழிந்தது போராதா? இனிமேலாவது நல்வழிபோகத் தேடலாகாதா? மேலுள்ள காலமும் நித்ய ஸம்ஸாரிகளா யிருப்பதற்கே யன்றோ இப்படி பாபிகளாய்த் திரிகிறார்கள்!—என்பதாம். 44

2629 வினையார் தரமுயலும் வெம்மையை யஞ்சி *
தினையாஞ் சிறிதளவும் செல்ல—நினையாது *
வாசகத்தா லேத்தினேன் வானோர் தொழுதிறைஞ்சும் *
நாயகத்தான் பொன்னடிக்கள் நான். **45**

வினையார்	பாவங்கள்	நான்	அடியேன்
தர முயலும்	நமக்கு உண்டு பண்ண நினைக்கிற	வானோர் தொழுது இறைஞ்சும் நாயகத்தான்	நித்ய ஸூரிகள் தொழுது வணங்கும் பெருமை வாய்ந்த பெருமானுடைய
வெம்மையை அஞ்சி	கொடிய துன்பங்களுக்கு அஞ்சி		
தினை ஆம் சிறிது அளவும்	தினையளவு சிறிது அற்ப காலமும்	பொன் அடிக்கள்	திருவடிகளை
செல்ல நினையாது	வீணாகக்கழிய விரும்பமாட்டாமையினாலே,	வாசகத்தால் ஏத்தினேன்	சொற்களாலே துதிக்கின்றேன்.

* * *—நானும் மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்தவனேயாகிலும் இனிமேல் பிறவாதபடிக்கு வழி தேடிக்கொண்டேனென்கிறார். எம்பெருமானோடு இடைவிடாது சேர்ந்திருக்கை புண்யபலமென்றும் அவனைப் பிரிந்து வருந்துகை பாபபலமென்றும் நூல்கள் கூறும். நாம் இனிமேலும் பாவமே செய்வோமாகில் இன்னமும் வெவ்விதான பகவத் விச்லேஷ துக்கமே நமக்கு நேர்ந்திடும் என்று அச்சமுண்டாயிற்று; அவனைப் பிரிந்து ஒரு நொடிப்பொழுதும் தரித்திருக்க மாட்டாமையினாலே, வானோர் தொழுதிறைஞ்சும் பெருமைவாய்ந்த அப்பெருமானுடைய பொன்னடிகளை நான் வாய்கொண்டு துதித்துப் போருகின்றேன் என்றாராயிற்று.

வினையர் = தினைவமுவமைதி; கோவத்தினுல் உயர்த்திக்கூறுகிறபடி. வெம்மை = கடூரமான துக்கம். தினையாம் சிறிதளவும் = தானியங்களுள் தினையென்பது மிகச் சிறியதாதலால் அதனை உவமையாக எடுத்துக்கொண்டபடி; அத்யல்பகாலமும் என்றபடி. நாயகம்—பெருமை. 45

2630 நான்கூறுங் கூற்றுவ தித்தனையே * நாளுளும்
தேங்கோத நீருருவன் செங்கண்மால்*—நீங்காத
மாகதியாம் வெந்நரகிற் சேராமற் காப்பதற்கு
நீகதியாம் நெஞ்சே! நினை. 46

தேங்கு ஓதம் நீர் உருவன்	ஓடாமல் தேங்குகின்ற கடல் போன்ற திரு நிறத்தை யுடையவனும்
செம் கண்	செந்தாமரை போன்ற திருக் கண்களை யுடையவனுமான
மால்	ஸர்வேச்வரன்
நீங்காத	ஒரு நாளும் விட்டுப்பிரியக் கூடாத
மா கதி ஆம்	சிறந்த உபேயமாயிரா நின்ருன்;
	(அவ்வளவு மல்லாமல்,)
வெம் நரகில்	கொடிய ஸம்ஸாரத்திலே
சேராமல்	பொருந்தாமல்
காப்பதற்கு	நம்மை ரக்ஷிப்பதற்கு
கதி ஆம்	உபாயமாகவும் இராநின்ருன்;
நெஞ்சே நீ நினை	நெஞ்சே! (இதை) நீ அநுஸந்திக்கக்கடவை;
நாள் நாளும்	நாள் தோறும்
நான் கூறும் கூற்று ஆவது இத்தனையே	(உனக்கு) நான் சொல்லும் சொல்லாவது இவ்வளவே காண்.

* * *—உபாய உபேயங்களிரண்டும் எம்பெருமானே யென்னும் உறுதியை உரைக்கின்ருர். கடல் வண்ணனுய்ச் செந்தாமரைக் கண்ணனுன ஸ்ரீமந்நாராயணனே மீட்சியில்லாதபடி அடையத்தகுந்த பரமபுருஷன்; வெந்நரகாகிய ஸம்ஸாரத்திலே நம்மைச் சேரவொட்டாமல் செய்தருளவல்ல உபாயமும் அவனே; ஆகையாலே அவனைத் தவிர்த்து வேருெரு உபாய வஸ்துவும் உபேய வஸ்துவும் நமக்கு இல்லை என்கிற இவ்வுறுதியையே மனமே! நீ எப்போதும் சிக்கெனக் கொண்டிரு, இவ்வளவே உனக்கு நான் உபதேசிக்க வேண்டிய விஷயம். இந்த ஒரு வார்த்தையே நான் உனக்கு நாள்தோறும் சொல்லிக்கொண்டிருப்பேன்—என்று தம் திருவுள்ளத்தை நோக்கி அருளிச் செய்தாராயிற்று.

கூற்று—சொல்; கூறப்படுவது கூற்று. நாளுளும் என்பது முதலடியிலேயே சேர்ந்து அந்வயிக்கவேண்டிய பதமாகையால் அதனை இரண்டாமடியோடி கூட்டி ஓதுவது அஸம்ப்ரதாயமென்க. இப்பாட்டில் கதி என்ற சொல் மூன்ருமடியிலும் நான்காமடியிலும் உள்ளது. இது வடசொல்விகாரம். கதி என்ற வடசொல் வ்யுத்பத்தி பேதத்தால் கமநஸாதநம் என்கிற பொருளையும் கந்தவ்ய ஸ்தலம் [அடைய வேண்டுமிடம்] என்கிற பொருளையும் தரக்கடவது. அதாவது—உபாயம் உபேயம் என இரண்டையுஞ் சொல்லக்கடவது. ஆகவே, இங்கு மூன்ருமடியிலுள்ள கதி சப்தம் உபேயப் பொருளது; ஈற்றடியிலுள்ள கதி சப்தம் உபாயப் பொருளது. "நீங்காத மாகதியாம் வெந்நரகில்" என்று கூட்டி ஓதுதல் ஒவ்வாது; "மாகதி ஆம்' என்று முற்று; வெந்நரகுக்கு விசேஷணமல்ல. ஸம்ஸாரத்தை 'வெந்நரகு' என்கிறது. 46

2631 நினைத்திறைஞ்சி மானிடவ ரொன்றிப்ப ரென்றே *
நினைத்திடவும் வேண்டாநீ நேரே *—நினைத்திறைஞ்ச
எவ்வளவ ரெவ்விடத்தோர் மாலே! * அதுதானும்
எவ்வளவு முண்டோ? எமக்கு. 47

மாலே	ஸர்வேச்வரனே !
மானிடவர்	" இவ்வுலகத்தவர்கள்
நினைத்து இறைஞ்சி	நம்மை ஒரு பொருளாக நினைத்து வணங்கி
ஒன்று	ஏதாவதொரு அற்ப பலனை யாவது
இரப்பர்	நம்மிடத்தில் வேண்டிக் கொள்வர்கள் "
என்றேயும்	என்று கூட
நீ நினைத்திட வேண்டா	நீ நினைக்க வேண்டா ;

(இப்பாவிகள் அற்ப பலன்களை விரும்பி தேவதாந்தரங்களின் பக்கல் ஓடுமவர்களே யொழிய அவற்றுக்காகவும் உன்னருகு வரமாட்டார்கள் ; இப்படியான பின்பு,)

நேரே நினைத்து இறைஞ்ச	(இவர்கள்) உன்னையே உபாயமாகவும் உபேயமாகவும் நினைத்துத் தொழுவதற்கு
எவ் அளவர்	என்ன அறிவுள்ளவர்கள் ;
எவ் இடத்தோர்	அப்படிப்பட்ட அறிவு உண்டாகக் கூடிய இடத்தில் தானுள்ளவர்களோ? (இருள் தருமா ஞாலத்திலுள்ளவர்களன்றோ.)
எமக்கு	உன்னுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்திற்குப் பாத்திரமான அடியோங்களுக்கோ வென்றால்
அது தானும்	கீழ்ச்சொன்ன மானிடவர்களுக்குள்ள துர்ப்புத்தி
எவ் அளவும்	சிறிதேனும்
உண்டோ	உண்டாகக் கூடியதோ ?

(உபாயமும் உபேயமும் நீயே யென்கிற உறுதி எமக்கு நிலை பெற்றதன்றோ.)

* * *—கீழ்ப்பாட்டில் எம்பெருமானே உபாயமும் உபேயமும் என்ற உறுதியை வெளியிட்ட ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் "ஆழ்வீர்! இப்படிப்பட்ட உறுதி உமக்கு மாத்திரமேயன்றோ வுள்ளது ; மற்றையோர்க்கு இல்லையே. எல்லாரும் என்னை உபாயமாக மாத்திரம் பற்றுகிறார்களே யன்றி உபேயமாகவும் பற்றுகிறார்களில்லையே. 'ஸம்பத்தைக் கொடு, ஸந்தானத்தைக் கொடு' என்று சில க்ஷுத்ர புருஷார்த்தங்களை வேண்டிப் பெற்றுக்கொண்டு ஒழிந்து போகிறார்களே யல்லது 'நீயே எமக்கு வேணும்' என்று என்னையே புருஷார்த்தமாக விரும்புவாரைக் கிடைக்கவில்லையே! ; உமக்காவது இந்த உறுதி நிலைத்து நிற்குமா?" என்று கேட்க ; அதற்கு உத்தரமாக அருளிச் செய்கிற பாசுரம் போலும் இது.

"மாலே!, மானிடவர் நினைத்து இறைஞ்சி ஒன்று இரப்பர் என்றேயும் நீ நினைத்திட வேண்டா" என்று முன்னடிகளை அந்வயித்துக்கொள்க. உலகிலுள்ள மனிசர்கள் ஐச்வர்யம் ஸந்தானம் முதலிய க்ஷுத்ர புருஷார்த்தங்களையாவது உன்னிடத்திலே வந்து விரும்பினால், அவர்கள் உன்னிடத்திலே உபாயத்வ புத்தியையாவது வஹித்திருக்கின்றனர் என்று ஒருவாறு மகிழ்ந்திருக்கலாம் ; அக்கேடுமில்லை. "ஆரோக்கியம் வேண்டி ஆதித்தியனைப் பணிகின்றேன் ; செல்வம் வேண்டிச் சிவனைத் தொழுகின்றேன் ; ஆயுள் வேண்டி அயனை யடைகின்றேன்" என்றிப்படி ஒவ்வொரு பலனை வேண்டி ஒவ்வொரு தேவதாந்தரத்தைப் பணிய ஓடுமவர்களா யிருக்கின்றார்களே யொழிய, அந்த க்ஷுத்ர பலன்களை விரும்பியாகிலும் உன்னிடத்தில் வருகிறவர்களைக் காணோமே. ஆகவே மானிடவர் உன்னை உபாயமாகவும் பற்றாதிருக்க, உபேயமாகப் பற்றுகைக்கு என்ன ப்ரஸக்தியுளது? அடியோம் அப்படியல்ல ; அவர்களுடைய துர்ப்புத்தி அடியோமுக்குச் சிறிதுமில்லை என்றாராயிற்று.

நேரே நினைத்திறைஞ்ச என்றவிடத்து நேரே என்றது உள்ளபடியாக என்றபடி. உன்னை உபாயமாகவுங் கொள்ளாத பாபிகள் உபாயோபேயங்களிரண்டுமாக உன்னை எப்படி கொள்வார்கள் என்று கைமுதிக நியாயத்தாற் காட்டுகிறபடி.

ஏவ்வளவ ரெவ்விடத்தோர் என்றதில், 'எவ்விடத்தோர்' என்று முன்னே அந்வயித்து 'எவ்வளவர்' என்று பின்னே அந்வயிக்கவேணுமென்று பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம்போலும். இது தன்னிலே ஸ்வாரஸ்யமுமுண்டு. "நேரே

நினைந்திறைஞ்ச எவ்விடத்தோர்?" = இவ்விருள்தருமாஞாலத்திலே பிறந்து வைத்து உன்னை உள்ளபடி நினைத்திறைஞ்ச எப்படி முடியும்? என்றார் முதலில். அதற்குமேல், இவ்விருள்தருமா ஞாலத்திலேயே பிறந்திருக்கிற தமக்கு மாத்திரம் இந்த அத்யவஸாயம் எங்ஙனே உண்டாயிற்று? என்று பிறர் சங்கிக்கக்கூடுமே யென்றெண்ணி அந்த சங்கைக்குப் பரிஹாரமாக, எவ்வளவர்? என்கிறார்; இவ்விருள் தருமா ஞாலத்திலே பிறந்து வைத்தாலும் உன்னுடைய நிர்ஹேதுக கிருபைக்கு இலக்காகும்படியான அதிகாரமாவது இருந்தால் கடைத்தேறலாம்; அதுதானு முண்டோ என்றவாறு.

அதுதானுமெவ்வளவுமுண்டோ எமக்கு? = "நேரே நினைத்திறைஞ்ச எவ்வளவரெவ் விடத்தோர்" என்று இகழ்ந்துரைக்க வேண்டும்படியான நிலைமை அடியேனுக்கு இதுவரையிலுமில்லை, இன்மேலுமுண்டாகப் போகிறதில்லை என்றபடி. ... 47

2632. எமக்கியாம் விண்ணாட்டுக்கு உச்சமதாம் வீட்டை *
அமைத்திருந்தோ மஃதன்றே யாமாறு ?—அமைப்பொலிந்த
மென்தோளி காரணமா வெங்கோட்டே றேழுடனே *
கொன்றானையே மனத்துக் கொண்டு. 48

அமை பொலிந்த மென் தோளி காரணம் ஆ	மூங்கில்போல் பருத்து விளங்குகின்ற மெல்லிய தோள்களை யுடையவளான நப்பின்னைப் பிராட்டிக்காக	விண் நாட்டுக்கு உச்சமது ஆம் வீட்டை	மேலுலகங்களுக் கெல்லாம் மேற்பட்டதான பரமபதத்தை
வெம் கோடு ஏழ் ஏறு	கொடிய கொம்புகளையுடைய ஏழு காளைகளை	எமக்கு அமைத்திருந் தோம	எமக்கு (ப்ராப்ய பூமியாகப்) பாரித்துக் கொண்டிருக் கின்றோம்.
உடனே	ஒரு நொடிப் பொழுதில்		
கொன்றானையே	முடித்த எம்பெருமானையே		
மனத்துக் கொண்டு	சிந்தையில் தியானித்துக் கொண்டு	அஃது அன்றே ஆம் ஆறு	அப்படியிருப்பதன்றோ (முமுக்ஷுத்வத்திற்கு) ஏற்றிருப்பது.
யாம்	அடியோம்		

* * *—இப்பாட்டிலும் தம்முடைய உறுதியையே பேசுகிறார். இப்பாட்டுக்கு இரண்டுபடியாகப் பொருளுரைக்க இடமுண்டு. ஸ்ரீக்ருஷ்ணனாய்த் திருவவதரித்து நப்பின்னைப் பிராட்டியைத திருமணம் புணர்வதறகாக ஏழு ரிஷபங்களை வலியடக்கின எம்பெருமானையே நான் எப்போதும் உள்ளத்திற் சிந்தனை செய்துகொண்டிருக்கிறேனாகையால் அப்பெருமானுடைய நித்யாநுபவத்திற்குப் பாங்கான பரமபதத்திற் சென்று அநுபவிக்கவேணு மென்பதையே மநோரதித்துக் கொண்டிருக்கிறேன்; ஸம்ஸாரத்தில் காலூன்றி நிற்கமாட்டாத முமுக்ஷுக்களுக்கு இதுவேயன்றோ தகுதி—என்பது ஓர் அர்த்தம். இப்பொருளில் வீட்டை அமைததிருந்தோம் என்பதற்கு, பரமபதம்பெறப் பாரித்திருக்கின்றோம் என்று அர்த்தமாகும்; இனி அமைத்திருநதோம் என்பதற்கு 'வேண்டா மென்றிருந்தோம்' என்றும் பொருளுண்டாகையாலே, கீழ்க்கூறிய கருத்துக்கு நேர்மாறாக மற்றொரு தாத்பர்யமுங் கொள்ளலாம்; அதாவது—ஸ்ரீராம குணங்களில் ஈடுபட்ட சிறிய திருவடி "ஸ்நேஹோமே பரமோ ராஜந்! த்வயி நித்யம் ப்ரதிஷ்டித:, பக்திச்ச நியதா வீர! பாவோ நாந்யத்ர கச்சதி." என்று—இங்குற்ற அநுபவத்தை விட்டுப் பரமபதம் போகவும் என் மனம் விரும்புவதில்லை என்றாற்போலவும், "பச்சை மாமலைபோல் மேனிப் பவளவாய் கமலச்செங்கண், அச்சுதா அமரரேறே ஆயர்தங்கொழுந்தே யென்னும், இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும், அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" என்று தொண்டரடிப்பொடியாழ்வா ரருளிச் செய்தாற் போலவும்

ஸ்ரீ கிருஷ்ணகுண சேஷ்டிதங்களின் அநுபவத்திலே மிக்க விருப்பமுடைய இவ் வாழ்வார்தாமும் பரமபதத்தை வேண்டா வென்கிறார் என்க. "எம்மா வீட்டுத் திறமும் செப்பம்." (2-9-1) என்று திருவாய்மொழியிலும் இங்ஙனே அருளிச் செய்தவரிறே.

அமை என்று மூங்கிலுக்குப் பெயர்; மூங்கில்போலே திரண்டு உருண்டு விளங்குகின்ற தோள்களையுடையளான நப்பின்னைப் பிராட்டிக்காகக் கொடிய ஏழு ரிஷபங்களை உடனே முடித்தவனான கண்ணபிரானையே நான் மனத்திற்கொண டிருப்பதனால் அந்த குண சேஷ்டிதத்தில் ஈடுபட்டிருக்கிற எனக்குப் பரமபதம் ஏதுக்கு? என்கிறார் காணும்.

எமக்கு+யாம், எமக்கியாம்; "யவ்வரினிய்யாம்" என்பது நன்னூல். விண் ணாட்டுக்கு உச்சமதாம் வீட்டை=இங்கு விண்ணுடென்று பரமபதத்திற்குக் கீழ்ப்பட்ட மேலுலகங்களைச் சொல்லுகிறது. அவற்றிற்காட்டில் உச்சமதானவீடு—பரமபதம். உச்சம்—வடசொல். 48

2633 கொண்டல்தான் மால்வரைதான் மாகடல்தான் கூரிருள்தான்*
வண்டறுப் பூவைதான் மற்றுத்தான்*— கண்டநாள்
காருருவங் காண்டோறும் நெஞ்சோடும்* கண்ணனூர்
பேருருவென் றெம்மைப் பிரிந்து. 49

கொண்டல் தான்	மேகங்களையும்	மற்று கார் உருவம்தான்	மற்றுமுள்ள (குவளை, குயில், மயில் முதலிய) கறுத்த உருவங்களையும்
மால் வரை தான்	பெரிய மலைகளையும்	கண்ட நாள்	பார்க்குங் காலத்தில்
மா கடல்தான்	கருங்கடலையும்	காண் தோறும்	பார்க்கும்போதெல்லாம்
		நெஞ்சு	என் மனமானது
கூர் இருள் தான்	செறிந்த இருளையும்	கண்ணனார் பேர் உரு என்று	'இவை கண்ணபிரானுடைய அழகிய திருமேனி' என்றெண்ணி
வண்டு அரு பூவை தான்	(தேனில் நசையாலே) வண்டுகள் விட்டு நீங்காத பூவைப் பூவையும்	எம்மை பிரிந்து	என்னைவிட்டு நீங்கி
		ஓடும்	அங்கே ஓடும்.

* * *—இங்கிருந்து குணநுபவமே பண்ணிக் கொண்டிருந்தாலும் ச்ரமஹர மான திவ்ய வடிவையும் ஸேவிக்கவேணுமென்று ஆசையுண்டாகுமே; அவ்வாசை யினால் தாம் அலமருகின்றபடியைப் பேசுகிறாரிதில்.

கொண்டல்தான் = "கருவுடை மேகங்கள் கண்டாலுன்னைக் கண்டா லொக்குங் கண்கள்" என்றும், "ஒக்குமம்மானுருவமென்று உள்ளங் குழைந்து நாளும் தொக்க மேகப்பல்குழாங்கள் காணுந்தோறும் தொலைவன் நான்" என்றும் சொல்லுகிறபடியே மேகங்களைக் காணும்போது கண் ஓடுகின்றது.

மால்வரைதான் = "நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே வாவென்று கூவும்" என்கிறவரிறே இவ்வாழ்வார். பெரிய மலையைப் பார்க்கும்போது பெரு மாளைக் கண்டாற்போலே ஓடுவர்.

மாகடல்தான் = கடல்வண்ண னென்றே எம்பெருமானுக்குத் திருநாமமிறே. கடலைக் கண்டால் எம்பெருமானைக் கண்டாற்போலே விரும்பி ஓடுவர்.

கூரிருள்தான் = "தானோரிருளன்ன மாமேனி எம்மிறையார்" என்று கீழு மருளிச்செய்தாரிறே. "இருள்விரி சோதிப்பெருமாள்" என்றார் திருவிருத்தத்திலும், இருளைக் கண்டால் எம்பெருமானைக் கண்டாற்போலே மகிழ்வர்.

வண்டருப்பூவைதான் = பூவைப் பூவாவது காயாம்பூவில் ஒரு வகைப் பூ; "பூவைப் பூவண்ண வென்னும்" 'காயாம்பூவண்ணம் கொண்டாய்" என்று எம்பெருமானுடைய நிறத்திற்குப் பூவைப்பூவை ஒப்புச் சொல்வதுண்டிறே. மற்றுந்தான் என்றது—எம்பெருமான் திருநிறத்திற்குப் போலியாகக்கூடிய கருநெய்தற்பூ, குயில், மயில், கருவிளை, களங்கனி முதலிய பலவற்றைச் சொன்னபடி. "பைம்பொழில்வாழ் குயில்காள் மயில்காள் ஒண்கருவிளைகாள், வம்பக்களங்கனிகாள், வண்ணப்பூவை நறுமலர்காள், ஐம்பெரும்பாதகர்காள்! அணிமாலிருஞ்சோலை நின்ற எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கென் செய்வதே?" என்ற நாச்சியார் திருமொழிப் [9·3.] பாசுரங்காண்க. ஆகிய இப்பொருளைக் காணும்போதெல்லாம் கண்ணபிரானுடைய திருவுருவையே ஸாக்ஷாத்தாகக் கண்டதாக நினைத்து என்னுடைய நெஞ்சு என்னைப் பிரிந்து அவ்வப்பொருள்களினருகே ஓடுகின்றது என்றுராயிற்று. நெஞ்சானது தம்மைப் பிரிந்து ஓடுவதாகச் சொல்லுகிற விது ஒருவகை கவிமரபு. "கண்ட நாள் நெஞ்சோடும்" என்றதே போதுமாயிருக்க காண்தோறும் என்றது ஏதுக்கென்னில்; ஒரு நாளிரண்டுநாள் இப்படி பார்த்துவிட்டு 'இது ப்ரமம்' என்று பிறகு வெறுமனிருப்பதில்லை; காருருவங்களைக் காண்கிற போதெல்லாம் இந்த ப்ரமம் உண்டாகியே தீரும் என்பதற்காக. ... 49

2634 பிரிந்தொன்று நோக்காது தம்முடைய பின்னே*
திரிந்துழலும் சிந்தனையார் தம்மை*—புரிந்தொருகால்
ஆவா! வெனவிரங்கா ரந்தோ! வலிதேகொல்?*
மாவாய் பிளந்தார் மனம். **50**

பிரிந்து	தம்மைவிட்டுப் பிரிந்து
ஒன்று நோக்காது	வேறொன்றிலும் கண் வையாமல்
தம்முடைய பின்னே	தம்மோடு கூடவே
திரிந்து உழலும்	அலைந்துகொண்டு திரிகிற
சிந்தனையார் தம்மை	என் நெஞ்சினுரை
ஒரு கால்	ஒரு காலாகிலும்
புரிந்து	அன்புகூர்ந்து
ஆ ஆ என இரங்கார்	ஐயோவென்று அருள்புரிகின்றிலர் (பகவான்);
அந்தோ	கஷ்டம்!
மா வாய் பிளந்தார் மனம்	கேசியென்னும் குதிரையின் வாயைக் கீண்டொழித்த அப்பெருமானுடைய நெஞ்சு
வலிதே கொல்	கடினமோ?

* * *—எம்பெருமானுடைய திருவுருவத்திற்குப் போலியான பொருள்களைக் கண்டபோதெல்லாம் தாம் பாவநாப்ரகர்ஷத்தாலே அவற்றினருகே போய் அநுபவிக்கப் பாரிக்கிறபடியைப் பேசினர் கீழ்ப்பாட்டில். அருகே சென்றவாறே அவை உபமான பதார்த்தங்களாகவே [அதாவது—மேகமாகவும் கடலாகவும் இருளாகவும் பூவைப்பூவாகவும்] இருக்குமேயன்றி உபமேயமான எம்பெருமானாக இருக்கமாட்டாவே; "ஐயோ! நாம் எம்பெருமானையே ஸாக்ஷாத்தாக ஸேவிக்கப் பெற்றோமென்று களித்திருந்தோமே; இப்படி அந்யதாஜ்ஞாநமாகவா முடிந்துவிட்டது!" என்று வருத்தமுண்டாகி, 'எம்பெருமான் நம்மை இப்படியே வருத்தப்படுத்தி வருகிறானே யொழிய ஒருகாலும் அவன் திருவுள்ளத்தில் இரக்கம் பிறப்பதில்லையே!; என்ன கல்நெஞ்சோ!' என்று வெறுக்கிறார்.

ஆவாவென = 'ஹாஹா' என்கிற வடமொழி அவ்யயம் ஆவாவென்று கிடக்கிறது. இரக்கக் குறிப்பிடைச் சொல்.

ஆச்ரிதர்கட்காகக் கேசிவதம் முதலிய அரிய பெரிய செயல்களைச் செய்து பரமகாருணிகன் என்று பேர் பெற்றிருப்பவன் என் விஷயத்திலே கல்நெஞ்சனுவதே! என்று வெறுக்கிறார்.

"உயர்வற வுயர்நலமுடையவன்" என்று ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனாகத் தம் வாயாலே சொல்லத்தக்க எம்பெருமானை 'இரக்கமற்றவன்' என்று உறுதியாகச் சொல்லக் கூசி "அந்தோ! வலிதே கொல்?" என்று சங்கிப்பது போலக் கூறினபடி. 50

2635 மனமாளு மோரைவர் வன்குறும்பர் தம்மை*
சினமாள்வித் தோரிடத்தே சேர்த்து*—புனமேய
தண்டுழா யானடியைத் தாங்காணு மஃதன்றே ?*
வண்டுழாஞ் சீரார்க்கு மாண்பு, 51

மனம் ஆளும்	மனத்தையும் தங்கள்வசத்திலே அடக்கி ஆளுமவையான	புனம் மேய தண் துழாயான் அடியை	தன்னிலத்திலே பொருந்திய குளிர்ந்த திருத்துழாய் மாலையை அணிந்துள்ள அப்பெருமானது திருவடிகளை
ஓர் ஐவர்	ஒப்பற்ற பஞ்சேந்திரியங்களென்கிற		
வன் குறும்பர் தம்மை	பிரபலர்களான துஷ்டர்களை	தாம் காணும் அஃது அன்றே	ஸேவித்துக் கொண்டிருப்பதன்றோ
சினம் மாள்வித்து	கோவமடங்கச்செய்து		
ஓர் இடத்தே சேர்த்து	(பகவத் விஷயமாகிய) ஒரு நல்ல இடத்திலே கொண்டு மூட்டி,	வண் துழாம் சீரார்க்கு மாண்பு	அழகிய விசாலமான நற்குணங்களையுடையவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அழகு.

* * *—கீழ்ப்பாட்டில் "மாவாய் பிளந்தார் மனம்—அந்தோ! வலிதேகொல்" என்று எம்பெருமானைக் கல்நெஞ்சனாகச் சங்கித்தார்; உடனே தம் ஸ்பரூபத்தை ஆராய்ந்து பார்த்தார்; 'சேஷியான எம்பெருமான்விஷயத்திலே சேஷபூதர் இப்படி சொல்லத் தகாதென்று விவேகமுற்று, எம்பெருமான் திருவுள்ளமான படியே செய்யக்கடவன்; அவனை நாம் நிர்ப்பந்திப்பதென்பது தகுதியன்று; நம்முடைய இந்திரியங்களை யெல்லாம் அவன்பக்கலில் ஊன்றவைத்து அவனது திருவடித் தாமரைகளை ஸேவித்துக்கொண்டிருப்பதேயன்றோ நமக்கு ஸ்வரூபம்' என்று அருளிச் செய்கிறார் இப்பாட்டில்.

[மனமாளும் ஓரைவர்.] எம்பெருமானுக்கு ஆத்மா சேஷப்பட்டது; ஆத்மாவுக்கு மநஸ்ஸு சேஷப்பட்டது; மநஸ்ஸுக்கு இந்திரியங்கள் சேஷப்பட்டவை; அதாவது—மனம்போன வழியே செவி வாய் கண் முதலிய இந்திரியங்கள் போகக்கடவன—என்றிப்படி ஒரு நியதி உண்டு; இந்த நியமம் குலைந்து, இந்திரியங்களானவை மனத்தைத் தம் வழியிலே இழுக்கின்றனவாம். மனத்தையும் தங்கள் வசத்திலேயாக்கி ஆளுகின்ற வன்குறும்பர்களான ஐவருண்டு—பஞ்சேந்திரியங்கள்—செவி வாய் கண் மூக்கு உடல் என்பவை, அவற்றை வலியடக்கி பகவத் விஷயத்திலே ஊன்றவைக்க வேணுமென்கிறார் முன்னடிகளால். அசேதனங்களான இந்திரியங்களை ஐவர் என்று உயர்திணையாகக் கூறுதல் அவற்றின் கொடுமையைப்பற்றிய கோபத்தினாலென்க. "கோவாய் ஐவரென்மெய் குடியேறிக் கூறை சோறிவை தாவென்று குமைத்துப்போகார், நான் அவரைப் பொறுக்ககிலேன் புனிதா! புட்கொடியாய் நெடுமாலே!" என்ற திருமங்கையாழ்வார் பாசுரமுங் காண்க. வன் குறும்பர் என்ற விசேஷணத்தினாலும் இந்திரியங்களின் கொடுமை நன்கு விளக்கப்பட்டது.

சினம் மாள்வித்து = காமாத் க்ரோதோபிஜாயதே [ஒரு பொருளில் ஆசை உண்டாகி அது கைகூடாவிடில் பிறகு கோபம் உண்டாகிறது] என்று கீதையிலே சொல்லி

யிருக்கிறபடி அந்த இந்திரியங்களுக்கு உண்டான கோபத்தை மாளச் செய்து என்கை; இதன் கருத்து யாதெனில் இந்திரியங்கள் விஷயாந்தரங்களை அநுப விக்கப் புகுந்தால் அவ் விஷயங்கள் அற்பமாகையாலே தங்களுக்கு இரை போர வில்லை யென்று கோப முண்டாகும்; அந்த இந்திரியங்களுக்கு பகவத் விஷயா நுபவத்தை இரையாக்கி விட்டால், அவ்விஷயம் கனத்த தாகையாலே தங்கள் பசி நன்றாகத் தீருமாதலால் கோபமுண்டாக ப்ரஸக்தியில்லை; இரை போரவில்லையே என்கிற கோபம் மாண்டுபோம்; ஆகவே "சினம் மாள்வித்து" என்பதை எச்சத் திரிபாகக் கொண்டு, 'கோபத்தைத் தணிக்க' என்றுரைத்தல் பொருந்தும். பஞ் சேந்திரியங்களுக்கு விஷயாந்தராநுபவத்தில் வயிறு நிறையவில்லையே யென்கிற கோபம் தீரும்படி [பூர்ணத்ருப்தி உண்டாகும்படி] அவற்றை பகவத் விஷயத் திலே ப்ரவணமாக்கி—என்றதாயிற்று.

புனமேயதண் துழாயானடியைக் காணுமஃன்றே = புனமாவது நிலம்; எந்த வஸ்து வும் தன்னிலத்தைவிட்டுப் பிரிந்தால் செவ்விகுன்றுமாதலால், அப்படியல்லாமல் தன்னிலத்திலேயே இருக்கிற திருத்துழாயானது எவ்வளவு செழிப்பாக இருக்குமோ அவ்வளவு செழிப்பாகத் தனது திருமேனியிலே அத் துழாய்மாலை விளங்கப்பெற்ற பரமபோக்யனான அப்பெருமானுடைய திருவடிகளே நமக்குத் தஞ்சம் என்று கொண்டு அவற்றை ஸேவித்துக் கொண்டிருப்பதன்றோ வண்துழாம் சீரார்க்கு மாண்பு—பரம விலக்ஷணரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சீர்மை; இங் ஙனன்றி 'எம்பெருமானுடைய மனம் கல்லோ' என்று சொல்லுதல் தகுதியன்று; கல்லாகவே யிருந்தாலும் அவனுடைய திருவடிகளே தஞ்சமென்றிருத்தலே ஸ்வரூபம் என்றாராயிற்று.

வண் துழாம் சீரார்க்கு என்றது—ஆத்ம குணங்கள் நிரம்பப்பெற்ற ஸ்ரீவைஷ் ணவர்களுக்கு என்றபடி. துழாம் என்றது—துழாவும் என்றபடி; துழாவுகை— பரம்புகை; விசாலமாயிருத்தலைச் சொன்னபடி; அழகிய விசாலமான நற்குணங் களமைந்த பாகவதர்களுக்கு என்கை. இப்படிப்பட்ட ஆத்ம குணங்கள் நிறைந்த ஸாதுக்களாயிருந்தால் 'அவன் திருவுள்ளமானபடியே ஆயிடுக' என்றிருப்பதே தகுதி; வெறுத்தல் கூடாது என்றவாறு. 51

2636 மாண்பாவித் தஞ்ஞான்று மண்ணிரந்தான் * மாயவள்நஞ்சு
ஊண்பாவித் துண்டான தோருருவம் *—காண்பான்நங்
கண்ணவா மற்றொன்று காணுரு * சீர்பரவாது
உண்ணவாய் தானுறுமோ வொன்று? 52

அஞ்ஞான்று	முன்னொரு காலத்தில்	ஓர் உருவம்	விலக்ஷணமான திரு மேனியை
மாண்	வாமநவேஷத்தை	காண்பான்	ஸேவிக்கும் விஷயத்திலேயே
பாவித்து	பாவனை செய்து கொண்டு	நம் கண் அவா	நமது கண்களுக்கு ஆசை;
மண் இரந்தான்	(மாவலியிடத்துச் சென்று) பூமியை யாசித்தவனும்,	மற்று ஒன்று காண உறு	வேறொன்றையும் காண விரும்புகின்றனவில்லை;
மாயவள்	பூதனையென்னும் பேய்ச்சி யினுடைய	வாய்தான்	வாக்கானது
நஞ்சு	(முலையிலே தடவியிருந்த) விஷத்தை	சீர் பரவாது	(அவனது) திருக்குணங் களைப் புகழ்வது தவிர்ந்து
ஊண் பாவித்து உண்டானது	உண்பதாகப் பாவனை செய்து அமுது செய்தவனுமான பெருமானுடைய	ஒன்று உண்ண உறுமோ	வேறொன்றை (சோற்றை) உண்பதற்கு விரும்புமோ?

* * *—தம்முடைய இந்திரியங்கள் பகவத் விஷயத்திலே ஆழ்ந்தபடியைப் பேசுகிறார். இந்திரனுடைய கோரிக்கையை நிறைவேற்றுதற்காக வாமந வேஷம் பூண்டுகொண்டு மாவலிபக்கலிற் சென்று மூவடிமண்தாவென்று இரந்தவனும், தான் க்ருஷ்ண சிசுவாயிருக்கும் போது கம்ஸனுடைய தூண்டுதலால் தன்னைக் கொல்வதற்காகத் தாய்வடிவுகொண்டு முலைகொடுக்க வந்தபூதனையினுடைய முலையைச் சுவைத்துண்கிற பாவனையிலே அவளுயிரை உறிஞ்சி யுண்டவனுமான எம்பெருமானுடைய விலக்ஷணமான திவ்யமங்கள விக்ரஹத்தைக் காணவேணுமென்கிற விருப்பமே நமது கண்களுக்குள்ளது; வேறு எந்த அற்புதமான வஸ்துவையும் இக்கண்கள் காண விரும்புகின்றில. வாய்தானும் அப்பெருமானுடைய திருக்குணங்களைப் புகழ்ந்து பேசுதலொன்றிலேயே ஊற்றமுடையது; சோறு தின்பதிலும் வாய்க்கு விருப்பமில்லை—என்றாராயிற்று.

மாண்—மாணியின் தன்மை; வர்மநத்வம். பாவித்து—வடமொழியில் "பூ—ஸத்தாயாம்" என்ற தாதுவடியாகப் பிறந்த வினையெச்சம். அஞ்ஞான்று—அக்காலத்தில்; முன்பொருகாலத்திலென்றபடி. (ஞான்று—காலம். 'நான்று' என்பதுமுண்டு; ஞகரநகரப் போலி). 52

2637 ஒன்றுண்டு செங்கண்மால்! யானுரைப்பது* உன்னடியார்க்கு
என்செய்வ னென்றே யிருத்திநீ *—நின்புகழில்
வைகும்தஞ் சிந்தையிலும் மற்றினிதோ * நீயவர்க்கு
வைகுந்த மென்றருளும் வான். 53

செம் கண் மால்	(அடியார்கள் மீது வாத்ஸல்யத்தாலே) சிவந்த திருக்கண்களை யுடைய திருமாலே	என் செய்வன் என்றே இருத்தி	இன்னமும் என்ன நன்மை செய்வோமென்றே பாரித்திரா நின்றாய்;
யான் உரைப்பது	அடியேன் விண்ணப்பஞ் செய்வது	நீ	இப்படி பாரிக்கின்ற நீ
ஒன்று உண்டு	ஒரு விஷய முண்டு;	அவர்க்கு	அவ்வடியவர்களுக்கு
நீ	நீயோ வென்றால்	வைகுந்தம் என்று அருளும் வான்	ஸ்ரீ வைகுண்டமென்று சிறப்பித்துச் சொல்லி உதவுகின்ற பரம பதமானது
உன் அடியார்க்கு	உனது அடியவர்களுக்கு	நின் புகழில் வைகும் தம் சிந்தையிலும் இனிதோ	உனது திருக்குணங்களிலேயே ஊன்றியிருக்கப் பெற்ற தமது சிந்தையிற் காட்டிலும் சிறந்ததோ?
(எத்தனை நன்மை செய்தும் த்ருப்தி பெறாமல்)			

* * *—கீழ்ப்பாட்டில், ஆழ்வார் தம்முடைய இந்திரியங்கள் எம்பெருமான் விஷயத்திலே ஆழ்ந்தபடியைப் பேசி 'இனிமேல் தமக்கு ஒரு குறையுமில்லை; தாம் க்ருதக்ருத்யராக ஆய்விட்டார்' என்று தோற்றுமாறு இருந்ததைக் கண்ட எம்பெருமான், 'அந்தோ! ஆழ்வார் இவ்விருள்தரு மாஞாலத்தில் இருந்துகொண்டே இப்படி களிக்கிறாரே; இவ்வநுபவம் இவர்க்கு நித்யமாய்ச் செல்லுமோ? ஸ்ரீவைகுண்டம் பெற்றாலன்றோ அநுபவபூர்த்தியுள்ளது' என்று திருவுள்ளம்பற்றி அந்த ஸ்ரீவைகுண்டத்தையும் ஆழ்வார்க்குத் தந்தருள்பவன்போல விளங்கினான்; அதனைக்கண்ட ஆழ்வார் "இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளுமச்சுவை பெறினும் வேண்டேன்" என்றாற்போல 'இந்த குணநுபவத்திற்காட்டிலும் ஸ்ரீவைகுண்டமென்பது போக்யமோ? பிரானே!" என்கிறார்.

ஆழ்வார் திறத்திலே ஏதேனுமொன்றைச் செய்யவேணுமென்று வ்யாமோஹத்தினாலே எம்பெருமானுடைய திருக்கண்கள் செவ்வியவாயிருந்ததால் செங்கண்மால்! என விளிக்கின்றார். யானுரைப்பது ஒன்றுண்டு=நீ ஸர்வஜ்ஞனாயினும், உனக்

கும் நான் தெரிவிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு காண் என்கை. இப்போது நீ வ்யாமோஹத்தாலே கலங்கியிருக்கிறுயாதலால் 'கலங்கினவர்களைத் தெளிந்திருப்பவர்கள் தெளிவிக்கக் கடவர்கள்' என்னும் நீதியிலே உன்னை நான் தெளிவிக்கவேண்டி உனக்கொன்று சொல்லுகிறேன் கேளாய் என்கிறார்போலும். எம்பெருமான் தெளிவழிந்து கலங்கி நிற்கும்படியை வெளியிடுகிறார் உன்னடியார்க்கு என்செய்வனென்றே இருத்தி நீ என்பதனுல். உன்னடியவர்களுக்கு நீ எவ்வளவு நன்மைகளைச் செய்து வைத்தாலும் 'ஐயோ! ஒன்றும் செய்யவில்லையே, ஒன்றும் செய்யவில்லையே' என்றே அலமந்து 'என்ன நன்மை செய்வோம், என்ன நன்மை செய்வோம்' என்றே அலைபாயா நின்றுய்; இஃது உன்னுடைய கலக்கமன்றோ என்கை.

ஆழ்வார் இப்படி சொன்னதைக் கேட்ட எம்பெருமான் 'நான் இப்படி கலங்கியிருக்கிறேனென்பதை நீர் எதுகொண்டு தெரிந்து கொண்டீர்?' என்று கேட்க; அதற்கு ஆழ்வார், 'எப்போதும் உன்னுடைய குணநுபவமே போது போக்காம்படி என்னை இவ்வளவு அநுக்ரஹித்துவைத்தும் ஒரு நன்மையும் எனக்குச் செய்யவேயில்லையாக நினைத்துக்கொண்டு, இன்னமும் ஏதோ செய்வதாகப் பாரித்திருக்கிறுயன்றோ, இதுகொண்டே உன்னுடைய வ்யாமோஹத்தைத் தெரிந்துகொண்டேன்' என்ன; அதற்கு எம்பெருமான் 'ஆழ்வீர்! உண்மையில் உமக்கு நான் எவ்வளவு நன்மைகள் செய்திருந்தேனுகிலும், பரிபூர்ணநுபவத்திற்குப் பாங்கான பரமபதத்தைக் கொடுக்காத வளவில் ஒரு நன்மையும் செய்யவில்லையென்று தானே அர்த்தம்; அந்தப் பரமபதந்தன்னையே உமக்குக் கொடுப்பதாகப் பாரித்திருக்கிறேன்; இதனுல் என்னைக் கலங்கினவனுகக் கொள்ளலாகுமோ? என்றருளிச்செய்ய; அதன்மேல் ஆழ்வார் நின்புகழில் வைகும் தம் சிந்தையிலும் நீயவர்க்கு வைகுந்தமென்றருளும் வான் இனிதோ? என்கிறார்; இப்போது ஸித்தமான குணநுபவத்திற் காட்டிலும் இனிமேல் ஸித்திக்கக்கடவதான வைகுந்தம் சிறந்ததல்லகிடாய் என்கை. பிரதிபந்தகங்கள் மலிந்துகிடக்கிற இவ்விருள்தரு மாஞாலத்திலிருந்து கொண்டு குணநுபவம் பண்ணுவதிற் காட்டிலும் பிரதிபந்தகமற்ற தேசவிசேஷத்திலே யிருந்துகொண்டு அநுபவிக்கை ஏற்றமோ? என்பதும் உள்ளுறை.

"நீ அவர்க்கு அருளும் வைகுந்தம் என்றுவது, நீ அவர்க்கு அருளும் வான்" என்றுவது சொல்லலாமாயிருக்க, அங்ஙனே சொல்லாது "நீ அவர்க்கு வைகுந்தமென்று அருளும்வான்" என்று அருளிச்செய்ததன் கருத்து யாதெனில்; நின்புகழில் வைகும் சிந்தையினேர் வைகுந்தத்தை ஒரு பொருளாகவும் மதிக்கமாட்டார்கள்; "பாவோ நான்யத்ர கச்சதி" என்று திருவடி சொன்னுப்போலே சொல்லிவிடுவர்கள்; நீ ஒருவன்தான் 'வைகுநதம் வைகுந்தம்' என்று வெகு சிறப்பாகச் சொல்லிக்கொண்டு கிடக்கிறுய் என்பதாகக் கருத்துத் தோன்றும்.

"உன் அடியேற்கு என் செய்வனென்றே யிருத்தி நீ" என்றும் "நீ எனக்கு வைகுந்தமென்றருளும் வான்" என்றும் தன்மையாகச் சொல்லிக்கொள்ளாமல் 'அடியார்க்கு' என்றும் 'அவர்க்கு' என்றும் படர்க்கையாகச் சொல்லியிருந்தாலும் தன்மைப்பொருளே இங்கு விவக்ஷிதமென்க. திருப்பாவையில் "மாற்றமும் தாராயோ வாசல் "திறவாதாய்" என்று முன்னிலையாகச் சொல்லவேண்டுமிடத்துப் படர்க்கையாகச் சொல்லிருயிருப்பதுபோல.

"பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு மிந்நின்ற நீர்மை யினியாமுறுமை—அடியேன் செய்யும் விண்ணப்பமே" என்று தொடங்கி அடிக்கடி வைகுந்தத்தையே பிரார்த்திக்கின்ற ஆழ்வார் இப்பாட்டில் வைகுந்தத்தை வெறுத்துரைப்பது ஒரு வகையான சமத்காரச் சொல்லாகும். 'இடம் எதுவாயினும் பகவத் குணநுபவம் முக்கியம்' என்ற அர்த்தத்தை விளக்கியவாறு.

2638 வானோ? மறிகடலோ? மாருதமோ? தீயகமோ? *
கானோ? வொருங்கிற்றுக் கண்டிலமால் *—ஆனீன்ற
கன்றுயரத் தாமெறிந்து காயுதிர்த்தார் தாள்பணிந்தோம் *
வன்றுயரை யாவா! மருங்கு. 54

ஆன் ஈன்ற கன்று	பசுவினால் பெறப்பட்ட வத்ஸாஸுரனை	ஒருங்கிற்று	(அப்பாவங்கள்) மறைந்து போன இடம்
உயர எறிந்து	(விளாமரத்தின்) மேலே வீசியெறிந்து	வானோ	ஆகாசமோ?
காய் உதிர்த்தார்	(அவ்விளாமரத்தின்) காய்களை உதிர்த்த கண்ணபிரானுடைய	மறி கடலோ	மடிந்து மடிந்து அலையெறிகிற கடலோ?
		மாருதமோ	காற்றோ?
தாள்	திருவடிகளை	தீயகமோ	நெருப்போ?
பணிந்தோம்	ஆச்ரயித்தோம்; (அதன் பிறகு)	கானோ	காடோ?
வன் துயரை	வலிய (நமது) பாவங்களை	(இன்னவிடத்தில் மறைந்து போயின வென்று தெரியவில்லை;)	
மருங்கு கண்டிலம்	ஸமீபத்தில் காணோம்;	ஆ ஆ ஆல்	ஐயோ பாவம்!

* * *—கீழ்ப்பாட்டில் 'வைகுந்தம் இனிதன்று' என்றுரைத்த ஆழ்வாரை நோக்கிச் சிலர், 'இவ்விபூதியில் எவ்வளவுதான் குணாநுபவம் பண்ணினாலும் பிரதிபந்தங்கள் கூடவேயிருக்கிற நிலமாதலால் இவ்வநுபவம் நிலைநிற்கக்கூடியதன்றே; பிரதிபந்தகங்களுக்கு அஞ்சியிருக்க வேண்டியது தானே' என்று சொல்ல; பகவத் விஷயத்தில் நான் இழிந்தவாறே பிரதிபந்தகங்கள் போனவிடம் தெரியவில்லை என்கிறார்.

இப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருவடிகளைப் பணிந்த மாத்திரத்திலே எனது பிரதிபந்தக பாபங்களெல்லாம் இன்னவிடம் போயினவென்று தெரியாதபடி பாறிப்பறந்துபோயின; ஆகாசத்திலே மறைந்து போயினவோ, கடலில் ஒளிந்துபோயினவோ, காற்றில் உருமாய்ந்து போயினவோ, நெருப்பிலே விழுந்து நசித்துப் போயினவோ, அன்றி வனவாஸயாத்திரை சென்றனவோ அறிகின்றிலேன்; அவை என்னருகில் இல்லை—என்றாராயிற்று.

மறிகடல்=மறிதலாவது—அலைகள் மடிந்து மடிந்து வீசப்பெறுதல். மாருதம்—வடசொல். "ஒருங்கிற்றும்" என்றும் ஓதுவர். கண்டிலம்—தன்மைப் பன்மை யெதிர்மறை வினைமுற்று. ஆல்—அசை; வியப்புக்குறிப்பிடைச்சொல்லு மாம். ஆனீன்ற கன்று='பசுவினால் பிரஸவிக்கப்பட்ட கன்று' என்று சொல்வதன் கருத்து யாதெனில்; 'வத்ஸாஸுரன்' என்று ஒருவன் திடீரென்று ஆகாசத்தில் நின்றும் வந்து குதித்துவிடவில்லை; அவ்விடத்திலுள்ள பசுவின் கன்றானவொன்றின் மேலே வந்து ஆவேசித்தனன் என்பதைக் காட்டுதலாம். காயுதிர்த்தார் தாள்=ஆறாம் வேற்றுமைத்தொகை. ஆவா—'ஹா ஹா!' என்ற வடமொழி அவ்யயங்களிரண்டு சேர்ந்து ஆவாவெனத் திரிந்தது. 54

2639 மருங்கோத மோதும் மணிநா கணையார் *
மருங்கே வரவரிய ரேலும் *—ஒருங்கே
எமக்கவரைக் காணலா மெப்பொழுது முள்ளால் *
மனக்கவலை தீர்ப்பார் வரவு. 55

வரவு	(தம்முடைய) வருகையினாலே
மனம் கவலை தீர்ப்பார்	(நமது மனத்திலுள்ள துன்பங்களைத் தொலைப்பவரும்
மருங்கு ஓதம் மோதும்	ஸமீபத்தில் கடலலை மோதும்படியாக
(திருப்பாற்கடலிலே)	
மணி நாக அணையார்	மாணிக்கத்தையுடைய திருவனந் தாழ்வானைப் படுக்கையாக வுடையவருமான பெருமாள்
மருங்கே வர அரியர் எனும்	(ஒருவர்க்கும் ஸ்வப்ரயத்நத்தாலே அணுகி வந்து) கிட்ட முடியாதவராயினும்
எமக்கு	நமக்கு
அவரை	அப்பெருமானை
உள்ளால்	மனத்தினாலே
ஒருங்கே	ஒரே தன்மையாக
எப்பொழுதும் காணலாம்	எப்போதும் கண்டு அநுபவிக்கக் கூடும்.

* * *—எம்பெருமானைத் தம் முயற்சியாலே பெற நினைப்பார்க்கு அவன் ஒரு நாளும் கிட்ட முடியாதவனேயாகிலும், அவன்றானே தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே என்னெஞ்சினுள்ளே வந்து புகுந்தனனாதலால் எனக்கு அவன் எப்போதும் ஸேவிக்க எளியனாகவே யிராநின்றானென்கிறார்.

"வரவு மனக்கவலை தீர்ப்பார்" = 'வரவு' என்பதில் மூன்றாம் வேற்றுமையுருபு தொக்குக் கிடக்கிறது; வரவினாலே என்றபடி. தானாகவே வந்து மனக்கவலையைத் தீர்க்கும் பெருமான் என்கை. ஓதம் மருங்குமோதும் மணிநாகணையார் = தெண்டிரை வருடத் திருப்பாற் கடலில் திருவனந்தாழ்வான்மேல் திருக்கண்வளருமவர் என்றவாறு. இப்படிப்பட்ட பரமபுருஷன், மருங்கே வர அரியரேலும் = ஒருவர்க்கும் தமது முயற்சி கொண்டு அணுகமுடியாதவனாயினும்; உள்ளால் எமக்கு அவரைக் காணலாம் = என்னுள்ளத்துள்ளே உறைகின்றவனைக் காண எனக்கு அருமையுண்டோ? என்றாராயிற்று. 55

2640 வரவாறொன் றில்லையால் வாழ்வினிதால் * எல்லே!
ஒருவா றொருவன் புகாவாறு *—உருமாறும்
ஆயவர்தாஞ் சேயவர்தா மன்றுலகந் தாயவர்தாம் *
மாயவர்தாங் காட்டும் வழி. 56

ஒருவன்	எந்த சேதநனும்
ஒரு ஆறு	எந்த உபாயாந்தரத்திலும்
புகா ஆறு	பிரவேசிக்க வேண்டாதபடி
(அவர்களுடைய காரியத்தைத் தானே ஏன்று கொண்டு நடத்துதற்காக)	
உரு மாறும்	தனது ஸ்வரூப ஸ்வபாவங்களை மாற்றிக் கொள்ளுகிற
ஆயவர் தாம்	ஸ்ரீ க்ருஷ்ணனானவனும்
சேயவர் தாம்	(ஆஸுரப்ரக்ருதிகளுக்கு) எட்ட முடியாதவனும்
அன்று உலகம் தாயவர் தாம்	முன்பொருகால் உலகங்களைத் தாவியளந்தவனும்
மாயவர் தாம்	ஆச்சரியகுண சேஷ்டிதங்களையுடையவனுமான எம்பெருமான்
காட்டும் வழி	காட்டுகிற உபாயம்
வரவு ஆறு ஒன்று இல்லை	இன்னவழியாக வந்ததென்று தெரியாது;
வாழ்வு இனிது	பலன் போக்யமாயிராநின்றது;
ஆல் எல்லே	ஆச்சரியம்.

* * *—எல்லார்க்கும் அருமைப் படுமவன் உமக்கு எளியனானது எப்படி? என்று சிலர் கேட்க; அவனுடைய நிர்ஹேதுகக்ருபைக்கு அடி அறிய முடியாதாகையாலே, எந்த வழியாலே இந்த பாக்கியம் வந்ததென்று என்னாலும் நிரூபிக்க முடியாது, காரணம் எதுவானாலென்ன? வாழ்ச்சி நன்றாயிருக்கின்றதத்தனை—என்கிறார்.

ஒருவன் ஒரு ஆறு புகாவாறு உருமாறும் ஆயவர்தாம் = "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி

மாசுச:" என்ற சரமச்லோகத்தின் பொருளை அநுஸந்தித்தபடி. கருமம் ஞானம் முதலிய எந்த உபாயங்களிலும் யாரும் இறங்க வேண்டாதபடி அவரவர்களுடைய காரியங்களைத்தான் தன் தலைமீது ஏறிட்டுக்கொண்டு நோக்கும் கண்ணபிரான் என்கை. ["உருமாறும்"] உலகத்தில் எவன் பலனை அநுபவிக்கவேண்டியவனோ அவன் உபாயாநுஷ்டாநம் பண்ணவேணு மென்றிருக்க, பலனை அநுபவிப்பவனான சேதநனை ஒரு உபாயமும் அநுஷ்டிக்க வேண்டாவென்று விலக்கி, பலனை அநுபவியாத தான் அவன் செய்யவேண்டிய காரியங்களைத் தன்மீது ஏறிட்டுக் கொண்டு செய்கை உருமாறுகையிறே. இனி, உருமாறுமாயவர் என்றது—பரஞ்சோதியுருவை விட்டிட்டு அழுக்குமானிட சாதியுருவை ஏற்றுக்கொண்ட கோபாலக்ருஷ்ணன் என்றபடியு மாம். சேயவர்தாம்—பாண்டவர் போல்வார்க்கு அணியனாயிருக்கச் செய்தேயும், துரியோதநன் போல்வார்க்கு தூரஸ்தனா யிருந்தபடியைச் சொல்லுகிறது. ஒரு காலவிசேஷத்திலே எல்லார்க்கும் ஸமீபஸ்தனாயிருந்தபடியைச் சொல்லுகிறது. அன்றுலகந்தாயவர்தாம் என்று, இப்படி ஒருகால் அணியனாய் மற்றொருகால் சேயனாய், சிலர்க்கு அணியனாய்ச் சிலர்க்குச் சேயனாய் இருப்பதுபற்றி மாயவர்தாம் என்கிறது. இப்படிப்பட்ட எம்பெருமான் தன் இன்னருளாலே தானே காட்டும்வழி (உபாயம்) நிர்ஹேதுகமாகையாலே இன்னமார்க்கமாக வந்ததென்று நமக்குத் தெரியாதாயினும், போக்யமாக அநுபவித்துக்கொண்டு ஆநந்தக் கடலிலே மூழ்கியிரா நின்றோம்; வாழ்ச்சியில் குறையில்லை; எல்லே—ஆச்சரியம்.

உலகத்தில் ஒருவனுக்கு மிருந்த செல்வம் வந்தால் 'இது நமக்கு எந்த வழியாலே வந்ததென்று ஆராய்தல் அவசியமன்றே; ஆநந்தத்தை அனுபவிப்பதன்றோ ப்ராப்தம். அதுபோலே ஆழ்வாரும் 'பகவத்க்ருபை எனக்கு எந்த காரணத்தாலே வந்தாலென்ன? ஆநந்தம் அளவற்றிராநின்றது காண்மின்' என்கிறார். 56

2641 வழித்தங்கு வல்வினையை மாற்றானோ? நெஞ்சே! *
தழீஇக்கொண்டு போரவுணன் றன்னைச் *—சுழித்தெங்கும்
தாழ்விடங்கள் பற்றிப் புலால்வெள்ளந் தானுகள *
வாழ்வடங்க மார்விடந்த மால். 57

நெஞ்சே	நெஞ்சமே!	வாழ்வு அடங்க	(அவ்விரணியனுடைய) வாழ்ச்சி முடியும்படி
போர்	யுத்த பூமியிலே	மார்வு இடந்த மால்	அவனது மார்பை பிளந்த பெருமாள்,
அவுணன் தன்னை	இரணியாசுரனை	வழி தங்குவல் வினையை	இடைவழியிலே நம்மைத் தங்கப் பண்ணுகிற [ப்ரதிபந்தகமான] வலிய பாவங்களை
தழீஇக் கொண்டு	அழுந்தக் கட்டிக்கொண்டு,	மாற்றானோ	போக்கியருள மாட்டானோ? (போக்கியே விடுவன்.)
புலால் வெள்ளம்	ரக்த ப்ரவாஹமானது		
தாழ்வு இடங்கள் பற்றி	பள்ள நிலங்கள் பக்கமாக		
எங்கும் சுழித்து உகள	கண்டவிடமெங்கும் சுழித்துக் கொண்டு அலை யெறிந்து கிளரும்படியாக		

* * *—இவ்விருள்தருமாஞாலத்தில் உள்ளவரைக்கும் ப்ரதிபந்தகங்கள் மேலிட்டுக் கொண்டேயிருக்குமே! என்று ஆழ்வாருடைய நெஞ்சு தளும்ப, அதனை ஆழ்வார் ஸமாதானப்படுத்துகிறார்போலும் இதில். நெஞ்சமே! நாம் எவனைப் பற்றியிருக்கிறோமோ அவ்வெம்பெருமானுடைய சக்தி எப்படிப்பட்டது தெரியுமோ

வுனக்கு? ஆச்ரிதனை ஒரு ப்ரஹ்லாதனுக்குப் பக்ஷபாதியாயிருந்து அவனுடைய ப்ரதிபந்தகமா யிருந்த இரணியனைக் களைந்தொழித்தவனன்றோ அவன்; அப்படிப் பட்டவன் நம்முடைய ப்ராப்திப்ரதிபந்தகங்களைத் தொலைத்தருளானோ? தொலைத் தேயருள்வன்; நீ ஏன் வீணாகக் கவலைப்படுகிறாய் நெஞ்சே!; கவலையை விட்டொழிந்து தைரியமாய் இரு—என்றாராயிற்று.

வழித்தங்கு வல்வினை = பிரதிபந்தகமொன்று மில்லாவிடில் வழியில் எங்கும் தங்காமல் நேராகச் சென்று நற்கதி நண்ணலாம்; பிரதிபந்தகமான பாவங்கள் உள்ளவர்கள் இடைவழியிலே தங்க நேர்ந்துவிடும்; ஆகவே, இங்கு, வழியிலே தங்கப்பண்ணுகிற வல்வினை என்று ப்ராப்திப்ரதிந்தகமான பாவங்களைச் சொன்னபடி. மாற்றானோ என்றது—போக்கியே விடுவன் என்றபடி. தழீஇக் கொண்டு—தழுவிக்கொண்டு இரணியனைக் கொன்ற கோரச் செயலை வருணித்துக் கூறுகின்றார் சுழித்தெங்கும் என்று தொடங்கி. இரணியனைக் கொன்றபோது அவனுடம்பிலிருந்து கொழித்துக் கிளர்ந்த ரத்த வெள்ளமானது அங்கே ஸமீபத்திலிருந்த பள்ள நிலங்கள் யாவும் நிறையும்படி பெருகிற்று என்றவிதனால் அவனுடைய உடல் தடிப்புச் சொல்லிற்றாயிற்று. "கோளரியினுருவங்கொண்டு அவுணனுடலம் குருதி குழம்பியெழக் கூருகிரால் குடைவாய்" என்றார் பெரியாழ்வார்; திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் (11—4—4.) "வளையுகிராளி மொய்ம்பில் மறவோனதாகம் மதியாது சென்றொருகிரால், பிளவெழவிட்ட குட்டமது வையமூடு பெருநீரில் மும்மைபெரிதே" என்றருளிச் செய்தார்; இரணியனைப் பிளந்தபோது உண்டான ரத்தவெள்ளக் குழியானது மஹாப்ரளய ஸமுத்ரத்திற்காட்டிலும் மூன்று மடங்கு பெரிது என்றாரிறே. 57

2642 மாலே! படிச்சோதி மாற்றேலினி * உனது
பாலேபோற் சீரிற் பழுத்தொழிந்தேன் *—மேலால்
பிறப்பின்மை பெற்றடிக்கீழ்க் குற்றேவ லன்று *
மறப்பின்மை யான்வேண்டும் மாடு. 58

மாலே	திருமாலே!
உனது	உன்னுடைய
பால் போல் சீரில் பழுத்தொழிந்தேன்	பால்போலப் பரம போக்யமான திருக்கல்யாண குணங்களில் ஆழ்ந்து விட்டேன்;
இனி	இனிமேல்
படி சோதி	(உன்னுடைய) திவ்யமங்கள விக்ரஹ தேஜஸ்ஸை
மாற்றேல்	எனக்கு ஒருகாலும் மாற்றாமல் நித்யாநுபவ விஷயமாக்க வேணும்;
மேலால்	மேலுள்ள காலத்திலே
பிறப்பு இன்மை பெற்று	வீடுபெற்று
அடி கீழ் குற்றேவல்	(உனது) திருவடிவாரத்திலே கைங்கரியம் பண்ணுவது
யான் வேண்டும் மாடு அன்று	அடியேன் அபேக்ஷிக்கிற செல்வமன்று;

(உன் திருவடிகளில் கைங்கரியம் பண்ணவேணுமென்று அடியேன் ஆசைப்படவில்லை;)

மறப்பு இன்மை	உன்னை மறவாதிருந்தால் போதுமென்பதே
யான் வேண்டும் மாடு	அடியேன் ஆசைப்படும் செல்வம்

* * *—கீழ்ப்பாட்டில் "அவுணன்றன்னை மார்விடந்த மால்—வழித்தங்கு வல்வினையை மாற்றானோ நெஞ்சே!" என்று தமது நெஞ்சை நோக்கி ஆழ்வார் சொன்னதை எம்பெருமான் கேட்டருளி 'ஆழ்வீர்! நான் * வழித்தங்கு வல்வினையை மாற்றுவது மாத்திரமோ செய்வேன், உம்மைப் பரம பதத்திலே கொண்டு சேர்ப்பதும் செய்வேன் காணும்' என்றருளிச் செய்ய; அதுகேட்ட ஆழ்

வார் 'பிரானே! அடியேன் பரமபதத்தை விரும்புகின்றேனல்லேன்; இது வரை *மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்ததுபோலவே இன்னமும் பல பிறவிகள் பிறக்கப்பெறினும் வருத்தமில்லை; அடியேனை இனிப் 'பிறவாதபடி பண்ணித் திருநாட்டிலே வைத்து அத்தாணிச் சேவகத்திற்கு ஆளாக்கிக்கொள்ள வேணு மென்று வேண்டுகின்றேனல்லேன்; நீ என்னை மறவாதிருக்க வேணும், உன்னை நான் மறவாதிருக்க வேணுமென்னு மித்தனையே அடியேன் விரும்புவது. நீ என்னை மறவாதிருக்கையாவது—உன்னுடைய திவ்யாத்ம குணங்களையும் திவ்ய மங்கள விக்ரஹகுணங்களையும் இப்போது நானநுபவிக்குமாறு எங்ஙனே அருள் செய்திருக்கிறாயோ இப்படியே மேலுள்ள காலமும் அருள் செய்கையேயாம்; உன்னை நான் மறவாதிருக்கையாவது—இப்போது உன்னை அநுபவிப்பது போலவே எந்நாளுமநுபவிக்கையாம். ஆக இவ்வளவே அடியேன் பிரார்த்திக்கும் ஸம்பத்து என்கிறார்.

மாலே! படிச்சோதி மாற்றேலினி = படி என்று திருமேனிக்குப் பெயர்; 'அதனுடைய சோதியை மாற்றவேண்டா என்றது—உனது திருமேனியின் ஒளியை இப் போது நான் அநுபவித்துக்கொண்டிருப்பது போலவே என்றைக்கும் மாறாமல் அநுபவித்துக்கொண்டே யிருக்கும்படி அருள்புரிய வேணுமென்றபடி.

உனது பாலே போல் சீரில் பழுத்தொழிந்தேன் = உன்னுடைய பரமபோக்யமான திருக்குணங்களிலே நன்றாக ஆழ்ந்து விட்டேன் என்கை. ஆதலால் எனக்குக் குணநுபவம் முக்கியமே யொழிய, கைங்கரியம் அவ்வளவு முக்கியமன்று என்று காட்டினவாறு. பிறப்பின்மை—பிறவாமை; அதாவது ஸம்ஸாரநிவ்ருத்தி; பரம பதத்தைச் சொன்னபடி. அங்கே சென்று குற்றேவல் செய்கையாகிற செல் வத்தை அடியேன் வேண்டவில்லை; எங்கிருந்தாலும் உன் திருக்குணங்களை மற வாமலிருக்கு மத்தனையே வேண்டுவது.

பரமபதம் சென்று அங்கே நித்ய கைங்கரியம் பண்ணவேணுமென்கிற அளவற்ற ஆசையும் *மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்ததில் வருத்தமும் வெறுப்பும் ஆழ்வார்க்குப் பூர்த்தியாக இருக்கச் செய்தேயும் இப்பாட்டில் இப்படி அருளிச் செய்வது ஒருவகைச் சமத்காரமே யென்க. இருக்கிறவரையில் எம்பெருமானை மறவாதிருத்தல் நன்று என்கிற சாஸ்த்ரார்த்தத்தை இதனால் வெளியிட்டபடி. அவிஸ்ம்ருதிஸ் த்வச்சரணாரவிந்தே பவேபவே மேஸ்து பவத்ப்ரஸாதாத்'' என்ற முகுந்தமாலையை இங்கே அநுஸந்திப்பது.

குறுமை + ஏவல் = குற்றேவல்; சிறிய கைங்கரியம். மாடு—செல்வம்; "மாடு பொன் பக்கம் செல்வம்" என்பது நிகண்டு. 58

2643 மாடே வரப்பெறுவ ராமென்றே * வல்வினையார்
காடானு மாதானுங் கைக்கொள்ளார் *—ஊடேபோய்ப்
பேரோதஞ் சிந்துதிரைக் கண்வளரும் * பேராளன்
பேரோதச் சிந்திக்கப் பேர்ந்து. 59

பேர் ஓதம்	விசாலமான கடலிலே	பேர்	திருநாமங்களை
சிந்து திரை ஊடே போய்	சிதறி விழுகின்ற அலைகளினுள்ளே சென்று	ஓத	அநுஸந்திக்க வேணுமென்று
கண்வளரும்	திருக்கண் வளர்ந்தருளாநின்ற	சிந்திக்க	நினைத்த மாத்திரத்திலே,
		வல்வினையார்	கொடிய பாவங்கள்
பேராளன்	எம்பெருமானுடைய	பேர்ந்து	நம்மைவிட்டுக் கிளம்பி

காடானும் ஆதானும் கைக் கொள் ளார்	காடுகளிலோ மற்றேதேனு மோரிடத்திலோ போய்ச் சேராமலிருக்கின்றனவே, (இது)	மாடு வரப் பெறுவராம் என்றே ?	இன்னமும் நம்மிடத்திலே வாழப் பெறலாமென்கிற எண்ணத்தினுலோ ?

* * *—இவ்விருள்தரு மாஞாலத்திலே எப்படிப்பட்ட ஞானியர்களும் ப்ரக்ருதி ஸ்வபாவங்களை உதறித் தள்ளிவிட்டு எம்பெருமானுடைய திருக்குணங்களை அநுபவித்துக்கொண்டேயிருந்தாலும், இடையிடையே இந்நிலத்தின் காரியம் நிகழ்ந்தேதீருமிறே. இல்லாவிடில் இருள்தருமாஞாலமென்று இவ்விபூதியின் பெயர் பொய்யாகுமே; இருள் இடையிடையே கலந்து பரிமாறுமிறே. கீழே சில பாட்டுக்களாலே ஆச்சரியமாக பகவத்குணநுபவஞ் செய்து வந்த ஆழ்வார்க்கு இந்த ஸம்ஸார நிலத்திற்குரிய துன்பங்களின் ஸம்பந்தம் தோன்றத்தொடங்கிற்று; தொடங்கவே, திருவுள்ளம் நொந்து பேசுகிறார்—; திருப்பாற்கடலிலே அலைகள் துடைகுத்தத் திருக்கண் வளர்ந்தருளாநின்ற திருமாலின் திருநாமங்களை நாம் அநுஸந்திக்கவேணுமென்று சிந்தித்த மாத்திரத்திலே நமது வல்வினைகள் காட்டிலோ கடலிலோ ஓடிப்போக வேண்டியிருக்க இன்னமும் இவ்விடத்திலேயே சுற்றுக்காலிட்டுக்கொண்டு திரிகின்றனவே, முன்போல இன்னமும் நம்மிடத்திலேயே தங்கியிருக்கலாமென்று நினைத்திருக்கின்றனவோ? என்கிறார்.

கீழ் ஐம்பத்து நான்காம் பாட்டில் "வானே மறிகடலோ மாருதமோ தீயகமோ கானேவொருங்கிற்று" என்று வல்வினைகள் போனவிடம் தெரியவில்லையென்றருளிச்செய்த ஆழ்வார்திருவாக்கிலே மீண்டும் வல்வினையார் காடானுமாதானும் கைக்கொள்ளார்" என்கிற இப்பாசுரமும் வெளிவரும்படியாயிருக்கிறதிறே இவ்விருள் தருமாஞாலத்தின் கொடுமை!

கீழ்ப்பாட்டில் மாடு என்பதற்குச் செல்வம் என்று பொருள்; இப்பாட்டில் அப்பதமே பக்கமென்ற பொருளில் வந்தது. ("மாடு பொன் பக்கம் செல்வம்" என்பது நிகண்டு.) வரப்பெறுவராமென்றே? என்ற சொல் நயத்தினுல், இனி அவ்வாசைக்கு இடமில்லை; வல்வினைகட்கு இனி நம்மிடத்தில் தங்கமுடியாது—என்பது விளக்கப்பட்டதாம். 59

2644 பேர்ந்தொன்று நோக்காது பின்னிற்பாய் நில்லாப்பாய் *
ஈன்துழாய் மாயனையே யென்னெஞ்சே !*—பேர்ந்தெங்கும்
தொல்லைமா வெந்நரகிற் சேராமற் காப்பதற்கு *
இல்லைகாண் மற்றோ ரிறை. 60

என் நெஞ்சே	எனது மனமே!	மா	பெரிதாய்
பேர்ந்து ஒன்று நோக்காது	வேறொன்றையும் கணிசியாமல்	வெம்	கடினமான
		நரகில்	நரகத்திலே
ஈன் துழாய் மாயனையே பின் நிற்பாய்	போக்யமான திருத்துழாய் மாலையை அணிந்துள்ள எம்பெருமானையே பற்றி நின்றாலும் நில்லு;	சேராமல்	போய்ப் புகாமல்
		காப்பதற்கு	நம்மை ரக்ஷிப்பதற்கு
		பேர்ந்து மற்று ஓர் இறை	வேறொரு ஸ்வாமி
நில்லாப்பாய்	அப்படி அவனைப் பற்றாதொழியினும் ஒழி;	எங்கும் இல்லை காண்	ஓரிடத்திலுமில்லை கிடாய்.
தொல்லை	அநாதியாய்		

* * *—வல்வினைகள் தம்மை அடர்க்க நினைக்கிறபடியைப் பேசினார் கீழ்ப் பாட்டில்; அவை அடர்த்தாலும் தம்முடைய அத்யவஸாயம் ஒரே உறுதியாயிருக்கும்படியைப் பேசுகிறாரிதில். நெஞ்சே! திருத்துழாய்மாலையை அணிந்துள்ள திருமாலின் போக்யதையில் நீ பழகினவனன்றோ? உனக்கு நான் புதிதாக உபதேசிக்க வேண்டுவதன்றே? அந்த போக்யதையில் நீ யீடுபட்டு வேறு எந்த வஸ்துவிலும் கண் செலுத்தாமல் அவ்வெம்பெருமானொருவனையே பின்பற்றி நிற்கவேண்டியது உன் கடமை; இந்த ஸ்வரூபம் கெடாதபடி நின்றாலும் நில்லு; நிற்காமல் விஷயாந்தரங்களைப்பற்றி முடிந்து போவதானாலும் போ; உன்னை நான் நிர்ப்பந்திக்கமாட்டேன்; ஆனால், நம்மை நரகத்துக்குப் போகாதபடி தடுத்துக் காத்தருள வல்ல கடவுள் அவனைத் தவிர வேறொருவன் எங்கு மில்லை யென்பதை மாத்திரம் உனக்கு உறுதியாய்ச் சொல்லுவேன்; இதனை விச்வஸித்து நீ அப்பெருமானையே அநுவர்த்தித்து உஜ்ஜீவிப்பாயாகில் உகக்கிறேன்; இல்லையாகில் தான் தோன்றியான நெஞ்சு போகிறபடி போய்த்தொலையட்டும் என்று வெறுத்திருக்கிறேன்—என்றாராயிற்று.

தொல்லைமாவெந்நரகில் = நித்ய விபூதியென்று சொல்லப்படுகிற பரமபதம் மாத்திரமேயன்றோ ஆதியந்தமற்றது; நரகமும் அப்படிப்பட்டதோ? தொல்லைநரகம் என்னலாமோ? என்று சிலர் சங்கிப்பர்கள்; பகவத் கீதையில் "சுக்லக்ருஷ்ணகதீ ஹ்யேதே ஜகதச் சாச்வதே மதே" என்று இரண்டுமே நித்யமாகச் சொல்லப்பட்டுள்ளமை காண்க. பரமபதஞ் சென்றவர்கள் திரும்பி வருதலில்லாமையால் அதனை விசேஷித்து நித்ய விபூதியென்கிறது. ஸ்தாநம் நித்யமென்பது இரண்டுக்கு மொக்கும்.

காப்பதற்கு இல்லைகாண் மற்றோரிறை = "எருத்துக்கொடியுடையானும் பிரமனுமிந்திரனும் மற்றுமொருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை" என்ற பெரியாழ்வார் திருமொழியும், "நீளரவைச் சுற்றிக்கடைந்தான் பெயரன்றே தொன்னரகைப் பற்றிக் கடத்தும் படை" என்ற பொய்கையார் பாசுரமும் இங்கு அநுஸந்திக்கத்தக்கன. 60

2645 இறைமுறையான் சேவடிமேல் மண்ணளந்த வந்நாள் *
மறைமுறையால் வானாடர் கூடி *—முறைமுறையின்
தாதிலகு பூத்தெளித்தா லொவ்வாதே? * தாழ்விசும்பின்
மீதிலகித் தான்கிடக்கும் மீன். **61**

தாழ் விசும்பின் மீது	வெளியான ஆகாசத்திலே	கூடி	கும்பல்கூடி
இலகி கிடக்கும் மீன்	விளங்காநின்ற நக்ஷத்திரங்களானவை,	சே அடிமேல்	(அப்பெருமானது) செவ்விய திருவடிகளின்மேல்
இறை முறையான்	ஸ்வாமியான முறைமையையுடைய எம்பெருமான்	மறை முறையால்	வேதங்களிற் சொல்லிய விதிப்படி
மண் அளந்த அந்நாள்	உலகளந்த அக்காலத்திலே	தாது இலகு பூ	தாதுகளாலே விளங்காநின்றுள்ள புஷ்பங்களை
வான் நாடர்	வானுலகத்திலுள்ளாரெல்லாரும்	முறை முறையின்	முறை முறையாக
		தெளித்தால் ஒவ்வாதே	தெளித்தாற் போன்றுள்ளனவன்றோ?

* * *—ஆழ்வார் இவ்விருள்தருமாஞாலத்தின் தன்மைகளைச் சிந்திக்கிற போது ஒன்றுந்தோன்றாமல் ஆகாசத்தை நோக்கிக் கிடப்பதுண்டு; "நலத்தால் மிக்கார்குடந்தைக் கிடந்தாய்! உன்னைக் காண்பான் நானலப்பாய் ஆகாயத்தை நோக்கி யழுவன் தொழுவனே" என்று திருவாய்மொழியில் அருளிச்செய்த

படியே ஆகாசத்தை நோக்க நேருவதுமுண்டு; ஏதோவொரு காரணத்தினால் ஆகாசத்தை நோக்கினார் ஆழ்வார்; ஆகாச மடங்கலும் நக்ஷத்ர மயமாகக் காணப்பட்டது; உலகத்தில் எந்த வஸ்துவைக் கண்டாலும் பகவத்ஸம்பந்தத்தை முன்னிட்டே அந்த வஸ்துக்கள் ஆழ்வாருடைய திருவுள்ளத்திற்கு விஷயமாகுமேயன்றி ஸாமாந்யமான லௌகிக வஸ்துவாக விஷயமாகாதாகையாலே இந்த நக்ஷத்ரங்களிலும் பகவத்ஸம்பந்தத்தை முன்னிட்ட உத்ப்ரேக்ஷை திருவுள்ளத்திற்படவே அந்த உத்ப்ரேக்ஷையை இந்தப் பாசுரத்தினால் வெளியிடுகிறார்.

எம்பெருமான் முன்பு உலகளந்தருளின காலத்திலே மேலுலகத்திலுள்ளாரெல்லாருங் கூடி அப்பெருமானது திருவடியின்மேல் புஷ்பங்களைத் தூவினார்களன்றோ; அந்தப் பூக்கள்போன்றுள்ளன இந்த நக்ஷத்திரங்கள் என்று உத்ப்ரேக்ஷித்தபடி. நக்ஷத்திரங்கள் சிறுமுல்லைப்பூக்கள் போலேயிருத்தலாலும், விஷ்ணுபதமென்னப் படுகிற ஆகாசத்திலே நிரம்பியிருக்கையாலும், ஆழ்வாருடைய திருவுள்ளத்திலே எப்போதும் உலகளந்த வரலாறு ஊன்றிக்கிடக்கையாலும் இங்ஙனே உத்ப்ரேக்ஷிக்கலாயிற்று.

இப்பாட்டின் வியாக்கியானத்திலே—"லோக யாத்ரையை அநுஸந்திக்கப் புக்காலும் அவனை முன்னாகவல்லது காணமாட்டாமை சொல்லுகிறது" என்றும்; "சிறியாச்சான் 'சப்தாதி விஷயங்களில் நின்றும் நாம் மீள மாட்டாதாப்போலே ஆழ்வார்கள் பகவத் விஷயத்தில் நின்றும் மீள மாட்டார்கள்' என்று பிள்ளைக்குப் பணித்தான்" என்றும் உள்ள ஸ்ரீஸூக்திகள் அநுஸந்திக்கத்தக்கன. ... 61

2646 மீனென்னுங் கம்பின் வெறியென்னும் வெள்ளிவேய் [2]
வானென்னுங் கேடிலா வான்குடைக்குத் *—தானோர்
மணிக்காம்பு போல்நிமிர்ந்து மண்ணளந்தான் * நங்கள்
பிணிக்காம் பெருமருந்து பின். 62

மீன் என்னும் கம்பின்	நக்ஷத்திரங்களாகிற கம்புகளையுடையதும்	ஓர் மணி காம்பு போல் நிமிர்ந்து	ஒப்பற்ற நீல மணிமயமான காம்புபோல் வளர்ந்து
வெறி என்னும் வெள்ளி வேய்	சந்திரனாகிற வெள்ளிக் குழையை யுடையதும்	மண் அளந்தான் தான்	உலகளந்தவனான பெருமான்
வான் என்னும்	ஆகாசமென்கிற பெயருடையதும்	பின்	மேலுள்ள காலமெல்லாம்
கேடு இலா	ஒருநாளும் அழிவில்லாததுமான	நங்கள் பிணிக்கு	நம்முடைய (ஸம்ஸாரமாகிற) வியாதிக்கு
வான் குடைக்கு	பெரிய குடைக்கு	பெரு மருந்து ஆம்	சிறந்த ஔஷத மாவன்

* * *—கீழ்ப்பாட்டில் "இறை முறையான் சேவடிமேல் மண்ணளந்தவந்நாள்" என்று உலகளந்த வரலாற்றைச் சிறிது பிரஸங்கிக்கவே, பின்னையும் அதனை ஒருவாறு வருணித்துப் பாசுரம்பேச விருப்பமுண்டாகி ரூபகாலங்கார [உருவகவணி] ரீதியிலே அருளிச்செய்கிறார்.

எம்பெருமான் பண்டு உலகளப்பதற்காக ஒரு திருவடியை ஆகாசத்தேறத் தூக்கினது எங்ஙனே சொல்லலாம்படியிருக்கின்றதென்றால் ஆகாசமாகிற ஒரு பெரிய குடைக்கு நீலரத்நமயமான காம்பு கோப்பது போல் பேசலாயிருந்ததென்கிறார். ஆகாசத்தைக் குடையாகக் கூறுதற்கு உள்ள பொருத்தங்களை முதலடியிற் கூறுகின்றார். மீனென்னும் கம்பின் = உலகத்தில் சிறந்த குடையானது முத்துக்களழுந்தின பல கம்புகளையுடைத்தாயிருக்கும்; ஆகாசமும் பல பல நக்ஷத்திரங்கள் விளங்கப்பெற்றிருக்கையாலே, தனித்தனி நக்ஷத்ரங்கள் முத்துக்கள் போலவும்,

நக்ஷத்ர ஸமூஹங்கள் அழுத்தின கம்புகள் போலவும் காணப்படாநின்றன. [முத்துக்களுக்கு வாசகமான பதம் மூலத்தில் இல்லை யெனினும், மீன் என்று நக்ஷத்திரங்களைச் சொன்னதற்கிணங்க உபமேய கோடியில் முத்துக்கள் விவக்ஷிதமென்க.] கம்பாவது—குடையின் மேல் துணியைத் தாங்குவதற்காகப் போடும் கம்பிகள்.

வெறியென்னும் வெள்ளிவேய் = வெறி என்று வட்ட வடிவத்திற்குப் பெயர்; அஃது இங்கு இலக்கணையால் சந்திரனைக் குறிக்கின்றது. குடைக்காம்பின் நுனியில் வெள்ளிக்குழை போடுவதுண்டே; ஆகாசமாகிற இக்குடைக்குச் சந்திரன் வெள்ளிக்குழை போன்றுள்ளனும். ஆக இவ்வகைகளாலே குடையென்று சொல்லத்தக்கதும், சில நாளிருந்து அழிந்து போகும் குடைபோலன்றியே சாச்வதமாயிருக்கக்கூடிய குடையென்று சொல்லத் தக்கதுமான ஆகாசத்திலே நீலமணி மேனியனான எம்பெருமானுடைய திருவடி நீண்டு சொருகப்பெற்றது மணிக்காம்பு கோத்ததுபோலாகுமிறே. ஆகவே, ஆகாசமாகிற குடைக்குத் தனது திருவடியாகிற காம்பைக் கோப்பதென்கிற வியாஜத்தினால் * இருவிசும்பினூடுபோயெழுந்து மேலைத்தண்மதியும் கதிரவனும் தவிரவோடித் தாரகையின் புறந்தடவியப்பால் மிக்கு மண்முழுதுமகப்படுத்து நின்றவெந்தையானவன் நமது ஸம்ஸாரமாகிற கொடிய வியாதியை ஒழிக்கவல்ல சிறந்த மருந்தாயிருப்பவன்—என்றாராயிற்று. 62

2647 பின்துரக்கும் காற்றிழந்த சூல்கொண்டல் பேர்ந்தும்போய் *
வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்தே—*அன்று
திருச்செய்ய நேமியான் தீயரக்கி மூக்கும்
பருச்செவியு மீர்ந்த பரன். 63

பின் துரக்கும் காற்று இழந்த சூல் கொண்டல்	பின்பற்றித் தள்ளுகிற காற்றை யிழந்து கடலிலே போய்ச் சேர்ந்த காளமேகமானது	பரு செவியும்	பருத்த காதுகளையும்
(எப்படி யிருக்கின்றதென்றால்)		அன்று	ஸ்ரீராமாவதாரத்தில்
திரு செய்ய நேமியான்	அழகிய சிவந்த சக்கரத்தை யுடையவனும்,	ஈர்ந்த	அறுத்தொழித்தவனுமான
தீ அரக்கி	கொடிய ராக்ஷஸியான சூர்ப்பணகையினது	பரன்	ஸ்ரீராமபிரான்
மூக்கும்	மூக்கையும்	பேர்ந்தும் போய்	(அவதார காரியத்தை முடித்தபின்பு) மறுபடியும் சென்று
		வன் திரைக் கண் வந்து அணைந்த வாய்மைத்து	பெரிய திருப்பாற் கடலிலே வந்து சேர்ந்தபடியை ஒத்திருக்கின்றது.

* * *—முன்னோர்கள் இப்பாட்டை இரண்டு மூன்றுவகையாக அந்வயிக்கப் பார்த்தார்கள்; தசரத சக்ரவர்த்திக்குத் திருமகனாகத் திருவவதரித்துத் தங்கையை மூக்கும் தமையனைத் தலையும் தடிந்து அவதார காரியங்களைச் செவ்வனே தலைக்கட்டிக்கொண்டு மறுபடியும் திருப்பாற்கடலிலே போய்ச் சேர்ந்தானென்கிற விஷயத்திற்கு ஓர் உபமானம் கூறுகிறார் இப்பாட்டில். இதில் பின்னடிகளை உபமேய வாக்கியமாகவும் முன்னடிகளை உபமான வாக்கியமாகவும் வைத்து வியாக்கியானித்தல் ஒரு வகை ;—(அதாவது =) "அன்று திருச்செய்ய நேமியான் தீயரக்கி மூக்கும் பருச்செவியு மீர்ந்தபரன்" என்றவளவும் உபமேய வாக்கியம்; "பின் துரக்குங் காற்றிழந்த சூல்கொண்டல் பேர்ந்தும் போய் வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்து" என்றவளவும் உபமான வாக்கியம். இதன் கருத்து யாதெனில்;—ஆழியங்கையனான பெருமான் சூர்ப்பணகாபங்கம் முதலான காரியங்களைச் செய்து முடித்து மீண்டும் திருப்பாற் கடலிலே போய்ச் சேர்ந்ததானது

எப்படியிருக்கின்றதென்றால்; கடலில் நின்றும் பரிபூர்ணமாக நீரை முகந்து கொண்டு கிளம்பின காளமேகமானது காற்றுத் தள்ளத் தள்ள மேலே நடந்து கொண்டே சென்று, அந்தக் காற்று எங்கே ஓய்ந்து விடுகிறதோ அங்கிருந்து (மேகம்) மேலே செல்ல முடியாமல் அந்தக் கடலிலேயே வந்து விழுந்திடுமோ; அது போலே யிராநின்றது என்றபடி. இக்கருத்து செவ்வனே கிடைக்கும்படியான சொல்தொடைகள் மூலத்தில் உளவோ என்று ஆராயவேண்டும். பாட்டின் முடிவி லுள்ள பரன் என்பதை உபமேயமாகக் கொண்டால் இரண்டாமடியிலுள்ள வாய் மைத்து என்ற குறிப்பு வினைமுற்றை 'வாய்மையன்' என மாற்றிக்கொள்ளவேண் டும். 'வாய்மைத்து' என்றிருப்பது பரன் என்ற உயர்திணைக்குச் சேராதிறே. ஆகை யாலே இப்படியோஜித்து வியாக்கியானிப்பதில் குறையுண்டென்று மற்றொரு வகையாக யோஜித்து வியாக்கியானிக்கப் பார்த்தார்கள்; (அதாவது—) பாட்டின் முடிவிலுள்ள பரன் என்ற பதத்தோடு 'படி' என்கிற ஒரு பதத்தை வருவித்துக் கூட்டிக்கொண்டு "பரன்படியானது—வாய்மைத்து" என்று அந்வயித்தால் திணை மாறுட்டம் செய்ய அவசியமில்லையே என்று பார்த்தார்கள். ஆனாலும் இந்த யோஜனையில்—மூலத்திலில்லாத "படி" என்கிறவொரு சொல்லை வருவித்துக் கூட்டிக்கொள்ளுதலாகிற அத்யாஹார மென்பதும் ஒரு குறைதானே என்று குறை யுற்றிருந்தனர்; இவ்விரண்டு குறைகட்கும் இடமில்லாதபடி நஞ்ஜீயர் ஸந்நிதியிலே நம்பிள்ளை விண்ணப்பம் செய்த யோஜனைதான் இங்கு நாம் பதவுரையில் காட்டினது.

கீழ்ச்சொன்ன இரண்டு யோஜனைகளில் எம்பெருமானை உபமேயமாகவும் காளமேகத்தை உபமானமாகவும் நிறுத்தி உரைக்க வேண்டியதாயிற்று. இப்போது அங்ஙனம் வேண்டா. மூலத்தில் ஸ்வரஸமாக ஏற்படுகிறபடியே "பின்துரக்கும் காற்றி ழந்த சூல் கொண்டல்" என்பதே உபமேயம். இப்போது பாசுரத்தின் கருத்தை நெஞ் சிலே விளங்கக் கொள்ளுங்கள்:—

ஆழ்வார் எம்பெருமானை அநுபவிக்குந்திறத்தில் நித்யஸூரிகளுக்கு மேற்பட்ட வராயிருந்தாலும் இவர் தாம் எழுந்தருளியிருப்பது பிரகிருதி மண்டலத்திலே யாகை யாலே பிராகிருத பதார்த்தங்களிலும் கண்வைக்க நேருவதுண்டு; அவற்றில் கண் வைத்தாலும் பகவத் விஷயத்தை முன்னிட்டுப் பேசும்படியா யிருக்குமேயொழிய, பக வத் விஷய ஸம்பந்தமின்றியே பிராகிருத பதார்த்தத் தன்மையாக மாத்திரம் பார்ப் பதும் பேசுவதும் இவ்வாழ்வார்க்கு அஸம்பாவிதம் என்பது கீழ் அறுபத்தோராம் பாட்டிலும நன்கு விளங்கியதே. அதுபோலவே இப்பாட்டிலும் பிராகிருத பதார்த் தங்களில் ஆழ்வார் தமது திருக்கண் ஓடநேர்ந்தபோது, ஒரு மேகமானது கடலில் சென்றிறங்கிக் கழுத்தே கட்டளையாக நீரை முகந்துகொண்டு மேலே கிளம்பி, காற்றுத் தள்ளத்தள்ள ஆகாசத்திலே வந்துகொண்டிருக்கும்போது அந்தக்காற்று ஓய்ந்துவிட்டது; காற்றின் உதவியில்லாமல் மேகம் மேலே நடைபயிலகில்லாமல் மீண்டும் அக்கடலிலேயே போய்ச்சென்றது; இதனைக் கண்ணுற்ற ஆழ்வார்க்கு நல்ல பொருத்தமான உபமானம் நினைவுக்கு வந்தது. பண்டொருகால், இராம பிரானுகிற காளமேகம் கருணை ரஸமாகிற நீரைப் பரிபூர்ணமாக முகந்துகொண்டு திருப்பாற் கடலினின்றும் புறப்பட்டு, தேவதைகளின் பிரார்த்தனையாகிற காற்று தூண்டத்தூண்ட நிலவுலகத்தே நடந்துவந்து துஷ்ட நிக்ரஹம், சிஷ்டபரிபாலநம், தர்ம ஸம்ஸ்தாபநம் முதலியவற்றைச் செய்துமுடித்து, அவ்வளவிலே தேவதை களின் பிரார்த்தனை ஈடேறிற்றாக, (தூண்டும் காற்று ஓய்ந்தமையாலே) மறுபடியும் திருப்பாற்கடலிலே போய்ச் சேர்ந்தானென்கிற செய்தி பொருத்தமான த்ருஷ் டாந்தமாக நினைவுக்கு வரவே அதனைப் பேசி அநுபவித்தாராயிற்று.

"பின்துரங்கும் காற்றிழந்த சூல்கொண்டல்" என்ற உபமேய வாக்கியத்தில், மேகம் உபமேயமாக நின்றாலும், "பின்துரக்கும் காற்றிழந்த" என்ற விசேஷணத்தின் ஸாமர்த்

தியத்தினல், மீண்டும் அம்மேகம் கடலில் போய்ச் சேர்ந்ததுவே உபமேயமாக அநுஸந்திக்கத்தகும். பின்னலே தள்ளிக்கொண்டு வந்த காற்றை மேகம் இழந்ததென்ருல்—மேகம் கடலில் போய்ச் சேர்ந்துவிட்டது என்றதாமத்தனையிறே. (காற்ருடியின் கதியை நினைக்க.) நூல்கொண்டல்—பூர்ணகர்ப்பமுடைய மேகம் என்கை.

“தீயரக்கிமூக்கும் பருச்செவியுமீர்ந்த” என்று சூர்ப்பணகா பங்கம் மாத்திரமே சொல்லப்பட்டிருந்தாலும் ராவணவதம் வரையிலுள்ள ஸகலராக்ஷஸநிரஸநமும் இதில் அடங்கும். ஸகலராக்ஷஸர்களையும் நிரஸிக்க நேர்ந்ததற்கு சூர்ப்பணகையின் பங்கமே முதற்கிழங்காதலால் அதனைச் சொல்லவே மேலுள்ளதெல்லாம் சொல்லிற்ருகுமென்று ஆழ்வார் சுருங்கச் சொன்னபடி. அரக்கி—‘ராக்ஷஸீ’ என்ற வடசொற் சிதைவு. “பரிச்செவியும்” என்று பாடமாகில், பரி என்று குதிரைக்குப் பெயராகையாலே, ‘குதிரையின் காதுபோன்ற காதை’ என்று பொருளாகும்.

நம்பிள்ளை காட்டியருளின இந்த யோஜனையில் மூலம் ஒழுங்காக அந்வயிக்கப்பெறுவது தவிர, மேகத்தை உபமேயமாக நிறுத்தி யுரைத்தலாகிற ஸ்வாரஸ்யாதிசயம் போற்றத்தக்கது. ஆழ்வார்க்கு லோகயாத்திரையும் பகவதநுபவத்திலே அந்வயிக்கிறதென்கைக்குப் பாங்கு. 63

2648 பரனு மவனுதல் பாவிப்ப ராகில் *
உரனு லொருமூன்று போதும் *—மரமேழன்று
எய்தானைப் புள்ளின்வாய் கீண்டானையே * அமரர்
கைதான் தொழாவே கலந்து. **64**

அன்று	முற்காலத்தில்	உரனல்	தங்களுடைய மனத்தினலே
மரம் ஏழ் எய்தானை	(ஸுக்ரீவனுடைய நம்பிக்கைக்காக) ஸப்தஸால வ்ருக்ஷங்களைத் துளைத்த இராமபிரானென்ன,	பாவிப்பர் ஆகில்	அநுஸந்திப்பர்களேயானல்
புள்ளின் வாய் கீண்டானை	பகாஸுரனது வாயைக் கிழித்தெறிந்த கண்ணபிரானென்ன இவர்களை நோக்கி		(அப்படிப்பட்ட விவேகிகளை)
		அமரர் கை	தேவர்களின் கைகளானவை
அவன் பரன் ஆம் ஆதல்	‘அந்த இராமபிரானும் அந்த கண்ணபிரானும் (நம்மைப் போன்ற மநுஷ்யரல்லர்; ஸாக்ஷாத் பரம புருஷரேயாவர்’ என்கிற விஷயத்தை	கலந்து	ஒன்று சேர்ந்து
		ஒரு மூன்று போதும்	எப்போதும்
		தொழாவே	ஸேவிக்கமாட்டாவோ.

* * *—கீழ்ப்பாட்டில் ஸ்ரீராமாவதார விஷயம் ப்ரஸ்துதமாகவே, எம்பெருமான் நம்மைத் திருத்திப் பணிகொள்ளவேண்டி ராமக்ருஷ்ணுதி ரூபத்தாலே மநுஷ்யஸஜாதீயனுய்ப் பிறந்து “உங்களைப்போலே நானும் ஒரு மநுஷ்யனே” என்று சொல்லிக்கொண்டிருந்தாலும், மராமரமேழெய்தது, புள்ளின்வாய் கீண்டது முதலிய அருமையான திவ்ய சேஷ்டிதங்களையும் இடை யிடையே காட்டிக் கொண்டிருந்தானுதலால் அவற்றை நோக்கி ‘இவன் நம்மைப் போன்ற ஸாமாந்ய மநுஷ்யனல்லன்; இவன் பராத்பரனுன பரமபுருஷனேயாவன்’ என்று கொண்டு அவன் பக்கல் பக்திபண்ணவேண்டியிருந்தும், “அவஜாநந்தி மாம் மூடா: மாநுஷீம் தநுமாச்ரிதம்” [நான் மநுஷ்ய யோநியிற் பிறந்தேனென்று என்னை மூடர்கள் அவமதிக்கின்ருர்கள்] என்று கீதையில் அப்பெருமான் தானே சொல்லி வருந்தும்படியாக அநியாயமாய் அவமதித்துப் பாவிகளாய்க் கெட்டுப் போனர்களே ஸம்

ஸாரிகள்; அப்படி அவமதியாமல் அவனே பரம புருஷனென்று பாவித்திருப்பர்களாகில் அவர்களைத் தேவர்களெல்லாரும் கையெடுத்துக் கும்பிட்டிருப்பர்களன்றோ?—என்று அநுதபிக்கிறார்.

உரனால்='உரஸ்' என்னும் வடசொல் மார்வுக்கு வாசகமாய் நெஞ்சையும் சொல்லக்கடவது; அச்சொல் உரம் எனத்திரிந்து, மகரனகரப் போலியுண்டாகையாலே உரன் என்று கிடக்கிறதிங்கு எதுகையின்பம் நோக்கி. இங்ஙனன்றிக்கே உரம் என்று தனியே ஒரு தமிழ்ச்சொல்லு முண்டு; அதற்கு வலி என்று பொருள்; இங்கு அத்யவஸாயத்தைச் சொன்னபடி. 'அவன் பரம புருஷனே யென்று உறுதியாகப் பாவித்திருப்பர்களாகில்' என்றபடி.

மரமேழன்றெய்தானை என்பதனால் ஸ்ரீ ராமாவதாரத்தையும், புள்ளின்வாய்கீண்டானை என்பதனால் ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தையும் குறித்தது—மற்றும் இப்படிப்பட்ட பல விபவாவதாரங்களையுங் காட்டினபடி. "அமரர் கைதான் தொழாவே கலந்து" என்பதற்கு இங்கு நாம் உரைத்த பொருளாவது—'மநுஷ்யாவதாரம் பண்ணின எம்பெருமான் திறத்திலும் பரத்வ புத்தியை யார் வஹிக்கின்றார்களோ அவர்களை அமரர்கள் கையெடுத்துக் கும்பிடுவர்கள்' என்று உரைத்தோம். மூலத்தின் நிலைமைக்கு நன்கு சேரும்படி வேறொரு வகையாகவும் உரைக்கலாம்;—அமரர் என்றது அஹங்காரிகளான தேவதைகளைச் சொன்னபடியாய்; ஸம்ஸாரிகள் விபவாவதாரங்களிலெம்பெருமான்களை அலக்ஷியஞ் செய்யாமல் பரத்வத்தையே பாவித்துப் பணிந்திருப்பர்களாகில் அஹங்காரிகளான தேவர்களும் தங்களுடைய அஹங்காரத்தையொழித்துவிட்டுக் கூடவே தொழுது உஜ்ஜீவித்திருப்பர்களன்றோ? என்றுரைக்கவுமாம். (மராமரம்—ஆச்சாமரம்) 64

2649 கலந்து நலியுங் கடுந்துயரை நெஞ்சே!
மலங்க வடித்து மடிப்பான்*—விலங்கல்போல்
தொன்மாலைக் கேசவனை நாரணனை மாதவனைச் *
சொன்மாலை யெப்பொழுதுஞ் சூட்டு. 65

நெஞ்சே	வாராய் மனமே!
கலந்து	நம்மோடுகூடவே யிருந்து
நலியும்	ஹிம்ஸிக்கின்ற
கடு துயரை	கடுமையான துக்கங்களை
மலங்க அடித்து மடிப்பான்	முகம் சிதறப் புடைத்துத் துரத்த வேண்டில்,
விலங்கல்போல்	மலைபோன்றவனும்

தொல் மாலை	அநாதி காலமாக நம்மேல் வ்யாமோஹமுடையவனும்
கேசவனை	சிறந்த திருக்குழற்கற்றையை யுடையவனும்
நாரணனை	ஸ்ரீமந்நாராயணனும்
மாதவனை	திருமகள்கேள்வனுமான பெருமான்விஷயத்திலே
சொல் மாலை	பாசுரங்களாகிற மாலைகளை
எப்பொழுதும்	ஸர்வகாலமும்
சூட்டு	ஸமர்ப்பி.

***—இதுமுதல் மூன்று பாசுரங்களில் ஆழ்வார் தமது திருவுள்ளத்திற்கு நன்மை உபதேசித்தருளுகிறார். நெஞ்சே! நம்முடன் கூடவேயிருந்து நம்மைத் துன்பப்படுத்துகின்றனவாய், அநுபவித்தே ஒழிக்கவேண்டுமவையான பாவங்களை முகஞ்சிதறப் புடைத்து, பின்பொருகாலும் நம்மருகே நாடவொட்டாமல் துரத்த வேண்டுமானால் . எம்பெருமான்விஷயத்திலே நல்ல பாசுரங்களை இடைவிடாது பேசிக்கொண்டேயிரு என்கிறார் இப்பாட்டில்.

துயர் என்று துக்கங்களையும் துக்கங்களுக்குக் காரணமான பாவங்களையுஞ் சொல்லும். அசேநங்களான பாவங்களை மலங்க வடித்தல் அஸம்பாவிதமாயினும், அவற்றினிடத்துத் தமக்குள்ள ரோஷத்தைக் காட்டினாராமித்தனை. மடிப்பான்—ஆன் விகுதிபெற்ற வினையெச்சம்,

விலங்கல்போல் தொன்மாலை=‘விலங்கல்’ என்று மலைக்குப் பெயர்; மலையானது ஒருவராலும் அசைக்கமுடியாமல் ஸ்திரப்ரதிஷ்டையாக இருப்பதுபோல, எம்பெருமான் குத்ருஷ்டிகள் முதலான மதாந்தரஸ்தர்களுடைய எப்படிப்பட்ட குத்ஸிதவாதங்களாலும் சலிப்பிக்க முடியாமல் வேதவேதாந்தங்களில் ஸ்திரப்ரதிஷ்டையை யுடையனாயிருத்தல்பற்றி மலையை உவமையாகச் சொல்லுவர்கள். மற்றும் பல காரணங்களுமுண்டு. “நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே! வாவென்றுகூவும்” என்ற திருவாய்மொழியும் உங்கு அநுஸந்திக்கத்தகும். மால் என்பதற்கு ‘மோஹமுடையவன்’ என்று பொருள்; ‘தொல் மால்’ என்றது—நெடுநாள் முதற்கொண்டே நம்மேல் மோஹமுடையவன் என்றபடி: “எதிர் சூழல்புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே யருள்கள் செய்ய, விதி சூழ்ந்ததால் எனக்கேலம்மான் திரிவிக்கிரமனையே” என்று திருவாய்மொழியி லருளிச் செய்வது காண்க.

கேசவன் என்பதற்கு—சிறந்த மயிர்முடியை யுடையவன் என்றும், பிரமனுக்கும் சிவனுக்கும் தலைவன் என்றும், கேசி யென்னும் பெயரையுடையனாய்க் குதிரைவடிவங் கொண்டு நலியவந்த அசுரனைக் கொன்றவனென்றும் மூன்று வகையாகப் பொருள் கூறுவதுண்டு.

சொல்மாலை சூட்டு=அடியார்களின் வாயில் நின்றும் வருகிற பாசுரம் எம்பெருமானுக்குப் பூமாலைபோன்று பரமபோக்யமாயிருத்தலால் ‘சொல்மாலை’ என்பது வழக்கம். பூமாலையைத் தலைமேலணிந்து மகிழ்வதுபோல, இப்படிப்பட்ட அருளிச்செயல்களையும் எம்பெருமான் தலைதுலுக்கிக் கொண்டாடுவன் என்பது தோன்ற ‘சூட்டு’ எனப்பட்டது. “சூட்டினேன் சொல்மாலை” என்றார் பொய்கையாழ்வாரும். உலகில் மாதர்கட்குப் பூமாலையினால் அழகு உண்டாவது போலே எம்பெருமானுக்கு அருளிச்செயல்களினால் அழகு உண்டாகுமென்க. 65

2650 சூட்டாய நேமியான் தொல்லரக்க னின்னுயிரை *
மாட்டே துயரிழைத்த மாயவனை *—ஈட்ட
வெறிகொண்ட தண்டுழாய் வேதியனை * நெஞ்சே!
அறிகண்டாய் சொன்னே னது. 66

நெஞ்சே	ஓ மனமே!,	ஈட்ட	திரண்ட
சூடு ஆய நேமியான்	(ஆயுதமாயிருக்கும் மாத்திரமல்லாமல்) அலங்காரமாயுமிருக்கிற திருவாழியை யுடையவனும்	வெறி கொண்ட	பரிமளம் மிக்க
தொல் அரக்கன் இன் உயிரை	வெகுகாலமாகத் தீமை செய்து கொண்டிருந்த இராவணனுடைய இனிய உயிரை	தண் துழாய்	குளிர்ந்த திருத்துழாய் மாலையை யணிந்த
மாட்டே	அவன் பக்கத்திலிருந்து கொண்டே	வேதியனை	வைதிகனுமான எம்பெருமானை
துயர் இழைத்த மாயவனை	துன்பப்படுத்தின ஆச்சரியனும்	அறி கண்டாய்	அநுஸந்தித்திரு;
		அது சொன்னேன்	ஒருவர்க்கும் சொல்லவொண்ணாத அப்படிப்பட்ட இவ்விஷயத்தை உனக்குச் சொன்னேன்.

* * *—நெஞ்சே! நீ ஸாமாந்யமாக மற்றையோருடைய நெஞ்சாக இராமல் என்னுடைய நெஞ்சாக அமைந்தபடியாலும், நான் ஒருவழி போனால் நீ ஒருவழி போகை யன்றியே சாலவும் எனக்கு நீ உடன்பட்டிருக்கையாலும் உனக்கு ஒரு விசேஷார்த்தம் சொல்லுகிறேன் கேள்; உலகத்திலே உணரவேண்டும் பொருள்கள் பலவுள்ளனவென்று பலர் நினைத்திருப்பார்களாயினும், நான் நினைத்திருப்ப

தாவது, உணரவேண்டும் பொருள் ஒன்றே; அஃதாவது பகவத் விஷயம். "ஒண் தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கு முணர்வு" என்று பொய்கையாழ்வாரும் அருளிச்செய்தாராகையால் பகவத்விஷய மொன்றே நமக்கு உணரத் தக்கது; அதனையே நீ உணர்; இதனை நான் மற்றையோர்க்குச் சொன்னால் ஏசுவர்கள்; ஆகையாலே ஒருவர்க்கும் இதை நான் சொல்வதில்லை; உனக்கே சொன்னேன்—என்கிருர்.

மூன்றடிகளால் பகவத்விஷயத்தை வருணிக்கிருர். சூட்டாய நேமியான்= "சூடா" என்கிற வடசொல் 'சூடு' என விகாரப்பட்டு, அலங்காரமென்று பொருள் பெற்றுக்கிடக்கிறது. எம்பெருமானைக்கொண்டு அஸுராராக்ஷஸ ஸம்ஹாரம் முதலிய காரியங்களைக் கொள்ள நினைப்பவர்கள் திருவாழி யாழ்வானை ஆயுதமாகக் கருதுவர்கள்! அங்ஙனன்றிக்கே அநந்யப்ரயோஜநராய் "வடிவார்சோதி வலத் துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு" என்று திருப்பல்லாண்டு பாடுமவர்கள் எம்பெருமானுடைய திவ்யாயுதங்களெல்லாவற்றையுமே திருவாபரண கோடியிலே அநுஸந்திப்பர்களாதலால் அது தோன்ற இங்கு சூட்டாய நேமியான் என்ருர். நேமி—திருவாழியாழ்வான்.

தொல்லரக்கனின்னுயிரை மாட்டே துயரிழைத்த மாயவன்=எம்பெருமான் அடியவர்களுக்கு அநாதிகாலமாகவே நன்மைகளைச் செய்து வருவது போல, இராவணன் பாகவதர்களுக்கு அநாதிகாலமாகத் தீமைகளியற்றிவருதலால் தொல்லரக்கன் எனப்பட்டான். அவனுடைய இன்னுயிர்க்குத் துயருண்டாக்கின மாயவன் இராமபிரான். மாட்டே என்றது ஸமீபத்திலே யிருந்துகொண்டு என்றபடி. "மாடு பொன் பக்கம் சேல்வம்" என்பது நிகண்டு. "ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேச்வர:" என்று—இராவணன் இராமபிரானுடைய அம்புகளை நினைந்து நினைந்து உருவழிந்தானென்று ஸ்ரீவால்மீகி பகவான் பேசினபடியை இங்கு நினைப்பது.

"ஈட்ட வெறிகொண்ட" என்றவிடத்து, 'ஈண்ட' என்றிருக்கவேண்டுவது எதுகையின்பம் நோக்கி 'ஈட்ட' என்று வல்லொற்ருய்க் கிடக்கிறதென்ப. திரண்ட என்றபடி. இது வெறி [பரிமளத்து]க்கு விசேஷணமாவுமாம்; துழாய்க்கு விசேஷணமாகவுமாம். வேதியன்='வைதிக:' என்ற வடசொல் விகாரம். "சொன்னேனிது" என்னவேண்டியிருக்க, "சொன்னேன் அது" என்றது அர்த்த கௌரவந் தோற்றவாம். 66

2651 அதுவோநன் றென்றங் கமருலகோ வேண்டில் *
அதுவோர் பொருளில்லை யன்றே? *—அதுவொழிந்து
மண்ணின்ருள் வேனெனிலுங் கூடும் மடநெஞ்சே! *
கண்ணன்தாள் வாழ்த்துவதே கல். 67

மட நெஞ்சே	அறிவு கெட்ட மனமே!,	மண் நின்று ஆள்வேன் எனிலும்	இந்த மண்ணுலகத்தில் நிலைநின்று ஐச்வரியத்தை ஆளவேணுமென்று விரும்பினையாகிலும்
அதுவோ நன்று என்று	(இவ்விபூதியிலிருப்பைவிட) அந்தப் பரமபதாநுபவம் சிறந்ததென்று கொண்டு	கூடும்	அதையும் அவன் எளிதில் அருளக் கூடும்;
அங்கு அமர் உலகு வேண்டில்	அந்தப் பரமபதாநுபவத்தை விரும்புகிற பக்ஷத்தில்	கண்ணன்	ஆகவிப்படி உபய விபூதியையும் அளிக்க வல்லனான எம்பெருமானுடைய
அது ஓர் பொருள் இல்லை அன்றே	அதனைக் கொடுப்பது (எம்பெருமானுக்கு) அஸாத்யமான காரியமல்லவே;	தாள்	திருவடிகளை
அது ஒழிந்து	அந்தப் பரமபதாநுபவத்தை உபேக்ஷித்து விட்டு	வாழ்த்துவதே	மங்களாசாஸநம் பண்ணுவதையே
		கல்	அப்யஸிக்கக் கடவாய்.

* * *—உபய விபூதியையும் எளிதில் தந்தருளவல்ல எம்பெருமான் திருவடிகளையே வாழ்த்து நெஞ்சமே! என்கிறார். தேவதாந்தரங்கள் தம் தம் அடியவர்களுக்குச் சில அபேக்ஷிதங்களைத் தரக்கடவனவாகிலும் பரமபதத்தைத் தருவது எந்த தேவதைக்கும் முடியாத காரியம்; எம்பெருமானுக்கோ அது பரமஸுலபமானது; ஆகையாலே, நெஞ்சமே! நீ பரமபதந் தவிர மற்றதெல்லாம் தீது என்று விட்டிட்டு, விலக்ஷணமான அப்பரமபதமொன்றையே விரும்புவாயாகிலும், அது எம்பெருமானுடைய திருவருளால் எளிதில் கிடைக்கக்கூடியதே; அதனைத்தருவதில் அவனுக்கு அருமையேயில்லை அவனுக்கு இது ஒரு சரக்கே யன்றுகாண்; அங்ஙனமல்லாமல் "பாவோ நாந்யத்ர கச்சதி" என்று திருவடி சொன்னாற்போலே அந்தப் பரமபதத்தையும் உபேக்ஷித்துவிட்டு இந்த மண்ணுலகத்திலேயே நிலைபெற்று நின்று அநுபவிக்கவேணுமென்று விரும்பினையாகிலும் இதுவும் அவனால் எளிதில் தரக்கூடியதே; ஆகையால் ஐஹிகமோ ஆமுஷ்மிகமோ எந்த புருஷார்த்தமும் எம்பெருமானால் நாம் எளிதில் பெறக்கூடியதே; ஆனபின்பு இப்படி ஸர்வசக்தனான எம்பெருமானுடைய திருவடிகளையே வாழ்த்தப் பாராய்—என்றாராயிற்று. [பரமபதாநுபவத்திலும் இஹலோகபோகத்திலும் விருப்பம் வைத்திடாமல் கண்ணன் கழலிணை வாழ்த்துவதொன்றிலேயே நோக்காக இருக்கக்கடவை என்பது உள்ளுறை.)

அதுவோ நன்று" என்றவிடத்து ஒகாரம் பரமபதத்தின் வைலக்ஷண்யத்தைக் காட்டும். "அமரருலகு" என்பது 'அமருலகு' எனக் குறைந்து கிடக்கிறது. "அதுவோ பொருளில்லை" "அதுவோர் பொருளில்லை" என்பன பாடபேதங்கள்.

மண் நின்று ஆள்வேனெனிலும்=இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்; இந்த மண்ணுலகத்திலே யிருந்துகொண்டு பகவத் விஷயத்தை யநுபவிக்க விரும்பினாலும் என்பது ஒரு பொருள்; "ஒரு நாயகமாய் ஓடவுலகுடனாண்டவர்" என்கிறபடியே இவ்வுலகத்தில் ஐச்வரியத்தை யநுபவிக்க விரும்பினாலும் என்பது மற்றொரு பொருள். விரும்பும் பலன் எதுவாயினும் பகவானுடைய திருவடிகளை வாழ்த்துவதே யாத்திரையா யிருக்கவேணுமென்று விளக்கியவாறு. முதலடியில் "அமருலகோ வேண்டில்" என்றதற்கும் 'ஸ்வர்க்கலோக புருஷார்த்தத்தை விரும்பினாலும்' என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

கல்—முன்னிலை ஏவலொருமை வினைமுற்று. 67

2652 கல்லுங் கனைகடலும் வைகுந்த வானாடும் *
புல்லென் றொழிந்தனகொல்? ஏபாவம் *—வெல்ல
நெடியான் நிறங்கரியா னுள்புகுந்து நீங்கான் *
அடியேன துள்ளத் தகம். 68

வெல்ல நெடியான்	மிக வுயர்ந்தவனும்	கல்லும்	திருவேங்கட மலையும்
நிறம் கரியான்	நிறத்தால் கரியவனுமான கண்ணபிரான்	கனை கடலும்	கோஷிக்கின்ற திருப்பாற் கடலும்
உள் புகுந்து	உள்ளே பிரவேசித்து	வைகுந்தம் வான் நாடும்	ஸ்ரீவைகுண்ட மென்கிற வானுலகமும்
அடியேனது உள்ளத்தகம் நீங்கான்	அடியேனது உள்ளத்தை விட்டு நீங்குகின்றானில்லை;	புல்லென்று ஒழிந்தன கொல்	அல்பமாய் விட்டன போலும்;
	(ஆகையாலே)	ஏபாவம்	ஐயோ பாவம்!.

* * *—[கல்லுங் கனைகடலும்] கீழ் மூன்று பாசுரங்களிலும் ஆழ்வார் தமது திருவுள்ளத்திற்கு ஹிதம் உபதேசித்தார். அந்த உபதேசத்திற்கு நெஞ்சு உடன்பட்

டிருந்ததன் பலன் உடனே கை புகுந்தபடியை இதுமுதல் மூன்று பாசுரங்களாலே பேசுகிருர். எம்பெருமான் திவ்யமங்கள விக்ரஹத்தோடே தமது நெஞ்சிலே புகுந்து ஸ்திரப்ரதிஷ்டையாக இருக்கும்படியைப் பேசுகிருரிதில். வெல்ல நெடியான் = 'வெல்ல' என்றது (மிகவும்) என்றபடி. நாமாக எவ்வளவு முயற்சி செய்தாலும் நமக்கு எட்டாதிருப்பவன் என்கை. அவன் தானே தன்னருளாலே எளியனுகில் தடைசெய்வாரில்லாமையாலே நிர்ஹேதுக க்ருபையாலே வந்து புகுந்தானென் கிறது. (வெல்ல—வெல்வதற்கு, நெடியான்—முடியாதவன்; ஒருவராலும் ஜயிக்க முடியாதவன் என்று பொருள் கூறுதல் சிறவாது.) வந்து புகுந்ததாகத் தோற்றி விடுதல் மாத்திரமல்ல; மெய்யே வந்து புகுந்தானென்கைக்காக நிறங்கரியான் என்று திருமேனியையுங் கண்டறிந்து பேசுகிருர் போலும். பிராட்டியானவள் எம்பெரு மானுடைய திருமார்பிலே வந்து சேர்ந்து 'அகலகில்லேனிறையும், அகலகில்லே னிறையும்" என்று தானே எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பது போலே, எம்பெருமானும் ஆழ்வாருடைய திருவுள்ளத்திலே வந்து சேர்ந்து "நான் இதனை விட்டு நீங்கேன், நான் இதனை விட்டு நீங்கேன்" என்று உருச்சொல்லிக்கொண்டு கிடக்கின்ருனென்பது தோன்ற "உள்புகுந்து நீங்கான்" என்று அருளிச் செய்யு மழகு காண்மின்.

எம்பெருமானுக்கு, பரமபதத்திலும் திருப்பாற்கடலிலும், கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான உகந்தருளின இடங்களிலும் இருப்பதிற் காட்டிலும் மெய்யடியாருடைய ஹ்ருதய கமலத்திலே வாழ்வதே பரமோத்தேச்யமென்றும், ஸமயம் பார்த்து அன்பருடைய நெஞ்சிலே வந்து சேர்வதற்காகவே மற்ற இடங் களில் எம்பெருமான் தங்குகின்ருனென்றும், ஆகவே பரமபதம் முதலியவற்றில் வாஸம் உபாயமாய் பக்தருடைய ஹ்ருதயத்தில் வாஸமே புருஷார்த்தமாயிருக்கு மென்றும், இது ஸித்தித்து விட்டால் பரமபதம் முதலியவற்றில் வாஸம் செய்வதில் ஆதரம் மட்டமாய் விடுமென்றும் ஸ்ரீவசநபூஷணத்தில் பிள்ளையுலகாசிரியர் பரம ரஸமாக அருளிச் செய்ததெல்லாம் இப்பாசுரத்தின் முன்னடிகளை மூலமாகக் கொண்டேயென்றுணர்க. "கல்லும் கனைகடலும் வைகுந்த வானுடும் புல்லென்றொழிந்தன கொல் ஏபாவம்!" என்ற இப்பாசுரத்தின் உருக்கத்தை என் சொல்வோம்?. இப் படிப்பட்ட ஈரச்சொற்கள் பாவியோமான நம்முடைய வாயிலும் நுழைந்து புறப் படப்பெறுவதே!. ஆழ்வாருடைய அநுபவம் எங்கே? நாம் எங்கே? அவர்க ளுடைய அருளிச்செயலுக்கும் நமது நாவுக்கும் எவ்வளவோ தூரமுண்டு. ஆயினும், ஏதோ பாக்ய விசேஷத்தாலே நமது வாயிலும் இத்தகைய பாசுரங்கள் பொருள் தெரிந்தோ தெரியாமலோ சற்றுப்போது நுழைந்து புறப்படும்படியாக வாய்ப்பது இவ்விருள்தரு மாஞாலத்திடையே பெற்றதொரு கனத்த பேறும். ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும் இரவில் பள்ளிகொள்ளும்போது இப்பாசுரத்தைப் பலகால் அநுசந்திக்கவேணு மென்பது பெரியோர்களின் உபதேசம்.

கல்லும் = கல் என்று ஸாமாந்யமாக மலையைச் சொல்லிற்றுய், அது இங்கே சிறப்பாய்த் திருவேங்கடமலையைச் சொல்லிற்றுகிறது. கனைகடல் = எம்பெருமான் எப்போதும் தன்னிடத்து உறைகின்ருனென்ற மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய் கின்ற கடல் என்கை. புல்லென்றொழிந்தனகொல் = புல்லென்று—அற்பத்தன மடைந்து. எனது நெஞ்சின் முன்னே அவையெல்லாம் அற்பமாய் விட்டனபோலும் என்ற வாறு. அவ்விடங்களில் போக்குவரத்து அடியோடு அற்றுப்போனபடியாலே அவை புல்மூடிப் போயினவோ என்கிருர்—என்றுரைப்பர் சிலர். ஏபாவம்! = சிறந்த ஸ்தலங்களென்று கொண்டாடப்படுகிற அவ்விடங்களுக்கு இப்படிப்பட்ட அவஸ் தையா வந்துவிட்டது! ஐயோ பாவம்!' என்று இரக்கந் தோற்றப் பேசுகிறபடி.

பெரியாழ்வார்திருமொழியின் முடிவிலுள்ள "பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு" "தடவரைவாய் மிளிர்ந்து மின்னும்" என்ற இரண்டு பாசுரங்களும்

இப்பாசுரத்தின் இரண்டாமடிக்கு எதிர்நில்லா என்று அழகிய மணவாளச்சீய ரருளிச் செய்யும்படி. 68

2653 அகஞ்சிவந்த கண்ணினராய் வல்வினைய ராவார்*
முகஞ்சிதைவ ராமன்றே முக்கி*—மிகுந்திருமால்
சீர்க்கடலை யுள்பொதிந்த சிந்தனை யேன்றன்னை*
ஆர்க்கடலாஞ் செவ்வே யடர்த்து? 69

வல்வினையர் ஆவார்	கடுமையான பாவங்களானவை (தங்களுடைய குடியிருப்பை யிழந்தமையாலே)
அகம் சிவந்த கண்ணினர்	(கோவத்தினால்) உள்ளே சிவந்த கண்களை யுடையனவாய்
முக்கி	வருந்தி
முகம் சிதைவ ராம் அன்றே	முகம் வாடியிருக்கின்றனவல்லவோ?
மிகும்	எல்லாரிலும் மேற்பட்டவனை

திரு மால்	திருமாலினுடைய
சீர் கடலை	கல்யாண குணங்களாகிற கடலை
உள் பொதிந்த	உள்ளே அடக்கிக்கொண்ட
சிந்தனையேன் தன்னை	சிந்தனையை யுடையேனை என்னை
செவ்வே	செவ்வையாக
அடர்த்து	நெருக்கி
ஆர்க்கு அடல் ஆம்	யாரால் உபத்ரவிக்க முடியும் (ஒருவராலும் என்னைத் திரஸ்கரிக்க முடியாது.)

* * *—இப்படி என்னுள்ளே மிகவும் அபிநிவேசத்தைப் பண்ணிக் கலந்து வாழ்கின்ற திருமாலின் திருக்குணங்களை அநுஸந்திக்கப் பெறுகையாகிற ஏற்ற முடைய என்னை ஒருவராலும் திரஸ்கரிக்க முடியாதென்று மகிழ்ச்சியின் கனத்தாலே மார்பு தட்டிப் பேசுகிறார்போலே யிருக்கிறது இப்பாசுரம்.

இதற்கு முன்பு என்னை மிகவும் வருத்தின கொடிய கருமங்கள் இப்போது முன்புபோலே தனிக்கோல் செலுத்தி நலிய முடியாமையாலுண்டான சீற்றத்தாலே கண்கள் குதறிப்போய், "இதற்கு முன்பு செருக்கராய்த் திரிந்த நாமோ இப்போது இப்படி பரிபவப்பட நின்றோம்" என்று வாய்விட்டுக் கதறவும் கதறாதிருக்கவும் மாட்டாமல் ஊமைகள் உளறுமாபோலே உளறிக்கொண்டு முகபங்கமடைகிறபடியைக் காணுங்கோள் என்கிறார் முன்னடிகளில். அசேதநங்களான கருமங்களை "வல்வினையராவார்" என உயர்திணைபோலக் கூறுவதும், அவற்றுக்குக் கண்ணும் முகமும் உள்ளனபோலக் கூறுவதும், ஆழ்வாருடைய தற்போதைய மகிழ்ச்சியினாலாய கற்பனைகளென்க. முக்குதல்—வாய்விட்டுச் சொல்லமாட்டாமையும் வெறுமனிருக்கமாட்டாமையும்.

இனிமேல் எப்படிப்பட்ட கருமங்களும் தம்மை அடர்க்கமாட்டாவென்பதையும் அதன் காரணத்தையும் பின்னடிகளிற் பேசுகிறார். மிகும் திருமால்=மிகச் சிறிய என்னுள்ளே வந்திருக்கச் செய்தேயும் விசாலமான இடங்களிற்போல உடல் பூரிக்கின்ற திருமால் என்னவுமாம். சீர்க்கடலை உள்பொதிதலாவது—அப்பெருமானது அளவற்ற திருக்குணங்களை இடைவிடாது அநுஸந்தித்தல். பகவத் குணாநுபவம் பண்ணப்பெற்ற யான் இனி யார்க்கும் சளைக்கமாட்டேன்; ஒன்றையும் பொருட்படுத்தாமல் எனது காரியமே கண்ணாயிருப்பேன் என்றாராயிற்று. ... 69

2654 அடர்பொன் முடியானை யாயிரம்பே ரானைச்*
சுடர்கொள் சுடராழி யானை*—இடர்கடியும்
மாதா பிதுவாக வைத்தே னெனதுள்ளே*
யாதாகில் யாதே யினி? 70

அடர் பொன் முடியானை	அடர்ந்த பொன்மயமான திருவபிஷேகத்தை யுடையவனும்	இடர் கடியும் மாதா பிது ஆக	துக்கங்களைப் போக்கவல்ல தாயும் தந்தையுமாக
ஆயிரம் பேரானை	ஸஹஸ்ர நாமங்களால் பிரதிபாதிக்கப்படுபவனும்	எனது உள்ளே வைத்தேன்	என்னுடைய ஹ்ருதயத்திலே இருத்தினேன் ;
சுடர் கொள் சுடர் ஆழியானை	(சந்திர ஸூர்யன் முதலிய) சுடர்களை யெல்லாம் வென்று விளங்குகின்ற திருவாழியை யுடையவனுமான எம்பெருமானை	இனி	இனிமேல்
		யாது ஆகில் யாதே	(எனக்கு) என்ன சேர்ந்தாலென்ன ?.

* * *—வல்வினைகள் இனிமேல் என்னை அடர்க்ககில்லா என்றார் கீழ்ப் பாட்டில். இனி அந்த வல்வினைகள் என்னை என்ன செய்தாலும் எனக்கு வருவதொரு கெடுதியில்லை யென்கிறாரிதில். எம்பெருமானே ஸகலவித பந்துவுமாவன் என்று உறுதியான அத்யவஸாயம் கொண்டேனானபின்பு இனி எனக்கு என்ன ஸம்பத்து நேர்ந்தாலும் சந்தோஷமுமில்லை, என்ன ஆபத்து நேர்ந்தாலும் ஸங்கடமுமில்லை யென்கிறார். இப்படிப்பட்ட அத்யவஸாயங்கொண்ட ப்ரஹ்லாதனுக்கு இரணியனும் அவனுடைய ஏவலாளர்களும் எத்தனையோ வகையான தீங்குகளை யிழைத்தார்களெனினும் அவன்திறத்து ஒன்றும் பயன்படவில்லையே; பாம்புகளை விட்டுக் கடிக்க வைத்தார்கள் ; தீயை வளர்த்து அதிலே தள்ளினார்கள் ; மலைகளில் நின்றும் தலைகீழாக உருட்டினார்கள் ; சிங்கம் புலி யானை முதலிய கொடிய விலங்குகளைக் கொண்டு அச்சமுறுத்தினார்கள் ; இன்னமும் எத்தனையோ செய்தார்கள். ப்ரஹ்லாதாழ்வான் ஒன்றையேனும் லக்ஷியம் பண்ணினானென்பதுண்டோ? பல பல பட்டுப் பீதாம்பரங்களையும் அணிகலன்களையும் தந்து மகிழ்வித்து ஸ்வாதீநப் படுத்திக்கொள்ளவும் பார்த்தார்கள் ; அவற்றையுந்தான் லக்ஷியம் பண்ணினானோ? பகவத் குணங்களில் ஈடுபட்டவர்களுக்கு அதற்குப் புறம்பான லாபநஷ்டங்களொன்றும் கணிசிக்கப்பட மாட்டாவாகையாலே ஆழ்வாரும் “யாதாகில் யாதேயினி” என்று மிடுக்குத் தோற்ற மொழிகின்றார்.

அடர்பொன் முடியானை = இங்குத் திருவபிஷேகத்தை மாத்திரம் சொல்லி யிருப்பது “செங்கமலக் கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்திகழாழிகளுங் கிண்கிணியும், அரையில் தங்கிய பொன் வடமும் தாளநன் மாதுளையின் பூவொடு பொன் மணியும் மோதிரமும் கிறியும், மங்கல வைம்படையுந் தோள்வளையும் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும்” என்கிற மற்றுமுள்ள திவ்ய பூஷணங்கள் பலவற்றுக்கும் உபலக்ஷணமென்க. “பலபலவே யாபரணம் பேரும் பலபலவே” என்றபடி எம்பெருமானுடைய விலக்ஷணமான திருவாபரணங்களையும் திருநாமங்களையும் திவ்யாயுதங்களையும் சிந்திக்கப் புகுந்தால் இதர விஷயங்களைப் பற்றின லாப நஷ்டங்கள் ஒரு பொருளாக நெஞ்சிற்படுமோ என்பது உள்ளுறை.

சுடர்கொள்சுடராழி = உலகில் சந்திரன் ஸூர்யன் நக்ஷத்திரங்கள் அக்நிமுதலிய சுடர்ப் பொருள்கள் எத்தனையுண்டோ அவை யெல்லாவற்றினுடையவும் தேஜஸ்ஸைக் கவர்கின்ற ஆழி ; திருவாழியின் முன்னே அவை யெல்லாம் இருள் மூடினாற் போலே கிடக்குமென்றபடி. “பாநோ! பா நோ த்வதீயா ஸ்புரதி” என்ற (13) ஸுதர்சநசதக ச்லோகத்தில் இது விரித்துரைக்கப்பட்டது.

மாதாபிதுவாக = “மாதா பிதாவாக” என்றிருக்கவேணுமென்று சிலர் பாடத்தைத் திருத்துவார்கள் ; அதுவேண்டா ; வடமொழியில் பிதா என்னும் பதத்தின் பகுதியான பித்ரு என்பதை இங்கே பிது எனப் பிரயோகித்துள்ளார். 70

2655 இனிநின்று நின்பெருமை யானுரைப்ப தென்னே ?
தனிநின்ற சார்விலா மூர்த்தி ! *— பனிநீர்
அகத்துலவு செஞ்சடையா னாகத்தான் * நான்கு
முகத்தானின் னுந்தி முதல். 71

தனி நின்ற	தானொருவனுமே காரணமாய் நின்றவனும்
சார்வு இலா	வேறொருவரைத் தனக்கு ஆதாரமாக உடைத்தாகாதவனுமான
மூர்த்தி	எம்பெருமானே !,
அகத்து பனி நீர் உலவு செம் சடையான்	உள்ளே குளிர்ந்த கங்கைநீர் தங்குகின்ற சிவந்த ஜடையை யுடையனான சிவன்
ஆகத்தான்	உன் திருமேனியை ஆச்ரயித்து வாழ்பவன் ;

நான்கு முகத்தான்	நான்முகக் கடவுள்
நின் உந்தி முதல்	உனது திருநாபிக் கமலத்தை மூல காரணமாக வுடையவன் ;
இனி	இப்படியான பின்பு
நின் பெருமை	உனது மேன்மையை
யான் நின்று உரைப்பது என்னே	நான் முயன்று சொல்வது எங்ஙனே ?

(என்றால் சொல்லப்போகா தென்கை.)

* * *—எம்பெருமானையே எல்லாவுறவுமாகப் பற்றினேனென்றார் கீழ்ப் பாட்டில். இங்ஙனே பேசின ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! என்னையே மாதா பிதுவாகக் கொண்டதாகச் சொன்னீரே, என்னுடைய படிக ளெல்லாம் உமக்கு நன்றாய்த் தெரியுமோ? அறிவீராகில் சிறிது சொல்லிக்காணும்' என்ன; பிரமனும் சிவனுங்கூட உன்னைப் பற்றி ஸத்தை பெற்றார்களென்னுநிற்க உன் பெருமை என்னாலே பேச முடியுமோ வென்கிறார்.

தனிநின்ற சார்விலாமூர்த்தி=காரியப் பொருள்கள் யாவும் அழிந்த காலத்து "ஏகோஹவை நாராயண ஆஸீத்" [நாராயணனொருவனே இருந்தான்] என்று உபநிஷத்தில் சொன்னபடியே தனியனாக இருந்தவனே! என்கிறது—தனிநின்ற என்பதனால் அக்காலத்தில் கீழ்ப்பட்ட தெய்வங்களெல்லாம் மேற்பட்ட தெய்வங் களைச் சரணம்புக, எல்லாருமாக ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைச் சரணம் புகுந்து ஸத்தை பெற்றார்களென்று சொல்லிற்றே யொழிய, நாராயணன் மற்றொருவனைப் பற்றி ஸத்தை பெற்றதாகச் சொல்லாமையாலே சார்விலா மூர்த்தி என்றார்; தான் தான் மற்றொரு தெய்வத்தைச் சாராதமூர்த்தி என்கை. மூர்த்தி=அண்மைவிளி; ஸ்வாமியே! என்று விளித்தவாறு.

[பனிநீர் இத்யாதி.] கங்கையைச் சடையிலேகொண்ட சிவன் உன்னுடைய திருமேனியில் ஏகதேசத்தை இருப்பிடமாகக்கொண்டு ஸத்தை பெற்றான்; நான் முகனே உனது நாபிக்கமலத்தில்நின்றும் பிறந்து ஜகத் ஸ்ருஷ்டி கர்த்தா வானான்; இப்படி யிருக்க, உனது பெருமையைப் புல்லியனான நான் பேசுவதென்று ஒன்றுண்டோ?—என்றாராயிற்று.

ஆகத்தான்=ஆகமாவது சரீரம். ஒரு ஸமய விசேஷத்திலே சிவன் முதலான தெய்வங்களுக்கு, எம்பெருமான் தனது திருமேனியின் ஒருபுறத்திலே இடம் கொடுத்து உதவினான் என்கிற இதைப் பெரிய குணமாகக்கொண்டு ஆழ்வார்கள் இதனை அடிக்கடி அருளிச் செய்வர்கள்; "ஏறாளு மிறையோனும் திசைமுகனும் திருமகளும், கூறாளுந் தனியுடம்பன்" என்பர் திருவாய்மொழியிலும்; "அக்கும் புலியினதளுமுடையாரவரொருவர் பக்கம் நிற்க நின்ற பண்பர்" என்றார் பெரிய திருமொழியிலே திருமங்கையாழ்வார்.

நின்னுந்திமுதல்=அன்மொழித்தொகை; [பஹுவ்ரீஹிஸமாஸமடங்கியது.] நின் உந்தியை முதற் காரணமாக வுடையவன் என்று பொருள்படுதலால். நின் உந்தி யிலே பிறந்து உலகுக்கெல்லாம் முதற் காரணமாயிருப்பவன் என்றுரைத்தலுமாம்.

2656 முதலாந் திருவுருவம் மூன்றென்பர் *ஒன்றே
முதலாகும் மூன்றுக்கு மென்பர் *—முதல்வா !
நிகரிலகு காருருவா ! நின்னகத்த தன்றே ?*
புகரிலகு தாமரையின் பூ. 72

முதல்வா	ஸகலகாரணபூதனான பெருமானே !,
மூன்று திரு உருவம் முதல் ஆம் என்பர்	'பிரமன் விஷ்ணு சிவன் என்கிற மூன்று திவ்ய மூர்த்திகள் தலைவர்' என்று சிலர் சொல்லுவர்கள் ;
மூன்றுக்கும் ஒன்றே முதல் ஆகும் என்பர்	'மேற்சொன்ன மூன்று மூர்த்திகளுக்கும் வேறொரு தத்துவம் தலையாயிருக்கும்' என்று மற்றுஞ் சிலர் சொல்லுவர்கள் ;
நிகர் இலகு கார் உருவா	மேகமென்று சொல்லலாம்படி அதனோடொத்து விளங்காநின்ற திருமேனியை யுடையவனே !
புகர் இலகு தாமரையின் பூ	தேஜஸ்ஸு மிக்கு விளங்குகின்ற தாமரைப் பூவானது
நின் அகத்தது அன்றே	உன்னிடத்திலுள்ள தன்றோ?. [திருநாபிக்கமலமே உனது பரத்வத்தை வெளியிடவல்லது என்றவாறு.]

* * *—கீழ்ப்பாட்டில் பிரமனுடையவும் சிவனுடையவும் பேச்சு வந்தமையாலே பரத்வ விஷயமாகப் பிறர் சொல்லுகிற வாதங்கள் நினைவுக்கு வந்து, அவற்றைத்தள்ளி ஸித்தாந்தம் அருளிச் செய்கிறாரிதில்.

[முதலாந்திருவுருவம் மூன்றென்பர்.] ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் என்கிற மூன்று மூர்த்திகளும் துல்யமாகவே உலகுக்குத் தலைவர்கள் என்று கொள்ளுகிற சிலருடைய கொள்கையை இதனால் அநுவதித்தபடி. அரி அயன் அரன் என்கிற மும்மூர்த்திகளும் பரஸ்பரம் ஏற்றத்தாழ்வின்றியே ஸமானராயிருப்பரென்று சிலர் சொல்லுவர்கள்—என்றவிதனால் அது ஸ்வஸித்தாந்தமல்ல, பரபக்ஷம் என்பது விளங்கும்.

[ஒன்றே முதலாகும் மூன்றுக்குமென்பர்.] உத்தீர்ணவாதிகளென்று சிலருண்டு; அவர்களுடைய கொள்கை இது; ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களிற்காட்டில் வேறுபட்ட நான்காவது தத்துவம் ஒன்றுண்டு; அதுவே இம்மூன்று தத்துவங்கட்கும் நிர்வாஹகமானது என்பராமவர்கள்; அவர்கள் துரீய ப்ரஹ்மவாதிகளெனப் படுவார்கள். அவர்களுடைய பக்ஷமும் ஸ்வஸித்தாந்தமல்லவென்று இதனால் காட்டப்பட்டது. ஸ்ரீமந்நாராயணனொருவனே பரதத்துவமென்பது தோன்ற முதல்வா! என விளிக்கின்றார் காண்மின். ஸேவிக்கும்போதே ஸகலதாபங்களும் ஆறும்படியான திருமேனிகொண்ட தெய்வமே பரதத்துவம் என்பது விளங்க நிகரிலகு காருருவா! என்றும் விளிக்கின்றார். "ஒருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ ஒன்றுமாகடலுருவம் ஒத்துநின்ற, மூவுருவுங் கண்டபோது ஒன்று ஆஞ்சோதி முகிலுருவ மெம்மடிகளுருவந்தானே" என்று திருமங்கையாழ்வாரும் திருநெடுந்தாண்டகத்தில் பரதத்துவ நிர்ணயம் பண்ணும் பாசுரத்தில் அருளிச் செய்தமை காண்க.

ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவமென்பது நன்கு பொருந்துமாறு விஷயம் காட்டுகிறார் நின்னகத்ததன்றே புகரிலகு தாமரையின்பூ என்பதனால். சிவன் பிரமனிடத்துத் தோன்றியவனென்றும்; அந்தப் பிரமன் உனது திருநாபிக் கமலத்தில் தோன்றியவனென்றும் சாஸ்த்ரங்களிற் சொல்லியிருக்கும்போது அந்தத் தாமரையைத் திருநாபியிலேயுடைய நீயேயன்றோ பரதத்துவமாக இருக்கத் தகுதி யுண்டென்று காட்டியவாறு.

இந்தப் பாசுரத்தையே பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ—பூர்வசதகத்தில் பெரியவொரு ச்லோகமாகப் பண்ணியுரைத்தார்; அதாவது—த்ரயோ தேவாஸ்துல்யா:,

த்ரிதயமிதமத்வைதம், அதிகம் த்ரிகாதஸ்மாத் தத்வம் பரமிதி விதர்க்காந் விகடயந்—விபோர் நாபீபத்மோ விதிசிவநிதாநம் பகவத: ததந்யத் ப்ரூபங்கீபரவதிதி ஸித்தாந்தயதி ந:'' என்பதாம். இந்த ச்லோகத்தின் பொருளையும் சிறிது விவரிப்போம்' [த்ரயோ தேவாஸ் துல்யா:] அரி அயன் அரனென்னும் மூன்று தெய்வங்களுக்கும் ஸாம்யஞ்சொல்லுவர் சிலர். [த்ரிதயமிதம் அத்வைதம்.] இம்மூன்று தெய்வங்களும் வெவ்வேறல்ல; ஒன்றேயென்பர் சிலர். கீழே சொன்னது த்ரிமூர்த்திஸாம்யவாதம்; இது ஐக்யவாதம். வஸ்துக்களின் பேதத்தை ஒப்புக்கொண்டு அவற்றுக்கு ஏற்றத் தாழ்வுகளில்லாமை சொல்லுவது ஸாம்யவாதமெனப்படும். வஸ்துக்களுக்கு பேதத்தையே ஒப்புக்கொள்ளாமை ஐக்யவாதமெனப்படும். இந்தஐக்யவாதம் இப்பாட்டில் அநுவதிக்கப்படவில்லையாகிலும் அதனை நிரஸிப்பதும் ஆழ்வார்க்குத் திருவுள்ளமே யென்றுணர்ந்த பட்டர் அதனையும் எடுத்துக் கூறினரென்க. [அதிகம் த்ரிகாதஸ்மாத் தத்வம் பரம்.] இம்மூன்று தெய்வங்களிற்காட்டிலும் மேற்பட்டதான துரீயப்ரஹ்மமே பரதத்துவமென்று உத்தீர்ண வாதம் பண்ணுவர் சிலர். [இதிவிதர்க்காந் விகடயந் விபோ: நாபீபத்ம: இத்யாதி] இப்படிப்பட்ட சங்கைகளை யெல்லாம் அடியறுக்கின்ற திருநாபிக் கமலமானது ப்ரஹ்மருத்ரர்களுக்கும் மூதற்கிழங்காயிருந்துகொண்டு 'உலகமெல்லாம் எம்பெருமானுடைய புருவ நெறிப்புக்குப் பரவசப்பட்டது' என்கிற ஸித்தாந்தத்தை நமக்கு நன்கு தெரிவிக்கின்றது—என்றாராயிற்று. ஆகையாலே இப்பாசுரத்தின் மொழிபெயர்ப்பாயிருக்கும் இந்த ச்லோகமென்று அநுஸந்திக்கக்கடவது. 72

2657 பூவையுங் காயாவும் நீலமும் பூக்கின்ற *
காவிமல ரென்றுங் காண்டோறும்—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் * அவ்வவை
யெல்லாம் பிரானுருவே யென்று. **73**

பூவையும்	பூவைப் பூவையும்	பிரான்	எம்பெருமானுடைய
காயாவும்	காயாம் பூவையும்	உருவே என்று	திருவுருவமே என்று கொண்டு
நீலமும்	கரு நெய்தல் பூவையும்		
பூக்கின்ற	புஷ்பிக்கின்ற	பாவியேன்	அடியேனுடைய
காவி மலர்	செங்கழுநீர்ப் பூவையும்		
என்றும் காண் தோறும்	பார்க்கிற போதெல்லாம்	மெல் ஆவி	மிருதுவான உயிரும்
		மெய்	சரீரமும்
அவ் அவை எல்லாம்	அந்தந்த மலர்களெல்லாம்	மிகவே பூரிக்கும்	மிகவும் பருத்து வளர்கின்றது.

* * *—கீழ்ப்பாட்டில் "நிகரிலகு காருருவா" என்று விலக்ஷணமான திவ்ய மங்கள விக்ரஹத்தை அநுஸந்திக்கவே, போலிகண்டு மேல்விழும்படியான அளவிறந்த அன்பு அத்திருமேனியிலே தமக்கு விளைந்தபடியை அருளிச் செய்கிறாரில். முதலடியின் முடிவிலுள்ள 'பூக்கின்ற' என்ற விசேஷணம் [அடைமொழி] பூவை காயா நீலம் எல்லாவற்றிலும் அந்வயிக்கும். அப்போதுதான் மலர்கின்ற பூவைப்பூ, காயாம்பூ, நீலோற்பலம், கழுநீர்ப்பூ என்னுமிவற்றை நான் எப்போதெப்போது காண்கிறேனோ அவ்வப்போதிலெல்லாம் எம்பெருமானுருவைக் கண்டதாகவே நினைத்து ஆவியும் உடலும் பூரிக்கப் பெறுகிறேன் என்றாராயிற்று.

பூவை யென்பது காயாம்பூவில் ஒரு அவாந்தரபேதம்; "மல்லிகை வனமாலை மௌவல்மாலை" (பெரியாழ்வார் திருமொழி) என்றாற்போல. "காண்தோறும்" என்னு மளவே போதுமாயிருக்க, என்றும் காண்தோறும்" என்றதென்னென்னில்; போலிகண்டு பூரித்தலென்கிற இந்த ப்ரமம் ஒருகாலிருகாலன்று; ஒருதடவை அவற்றைக் கண்டு பூரித்த பின்பு 'ஓ! நாம் ப்ரமித்தோம்; இவை வெறும்

புஷ்பங்களே யொழிய எம்பெருமானது திருவுருவமல்ல' என்று தெளிந்துகொண்டாலும், அடுத்த க்ஷணத்தில் இது மறந்துபோய், பழைய ப்ரமமே அநுவர்த்திக்கும்; இப்படியே ப்ரமிப்பதும் தெளிவதும், ப்ரமிப்பதும் தெளிவதுமாய் நித்தியம் செல்லுமென்பதும் தோன்றும்.

"பாவியேன் மெல்லாவி" என்றவிடத்து, "பாவியேன்" என்றது விபரீதலக்ஷணையால் 'பாக்யசாலியான என்னுடைய' என்று பொருள்படவுங் கூடும். போலியான பொருள்களைக் கண்ட மாத்திரத்திலே ஆவியுமுடலும் பூரிக்குபடியான பாக்கியம் எனக்கேயிறே யுள்ளது என்றவாறும்.

"மெல்லாவியும்மெய்யும்" என்னவேண்டுமிடத்து "மெல்லாவிமெய்" என்றது—உம்மைத்தொகை. பூரிக்கும்=வடமொழித் தாதுவடியாகப் பிறந்த வினைமுற்று. 73

2658 என்று மொருநா ளொழியாமை யானிரந்தால் *
ஒன்று மிரங்கா ருருக்காட்டார் *—குன்று
குடையாக ஆகாத்த கோவலனார் * நெஞ்சே!
புடைதான் பெரிதே புவி. 74

ஒரு நாள் ஒழியாமை	ஒரு நாளும் தப்பாமல்	ஒன்றும் இரங்கார்	சிறிதும் தயவு செய்கிறாரில்லை;
என்றும்	எந்நாளும்	உரு காட்டார்	தன் திருமேனியைக் காட்டுகிறாரில்லை;
யான் இரந்தால்	அடியேன் பிரார்த்தித்தால்,	நெஞ்சே	ஓ மனமே!
குன்று குடை ஆக ஆ காத்த கோவலனார்	(முன்பு) கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்திப் பசுக்களை ரக்ஷித்த கோபால கிருஷ்ண பகவான்	புவி	நாமிருக்கும் இடம்
		பெரிதே புடை தான்	(அவருடைய அருள்வெள்ளம் ஏறிப்பாய முடியாத) மிகப் பெரிய மேட்டு நிலமோ?

* * *—கீழ்ப்பாட்டிற் சொன்னபடி போலிகண்டு மேல்விழும்படியான காதல் கிளர்ந்திருக்கச் செய்தேயும் அப்பெருமானைக் கண்டு அநுபவிக்கப் பெறாமையாலே வருந்தி, 'பேரருளாளனான அப்பெருமான் திருமேனியை நமக்குக் காட்டுகின்றானில்லையே!' என்று தளர்ச்சி தோற்றப் பேசுகிறார்.

நான் ஒழிவில் காலமெல்லாம் அல்லும் பகலும் கதறிக்கதறி வேண்டிக்கொண்டாலும் அப்பெருமான் சிறிதும் நம்மேல் இரக்கம் காட்டுகின்றாரில்லையே!; அவர்க்கு இயற்கையாக அருள் கிடையாதென்றுதான் நாம் நினைக்க முடியுமோ? இந்திரன் பசிக்கோபத்தினால் ஏழு நாள் விடாமழை பெய்வித்த காலத்திலே கோவர்த்தனத்தைக் குடையாகவேந்திநின்று கோக்களையும் கோவலரையும் பரிந்து காத்தருளின பரமதயாளுவன்றோ அவர்; அப்படிப்பட்ட பேரருளாளன் நம்மேல் அருள் செய்கின்றிலனென்றால் இஃது என்ன கொடுமை!.

நெஞ்சே! புடைதான் பெரிதே புவி = இந்த வாக்கியத்தின் ஆழ்பொருளைக் கண்டறிந்து பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்யுமழகு பாரீர்;—"அவர்க்கு நீர்மையில்லை யென்னப்போகாதிறே; அவர்நீர்மை ஏறிப்பாயாததோரிடம் தேடி எங்கே கிடந்தோம்!" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி. மேடான இடத்தைப் புடை யென்று சொல்வதுண்டாகையாலே, புவி புடை பெரிதே = நாமிருக்குமிடம் (அவருடைய கருணைப் பெருவெள்ளம் ஏறிப்பாய முடியாத) மேட்டு நிலமோ? என்றதாயிற்று. இதற்கு மற்றொருபடியாகவும் பொருள் கொள்ளலாம்; "புடைபெரிது" என்றால் 'விசாலமானது' என்று ப்ரஸித்தமாகச் சொல்லுவதுண்டாகையாலே அப்பொருளையே இங்குங்கொண்டு, 'இந்தப் பூமி விசாலமன்றோ?" என்றதன் கருத்

தாவது—விசாலமான இந்த நிலவுலகத்திலே எம்பெருமானுடைய அருள்வெள்ளம் பாயவொண்ணாத எந்த மூலையிலே கிடந்தோம்! என்றதாகலாம். முந்தின பொருளே சுவையுடைத்து. 74

2659 புவியு மிருவிசும்பும் நின்னகத்த * நீயென்
செவியின் வழிபுகுந்தென் னுள்ளாய்—அவிவின்றி *
யான்பெரியன் நீபெரியை யென்பதனை யாரறிவார்? *
ஊன்பருகு நேமியாய்! உள்ளு. 75

ஊன் பருகு நேமியாய்	(அஸுர ராக்ஷஸர்களின் சரீரத்திலுள்ள) மாம்ஸங்களைக் கவர்கின்ற திருவாழியாழ்வானைக் கையிலேந்தியுள்ள பெருமானே!	என் செவியின் வழி புகுந்து	என் காது வழியே புகுந்து
		அவிவு இன்றி என் உள்ளாய்	ஒருநாளும் விட்டு நீங்காமல் என் பக்கல் இரா நின்றாய்; (ஆனபின்பு)
புவியும்	இவ்வுலகமும்	யான் பெரியன்	நானே பெரியவன்;
இரு விசும்பும்	விசாலமான மேலுலகமும்	நீ பெரியை என்பதனை யார் அறிவார்	நீ பெரியவனென்று அறிவாருண்டோ?
நின் அகத்த	உன்னிடத்தே யுள்ளன;		
நீ	உபய விபூதியையும் உள்ளே அடக்கிக் கொண்டிருக்கின்ற நீ	உள்ளு	இதை நீயே ஆலோசித்துப் பார்.

* * *—கீழ்ப்பாட்டில் "ஒன்றுமிரங்காருருக்காட்டார்" என்று வெறுத்துரைத்த ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் "நீர் ஏனிப்படி வருந்துகின்றீர்; உமக்கு நாம் அருளாதிருக்கிறோமோ? உருக்காட்டாதிருக்கிறோமோ? 'கல்லும் கனைகடலும் வைகுந்தவானாடும் புல்லென்றொழிந்தனகொல் ஏபாவம் - வெல்ல, நெடியான் நிறங்கரியா னுள்புகுந்து நீங்கான், அடியேன துள்ளத்தகம்' (68) என்று உம்வாயாலே பேசினதும் மறந்தொழிந்ததோ? உகந்தருளின விடங்களெல்லாவற்றையும் விட்டிட்டு உம்முடைய நெஞ்சிலேயன்றோ நாம் நித்யஸந்நிதி பண்ணியிருக்கிறது" என்றருளிச்செய்ய, ஆழ்வார் அது கேட்டுத் தேறி ஆநந்தத்துக்குப் போக்குவீடாக அப்பெருமானோடே போராடுகிறாரிதில்.

எம்பெருமானே! கீழுலகங்களும் மேலுலகங்களுமாகியவெல்லாம் உன்னிடத்தேயுள்ளன; அப்படி எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டிராநின்ற நீ என் காது வழியாக என்னுள்ளே புகுந்து பேராமலிருக்கின்றாய்; ஆனாலும் 'ப்ரஹ்மம்' என்று உனக்குப் பேராயிருக்கிறது. எது எல்லாவற்றிற் காட்டிலும் பெரிதான வஸ்துவோ அது ப்ரஹ்மமென்னத்தகும்; விபூதிகளை மாத்திரம் வஹித்துக் கொண்டிருக்கிற நீ பெரியவனா? அல்லது, விபூதிகளை வஹிக்கிற வுன்னையுங் கூடச் சேர்த்து வஹிக்கிற நான் பெரியவனா? என்று ஆராயவேண்டாவோ? இதனை நன்கு ஆராய்ந்தால் நானே மிகப் பெரியவனாவேன்; ப்ரஹ்ம மென்னும் பெயர் பெறுதற்கு நானே தகுதியுடையேனாவேன்; என்னுள்ளே ஒரு மூலையிலே அடங்கிக்கிடக்கவல்ல உன்னைப் பெரியவனென்று சொல்ல வொண்ணுமோ? இதனை நீயே ஆராய்ந்து பார்—என்கிறார்.

"யான் பெரியன்" என்று தனி வாக்கியமாகவும் "நீ பெரியை யென்பதனை யாரறிவார்" என்று தனிவாக்கியமாகவும் கொண்டு உரைக்கப்பட்டது. இங்ஙனன்றியே இரண்டையும் சேர்த்து ஏக வாக்கியமாகவே உரைத்தலுமொக்கும். 'நான் பெரியவனோ நீ பெரியவனோ, இதைப் பிறரால் அறியப்போகாது; நீ தான் ஆராய்ந்து அறியவேணும்' என்கை. 75

2660 உள்ளிலு முள்ளந் தடிக்கும் * வினைப்படலம்
விள்ள விழித்துன்னை மெய்யுற்றால்*...உள்ள
உலகளவும் யானு முளனாவ னென்கொலோ ? *
உலகளந்த மூர்த்தி ! யுரை. 76

உலகு அளந்த மூர்த்தி	த்ரிவிக்ரம பகவானே !,
உன்னை உள்ளிலும்	உன்னை (நெஞ்சில்) அநுஸந்தித்த மாத்திரத்திலும்
உள்ளம்	எனது நெஞ்சானது
தடிக்கும்	(ஸந்தோஷத்தினால்) பூரிக்கின்றது ;
வினை படலம் விள்ள	பாவங்களின் கூட்டங்கள் என்னைவிட்டு ஒழிந்து போம்படி
விழித்து	உன்னாலே நான் கடாக்ஷிக்கப் பெற்று
உன்னை மெய் உற்றால்	(பரமபதத்திலே வந்து உன்னை உள்ளபடியே அடைந்து விட்டேனாகில்
உள்ள உலகு அளவும்	நீ வியாபித்திருக்கிற உலகமெங்கும்
யானும் உளன் ஆவன்	நானும் வியாபித்தவனாவேன்;
என் கொலோ	நான் சொல்லுகிற விது ஸம்பாவிதந் தானோ ?
உரை	நீயே சொல்லு.

* * *—கீழ்ப்பாட்டிற் கூறியபடி எம்பெருமானை நெஞ்சால் அநுபவிக்ககிற வளவிலேயே நெஞ்சு பூரித்துத் தடிக்கிறபடியைப் பார்த்தால், மெய்யே பரமபதத்திற்சென்று பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் பண்ணப் பெறில் உலகம் முழுவதையும் வியாபிக்கவல்லேனாம்படி குறைவின்றித் தடித்துவிடுவேன்போலு மென்கிறார்.

உள்ளிலும் உள்ளம் தடிக்கும் = பகவத் விஷயாநுஸந்தாநத்தினால் தமக்கு உண்டாகிற ஆநந்தமிகுதியை அறிவிப்பதான அதிசயோக்தியாமிது. உள்ளம் தடித்தலாவது நெஞ்சு ஸ்தூலிப்பதாம். உருவற்ற நெஞ்சுக்கு ஸ்தூலத்வம் அஸம்பாவிதமாயினும் ஸம்பாவிதம்போலப் பேசுவதன் கருத்து ஆநந்த மிகுதியைக் காட்டுவதேயாம். இவ் விருள்தரு மாஞாலத்தில் ஒரு மூலையிலே திருப்புளியின் பொந்திலேயிருந்துகொண்டு உன்னை நெஞ்சால் நினைக்கும் மாத்திரத்திலேயே நெஞ்சு இப்படி பூரிக்குமேயானால், என்னுடைய கரும பாசங்களெல்லாம் அடியோடே தொலைந்தொழியும்படி பரிபூர்ண கடாக்ஷம் செய்தருளப்பெற்று * நலமந்த மில்லதோர் நாட்டிலே வந்து நித்யாநுபவம் பண்ணப் பெற்றால் பின்னைத் தடிப்பதற்கு இடம் போராதுபோலும். ஸ்வரூபத்தாலே உலகத்தையெல்லாம் நீ எப்படி வியாபித்து நிற்கிறாயோ அப்படி நானும் ஸ்வபாவத்தாலே உலகமெங்கும் வியாபித்து நிற்பேன் போலும் என்கிறார். உலகத்தையெல்லாம் பூரிக்கவல்லதாம்படி உடல் தடிக்குமளவு ஆநந்தத்தை அடைந்திடுவேனன்றோ என்றவாறு. 76

2661 உரைக்கிலோர் சுற்றத்தா ருற்றாரென் றாரே ? *
இரைக்குங் கடற்கிடந்த வெந்தாய் ! *—உரைப்பெல்லாம்
நின்னன்றி மற்றிலேன் கண்டாய் * எனதுயிர்க்கோர்
சொன்னன்றி யாகுந் துணை. 77

இரைக்கும் கடல்	கோஷிக்கின்ற திருப்பாற்கடலிலே
கிடந்த	பள்ளிகொண்டிரா நின்ற
எந்தாய்	ஸ்வாமீ !
உரைக்கில்	ஆராய்ந்து சொல்லில்,
ஓர் சுற்றத்தார் உற்றார் என்று ஆரே	(நீர் தவிர) தாயாதிகளென்றும் பந்துக்களென்றும் சொல்லக்கூடியவர்கள் எனக்குஆரேனுமுண்டோ?
எனது உயிர்க்கு	என் ஆத்மாவுக்கு

ஓர் சொல்	'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்கிற சரம ச்லோகமாகிற ஒரு சொல்லாலே
நன்றி ஆகும் துணை	உதவிசெய்யும் துணையும்,
உரைப்பு எல்லாம்	மற்றும் சொல்லப்படுகிற எல்லா வகையான துணையும்
நின் அன்றி மற்று இலேன் கண்டாய்	உன்னைத் தவிர வேறொருவரையும் உடையேனல்லேன்காண்.

* * *—[உரைக்கிலோர் சுற்றத்தார்.] எம்பெருமான்திருநாமம் செவியில் விழுந்த மாத்திரத்திலே நெஞ்சு குளிரும்படியாக இப்படி அவன் பண்ணின பேருதவியைச் சிந்தித்து "பிரானே! நீ தவிர வேறு யாரும் எனக்கு உறவினரல்லர்; ஸகலவித பந்துவும் எனக்கு நீயேகாண்" என்கிறார்.

"ஓர் சுற்றத்தாருற்றாரென்றில்லை" என்று நிஷ்கர்ஷித்தே சொல்லலாமாயிருக்க அங்ஙனம் சொல்லாது "உற்றாரென்று ஆரே?" என்று எம்பெருமானைக் கேள்வி கேட்பதன் கருத்து யாதெனில்; நாம் எம்பெருமானை இப்படி கேள்வி கேட்டால் அதற்கு அவன் சோதிவாய் திறந்து "வேறுயாருமில்லை; நானேயுளேன்" என்று உத்தர மருளிச்செய்திடுவான் என்ற கருத்துப்போலும். இரைக்கும்கடல்=எம்பெருமானுடைய நித்ய ஸந்நிதாநத்தாலே மகிழ்ந்து கொந்தளிக்கின்ற கடல் என்றபடி. எந்தாய்—'எந்தை' என்பதன் விளி.

"ஓர் சொல் நன்றியாகுந்துணை=அர்ஜுநனை வியாஜமாகக்கொண்டு "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ-அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:" என்று பிரதிஜ்ஞை பண்ணிச்சொன்ன ஒரு சொல்லாலே எமக்கு நீ துணையாவதுபோல வேறு ஆரேனும் ஆவாருண்டோ என்கை. ஸ்ரீ விபீஷணனை வியாஜமாகக் கொண்டு "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே-அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம." என்று சொன்ன ஒரு சொல்லையும் இங்கு அர்த்தமாகக்கொள்ளலாம். இவ்வகையாக சாஸ்த்ரங்களில் எம்பெருமான் அடியார்களை நோக்கிப் பிரதிஜ்ஞை பண்ணி எந்தெந்தத் துணையாகத் தான் ஆவதாக அருளிச் செய்திருக்கிறானோ அவற்றை யெல்லாம் கருதி "உரைப்பெல்லாம்" என்கிறார். 77

2662. துணைநாள் பெருங்கிளையுந் தொல்குலமும் * சுற்றத்
திணைநாளு மின்புடைத்தா மேலும் *—கணைநாணில்
ஓவாத் தொழிற்சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே!*
ஓவாத வூணாக வுண். 78

துணை	ஸ்நேஹிதர்களும்
நாள்	ஆயுஸ்ஸும்
பெரு கிளையும்	பிள்ளைகள் பேரன்களென்கிற பெரிய ஸந்தானமும்
தொல் குலமும்	பரம்பரையாக வருகிற நற்குலமும்
சுற்றத்து இணை	பந்துக்களோடே சேர்ந்திருப்பதும்
(ஆகிய இவை யெல்லாம்)	
நாளும்	நாள்தோறும்
இன்பு உடைத்து ஆம் ஏலும்	(துக்கத்தை யுண்டு பண்ணாமல்) ஸந்தோஷத்தை யுண்டுபண்ணுவன வென்றே வைத்துக்கொண்டாலும்,
நல் நெஞ்சே	நல்ல மனமே
(நீ அவற்றில் ஆசை கொள்ளாமல்)	
கணை நாணில் ஓவா தொழில் சார்ங்கன்	அம்புகள் நாணில்நின்றும் ஒருகாலும் மாறாதபடி வீரத்தொழில் செய்து கொண்டேயிருக்கிற வில்லையுடையனான இராமபிரானுடைய
தொல் சீரை	இயற்கையான நற்குணங்களையே
ஓவாத ஊண் ஆக உண்	நித்யபோக்யமாக அநுபவிக்கக் கடவாய்.

***—ஸாமாந்யமாக உலகத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான பலனை விரும்புவர்; நல்ல துணையோடு கூடியிருத்தல் நன்று என்று சிலர் நினைப்பர்; நாம் 'சிரஞ்ஜீவியாக வாழக்கடவோம்' என்று சிலர் காமுறுவர்; 'பிள்ளைகளும் பேரன்களுமாகப் பரந்த ஸந்ததிகளுடனே வாழப்பெறுவோம்' என்று சிலர் விரும்புவர்; 'நற்குலப் பிறவியே நச்சத்தகுந்தது' என்று சிலர் நச்சுவர்; 'பந்துக்களோடு கூடிவாழ்தல் சிறப்பு' என்று சிலர் கருதுவர்; ஆகவிப்படி அவரவர்கள் விரும்பும் புருஷார்த்தங்கள் இந்த ஸம்ஸாரநிலத்திலே அநர்த்தமாகப் பர்யவஸிக்குமே யன்றி இன்பமாகத் தலைக்கட்டாது; ஒருகால் இவையெல்லாம் இன்பமயமாகவே யிருந்தாலும் நெஞ்சே! நீ இந்த அற்ப பலன்களில் கால்தாழாது பகவத்குணநுபவமாகிற நல்ல காலக்ஷேபத்தையே மேற்கொள்ளக் கடவை என்று தம் திருவுள்ளத்திற்கு ஹிதமருளிச் செய்கிறார்.

[கணை நாணில் இத்யாதி.] ஆச்ரித விரோதிகளைக் கிழங்கறக் களைவதே காரியமாகக் கொண்ட இராமபிரான் ஒரு நொடிப்பொழுதும் வில்தொழிலை விட்டிருக்கமாட்டான். அப்படிப்பட்ட மஹா வீரனுடைய சரிதமே நித்ய போக்யமாகக்கடவது என்கை. ஸோத்ரைவஹந்த ஹநுமாந் பரமாம் விமுக்திம் புத்த்யாவதூய சரிதம் தவ ஸேவதேஸௌ" என்று அதிமாநுஷஸ்தவத்திலே ஆழ்வா னருளிச்செய்தபடி சிறிய திருவடி இன்றைக்கும் ஸ்ரீராம குணநுபவமே போதுபோக்காக இருப்பது போல் ஆழ்வார்தாமும் ஆசைப்படுகிறாராய்த்து.

ஓவாத—ஒரு க்ஷணகாலமும் விட்டு நீங்காத. ஊண்—உணவு. "பாதேயம் புண்டரீகாக்ஷநாமஸங்கீர்த்தநாம்ருதம்" இத்யாதிகளை நினைப்பது. 78

2663. உண்ணாட்டுத் தேசன்றே! யூழ்வினையை யஞ்சுமே?*
விண்ணாட்டை யொன்ருக மெச்சுமே? *—மண்ணாட்டில்
ஆராகி யெவ்விழிவிற் ருனாலும் * ஆழியங்கைப்
பேராயற் காளாம் பிறப்பு. 79

மண் நாட்டில் ஆர் ஆகி	இந்த மண்ணுலகத்திலே எப்பிறவியிலே பிறந்தவராயினும்	உள் நாடு தேசு அன்றே	பரமபதத்திலுள்ள தேஜஸ்ஸையுடையதன்றோ?
எவ் இழிவிற்று ஆனாலும்	எப்படிப்பட்ட இழி தொழில்களையுடையவர்களாயினும்,	ஊழ் வினையை அஞ்சுமே	அநாதியான பாவங்களைக் குறித்து அஞ்சவேணுமோ?
ஆழி அம் கை பேர் ஆயற்கு ஆள் ஆம் பிறப்பு	திருவாழியை அழகிய கையிலேயுடைய ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு அடிமைப் பட்டவர்களாகப் பிறக்கும் பிறவியானது	விண் நாட்டை	ஸ்வர்க்கலோகத்தை
		ஒன்று ஆக	ஒரு பொருளாக
		மெச்சுமே	விரும்பக்கூடுமோ?

***—எவ்வகையான இழிகுலத்திற் பிறந்தவர்களானாலும் எவ்வகையான கெட்ட நடத்தைகளை யுடையவர்களானாலும், எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருத்தலாகிற ஒரு குணம் உள்ளதாகில் அப்படிப்பட்டவர்களுடைய பிறப்பு நித்ய ஸூரிகளின் திருமேனிபோலே மிக்க தேஜஸ்ஸை யுடையதேயாம்; எப்படிப்பட்ட பாவங்களை அவர்கள் செய்திருந்தாலும் அவற்றுக்கு அஞ்சவேண்டியதில்லை; சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்களின் பிறவியிற்காட்டிலும் அவர்களுடைய பிறவி எவ்வளவோ சீர்மை பொருந்தியதாதலால் தேவயோனிப் பிறவியையும் இழிவாக நினைக்கவுரியது—என்று, பகவானுக்குத் தொண்டரா யிருப்பாருடைய ஜன்மமே சிறந்த ஜன்மமென்கிறார் இப்பாட்டில்.

ப்ராஹ்மண ஜாதியே சிறந்த தென்று பலர் ப்ரமித்திருப்ப துண்டாகை யாலே அந்த ப்ரமத்தைப் போக்கித் தொண்டக்குலமே சிறந்த குலமென்கிறது இப்பாட்டு. பிராமண ஜாதியிற் பிறந்துவைத்தும் எம்பெருமானுக்கு அடிமைப் படாவிடில் அக்குலம் சண்டாள குலத்தினும் கடை கெட்டதாம்; சண்டாள குலத் திற் பிறந்துவைத்தும்*வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கு ஆளென்று உள்கலந்தார்களாகில் அவர்களே விண்ணுளாரிலுஞ் சீரியராவர்; ஆகவே, ஜாதி அப்ரயோஜகம்; பகவத் சேஷத்வமே ப்ரயோஜகம் என்றதாயிற்று. இவ்வர்த்தம் ஸ்ரீவசநபூஷணத்திலும் ஆசார்யஹ்ருதயத்திலும் நன்கு விசதமாகும். "தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள்போலே ப்ரஹ்மஜந்மமும் இழுக்கென்பார்க்குப் பண்டைநாளில் பிறவி உண்ணாட்டுத்தேசிறே" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி இவ்விடத்தில் அநுஸந்திக்க வுரியது.

உண்ணாட்டுத்தேசு = எம்பெருமானைக் கண்ணெடுத்தும் பாராத பாவிகள் நிறைந்த இந்த லீலாவிபூதி புறநாடென்றும், பகவத் கைங்கர்ய ரஸிகர்கள் நெருங்கி அவனுக்கு அந்தரங்கமாயிருக்கிற நித்ய விபூதி உள்நாடென்றும் கொள்ளத்தகும். "உள்நாட்டுத்தேசு" என்றது—பரமபதத்தில் எம்பெருமானுடைய கைங்கரியத்திற்குத் தகுதியாகக் கொள்ளுகிற தேஹம்போலே சேஷவஸ்துவான ஆத்மாவுக்கு இழிபிறப்பும் தேஜஸ்கரம் என்றவாறு. "அணையவூரப்புனைய, அடியும் பொடியும் படப் பர்வத பவநங்களிலே ஏதேனுமாக ஜனிக்கப்பெறுகிற திர்யக் ஸ்தாவர ஜந்மங்களைப் பெருமக்களும் பெரியோரும் பரிக்ரஹித்து ப்ரார்த்திப்பர்கள்" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம்.

ஊழ்வினையை அஞ்சுமே = எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருக்கையாகிற ராஜகுல மாஹாத்மியத்தாலே எவ்வகைப்பட்ட பாவத்திற்கும் அஞ்சவேண்டியதில்லை என்றபடி.

விண்ணாட்டையொன்றாக மெச்சுமே? = இங்கு 'விண்ணாடு' என்று பிரமன் முதலிய தேவர்கள் வாழும் உலகத்தைச் சொல்லுகிறது. ப்ரஹ்மாதி தேவர்களின் பிறவியிற் காட்டிலும் பகவத் பக்தர்களின் பிறவி சீரியது என்றபடி. அன்றியே, எம்பெருமானுக்கு அடிமை செய்துகொண்டு வாழப்பெறில், ப்ரஹ்ம பட்டம் இந்திர பட்டம் முதலிய எப்படிப்பட்ட பதவிகளும் ஒரு பொருளாகவே நெஞ்சிற்படாது என்றபடியுமாம். பகவானுக்கு அடிமை செய்துகொண்டு இந்நிலத்திலே கிடந்தாலும் இதுவே பரமபதத்தினும் சிறந்ததாகையால் தேவலோகமும் நரகமாய்த் தோற்றுமென்கை. 79

2664 பிறப்பிறப்பு மூப்புப் பிணிதுறந்து * பின்னும்
இறக்கவு மின்புடைத்தா மேலும் *—மறப்பெல்லாம்
ஏதமே யென்றல்லா லெண்ணுவனே?—மண்ணளந்தான்
பாதமே யேத்தாப் பகல். 80

பிறப்பு	பிறவியையும்	மண் அளந்தான் பாதமே ஏத்தா பகல்	உலகளந்த பெருமானுடைய திருவடிகளை வாழ்த்தப் பெறாத காலங்களிலுண்டான
இறப்பு	மரணத்தையும்		
மூப்பு	கிழத்தனத்தையும்		
பிணி	வியாதிகளையும்		
துறந்து	ஒழித்து	மறப்பு எல்லாம்	மறப்புகள் எல்லாம்
பின்னும்	அவ்வளவோடுமல்லாமல்		
இறக்கவும்	மிகவும்		
இன்பு உடைத்து ஆம் ஏலும்	ஆநந்த முடையதான கைவல்ய மோக்ஷம் உண்டாவதானாலும்	ஏதமே என்று அல்லால் எண்ணுவனே	துன்பமென்றே எண்ணுவனேயொழிய வேறுவகையாக எண்ணுவனோ?

* * *—[பிறப்பிறப்பு.] ஸம்ஸார நிலத்தில் உண்டாகக் கூடிய எவ்வகைத் துன்பங்களும் தொலைந்து கைவல்ய மென்கிற ஆத்மாநுபவ மஹாநந்தம் கிடைப்பதானாலும் எம்பெருமானுடைய அநுபவமில்லாமல் அவனை மறந்தொழிந்து அநுபவிக்கும் அநுபவமெல்லாம் துக்கமயமேயாகும்—என்கிறாரிப்பாட்டில்.

மோக்ஷம் இருவகைப்படும்; எம்பெருமானை அநுபவிப்பது ஒரு மோக்ஷம்; ஸ்வாத்மாவையே அநுபவிப்பது மற்றொரு மோக்ஷம். இதுவே கைவல்யமோக்ஷமெனப்படும். பகவதநுபவ மோக்ஷமே ஸ்வரூபத்துக்குச் சேர்ந்ததென்றும் கைவல்யமோக்ஷம் ஹேயமென்றும் கைவல்ய நிலம் பறைச்சேரிபோலே இகழத்தக்க இடமென்றும் ஆரியர் கொள்வர். மறுபடியும் பிறப்பில்லாமை, பிணியில்லாமை, கிழத்தனமில்லாமை, இறப்பில்லாமை என்னுமிவை மேற்சொன்ன இருவகை மோக்ஷங்களைப் பெற்றவர்களுக்கும் பொதுவாயினும் கைவல்யமோக்ஷத்தில் பகவத் கைங்கரிய மில்லாமையாகிற பெரியதொரு குறை உண்டாகையாலே இக் கைவல்ய மோக்ஷம் ஹேயமா யொழிகின்றது; இவ்வர்த்தமே இப்பாட்டில் அருளிச் செய்யப் படுகின்றது.

"ஜராமரணமோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே" என்று பகவத் கீதையில் [7—29] சொல்லியிருப்பதை அடியொற்றி, "பிறப்பிறப்பு மூப்புப் பிணிதுறந்து" எனப் பட்டது. இறக்கவும்—மிகவும்; (அளவில்லாமல் என்கை) 80

2665 பகலிரா வென்பதுவும் பரவியாது * எம்மை
இகல்செய் திருபொழுது மாள்வர் *—தகவாத்
தொழும்பரிவர் சீர்க்குந் துணையிலரென் றோரார் *
செழும்பரவை மேயார் தெரிந்து. 81

செழு பரவை மேயார்	அழகிய திருப்பாற்கடலிலே பொருந்திக் கண் வளர்ந்தருளும் பெருமான்,	பகல் இரா என்பதுவும் பர்வியாது இரு பொழுதும்	பகற்போது, இராப்போது என்கிற வாசியின்றியே எப்போதும்
இவர் தகவா தொழும்பர்	"இவ்வாழ்வார் நம்முடைய அருளுக்குப் பாத்திரமாகக் கூடாத நீசர்;		
சீர்க்கும் துணை இலர்	சீர்மை பொருந்திய துணையை உடையவருமல்லர்"	இகல் செய்து	வலிகட்டாயப்படுத்தி
என்று தெரிந்து ஓரார்	என்பதை ஊன்றி ஆராயாதவனாய்,	எம்மை ஆள்வர்	அடியேனை அநுபவியா நின்றான்.

* * *—எம்பெருமானுடைய அநுக்ரஹம் தம்மேல் அல்லும் பகலும் அமர்ந்திருக்கிறபடியை அருளிச்செய்கிறார். எம்பெருமான் என்னுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை நன்கு ஆராய்ந்திருப்பனாகில் என்னை ஒரு பொருளாக நோக்குவதற்கே ப்ரஸக்தியில்லை; அவனுடைய திருவருளுக்கு இலக்காகமாட்டாத நீசன் அடியேன்; அவ்வளவேயோ? குணாநுபவம் பண்ணுவதற்குத்தக்க ஸஹாயமு மில்லாதவனாயிருக்கின்றேன்; இப்படிப்பட்ட என்படி எம்பெருமான் ஆராய்ந்திருப்பனாகில் என்னைக் கடாக்ஷிக்கவே மாட்டான்; இப்படிகளை ஆராயாமல், பகலென்று மிரவென்றும் பாராமல் எக்காலமும் என்னை வலிகட்டாயப் படுத்தி யிழுத்துத் தன் அநுபவத்தை எனக்குத் தந்தருளி என்னை அநுக்ரஹஞ் செய்கின்றான்—என்கிறார்.

இகல் செய்தல்—யுத்தம் பண்ணுதல்; எம்பெருமான் ஆழ்வாரோடு யுத்தம் பண்ணுகையாவது என்னென்னில்; தன்னுடைய குணங்களை அநுபவிக்குமாறு

நிர்ப்பந்தப்படுத்துதலாம். இவ்விடத்தில் வ்யாக்கியான ஸ்ரீஸூக்தி:—" தம்முடைய குணங்களாலே எடுப்பும் சாய்ப்புமாக யுத்தம்பண்ணி இரண்டுபோதும் ஆள்வர்; அம்புபட்ட புண்ணுக்கு மருந்துண்டு; குணத்தாலே யீடுபட்ட புண்ணுக்கு மருந்தில்லையிறே."

இவர் தகவாத் தொழும்பர், சீர்க்கும் துணையிலர் என்று ஓரார்='தொழும்பர்' என்று அடிமை செய்பவர்க்குப் பெயர்; நீசர்களே அடிமைசெய்ய உரியவராதலால் இங்குத் தொழும்பர்' என்றது நீச ரென்றபடி. தகவு என்று தயவுக்குப் பெயர்! 'தகவன்' என்றால் 'தயவுக்கு விஷயமாகக்கூடியவன்' என்று பொருளாம்; 'தகவாத்தொழும்பர்' என்றது—தயவுக்கு விஷயமாகக்கூடாத நீசர் என்றதாயிற்று.

[சீர்க்கும் துணையிலர்.] 'சீர்க்கும்' என்றது துணைக்கு அடைமொழி; 'சீர்மை பொருந்திய' என்றபடி. பகவத் கீதையிலே (10-9) "மச்சித்தா: மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம்—கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்திச ரமந்திச." [இதன் பொருள்:—நெஞ்சை நமக்கென்றே பறிகொடுத்து, அப்படியே நம்மைப் பிரிந்தால் தரித்திருக்க மாட்டாமல் பிராணனையும் நம் அதீனஞ்செய்து தாம் தாம் அநுபவித்த நம் குணங்களை யெடுத்து ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு அப்படியே நாம் செய்த திவ்ய சேஷ்டிதங்களையுமெடுத்துப் பேசிக்கொண்டு ஆநந்திக்கிறார்கள்.] என்றருளிச் செய்திருப்பதில், பகவத் குணங்களை ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுதலும் ஒரு சிறந்த காரியமாகச் சொல்லப்பட்டுள்ளது; அப்படி பேசிக்கொள்வதற்குத் தாம் (ஆழ்வார்) துணையற்றவர் என்கிறார். இப்படியிருக்கச் செய்தேயும் எம்பெருமான் என்னை உபேக்ஷித்திடாமல் தனது நிர்ஹேதுக கருணையினால் குணாநுபவம் செய்விக்கிறானென்றாராயிற்று.

பரவை—ஸமுத்ரம். 81

2666 தெரிந்துணர்வொன் றின்மையால் தீவினையேன் * வாளா
இருந்தொழிந்தேன் கீழ்நாள்க ளெல்லாம் *—கரந்துருவின்
அம்மானை யந்நான்று பின்றொடர்ந்த * ஆழியங்கை
அம்மானை யேத்தா தயர்த்து. 82

தீ வினையேன்	மஹாபாபியான நான்	ஆழி அம் கை அம்மானை	அறுகாழி மோதிரத்தை அழகிய திருக்கையிலணிந்திருந்த இராமபிரானை
தெரிந்த உணர்வு ஒன்று இன்மையால்	விவேக வுணர்ச்சி சிறிதுமில்லாமையினாலே,	ஏத்தாது	தோத்திரம் செய்யாமல்
அந்நான்று	முன்பொரு காலத்தில்	அயர்த்து	அறிவுகெட்டு
கரந்த உருவின் அம்மானை பின் தொடர்ந்த	நிஜமான வுருவத்தை மறைத்துக்கொண்டுவந்த அந்த மாரீச மானைப் பின் தொடர்ந்து கொன்ற	கீழ் நாள்கள் எல்லாம் வாளா இருந்தொழிந்தேன்	கீழ்க்கழிந்த காலமெல்லாம் வீணாக இருந்துவிட்டேன்,

* * *—ஆழ்வார் இப்போது பகவத்குணாநுபவம் பண்ணப்பெற்றதுபோல் கீழ்நாள்களிலும் பண்ணப்பெறவில்லையே! என்று அநுதாபம் அதிகரிக்கப் பெற்று, "பழுதே பலபகலும் போயினவென்று அஞ்சியழுதேன்" என்று பொய்கையாழ்வார் கதறினதுபோலத் தாமும் கதறுகின்றார்.

"உணர்வின்மையால், உணர்வொன்றின்மையால், தெரிந்துணர்வொன்றின்மையால்" என்று மூன்றுபடியாக்கி யோஜிக்கவேணும். 'தேஹத்திற்காட்டில் ஆத்மா வேறுபட்டவன்' என்கிற ஞானமில்லாமையைக் கருதி 'உணர்

வின்மையால்' என்ருர்; 'ஆத்மா எம்பெருமானுக்கு சேஷப்பட்ட வஸ்து' என்கிற ஞானமில்லாமையைக் கருதி 'உணர்வொன்றின்மையால்' என்ருர்; 'பகவத் சேஷத்வத்துக்கு எல்லைநிலம் பாகவதசேஷத்வம்' என்கிற ஞானமில்லாமையைக் கருதித் 'தெரிந்துணர்வொன்றின்மையால்' என்ருர். ஆக இப்படிப்பட்ட விவேகவுணர்ச்சிகளில்லாமையினுலே பாவியேன் வாணாள் பலவற்றை வீணாளாகக் கழித்தொழிந்தேன்—என்கிருர்.

[கரந்துருவின் இத்யாதி.] அன்பர்கள் ஏவின காரியத்தை அன்புடன் ஏற்றுச் செய்யவல்ல பெருமானுடைய திருக்குணங்களி லீடுபட்டுத் துதித்து வாழாமே பாழே போனேனென்கிருர். மாரீசன் நிஜரூபத்தை மறைத்துப் பொன்மான் வடிவு பூண்டு பஞ்சவடியில் வந்து தோன்றினபோது, "பொன்னுெத்தமானுென்று புகுந்தினிது விளையாட, நின்னன்பின்வழி நின்று சிலைபிடித்தெம்பிரானேக" என்கிறபடியே, பிராட்டியின் முகம் கன்ருமைக்காக அம்மாய மானைப் பிடித்து வருவதாக அதன்பின்னே யெழுந்தருளினவனும் அறுகாழி மோதிரத்தைத் திருக்கையிலே அணிந்திருந்தவனுமான இராமபிரானைத் துதிக்கப்பெருமல் அறிவு கெட்டுக் காலங்களைப் பாழே கழித்தேன்.

"கைகேயிவரத்தில் அகப்படாவிட்டது பெருமாள்திருக்கையில் அறுகாழி யொன்றுமே யிறே" என்றும் "பெருமாள் மாயமானை எய்து மீண்டெழுந்தருளுகிறபோது அடிக்கொதித்து நடக்கமாட்டாமை தளிர்களை முறித்திட்டு அதன்மேலே எழுந்தருளினுரென்று ஒருவன் கவிபாட எம்பெருமானுர் கேட்டருளி 'மாறியிடுகிற திருவடிகளிலே என் தலையை மடுக்கப் பெற்றிலேனே!' என்று வித்தராயருளினுர்" என்றுமுள்ள வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் அநுஸந்திக்கத்தக்கன.

"தெரிந்துணர்வு" என்றவிடத்தும் "கரந்துருவின்" என்றவிடத்தும் தொகுத்தல் விகாரம்; தெரிந்த+உணர்வு; கரந்த+உருவின். 82

2667 அயர்ப்பா யயராப்பாய் நெஞ்சமே! சொன்னேன் *
உயப்போம் நெறியிதுவே கண்டாய் *—செயற்பால
அல்லவே செய்கிறுதி நெஞ்சமே! யஞ்சினேன் *
மல்லர்நாள் வவ்வினனை வாழ்த்து. 83

நெஞ்சமே	ஓ மனமே!	உய போம் நெறி இதுவே கண்டாய்	உஜ்ஜீவிக்கலாம் வழி இதுவே காண்;
செயற்பால அல்லவே	செய்யத்தகாதவற்றையே		
செய்கிறுதி	செய்ய முயல்வர்யென்று	அயர்ப்பாய்	(அப்பெருமானை) மறந்து கெட்டாலும் கெடு;
அஞ்சினேன்	(உன்னைப்பற்றிப்) பயப்படுகின்றேன்;	அயராப்பாய்	மறவாமல் நினைந்து வாழ்ந்தாலும் வாழ்;
மல்லர் நாள் வவ்வினனை வாழ்த்து	மல்லர்களின் ஆயுளைமுடித்த கண்ணபிரானை மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டிரு;	சொன்னேன்	(உனக்கு நான் சொல்லவேண்டிய ஹிதத்தைச்) சொல்லிவைத்தேன்.

* * *—கீழ்க்கழிந்த காலம்போலே இனிமேல் வருங்காலமும் பாழே போகாதபடி இப்போதுள்ள பகவத்குணுநுபவம் தம்முடைய நெஞ்சுக்கு நிலைத்திருக்கும்படி ஹிதோபதேசம் பண்ணுகிருர்.

யோக்யதையில்லாத நாம் எம்பெருமானை நெஞ்சால் நினைப்பதும் வாயால் துதிப்பதும் தலையால் வணங்குவதும் அவனுக்கு அவத்யம் என்று அயோக்யதாநுஸந்தாநம் பண்ணிப் பின்வாங்குதலில் ஆழ்வாருடைய திருவுள்ளம் அடிக்கடி ஊன்

றுகிற வழக்கமுண்டே; அப்படி இன்னமும் உண்டாகப்பெறில் பகவத்குணநுபவம் முட்டுப்படுமே யென்று அஞ்சி நெஞ்சை நோக்கி, ஓ நெஞ்சே! அயோக்யனென்று பின்வாங்குகையிலே மறுபடியும் நீ இறங்கி விடுவாயோவென்று நான் மிகவும் அஞ்சுகின்றேன். இனி நீ அப்படி ஒருகாலும் செய்யலாகாது; இப்போது நாம் மிகவும் பகவத்குணநுபவம் செய்துகொண்டிருப்பதுபோலவே எப்போதும் செய்துகொண்டிருப்பதுதான் நாம் உஜ்ஜீவிப்பதற்கு உறுப்பான வழியாம். மல்லர்களை மடித்த கண்ணபிரானை வாழ்த்துவதே நமக்குப் பணி; என்பேச்சை நீ ஆதரித்துக் கேட்பாயென்று நம்பி நான் இதை உனக்குச் சொன்னேன்; இந்த உபதேசத்தை நீ ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்து வாழ்தியேல் வாழ்ந்திடு; மறந்தொழிந்து கெட்டுப்போதியேல் போயிடு—என்றாராயிற்று.

செயற்பால — செய்யக்கூடியவை; செயற்பாலஅல்ல — செய்யக்கூடாதவை; அயோக்யதாநுஸந்தாநம்பண்ணிப் பின்வாங்குதல் முதலியன. செய்கிறுதி அஞ்சினேன் = செய்வாயென்று பயப்படுகின்றேனென்கை. 83

2668 வாழ்த்தி யவனடியைப் பூப்புனைந்து * நின்தலையைத்
தாழ்த்திருகை கூப்பென்றாற் கூப்பாத—பாழ்த்தவிதி *
எங்குற்றா யென்றவனை யேத்தாதென் னெஞ்சமே! *
தங்கத்தா னாமேலுந் தங்கு. 84

அவன் அடியை வாழ்த்தி	"அப்பெருமானுடைய திருவடிகளை மங்களாசாஸநம் பண்ணி	கூப்பாத	அப்படி செய்யாத
பூ புனைந்து	(அத்திருவடிகளிலே) புஷ்பங்களைச் சாத்தி	பாழ்த்த விதி	பாழும் விதியையுடைய
நின் தலையை தாழ்த்து	உன் தலையை வணக்கு;	என் நெஞ்சமே	என்னுடைய மனமே!
இரு கை கூப்பு	இரண்டு கையையுங் கொண்டு அஞ்ஜலிபண்ணு"	அவனை	அந்த ஸர்வேச்வரனை
என்றால்	என்று சொன்னால்	எங்கு உற்றாய் என்று ஏத்தாது	'எங்கேயிருக்கிறாய்' என்று சொல்லியழைத்துத் துதியாமல்
		தங்க ஆம் ஏலும்	தரித்திருக்கக் கூடுமாகில்
		தங்கு	தரித்தரு.

* * *—இனி எப்போதும் அயோக்யதையை நினைந்து பின்வாங்கலாகாதென்று நெஞ்சுக்கு உபதேசித்தார் கீழ்ப்பாட்டில். அப்படி பின்வாங்கி உயிர் தரித்திருக்கமுடியுமாகில் அப்படியே பின்வாங்கிக்கிட என்கிறாரிப்பாட்டில். இத்தால்—மனமொழிமெய்களென்னும் மூன்றுகரணங்களும் பகவத்விஷயத்தில் ஊன்றிக் காரியம் செய்யப்பெறாவிடில் தாம் தரித்திருக்க முடியாமையைப் பேசினாராகிறார்.

வாய்படைத்தது பயன்படும்படி அவ்வெம்பெருமானுடைய திருவடிகளை வாழ்த்தியும், கைபடைத்தது பயன்படும்படி அந்தத் திருவடிகளிலே பூக்களைப் பணிமாறியும், தலை ஸபலமாம்படி அதனை அத்திருவடிகளிலே வணக்கியும் அஞ்ஜலி பண்ணு என்று நன்மையாகச் சொன்னால் அப்படி செய்யாதேயிருந்தும், "எங்கே காண்கேன் ஈன்துழாயம்மான்தன்னை யான்" என்று அலற்றாமலிருந்தும் உயிர் தரித்திருக்கவல்லையேல், நெஞ்சே! உன் இஷ்டப்படியே இருந்திடு, ஸத்தை பெற்றிருக்கைக்காக இத்தனையும் செய்து தீரவேண்டியதேயாம் என்று குறிப்பித்தவாறு.

"இருகை கூப்பென்றால் கூப்பாத" என்றது நிகழ்காலத்திய நிலைமையைச் சொல்லுகிறதன்று; எதிர்காலத்தில் நேரக்கூடிய நிலைமையைச் சங்கித்துச் சொல்லுகிறபடி. அவனடியை வாழ்த்தாமலும் பூப்புனையாமலும் தலையைத் தாழ்த்தாமலும் இருகை கூப்பாமலும் ஸத்தைபெற்றிருக்க முடியாமையைச் சொன்னபடி.

"தங்கத்தானுமேலும்" என்றவிடத்து, தான்—அசை. தங்குதல்—ஸத்தை பெறுதல் 84

2669 தங்கா முயற்றியவாய்த் தாழ்விசும்பின் மீதுபாய்ந்து *
எங்கேபுக் கெத்தவஞ்செய் திட்டனகொல் ?—பொங்கோதத்
தண்ணம்பால் வேலைவாய்க் கண்வளரும் * என்னுடைய
கண்ணன்பால் நன்னிறங்கொள் கார். 85

பொங்கு ஓதம்	கிளர்ந்த அலைகளையுடைத்தாய்	நல் நிறம் கொள் கார்	நல்ல திருமேனி நிறத்தைக் கொள்ளை கொண்டிருக்கிற மேகங்கள்
தண் அம்	குளிர்ந்து அழகிய	தங்கா முயற்றிய ஆய்	மாருத முயற்சியையுடையன வாய்க்கொண்டு
பால் வேலை வாய்	திருப்பாற்கடலிலே	தாழ் விசும்பின் மீது பாய்ந்து	விசாலமான ஆகாசத்தின் மேலே ஸஞ்சரித்து
கண்வளரும்	திருக்கண் வளர்ந்தருள்கிற	எங்கே புக்கு	எந்த தேசத்திலே போய்
என்னுடைய கண்ணன் பால்	எனது கண்ணபிரானிடத்திலுள்ள	எத் தவம் செய்திட்டன கொல்	எவ்வகையான தபஸ்ஸைச் செய்தனவோ ?
			(அறியேன்.)

* *-இடைவிடாது பகவத்குணநுபவம் செய்பவர்கட்கும் உலகத்துப்பொருள்களிலும் கண் செல்லுமே; சென்ருலும், பகவத் ஸம்பந்தத்தை முன்னிட்டு அப்பொருள்கள் அறியப்படுமே யன்றி லௌகிகப் பொருள்களாக மாத்திரம் அவை அறியப்படமாட்டாவே; அப்படியே மேகங்களிலே கண்செலுத்தின ஆழ்வார் அவற்றின் உருவத்தை எம்பெருமானுடைய திருநிறமாகவே திருவுள்ளம்பற்றி, ஆ ஆ! இந்த மேகங்கள் ஆகாசமடங்கலும் திரிந்து எந்த க்ஷேத்ரத்திலே சென்று என்ன தபஸ்ஸைச் செய்து இங்ஙனே திருமாலின் திருமேனிநிறத்தைக் கொள்ளை கொண்டனவோ! என்று வியந்து பேசுகிருர்.

திருவிருத்தத்தில் "மேகங்களோ வுரையீர்" என்ற முப்பத்திரண்டாம் பாட்டும் "கடமாயினகள் கழித்து" என்ற முப்பத்தெட்டாம் பாட்டும் இப்பாட்டை ஒருபுடை ஒத்தனவாக இங்கு அநுஸந்திக்கத்தக்கன.

"பால்வேலைவாய்" = 'வேலா' என்ற வடசொல் கடற்கரைக்குப் பெயர்; அதுதமிழில் 'வேலை' என ஐயீருகி ஆகுபெயரால் கடலை உணர்த்திற்று; ஆகவே, பால்வேலை—க்ஷீரஸாகரம். "பால் வேலைவாய்க் கண்வளரு மென்னுடைய கண்ணன்" என்றது—"ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:—நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்" என்ற பிரமாணத்தின்படியே திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளுதலை விட்டிட்டுக் கண்ணபிராளுக வந்து தோன்றின எம்பெருமானென்றபடி, ... 85

2670 கார்கலந்த மேனியான் கைகலந்த வாழியான்
பார்கலந்த வல்வயிற்ருன் பாம்பணையான் *—சீர்கலந்த
சொன்னினைந்து போக்காரேற் சூழ்வினையி னூழ்துயரை *
என்னினைந்து போக்குவரிப் போது. 86

கார் கலந்த மேனியான்	மேகத்தோடொத்த திருமேனியை யுடையவனும்	கை கலந்த ஆழியான்	கையோடு சேர்ந்த திருவாழியை யுடையவனும்

பார் கலந்த வல் வயிற்றான்	(பிரளய காலத்தில்) உலகமெல்லாம் வந்து சேரப் பெற்ற வலிய திருவயிற்றையுடையவனும்
பாம்பு அணையான்	திருவனந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனுமான பெருமானுடைய
சீர் கலந்த சொல்	திருக்குணங்கள் நிரம்பிய ஸ்ரீஸூக்திகளை
நினைந்து	அநுஸந்தித்து,
சூழ் வினையின் ஆழ் துயரை போக்கார் ஏல்	கொடிய பாவங்களினாலுண்டாகும் மிக்க துன்பங்களைப் போக்கிக் கொள்ளார்களாகில் (ஒழியட்டும்);
என் நினைந்து இ போது போக்குவர்	வேறு எதை அநுஸந்தித்து இந்தப் போதைப் போக்குவர்கள்.

* * *—உலகத்தில் எல்லாரும் பகவத் குணானுபவம் பண்ணியே போது போக்க வேணுமென்கிறார். பகவத்குணங்களை அநுஸந்தித்தால் பாவங்களெல்லாம் தொலையுமென்று ஸாமாந்யமாகப் பலரும் சொல்லுவதுண்டு; அப்படி பாவங்களைத் தொலைத்துக்கொள்வதற்காக பகவத் குணானுபவம் செய்யாவிடில் செய்ய வேண்டா; பகவத் குணானுஸந்தான முகத்தினால் பாவங்களைத் தொலைத்துக் கொள்ளா தொழியில் ஒழிக; ஒவ்வொருவனும் போதைப் போக்கி யாகவேண்டுமே; வேறு எந்தக் காரியஞ்செய்தால் போதுபோகும். பகவத் குணானுபவத்தாலன்றி வேறொன்றாலும் போதுபோக்க முடியாதாகையாலே காலக்ஷேபார்த்த மாகவாவது ஒவ்வொருவனும் பகவத் குணானுபவம் பண்ணியே யாகவேணுமென்கிறார்.

இப்படி ஏன் சொல்லவேண்டும்? உலகத்தில் ஒவ்வொருவனும் பகவத் குணானுபவம் பண்ணியோ போதுபோக்குகிறான்? இல்லை; சூதாடிப் போதுபோக்குவார் சிலரும், சதுரங்கம் பொருது போது போக்குவார் சிலரும், உண்டியே உடையே உகந்தோடிப் போது போக்குவார் சிலருமாய் இப்படி பலவகைகளாலே போது போக்குவாரைக் காணா நின்றோமே; குணானுபவத்தாலே போது போக்குவாராக ஒருவரையுங் கண்டிலோமே; ஆழ்வாரொருவரேயன்றோ அப்படியுள்ளவர்; இப்படியிருக்க "என் நினைந்துபோக்குவர் இப்போது" என்று குணானுபவத்தாலன்றிப் போது போக்கமுடியாதென்று இவர் எப்படி சொல்லலாம்?—என்று கேள்வி பிறக்கும். இதற்கு நாம் என்ன ஸமாதானம்சொல்ல வல்லோம்; உலகத்தில் தம்முடைய ஸ்வபாவத்தையே பிறர்க்கும் ஸ்வபாவமாக நினைத்துக்கொள்ளுதல் பெரியோர்களின் இயல்பு; ஆழ்வார் பகவத் குணானுபவத்தாலன்றி மற்றெதனாலும் தமக்குப் போது போக்க அரிதாயிருக்கு மியல்வையே எல்லார்க்கும் உளதாக நினைத்து மிக அற்புதமாகவும் அழகாகவும் இப்பாசுரம் அருளிச்செய்கிறாரென்றுணர்க.

"கார்கந்த மேனியான்சீர்கலந்த சொல், கைகலந்த வாழியான்சீர்கலந்த சொல், பார்கலந்த வல்வயிற்றான்சீர்கலந்த சொல், பாம்பணையான்சீர்கலந்தசொல்" என்று இங்ஙனே யோஜித்து உபந்யஸித்தல் அழகு; [கார்கலந்தமேனியான்சீர்கலந்த சோல்.] இராம பிரானைச் சொல்லும்போது "மேகச்யாமம் மஹாபாஹும்" என்று முன்னே நீலமேகவடிவுடையவனென்கையாலே, கார்கலந்த மேனியானென்று இராமபிரானைச் சொல்லிற்றாய், அவனுடைய சீர்கலந்த சொல்—ஸ்ரீராமாயணம் என்றபடி.

[கைகலந்தவாழியான்சீர்கலந்த சொல்.] "ஜாதோஸி தேவதேவேச சங்கசக்ரகதாதர!" என்று கண்ணபிரான் திருவவதரிக்கும்போது கையும் திவ்யாயுதமுமாகத் திருவவதரித்தனனாதலால் கைகலந்தவாழியானென்று கண்ணபிரானைச் சொல்லிற்றாய், அவனுடைய சீர்கலந்த சொல்— ஸ்ரீபாகவதம், ஸ்ரீமஹாபாரதம், ஹரிவம்சம் முதலியனவென்கை.

[பார்கலந்தவல்வயிற்றான்சீர்கலந்த சொல்.] பிரளயகாலத்திலே எம்பெருமான் உலகங்களையெல்லாம் திருவயிற்றினுள்ளே வைத்துக் காத்தருளினபடியைப் பேசுகிற புராணங்கள்.

[பாம்பணையான்சீர்கலந்த சொல்.] பாம்பணையானென்று அரவணைமேற் பள்ளி கொள்ளும் அணியரங்கநாதனைச் சொல்லுகிறது; அவனுடைய சீர்கலந்த சொல்—திருவாய்மொழி; "வான்திகழுஞ் சோலைமதிளரங்கர் வண்புகழ்மேலான்ற தமிழ்மறைகளாயிரமும்" (திருவாய்மொழியின் தனியன்.) என்கிறபடியே திருவாய்மொழியாயிரமும் ஸ்ரீரங்கநாதன்விஷயமென்று நம் ஆசாரியர்கள் அருளிச்செய்கையாலே பாம்பணையான்சீர்கலந்த சொல்—திருவாய்மொழியாம்; ஆக ஸ்ரீராமாயண பாரதாதி இதிஹாஸங்களைக் கொண்டும் ஸ்ரீவிஷ்ணு புராணம் முதலிய புராணங்களைக் கொண்டும், திருவாய்மொழி முதலிய அருளிச்செயல்களைக் கொண்டும் பாவத்தைப் போக்கிக்கொள்ளாராகில் போகட்டும்; போதைப் போக்குவதற்கு இவையொழிய வேறொன்றும் ஸாதநமல்ல என்றாராயிற்று.

இப்பாட்டும் மேற்பாட்டும் சாற்றுப் பாசுரங்கள், ... 86

2671 இப்போது மின்னு மினிச்சிறிது நின்றாலும் *
எப்போது மீதேசொல் லென்னெஞ்சே! *—எப்போதுங்
கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான் *
மொய்கழலே யேத்த முயல். 87

என் நெஞ்சே!	எனது மனமே!	இப்போதும்	இக்காலத்திலும்
நம் மேல் வினை கடிவான்	நம்மிடத்திலுள்ள பாவங்களைப் போக்குதற்காக	இன்னம் இனி சிறிது நின்றாலும்	மேலுள்ள காலத்திலும்
எப்போதும் கை கழலா நேமியான்	ஒரு போதும் கையைவிட்டுப் பேராத திருவாழியையுடையனான எம்பெருமானுடைய	எப்போதும்	ஆக எல்லாக் காலத்திலும்
மொய்கழலே	அழகிய திருவடிகளையே	ஈதே சொல்	இதுவே (உனக்கு நான் சொல்லும்) ஹிதோபதேச மாகும்.
ஏத்த	துதிக்க		
முயல்	உத்ஸாஹப்படு;		

* * *—முதற் பாட்டிலே தம்முடைய நெஞ்சை விளித்து அருளிச்செய்தது போலவே முடிவு பாட்டையும் நெஞ்சை நோக்கி யுரைத்து முடிக்கிறார், பகவத்குணாநுபவத்தால்தான் உலகத்தார் யாவரும் போது போக்க வேணுமென்று கீழ்ப்பாட்டில் சொன்னேன்; அவர்கள் தங்கள் போதை எப்படி போக்கினாலும் போக்கிக்கொள்ளட்டும்; சூதாடியோ, சதுரங்கம் பொருதோ, களவாடியோ, கண்ணுறங்கியோ, எவ்விதமாகவேனும் போதைப் போக்கிக் கொள்ளட்டும்; அவர்களைப்பற்றி நமக்கென்ன கவலை? நெஞ்சமே! உனக்கு நான் சொல்லுவதைச் சிக்கெனக் கேளாய்; இன்றைக்கோ நாளைக்கோ, இன்னம் பத்தெட்டு வருஷங்கள் கழித்தோ மற்றுமெப்போது நான் உனக்கு உரைப்பதானாலும் இந்த ஒரு சொல்லையே சொல்லுவேன்; அந்தச் சொல் யாதெனில்—"நம்மேல் வினைகடிவான் எப்போதும் கைகழலா நேமியான் மொய்கழலே ஏத்த முயல்." என்பதே. அடியாருடைய விரோதிகளைத் தொலைப்பதற்காகவே "உழுவதோர் படையும் உலக்கையும் வில்லும் ஒண்சுடராழியும் சங்கும் மழுவொடு வாளும் படைக்கலமுடைய மால்" என்றபடி திவ்யாயுதங்களை எப்போதும் தரித்திராநிற்கும் பெருமானுடைய பரமபோக்கியமான திருவடிகளை ஏத்துவதற்கு உத்ஸாஹப்பட்டுக் கொண்டிருப்பதே உனக்கு எப்போதும் காரியமாகக் கடவதென்று நெஞ்சுக்கு உரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

ஸ்ரீ பட்டர் "எப்போதும் கைகழலா நேமியான் நம்மேல் வினை கடிவான்" என்கிறவிதைத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்—"பாது ப்ரணதரக்ஷா யாம் விளம்ப மஸஹந்நிவ—ஸதா பஞ்யாயுதீம் பிப்ரத் ஸ ந: ஸ்ரீரங்கநாயக:" என்றருளிச் செய்த ச்லோகம் இங்கு அநுஸந்தேயம்.

'எப்போதும்' என்பதை நான்காமடியிலே கூட்டி உரைக்கலுமாம்; 'எப்போதும் ஏத்த முயல்' என்று.

"மொய்கழலே ஏத்து" என்னாதே "ஏத்த முயல்" என்கையாலே, பகவத் விஷயத்தை ஏத்திக் கரைகாண்பதென்பது இல்லை; ஏத்தவேணும் ஏத்தவேணும் என்கிற உத்யோகநிலைமையே எப்போது மிருக்கும் என்பது காட்டப்பட்டதாம். ஆளவந்தாரும் "ஸதா ஸ்திதா: நோத்யமதோதிசேரதே" என்றருளிச் செய்ததை ஸ்மரிப்பது.

கீழ்ப் பிரபந்தமாகிய திருவாசிரியத்திற்போலவே இப் பிரபந்தத்திலும் தம் திருநாமமிட்டுக் கவிபாடுதல், பிரபந்தாத்யயநத்திற்குப் பலன்சொல்லுதல் முதலியவற்றை விட்டருளினர்; நிர்ப்பந்த மில்லாமையாலே.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
நாலாயிர திவ்யப்ரபந்த உரையில்

பெரிய திருவந்தாதி உரை

முற்றிற்று.